125

4062

யோகதீக்ஷை

DIGITIZED

S:851
N22
121086

121086

# HYPNOTIC SLEEP

Its Na[illegible] and C[illegible]

An Original work in T[illegible]

5 JAN

BY

SWAMI VEDACHALAM
MASTER
The Sacred Order of Love
Pallavaram

Printed at
The T. M. Press,
The Sacred Order of Love-Matt
PALLAVARAM

December, 192[illegible]

All Rights Reserved Price, Rs 2—8as

ஓம்

ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள்

(மறைமலையடிகள்)

[illegible]

யோகநித்திரை

[illegible]

பெரியஅளவு, 188 பக்கங்கள் [illegible]

---

ஓம்

# யோகநித்திரை

அல்லது

அறிதுயில்

இது

பல்லாவரம்

பொதுநிலைக் கழக ஆசிரியர்

ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் என்னும்

மறைமலையடிகளால்

இயற்றப்பட்டுப்

பல்லாவரம்

சமரசசன்மார்க்க நிலையத்தின்கண் உள்ள

டி. எம். அச்சுக்கூடத்திற்

பதிப்பிடப்பட்டது.

டிசம்பர், 1922] [இதன்விலை இரண்டரைரூபா

All Rights Reserved.

5-JAN 1923

134/60 2

121086

முதற் புத்தகப்பதிப்பு, ௩௦௧ படிகள்;
சாலிவாகனசகம், ௲௮௪௫, துந்துபி ஆண்டு,
கார்த்திகைத்திங்கள், ௨௦-ஆம்நாள்.

ஓம்.

# முகவுரை

சாலிவாகனசகம் ௲௮௩௪-ஆண்டு சித்திரைத் திங்கள் (ஏப்பிரல், 1911) வெளிவந்த நமது ஞானசாகர ஆறாம்பதுமத்து முதல் இதழில் முதன் முதல் துவக்கஞ் செய்யப்பட்ட யோக நித்திரை என்னும் இவ்வரும்பெருங் கல்விநூல், இடையிடையே பல ஆண்டுகளாக மெல்ல மெல்ல வெளிவந்த அதன் ஏழு எட்டு ஒன்பதாம் பதுமங்களில் தொடர்பாக எழுதப்பட்டு, இப்போது நடைபெறும் ஞானசாகரப் பத்தாம் பதுமத்தின் ௯,௭ ஆம் இதழ்களில் முற்றுப்பெறுவிக்கப் பட்டது. ஆகவே, இந்நூல் முற்றுப்பெறுதற்குப் பதினோராண்டுகள் ஆயினவென்று அறிதல்வேண்டும். இவ்வாறு இது மெல்ல மெல்ல எழுதப்பட்டதனால், சென்ற இருபஃதாண்டுகளாக இக்கலைத் திறத்தைப் பற்றிய பல நூலாராய்ச்சிகளிற் கண்ட முடிபுகளும், பல்லாண்டுகளாக இடையிடையே ஆழநினைந்து பார்த்துத் தெளிந்த நுணுக்கங்களும், இதிற் சொல்லப்பட்ட முறைகளை நேரே செய்துபார்த்து அறிந்த மெய்ப்பயன்களும் இதன்கண் இயன்றமட்டும் நன்கெடுத்துக் காட்டி விளக்க இடம்பெற்றேம்.

மக்கள் வாழ்க்கையைப் பலதுறைகளிலுஞ் சீர்திருத்தஞ் செய்து, அறியாமையால் வரும் எண்ணிறந்த துன்பங்களையும் எளிதாகப் படிப்படியாய் விலக்கி, உயிரைத்தூயதாக்கி, இப்பிறவியில் அடைதற்கு உரிய மெய்யறிவு இன்பங்களையும், வரும் பிறவியில் நுகர்தற்குரிய பேரறிவு இன்பங்களையும் பிழையாமல் எய்துதற்கு இந்நூல் உண்மைவழி காட்டுவதாமென்பதை இதனைக் கருத்தூன்றிக் கற்று, இதிலுள்ள முறைகளை நன்கு பழகி வருவாரெல்லாரும் தாமே இனிது உணர்வர். இந்நூலில் எழுதப்பட்டிருக்கும் பொருள்கள், யாமறிந்தமட்டில், தமிழ்மொழியில் இதற்குமுன் இவ்வளவு ஆழமாகவும் விரிவாகவும் விளக்கமாகவும் எவராலும் திருத்தமாக எழுதப்படவில்லை. ஐரோப்பா அமெரிக்கா என்னும் புறநாடுகளிலுள்ள வெள்ளைக்கார நன் மக்களே இக்கல்வியின் மறைபொருள்களைச் செவ்வையாக ஆராய்ந்து நூல்கள் எழுதி உலகவாழ்க்கையிலும் பயன்படுத்திவந்தவர்களாவர். நம் தமிழ்நாட்டிலுள்ள அருந்தவத்தோர் இக்கல்வியினையும் இதனைப் பயன்படுத்தும்

முறைகளையும் நன்கு உணர்வராயினும், தகுதியுடைய மாணாக்கர் சிலர்க்கன்றி ஏனையெவர்க்கும் அவைகளைச் சிறிதுந் தெரிவியாமல் மறைவாகவே வைத்துவந்தனர். இனி, இக்காலத்து மந்திரகாரரிற் சிலர் இம்முறைகளைத் தெரிந்து பயன்படுத்தி வருவராயினும், இவற்றின் உண்மைகளைச் சிறிதாயினும் ஆராய்ந்து கண்டு, அவற்றை உயர்ந்தவழிகளிற் பயன்படுத்தத் தெரிந்தவர் அல்லர்; மேலும், அவர் இவற்றைப் பொல்லாங்கான வழிகளினும் பயன்படுத்தித் தமக்கும் பிறர்க்குந் தீங்கிழைப்பவராகவுங் காணப்படுகின்றனர். அருந்தவத்தோரும், மந்திரகாரரும் கையாண்டுவரும் இவ் யோகநித்திரை யென்னும் அறிதுயில் முறைகளின் உண்மையினையும் மெய்ப்பயனையும் அறிந்துகொள்ளமாட்டாத மக்கள், அவ்வறியாமையாற் பெரிதும் பிழைபட நடந்து, நிரம்பவுந் துன்புறுகின்றார்கள். இக்கலையின் உண்மையினையும் இதனைப்பயன்படுத்தும் வகையினையும் அறியாதிருக்கும்வரையில், சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினராகிய மக்கட்கு இனி அத்துன்பத்தினின்றும் மீட்சி இல்லை! அதுகண்டு உள்ளங் குழைந்தே, இந்நூலிற் சொல்லிய பொருள்களையும் பயன்படுத்தும் முறைகளையும் பல்காலும் பலபடியாலும் ஆராய்ந்து, நேரேயும் செய்துபார்த்து, இவற்றை எல்லாரும் அறிந்து பயன்பெறும் பொருட்டுத், தொகுத்து ஒரு நூலாக வெளியிடலாயினேம். இவற்றின்கண் தெரித்தெழுதப்பட்ட முறைகளெல்லாம் நேரே பலகாற் செய்துபார்த்துத் தீதில்லாப் பயன்றருதல் தெளியப்பட்டனவாகலின், இவற்றை நன்றாக் கற்றுப் பழகுவார் தாம் வேண்டிய எல்லா நலங்களையும் பெறுவரென்பது திண்ணம்.

இந்நூலின் முற்பகுதிகள் பல்லாண்டுகட்கு முன்னரே வெளிவந்தனவாகலின், அவற்றின்கண் உள்ள சிற்சில வடசொற்களையுங் களைந்து தமிழ்ச்சொற்பெய்து பதிப்பித்தற்கு இப்போது நமக்கு இடம் வாய்க்கவில்லை. இந்நூலின் இரண்டாம் பதிப்பில் அவை முற்றுங்களைந்து முழுதுந் தூய தமிழாக்கப்படும். இத்துணை யாண்டுகள் கழிந்தும் இந்நூல் முற்றுப்பெறுமாறு செய்த எல்லாம்வல்ல இறைவனை மனமொழிமெய்களானும் வழிபடுகின்றேம்.

மறைமலை.

5-JAN-1923

# யோக நித்திரை

—(௧)—

## இருவகை நித்திரை

'யோக நித்திரை' என்னும் இச் சொற்றொடர் நம்மவர்களிற் பெரும்பாலார்க்குத் தெரிந்ததொன்றே யாகும். திருப்பாற் கடலிலே திருமால் யோகநித்திரையில் அமர்ந்திருக்கின்றார் என்னும் உண்மையை நம்மவர்களில் அறியாதவர்கள் யார்? எல்லாவுயிர்களையும் வைத்துக் காப்பவரான திருமால் வெறும் நித்திரையில் இருக்கின்றார் என்று வழங்காமல், அவர் யோகநித்திரையில் இருக்கின்றார் என்று வழங்கும் நுட்பத்தை யாரேனும், ஆழச் சிந்தித்துப் பார்த்ததுண்டா? இல்லையென்றே பெரும்பாலுஞ் சொல்லலாம். எண்ணிறந்த உயிர்களையெல்லாம் தமது வயிற்றினுள்ளே வைத்துக் காத்துவரும் அத்திருமால், சாமானிய மனிதரான நம்மைப்போல் நித்திரை செய்கின்றார் என்று சொன்னால் அஃது எவ்வளவு பேதைமையாகும்! நாம் நித்திரை செய்யும்போது நம்மை நாமே மறந்து, நம்முணர்வை நாமே இழந்து, நம்மைச் சுற்றியுள்ள பொருள்களையும் அவற்றின் நிகழ்ச்சிகளையும் அறியும் வலியற்று வெறுங் கட்டைபோலவுங் கற்போலவுங் கிடக்கின்றோம் அல்லமோ? இங்ஙனம் கிடக்கும் நம்மைப்போலவே காக்குந் தெய்வமான திருமாலும் தூங்கிக் கிடப்பரென்றல் அது பொருந்துமோ? இத்தகைய எண்ணங்கள் உண்டாகாமல் இருத்தற்கே திருமால் வெறும் நித்திரை செய்கின்றார் என்று உரையாமல், அவர் யோகநித்திரையில் அமர்ந்திருக்கின்றார் என்று அதன் உண்மையை உணர்ந்த ஆன்றோர்கள் வழங்கிவருகின்றார்கள்.

அப்படியானால், இறைவன் செய்தருளும் யோகநித்திரைக்கும் காட்டிலோர் அமிழ்ந்திக் கிடக்கும் வெறும் நித்திரைக்கும் வித்தியாசம் யாது என்றால், காட்டிலோர் கிடக்கும் வெறும் நித்திரை அறியாமை என்னும் இருளிலே நடைபெறுவதாகும்; இறைவன் செய்தருளும் யோகநித்திரையோ தக்க அறிவுடையதாய் உள்ள அருளிலே நிகழ்வதாகும். மனிதர்கள் முதலான உயிர்கள் செய்யும் நித்திரை இங்ஙனம் இருளிலே நடைபெறுவதனால் அவ்விருள் சூழ்ந்த இராக்காலத்திலே எல்லா உயிர்களும் தம்மை மறந்து உறங்குகின்றன; மற்றுக் கருணைக்கடவுளான இறைவனோ சுத்த சொயம்பிரகாசப் பெருவெளியாய் விளங்கும் அருளிலே துயில்கின்றார் என்பதனை உணர்த்துதற்கன்றோ சுத்த வெண்மை நிறத்தோடு கூடிய திருப்பாற்கடலிலே நித்திரை செய்கின்றார் என்று அறிவு நூல்கள் இடைவிடாது நுவலுகின்றன? எனவே, சாமானிய உயிர்களுக்குரிய நித்திரை அறியாமையோடு கூடி நிகழ்வதென்பதும், காக்குந் தெய்வமான இறைவனுக்குரிய யோகநித்திரை அறிவோடு கூடி நிகழ்வதென்பதும் தெளிவாக அறியப்படுதல் வேண்டும்.

இனி 'யோகநித்திரை' என்னும் சொற்கள் வடமொழிக்கு உரியவை; இந்தச் சொற்களினால் இறைவன் செய்தருளும் நித்திரை அறிவோடு கூடியதென்பது தெளிவாக விளங்காவிடினும், இவற்றிற்கு ஈடாக வழங்கும் 'அறிதுயில்' என்னுந் தென்றமிழ்ச் சொற்கள் அத்தூக்கம் அறிவோடு நிகழ்வதென்பதனைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன; பழைய தமிழ்ப் புலவரும் "அரவணைப் பள்ளியில் அறிதுயில் அமர்ந்த" என்று பாடியிருக்கின்றார். ஆகவே, 'யோகநித்திரை' என்னும் வடசொற்களைக் காட்டிலும் 'அறிதுயில்' என்னுந் தமிழ்ச்சொற்கள் பொருள் விளக்கங்காட்டுவன; அவ்வடசொற்கள் பெருவழக்கத்தில் வந்து விட்டமையால் அவற்றையே, இவ்விடய



விஷயத்திற்குத் தலைப்பெயராக வைக்கலாயிற்று. அங்ஙனம் அவற்றைத் தலைப்பெயராக வைக்க நேர்ந்தாலும், இவ்விஷயம் இனிது விளங்குதற்காக 'அறிதுயில்' என்னுந் தமிழ்ச் சொற்களையே இதன்கண் அடிக்கடி எடுத்தாளுவேம்.

'அறிதுயில்' என்றால் அறிவோடு கூடிய தூக்கம். அறிவுள்ள உயிர்களிடத்து மாத்திரமே தூக்கம் என்பது காணப்படுகின்றதேயன்றி, அறிவில்லாத கல், மண் முதலியவற்றினிடத்து அது காணப்படவில்லை. இங்ஙனம் உயிர்களிடத்து மாத்திரம் காணப்படுவதாகிய தூக்கத்தின் இயல்பை ஆழ்ந்து ஆராயுங்கால் அஃது இருவகைப்பட்டு நிகழுந் தன்மை விளங்காநிற்கும். அவ்விருவகைப்பட்ட தூக்கத்தில் ஒன்று அறியாமை என்னும் இருளிலே நடைபெறுகின்றது; மற்றொன்று அறிவு என்னும் அருளிலே நிகழ்கின்றது. அறியாமை இருளிலே தூங்கும் தூக்கமே எல்லா உயிர்களிடத்தும் பொதுவாகக் காணப்படுகின்றது; அருளிலே தூங்கும் தூக்கம் உயிர்கள் எல்லாவற்றினிடத்தும் அங்ஙனம் பொதுவாகக் காணப்படவில்லை; என்றாலும், தவமுயற்சியுள்ள பெரியோர்களிடத்தும் புலவர்களிடத்தும் தேவர்களிடத்தும் அஃது உண்மையாகவே நிகழ்ந்து வருகின்றது. ஞானம் முதிர்ந்த யோகிகளிடத்து அருளில் தூங்கும் தூக்கம் இடைவிடாது நிகழும் என்பதை "ஆங்கார முள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டெரித்துத் தூங்காமற் றூங்கிச் சுகம்பெறுவ தெக்காலம்" என்னும் ஆன்றோர் திருவாக்கு இனிது தெரிவிக்குமாறு காண்க. அருளில் தூங்கும் தூக்கத்தையே 'தூங்காமல் தூங்குவது' என்பர். இருளில் தூங்கும் தூக்கத்திற் சிறிதாயினும் உயிர்களுக்கு அறிவு நிகழாமல் எல்லாம் வெறும் பாழாய் இருத்தலின் அது வெறுந்தூக்கம் என்று மாத்திரம் சொல்லப்படும்; அருளில் தூங்கும் தூக்கத்தில் உயிர்களிடத்தில்

சொல்லற்கரிய பெரும் பிரகாசத்தோடும் அறிவு விளங்குமாதலின் அது 'தூங்காத்தூக்கம்' என்று சிறப்பித்துச் சொல்லப்படும்.

அவ்வாறாயின், அருளில் அறிவு விளங்கப்பெறும் அந்நிலையைத் 'தூக்கம்' என்று கூறுவது எங்ஙனம் பொருந்துமெனின்; ஒவ்வொரு நாளும் விழித்திருக்கையில் உயிர்களானவை பலதிறப்பட்ட முயற்சிகளின் உழன்று மிகவுங் களைத்துப்போகின்றன; இவ்வாறு பகற்காலம் எல்லாம் உழல்வதால் உண்டாகுங் களைப்புத் தீரும்பொருட்டு இராக்காலத்தில் தூக்கமானது வருகின்றது. இராக்காலத்தில் நன்றாய்த் தூங்கி எழுந்த பிறகு உயிர்கள் திரும்பவும் மிகுந்த சுறுசுறுப்பு உடையனவாய் மறுநாட் பகலில் திரும்பவும் பலதிறப்பட்ட முயற்சிகளிற் பிரவேசிக்கின்றன. ஆகவே, தூக்கத்தினால் வரும் பயன் உடம்பின் வழியாக உயிர்க்கு வந்த களைப்பு நீங்கப்பெறுதலேயாம். உயிர் உடம்போடு கூடியிருக்கும் வரையில் இத்தூக்கம் அவசியம் வேண்டப்படுவதாகும். உயிரின் அறிவு உடம்போடு கூடி வெளிமுகமாய் நடைபெறும்போது உடம்பின் உள்ளும் புறம்பும் அமைந்த எல்லாக் கருவிகளும் இடைவிடாது அசைதலால், உடம்பின் வலிவு மிகவுங் குறைந்துபோகின்றது. விளக்கு எரியும்போது தகழியிற் பெய்த நெய்யும் அதில் இட்ட திரியும் முறை முறையே குறைந்து போவதூஉம், அங்ஙனங் குறையுந்தோறும் பின்னும் பின்னும் நெய்யுந் திரியும் இட்டு அதனை எரிய விடுவதூஉம், அங்ஙனம் நெய்யுந் திரியும் இடாவிட்டால் விளக்கு நின்று போவதூஉம், நெய்யுந் திரியும் இட்ட தகழியில் விளக்கு ஏற்றிவிட்டால் அவையிரண்டுஞ் சிறிதுங் குறையாதிருத்தலும் ஒவ்வொரு நாளுங் காணப்படுகின்றன அல்லவோ? அது போலவே, நமதுடம்பாகிய தகழியில் அறிவாகிய விளக்கு எரியும்போது



இரத்தமாகிய நெய்யும் திரியாகிய மூளையும் வர வரக் குறைந்துகொண்டே போகின்றன; அங்ஙனம் அவை குறையுந்தோறும், வயிற்றகத்தேயுள்ள பசிதாகங்கள் அக்குறையினை அறிவிக்க, உடனே உணவுந் தண்ணீரும் உட்கொண்டு அக்குறையினை நிரப்பிக் கொள்ளுகின்றோம்; இவ்வாறு சோறுந் தண்ணீருங் கொடாமல் உடம்பினை அசையவிட்டு வந்தால் சிலநாளில் அவ்வுடம்பு அழிந்து போவது திண்ணம். இனி உடம்பினைச் சிறிதும் அசைய விடாமலும் நமதறிவினை வெளிமுகமாய்ச் செல்ல விடாமலும் வைத்தாற் சோறுந் தண்ணீரும் வேண்டப்படுவதில்லை; இது பகற்காலத்தில் உணவு வேண்டப்படுதல் போல இராக் காலத்தில் வேண்டப்படாமையின் கண் வைத்து எளிதிற் கண்டுகொள்ளப்படும். இராக்காலத்தில் நமதறிவு உடம்பின் வாயிலாக வெளிமுகமாய்ச் செல்லாமையினாலும், உடம்பின் அவயவங்கள் வெளிமுகமாய் அசைந்து தொழிற்படாமையினாலும் இரத்தம் சுவறாமலும் மூளை வலிவு குறையாமலும் இருக்கின்றன; இங்ஙனம் உடம்பின்சத்துக் குறையாமல் இருத்தலினாற்றான் இராக்காலத்தில் உணவு வேண்டப்படுவதில்லையாகின்றது. ஆகவே இராக்காலத்தில் உண்டாகுந் தூக்கத்தில் நமதறிவு சிறிதும் நிகழாமலும், உடம்பின் அவயவங்கள் வெளிமுகமாய் அசைந்து தொழிற்படாமலும் இருத்தலால் முன்னாளில் உண்டான களைப்பெல்லாம் முழுதும் நீங்கப்பெறுகின்றோம். எனவே, தூக்கம் என்பது உயிர்கள் அடைந்த இளைப்பினை நீக்குவிப்பதான ஒரு நிலையாம். இவ்வாறு இருளில் தூங்கும் தூக்கம் இளைப்பினை நீக்குவிப்பது போலவே, அருளில் தூங்கும் தூக்கமும் இளைப்பினை நீக்குவிப்பதாகும்.

இனி, அருளில் நிகழுந் தூக்கத்தில் ஆன்மாக்களுக்கு அறிவு மிக்கெழுந்து விளங்குமாகலின் அங்கே இளைப்

படுதல் எவ்வாறு கூடுமெனின்; அஃதியல்பாக ஒரு சிறிது விளக்கிக்காட்டுவாம். விழித் திருக்கையிலே உயிர்களின் அறிவானது பருத்த இவ்வுடம்பின் வழியாக இயங்கி வெளியேயுள்ள பொருள்களை அறிகின்றது. இப் பருவுடம்பானது எலும்பு தோல் நரம்பு இரத்தம் முதலிய பருப்பொருள்களால் ஆக்கப்பட்டது. பருப் பொருள்கள் பாத்திரமே அசைவினால் தேய்வடைந்து குறையும். மின்னல், ஒளி, காற்று முதலான நுண்பொருள்களோ அவ்வாறுபோல அங்ஙனம் தேய்வடைந்து குறைவதில்லை. அறிவானும் அசைக்கப்படும் நாடிகள் பின்னல் உள்ள பருப்பொருள்கள் எல்லாம் அவ்வளவ ஏனும் சிறிது சிறிதாகத் தேய்வு அடைதலால் அத்தேய் வினைத் திருப்பவும் நிறைவுசெய்தற்கு உணவுதும் தூக்கத் தில் அறிவு இயங்காமல் வறிதே இருக்கின்றது; மேலும் இதனால் நாம் தூக்கத்தில் அறிவு இயங்குவதற்கு இடம் வேறே இல்லை; என்னை முழு அசதையே. ஆனால், யோகிகள் யாவரும் தூக்கத்தின்கண் உயிர்களின் அறிவானது இப்பருவுடம்போடு கூடி இயங்காமல் இதனை விட்டொழிக்கும். அன்னிய பொருள்களால் ஆக்கப்பட்ட நுண்ணிய சரீரமெனவும் நுண்ணுடம்போடு கூடி அருளி னிடையும்; அதனால், இப்பருவுடம்பிற்கு சிறிதும் அயர்வு உண்டாவதேயில்லை. உலகம் முழுதும் விளங் கும் கதிரவன் ஒளியானது அங்ஙனம் விளங்குதலாற் சிறிதேனும் குறைகின்றதா? இப் பெருவுலகை வெப்பு இயக்கும் காற்றானது அங்ஙனம் சிறிதாவது தேய்வடை கின்றதா? இல்லையே. ஆனால், நாம் நாடோறும் பயன் படுத்தும் பொருள்களும் பண்டங்களும் முதலியன எல்லாம் நாளுற நாளுறத் தேய்ந்துவிடுவதைப் பாருங்கள்! இங் ஙனமே நாமுடைய அறிவினால் இயக்கப்பட்டுக் கொண்டு போகின்றதை தேய்வடையும், அதனால் இயக்கப்படாமல்



வறிதே யிருக்கும்போது தேய்வடையாது; களைப்படையாது. அருட்டூக்கத்தில் இப்பருவுடம்பு எவ்வகைத் தொழிலும் இன்றி வறிதே இருத்தலால் இதற்கு எவ்வகையான தேய்வுங் களைப்பும் உண்டாவதில்லை; அறிவானது காற்று, ஒளி, மின்னல் போன்ற நுண்பொருள்களால் ஆக்கப்பட்ட நுண்ணுடம்போடு கூடித் திருவருள் வெளியிலே இன்புற்று நடைபெறும். இங்ஙனந் திருவருள் வெளியிலே அறிவு நடைபெறுதலால், அவ்வறிவோடு கூடி நிகழாமல் வறிதேயிருக்கும் இப் பருவுடம்பிற்கு இன்பம் மிகுந்து இளைப்பாறுதல் உண்டாகும் என்றும், இத்தூக்கத்தில் உண்டாகும் சுகத்தினும் மேலானது வேறில்லையென்றும் அறிந்துகொள்க; இத் தூங்காமல்தூங்கும் தூக்கத்திற் பரமசுகம் உண்டென்பது மேல் எடுத்துக்காட்டிய 'தூங்காமல் தூங்கிச் சுகம்பெறுவது' என்னுந் திருவாக்கினால் நன்கு விளங்கும். முற்றத்துறந்த முனிவர்கள் உலகத்துப் பொருள்களில் எவ்வகைப்பற்றும் இல்லாமல் தம் அறிவை அகத்தே திருப்பிச் சூக்குமசரீரங்களின் வழியே அதனைக் கொண்டுபோய் அச்சூக்கும சரீரத்தோடு ஒற்றுமைப்பட்டு விளங்குந் திருவருள் வெளியிலே நிகழவிட்டுப் பேரின்பவுருவாய் இளைப்பாறிக்கொண்டு தூங்கிக் கிடப்பார்கள்; இவர்கள் எவ்வளவு காலம் இங்ஙனம் அருட்டூக்கத்தில் இருந்தாலும், இவர்களின் தூலசரீரம் பசிதாகங்களாற் சிறிதும் வருந்தாதாய் இருந்தபடியே இருக்கும். இதற்கு நாகபட்டினத்தில் அருள்வெளியிலே தூங்கும் யோகியார் அருமைத் திருவுடலே ஒரு தக்கசான்றாகும். இன்னும் அமெரிக்கா தேசத்தில் யோகநித்திரையிற் பிறரைப்படுக்கும் ஆற்றல் வாய்ந்த விற்பன்னர் சிலர் சிலரை ஆழ்ந்த யோக நித்திரையிற் போகச்செய்து பேழையுள் அடக்கப்பண்ணி நிலத்திற்குள் ஒரு வாரம் ஒரு மாதம் வரையிற் புதைத்துவைத்துப் பிறகு மேலே எடுத்து

அவர்களை விழிப்பிக்கின்றார்கள்; அங்ஙனம் விழிப்பித்த பிறகு விழித்த அவர்கள் அவ்வாறு ஒரு வாரம் ஒரு மாதம் வரையில் தாம் கிடந்து பிணம்போலப் புதைக்கப்பட்டது பற்றிச் சிறிதுந் தமது உடம்பு பழுது பெறாமல் முன்னிருந்த நோய்களும் விலகப்பெற்றவர் செவ்வையாகவே உயிர்வாழ்ந்து வருகின்றார்கள்; இவ்வற்புதத்தை அமெரிக்கா தேசத்திருப்போராலும் இன்னும் கண்ணெதிரே கண்டு தெளியலாம். இவ்வுண்மைகளால் அருள் வெளியில் தூங்குந் தூக்கத்தில் இப்பருவுடம்பு இடம்பெற்று விளங்குமேயன்றிச் சிறிதும் பழுது பெறாமல் எத்தனை காலமேனும் அவ்வாறே நிலைபெறுகின்றதும். இதனில் நாம் நாடோறுந் தூங்குந் தூக்கமோ மிகக் கொடும் பயன்களையாதல், இத்தூல வுடம்புக்கு இளைப்புத்தரும் வகையில் உயிரை அந்தகாரத்தில் அழுத்திவைத்திருந்து அவ்விளைப்புத் தீர்ந்த சிறிய நேரத்திற்கெல்லாம் அதன் அறிவை வெளிமுகமாக விட்டுத் தானுங் கலக்கமுறுங் காண்க.

இனி, இங்ஙனங் காட்டப்பட்ட இவ் விருட்டூக்கம் அருட்டூக்கம் என்னும் இரண்டனுள் இருட்டூக்கமே பெரும்பாலும் எல்லா வுயிர்களிடத்துங் காணப்படுகின்றதென்பதனை மேலே குறிப்போந்தாம். ஆனால், உயிர்களின் அறிவை இவ் விருட்டூக்கத்திற் செல்லவிடாமல் ஒரோவழி இருப்பத் தருட்டூக்கத்திற் செல்லவிடக் கற்றுக் கொள்வோமாயின் அதனால் நாம் அளவிறந்த நன்மைகளை அடையலாம். நல்வழியிற் றிரும்பாத பிள்ளைகளைத் திருப்பி நல்வழியிற் செலுத்தலாம்; கல்வியில் விருப்பமில்லாதவர்களை அக்கல்வியை மிக விருப்பமுடையவராகச் செய்விக்கலாம்; ஞாபகசத்தி யில்லாதவர்களுக்கு அச் சத்தியிருந்து வளரும்படி செய்திடலாம்; கணவனோடு இணங்கி வாழாத மனைவியரை அவனோடு மிக இணங்கிவாழப் புரியலாம்;



குடியர்கள் குடியினைவிடவும், சூதாடுவோர் சூதினை நீக்கவும், வேசிவீடே அடைக்கலமாய்க் கிடப்போர் அதனை வெறுத்து விலகவும், தீயநினைவுகளிற் பழகினோர் அப்பழக்கத்தை முற்றத்துறந்து நன்மக்களாகவும், வறியர்கள் செல்வராகவும் செய்து இன்புறுத்தலாம். இவை மாத்திரமா? பலவகை நோய்களாற் பற்றப்பட்டு மருந்துகள் உண்டும் அவை நீங்கப்பெறாமல் அல்லும் பகலும் நைந்து தம்முயிரையே வெறுத்துவிட்ட நோயாளிகளும் அக் கொடுநோய் தீர்ந்து சுத்தசுகமுடையராய் இன்புற்றுவாழச் செய்விக்கலாம். மக்களைப்பெறாமல் மலடுபட்டோர் அம்மலடுதீர்ந்து மக்களைப்பெறவும், ஆண்டன்மை பெண்டன்மை இழந்து அலிகளாகவும் பேடிகளாகவும் இருப்போர் அவ்வலித்தன்மையும் பேடித்தன்மையும் விலகி வீரியவான்களாய்ப் பொலியவும், கூன் குருடு முதலான தேகக்குறையுடையோர் அக்குறை தீர்ந்து நிறைவெய்திக் களிப்புறவுஞ் செய்திடலாம். இவ்யோகநித்திரை என்னும் அற்புத வித்தையை முற்றத்தெரிந்து அப்பியசித்தவரால் மக்கள் அடையாத நன்மைகள் இல்லை.

இவ் வறிதுயிலானது உயிர்களிடத்து இயற்கையிற் காணப்படாவிடினும், அதனைச் சிலநாட் பழக்கத்தால் அவர்களிடம் வருவித்து அவ்வுயிர்களை நம் விருப்பப்படி நல்வழியில் திருப்பலாம். இவ்வறிதுயிலை இங்ஙனம் பிற உயிர்களிடம் வருவிப்பதுபோல, ஒருவன் அதனைத் தன்னிடத்திலும் வருவித்து அதன் றுணையால் தன் ஆன்மசக்தியைப் பெரிதும் மிகுதிப்படுத்திக் கொள்ளலாம். ஆனால், இதனைப் பிறரிடம் விளைவித்தல் போலத் தன்னிடம் விளைத்தல் மிகவும் அருமையான காரியமாகும். தன்னிடத்தில் விளைத்துப் பயன்பெறுதற்கு இடைவிடாத யோகாப்பியாசம் ஒன்றே உதவி செய்யுமல்லது வேறு ஒன்றும் உதவிசெய்யமாட்டாது. பிறவுயிர்களிடம் இவ்வறிதுயிலை உண்டு பண்ணுவதற்கு ஒருவன் சிலநாட்கள் மனம் ஒருமித்து முயன்றால் அஃது எளிதிற் கைகூடும்.

இனி இவ்வறிதுயிலைத் தன்னிடம் விளைக்கவும் பிறவுயிர்களிடம் விளைவிக்கவுங் கற்றுத் திறமைமிக்கவர்கள் இவ்விந்திய நாட்டிலுள்ள தவசிகளும் முனிவர்களும் யோகிகளும் ஞானிகளும் ஆவர். இவ்வித்தையானது பல்லாயிரம் ஆண்டுகளாக இவ்விந்திய நாட்டிலுள்ள முனிவர்களாற் கையாளப்பட்டு வந்ததாகும். அங்ஙனம் நம் முனிவர்களால் இவ்வரியவித்தை கையாளப்பட்டு வந்தாலும், பக்குவம் முதிர்ந்த சீடர்களுக்கன்றி மற்றையோர்களுக்கு இதன் உண்மை சிறிதும் அறிவிக்கப்படவில்லை. இதனால் இவ் வித்தையானது இத் தேசத்திற்கு மிகப் பழமையானதொன்றாய் இருந்தும், இங்கே பிரசித்தி பெற்று வழங்காமல் ஆங்காங்கே இலைமறை காய்போல் இருந்து வந்தது. இஃது இங்கே இப்படியிருக்க, ஐரோப்பாக் கண்டத்தில் இற்றைக்கு நூற்றைம்பது வருடங்களுக்கு முன்னிருந்த



மெசுமர் என்னும் பெரியவர் இவ்வித்தையை எப்படியோ கற்றுக்கொண்டு, அதன் உதவியால் அம் மேல்நாடுகளிலிருந்த உயிர்களை நோய்முதலிய துன்பங்களினின்று நீக்கி, அவைகளுக்கு மிகுந்த சுகத்தை உண்டுபண்ணி வந்தார். இம் மெசுமர் என்னும் பெரியவர் நல்ல யோகாப்பியாசம் உடையவராய் இருந்திருக்கவேண்டும். இவர் தம்மிடம்வந்த பலவகைப்பட்ட நோயாளிகளையெல்லாம் தமது கையால் தொடுதல் மாத்திரத்தால் நோய் நீக்கிச் சுகப்படுத்தினார் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. உயிர்கள் ஒவ்வொன்றனிடத்தும் பிராணசக்தி* யென்று சொல்லப்படுவதாகிய ஓர் ஆற்றல் இருக்கிறதென்றும், அதனை ஒருவன் தன்னிடத்தில் மிகுதிப்படுத்திக்கொண்டு பிறகு அதனைத் தன்னிலிருந்து பிறவுயிருக்குப் பாயும்படி செய்யவல்லனானால், அதனால் அவ்வுயிர் நோய் முதலிய துன்பங்களினின்று விலகிச் சுகம்பெறும் என்றும், அவ்வாறு அதனைப் பாய்ச்சுங்கால் பிறவுயிரை அறிவோடுகூடி நிகழும் ஒருவகையான தூக்கத்திற் போகும்படி செய்தல் வேண்டுமென்றும், தன்னிலிருந்து அதனைப் பிறவுயிர்க்குப் பாய்ச்சுவதற்குத் தன் கையினால் அவ்வுயிரின் உடம்பிலுள்ள சில முதன்மையான இடங்களைத் தொடுதலே போதுமென்றும் அவர் தம் சீடர்களுக்கு உபதேசித்துவந்தனர். இங்ஙனம் அவர் இவ்வரிய பெரிய வித்தையைத் தம் சீடர்பலர்க்கு உபதேசித்தும், அதனைப் பயன்படுத்தும் முறையைத் தாமேசெய்து காட்டியும் வந்தமையால் இது மேல்நாட்டிற் பல இடங்களிற் பரவலாயிற்று. பிறகு மேல்நாட்டிலிருந்து கீழ்நாடாகிய அமெரிக்காவில் உள்ளார் இதனைக் கற்றுக்கொண்டவுடனே இவர்களின் விடா முயற்சியாலும் நுண்ணிய நூலாராய்ச்சியாலும் இது மிகவும் பிரசித்தி பெற்று விளங்கலாயிற்று. இப்போது இவ் வித்தையைக் கற்பிக்கும் உயர்ந்த

* Animal magnetism.

கல்விச்சாலைகள் எத்தனையோ அமெரிக்காவில் இருக்கின்றன; இதனைக்கற்றுத் தேர்ச்சிபெற்ற மாணாக்கர்கள் எத்தனையோ இலட்சக்கணக்காய் அங்கே இருக்கின்றார்கள்; இதனைப் பயன்படுத்தி மக்களுக்கு அளவிறந்த நன்மைகளை விளைவிக்கும் உபகாரிகளும் பலர்; இதனால் தீராநோய்தீர்ந்தும் ஒழுக்கம் திருந்தியும் நல்லறிவு விளங்கப்பெற்றும் செல்வந்திரட்டியும் பயன் பெற்று வாழ்வோரும் பலர். இப்போது அமெரிக்காவில் மருந்தினால் நோய்நீக்கும் முறையானது கைவிடப்பட்டு வருகின்றது. அதற்குமாறாக 'யோகநித்திரா வைத்தியசாலை'களும், 'இயற்கை முறைக் கழகங்'களும் ஆங்காங்கு மிருந்து வருகின்றன. இந்த வித்தையின் அருமைபெருமைகளையும் இதனைப் பயன்படுத்தும் முறைகளையும் தெளிய எடுத்துப் போதிக்கும் புத்தகங்களும் பத்திரிகைகளும் அங்கே நாடோறும் புதிய புதியவாகத் தோன்றி உலவிக்கொண்டிருக்கின்றன. இப்பத்திரிகை புத்தகங்களை வாங்குதற் பொருட்டும், இவ் வித்தையைத் தெரிந்து பழகுதற் பொருட்டும் கோடிக்கணக்கான பொன் செலவிடப்படுகின்றது. இவ்வளவு முயற்சியும் பொருட்செலவும் இடைவிடாத ஆவலும் இவ்வித்தைக்கு அயலவரான அமெரிக்க தேசத்து நன்மக்களிடம் காணப்படுவனவாகவும், இதற்குப் பழமைக் காலந்தொட்டு முற்றும் உரியவரான நம் இந்தியநாட்டு மக்கள் இதிற் சிறிதும் நோக்கம் இன்றி அறியாமை யென்னும் முழு அந்தகாரத்தில் அமிழ்ந்திக் கிடப்பது பெரிதும் விசனிக்கற்பால தொன்றாம். இவ் வித்தையானது இந்தத் தமிழ்நாட்டில் நமது தமிழ்மொழியில் முதன்முதல் எம்மாலேதாம் எழுதப்படுகின்றதென்று துணிந்து சொல்லப்படும். இவ்வித்தையை அமெரிக்கர் அறிந்த அளவினும் மேலாகத்தெரிந்து விளக்குவதற்குத் திருவருள் எமக்குதவிபுரிந்தது. தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் முதலிய மொழிகளில் உள்ள சிலநூல்களை யாம் பயி



ன்றதற்குத் திருவருள் இடஞ் செய்தமையால், இம்மூன்றினும் இவ்வித்தையைப்பற்றி யாம் தெரிந்தவற்றை ஒன்று சேர்த்து அவற்றோடு எமது அநுபவத்தையுங் கூட்டி இங்ஙனம் எழுதப்படுதலால் இந்நூலில் இனிது விளக்கப்படும் இவ்வித்தையின் பாகுபாடுகள் மிக மேலானவையாம் என்றும், இவற்றின் அப்பியாசத்தால் விளையும் பயன்கள் மிக மேலானவையாம் என்றும் அன்பர்கள் மனத்தில் அமைத்தல் வேண்டும். அது நிற்க.

இனி இவ் வறிதுயிலானது சூக்குமசரீரம் முதலாக வரவர நுணுகிப்போகும் நுண் உடம்புகளில் வருவிக்கப் படுவதாகும். கட்புலனாகும் பருவுடம்பே தூலசரீரம் எனப்படும். இத் தூலசரீரத்தின் உள்ளே, ஒன்றினுள் ஒன்றாய் அமைந்த வெங்காயச் சருகுகள்போல ஒன்றினுள் ஒன்றாய் அடங்கியிருக்கும் நுண்ணிய உடம்புகள் வேறு நான்கு இருக்கின்றன. அவற்றிற்குச் சூக்குமசரீரம், குணசரீரம், கஞ்சுகசரீரம், காரணசரீரம் என்னும் பெயர்கள் உயர்ந்தநூல்களிற் சொல்லப்பட்டிருக்கின்றன. இவற்றின் இயற்கையும் செயலும் சைவசித்தாந்த ஞானபோதத்திற் சிவராசயோகம் என்னும் விஷயத்தில் மிகவுந் தெளிவாக எடுத்து விளக்கிக் காட்டியிருக்கின்றேம்; அங்கேகண்டு கொள்க; இங்கெடுத்துக் காட்டப்புகுந்தால் இது மிகவிரியும். இந்தத் தூலசரீரத்திலும், வேறு இந்த நுண்ணுடம்புகள் நான்கிலும் நம்முடைய உயிர் போக்குவரவு செய்கின்றது. ஆயினும் இந்தத் தூலவுடம்பில் நமது உயிர் முனைத்து நிற்கும்போது மாத்திரம் நமக்கு அறிவுவிளங்கக் காண்கின்றோமே யல்லாமல், மற்றைய நுண்ணுடம்புகளில் அறிவுநிகழக் காண்கின்றோம் இல்லை. உயிர் தூலவுடம்பில் முனைந்து நில்லாமற் சூக்குமவுடம்பிற் சென்றவுடனே உறக்கம் வந்து கூடி அறிவைத் தலைக்காட்ட வொட்டாமல் அழுத்திவிடுகின்றது. இதனைக்கொண்டு சூக்குமவுடம்பிற் செல்லும் உயிர்களுக்கு அறி

வு நிகழ்வதில்லையென்று சொல்லலாகுமோ வென்றால், மெல்லிய இயற்கை வாய்ந்த ஒருசிறுவனை அறிதுயில் கொள்ளும்படி செய்தவுடனே, அவன் உயிர் தூலவுடம்பை விட்டுச் சூக்குமவுடம்பிற் செல்வதும், அங்ஙனஞ் சென்றதும் மிக்க அறிவுடையதாய்த் தோன்றுவதும் இஞ்ஞான்று பரவிவரும் புதிய அநுபவத்திற் செவ்வையாக விளங்குதலால் சூக்குமத்திற் சென்ற உயிர்க்கு அறிவு மிகத்துலங்குவதும் உண்டென்பது பெறப்படுகின்றது. ஆகவே, சூக்குமத்தில் அறியாமையே உண்டென்று கூறுவது பொருந்தாது. அங்ஙனமாயின், சூக்குமவுடம்பிற் பெரும்பாலும் உயிர் அறியாமை வசப்பட்டு நிற்றலும், சிற்சில சமயங்களில் மாத்திரம் அறிவு மிகுந்து துலங்குதலும் காண்கின்றோம்; அவ்வாறு உயிர் இருதிறப்பட்டு நிற்றற்கு இருவேறு காரணங்கள் இருத்தல் வேண்டுமென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் இனிது விளங்குகின்றது. உயிரை அறியாமையில் அழுத்தும் மருள் என்னும் ஒரு காரணப் பொருளும் அதனை அறிவாய் விளங்கச்செய்தற்கு அருள் என்னும் ஒரு காரணப்பொருளும் இருக்கின்றன என்பது சிவஞானபோதம் முதலான ஞானநூல்களில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. 'மருள்' என்பது அறியாமையைச் செய்யும் ஓர் அறிவில்லாப்பொருள்: இதனை ஆணவமலம் என்றுஞ் சொல்லுவர். 'அருள்' என்பது எல்லாம் வல்ல ஆண்டவனது ஓர் அருண்மைக்குணம்; இது தூய அறிவுமயமாய் விளங்குவது. எந்நேரமும் மருள் வசப்பட்டு நிற்கும் உயிர் இந்தப் பருவுடம்பைவிட்டு நுண்ணுடம்புகளிற் செல்லுமாயின், அவ்விடங்களில் நிறைந்த முழு அந்தகாரத்தில் அழுந்தி அறிவின்றிக் கிடக்கும். அங்ஙனம் மருள் வசப்பட்டு நில்லாமல், அருள் வசப்பட்டு நிற்குமாயின் அவ்வுயிர் நுண்ணுடம்புகளிற் சென்ற மாத்திரையானே சொல்லுதற்கரிய அறிவொளி விரியப்பெற்று ஆனந்தவுருவாய் விளங்கும். ஆனால்,



மக்களிற் பெரும்பாலார் இப் பருவுடம்பில் நின்று தமதறிவை நடைபெறச் செய்யும்போது, அவ்வறிவை அருள் வசத்திலே நிற்க விடாமல் அதனை இடைவிடாது மருளிலே அழுந்தும்படி செய்தால், அவர்களுக்கு அருள் நாட்டமே இல்லாமற் போய்விடுகின்றது. பாருங்கள்! தூங்கி விழித்த காலந்தொட்டுத் திரும்பவுந் தூக்கத்திற் செல்லும் வரையில் மக்களுடைய நினைவுகளுஞ் செய்கைகளும் எவ்வகைப்பட்டு நிகழ்கின்றன என்பதைச்சிறிது ஆழ்ந்து சிந்தியுங்கள். எல்லாம் வல்ல இறைவனது அருள் ஒளியை நாடுகின்றார்களா? இல்லை, இல்லை. தூக்கத்திலிருந்து விழிக்கும்போதே எவ்வுயிரைக் கொன்று புசிக்கலாம், எவனை மோசஞ்செய்து பொருள் தொகுக்கலாம், இவற்றிற்குத் தடைசெய்வாரை எவ்வாறு தொலைக்கலாம் என்னும் யோசனையோடு எழுந்து, நாள் முழுதுந் தாங்கொண்ட எண்ணப்படியே முயன்று, மறுபடியும் தூங்கப்போகுங்கால் அந்நினைவுகளோடு தாமே ஆணவமலத்திற்போய் அழுந்தி, மறுநாட்காலையிலும் இங்ஙனமே எழுந்து இம்முறையே தமது வாழ்நாளைக் கழித்துக் காலனுக்கு இரையாய் ஒழிகின்றார்கள். இவ்வாறு இப்பிறப்பில் முழுவதும் தமது அறிவை மருளிலே அழுத்திவைத்துத் தொலைந்தமையாலே, திரும்பவும் பிறவிக்கு வருங்கால் அவ் வறியாமையோடுதானே பிறந்து துன்புறுவார்கள். இவ்வறியாமை தொலையும் வரையில் அருட்பெருங்கடலாகிய ஆண்டவன் உயிர்களை இடைவிடாது பிறவிக்கு வரச்செய்து மாயா சக்கரத்தில் வைத்துச் சுழற்றிக்கொண்டே இருப்பான் என்க.

இந்தப் பருவுடம்பு பெற்றதனால் அடையும் பயன் யாது? என்று சிறிது ஆழ்ந்து சிந்தியுங்கள். நம்முடைய உயிர் பழமைக்காலந்தொட்டு மருள் வசப்பட்டே நிற்கின்றது. இந்த மருள் நமக்கு எப்போது எவ்வாறு வந்தது என்று எவ்வளவுதான் ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தாலும்

அவ்வியல்பு நமக்கு ஒரு தினைத்தனையும் விளங்கவில்லை. அஃது ஒரு பெரு இரகசியமாயிருக்கின்றது. சிவஞானபோதம் என்னும் ஞான நூலிலே இம்மருளானது உயிர்களிடத்தில் அநாதியாகவே தொடர்புபட்டு நிற்கின்றது என்று சொல்லப்பட்டிருக்கின்றது; இதுதான் முடிவான கருத்தாகவுந் தோன்றுகின்றது. எப்படியானாலும், இந்தமருள் நம்மை விட்டு அகலும் பொருட்டாகவே அருள் நிறையான ஆண்டவன் உயிர்களுக்கு அடுத்தடுத்து எண்ணிறந்த பிறவிகளைக் கொடுத்தருளி வருகின்றார். இந்தப் பருவுடம்பை எடுக்கும் முன் பேரிருள்வடிவான மருளிலே அழுந்திக்கிடந்த உயிர் இவ்வுடம்பை எடுத்தபின் சிறிது அறிவுவிளக்கம் பெறுதலை அநுபவத்திற் றெளிவாய் அறிந்திருக்கின்றோம். இந்தப்பருவுடம்பின்றி உயிர்க்கு அறிவு சிறிதும் விளங்குவதில்லை. சிறிதறிவு விளங்குதற்கு இடந்தருகின்ற இப்பருவுடம்பில் நின்றுகொண்டே நாம் இடையறாது முயன்று நமதறிவை மருளினின்றும் பிரித்து அருளிலே செல்லவிடவேண்டும். எவ்வளவு விரைவாக நாம் நமதறிவை மருளினின்றும் அகற்றி அருளிற் படிவிக்கின்றனமோ, அவ்வளவு விரைவில் நாம் இப்பிறவித் துன்பத்தைப் போக்கிப் பேரின்பத்தின் முழுகி நிலைபெயராது இருப்போம். இங்ஙனம் நாம் அருளிலே செல்லுதற்கு ஓர் இன்றியமையாத் துணைக்கருவியாக வாய்ந்த இப்பருவுடம்பின் பயனை மக்கள் ஒவ்வொருவரும் நினைவில் இருத்தவேண்டும். இவ்வுடம்பாற் பெற்ற இப்பயனை வீணே இழந்துபோக லாகாது. பொன்னும் பொருளும் பிறவும் நிலையல்ல. எல்லாம்வல்ல முதல்வனானவனே முயன்று அவனது திருவருளின்பத்தைப் பெறுதற்கான எல்லா வசதிகளையும் நமக்கு அமைத்துக் கொடுத்திருக்கின்றார். நாம் வசிப்பதற்கு இவ்வகன்ற உலகத்தைப் படைத்துக் கொடுத்தார்; உணவின் பொருட்டு எண்ணிறந்த பொருள்களை விளைவித்துத் தருகின்றார்; நமக்கு உடனிருந்



து உதவிசெய்தற் பொருட்டு நம்போன்ற மக்களையும் நமக்குத் துணையாகப் படைத்தருளி யிருக்கின்றார். அவரால் நாம்பெற்றபேறுகள் எண்ணமுடியா ஏட்டில் அடங்கா. இவ்வளவும் அவரிடம் பெற்றுக் கொண்டும் அவற்றின் உதவியால் நாம் மிகமுயன்று அவரது பேரின்பத்தைப் பெறுதற்கு விரும்பவேண்டாமா? நாம் பேரின்பத்தைப் பெறுதற்கு உதவியாகத் தரப்பட்ட இவ்வுடம்பையும் மண் பெண் பொருள்களையும் உதவிப்பொருள்கள் என்று நினையாமல் அவற்றையே பேரின்பப் பொருள்களாக நினைக்கலாமா? நன்றாக ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள்! அப்படிப் பிழையாக எண்ணித் தம்வாணாளை வீணே கழித்துத் தினந்தோறும் மாண்டுபோவோரை நம் கண் எதிரேகண்டும், அதில்நாம் அசட்டையாய் இருக்கலாமா? மிக அருமையிற்கிடைத்த இவ்வுடம்பைச் செவ்வையாகப் பாதுகாத்து இதன்றுணையால் நமதறிவை மருளினின்றும் பிரித்து அருள்நெறியிலே போகவிட முந்துவோமாக.

இந்தமக்களுடம்பு போனால் திரும்பவும் இதுவேவரும் என்பதற்கு என்ன நிச்சயம் இருக்கின்றது? "இப்பிறவிதப்பினால் எப்பிறவி வாய்க்குமோ எதுவருமோ அறிகிலேன்" என்று முற்றத்துறந்த ஞானிகளே இதனை நினைந்து வருந்துவார்களானால், மிகத்தாழ்ந்தவரான நாம் போம்வழி எப்படி? ஆகையால், இவ்வுடம்பில் இருக்கையிலேயே நமதறிவை அருளிற் செல்லும்படி பழக்கிவருவோமாயின், நமதுயிர் இப்பருவுடம்பை விட்டு வேறு நுண்ணுடம்புகள் நான்கிலும் செல்லுங்காலத்து எல்லையற்ற அறிவு விளக்கம் உடையதாகிப் பேரின்பத்தில் வைகும். நமதுயிரை இங்ஙனம் பழக்கிவருதல் போலவே, பிறருயிரையும் அருள் நெறியிற் செல்லும்படி பழக்கி உதவி செய்து வருகுவமாயின், எல்லாவுயிர்களிடத்தும் இரக்கம் உடையவரான

நம் ஐயன் நம்மை இரட்சித்தருளுவார். இதுவேநாம் இப் பருவுடம்பு பெற்றதன் பயனாகும் என்று அறிமின்கள்!.

இனி இப்பருவுடம்பில் நின்று கொண்டே நமதுயிரை அருளின்மேல் செல்லப்பழக்கும் வகை யாங்ஙனமெனின்; நம் நினைவை எந்நேரமும் ஓயாமல் திருவருட்சிந்தனையில் இருத்துவதொன்றினாலேதான் அது கைகூடற்பால தாகும். அங்ஙனம் நினைவை ஒருவழிப்படுத்தித் திருவருளின்மேல் பதிவித்தல் இலேசிலே கைகூடற்பாலதன்றாகலின், அதனை அங்ஙனம் செய்தற்கு எளிதானவழி சிறிது காட்டுகவெனின்; அது, பிராணாயாம அப்பியாசத்தானும், சுழுமுனை நாடியில் நினைவை நிறுத்தும் இடம் அறிந்து நிறுத்தி ஒடுக்குதலானும் வாய்க்கும். அவ்வப்பியாச முறை சைவசித்தாந்த ஞானபோதத்தில் இனிது விளக்கிக்காட்டி யிருக்கின்றேம். ஆயினும் அவ்விரகசியங்கள் முற்றும் ஆண்டெடுத்துக் காட்டப்படவில்லை. அவையெல்லாம் தெரிந்து வழிப்படவேண்டுமென்னும் பக்குவமுடைய சீடர் நம்மை நேரே வினவு முறையால் வினவுவராயின் அவர்க்குமாத்திரம் அறிவிக்கும் முறையால் அவை அறிவிக்கப்படும். இங்கே அவற்றை அவ்வளவு வெளிப்படையாக எடுத்துக்காட்டல் ஆகாதென்பது ஆன்றோர் ஆணை. ஆகவே, அவை தம்மை முற்றும் இங்கெடுத்துக்காட்டலாகாதாயினும், இதனைப்படிப்பார்க்குப் பயன்படல் வேண்டி இரண்டொன்று எடுத்துக் காட்டுகின்றாம்.

---

## சுவாசம்

உடம்பின் வலிவுக்கு முதன்மையான சுவாச ஓட்டத்தை ஒருவாறு ஒழுங்குசெய்து கொள்ளல் வேண்டும். நல்ல காற்று ஓட்டம் உள்ள ஓர் அறையிலே தனிமையாகப் போய் நாற்காலியிலாயினும், நிலத்தில் மணைமேலாயினும் இருந்துகொள்ளல் வேண்டும். இருந்தபின் முதுகுகழுத்து முதலிய உறுப்புகள் சிறிதும் வளையாமல் நேராக நிற்கும்படிசெய்தல் வேண்டும். அதன்பின் வலதுகைப் பெருவிரலால் வலதுநாசியை அடைத்து, இடதுநாசியால் உள்ளிருந்தவாயுவை வெளியே மெதுவாய்க் கழித்துவிடுக. அங்ஙனங்கழித்தவுடனே அவ் விடதுநாசியினாலேயே வெளியேயுள்ளவாயுவை மெதுவாக உள்ளே இழுத்துப் பிறகு வலதுகை மோதிரவிரலால் இடதுநாசியை அடைத்துக்கொண்டு வலதுநாசியைத் திறந்து, உள்ளிழுத்த வாயுவை அதன்வழியே மெல்லவெளிவிடுக. அவ்வாறு வெளிவிட்டபின் மறுபடியும் அவ் வலதுநாசியினாலேயே வெளிவாயுவை உள்ளிழுத்து இழுத்தவுடன் வலதுநாசியை முன் சொன்னவாறே அடைத்துக்கொண்டு, இடதுநாசியைத் திறந்து உள்ளிழுத்தவாயுவை அதன்வழியே மெல்லவெளிவிடுக. இங்ஙனம் இடதுநாசியிலிருந்து வலதுநாசிக்குப் போய்த் திரும்பவும் இடதுநாசியில் வந்து முடிவது ஒரு சுவாசஓட்டமாகும். இங்கேசொல்லியவாறு மாறுபடாமல் ஏழுதரம் சுவாசிக்கவேண்டும். இவ்வப்பியாசத்தை விடியற்காலையில் உறக்கம் நீங்கி எழுந்தவுடனும், நீராடிய பின்னும், அந்திநேரத்திலும் வெறுவயிற்றில் முறைதவறாமற் செய்துவருக. இவ்வப்பியாசத்தால் இரத்தம் சுத்தப்பட்டு உடம்பிலுள்ள அக்கருவிகள் வலுப்படுவதுடன், மனமும் தலைவிரி கோலமாய்ப் பலவாறு ஓடும் ஓட்டத்தினின்று மடங்கி அடங்கும். கோபமாவது வேறுமன வருத்தமாவது கவலையாவது உண்டாகும்போதெல்லாம் மேற்சொல்லியவாறு ஏழுதரம் சுவாசித்தால் அவையெல்லாம் நீங்கிச் சிந்தை களங்கம் அற்று அமைதியாய் நிற்கும்.

:

கோபம், வருத்தம், கவலை, அச்சம், பொறாமை முதலான இழிகுணங்களுக்கு இடந்தருவதனால் உடம்பிலுள்ள

அகக்கருவிகள் விரைவில் நிலைகுலைந்து அழிகின்றன; ஆயுள் குறைந்து போகின்றது. எந்நேரமும் இவ்விழி குணங்களுக்கு ஆளாகி வருந்துபவர்களைக் கொள்ளை கொள்ள இயமன் வேண்டாம். இக்குணங்களே போதும். இக்குணங்களாற் பற்றப்படாமல் அமைதியாய் இருப்பவர்கட்கு உள்ள வலிவையும், இவற்றாற் பற்றப்பட்டுக் கலங்குபவர்கட்கு உள்ள வலியின்மையையும் அநுபவத்திற் கண்டுகொள்க. ஆகவே, இவ்விழிகுணங்கட்குச் சிறிதாயினும் இடஞ்செய்பவர்கள் திருவருளைச் சார்ந்திருத்தல் ஒருவாற்றானும் கைகூடமாட்டாது. ஆதலால் இவை தோன்றுமென்பது கண்டவுடனே எழுதாம் சுவாசிக்கும் முறையை வழுவாமல் அப்பியசித்துவருக.

இங்ஙனம் சுவாசித்தமாத்திரத்தானே மேற் சொல்லிய இழிகுணங்கள் தமது மும்முரங் கெட்டு அமைதி பெறும்; அவ்வாறு அவை அமைதிபெறுவிட்டால் அத்தீக் குணங்களுக்கு மாறான நற்குணங்களைச் சிந்திப்பதோடு நாம் அவ்விழிகுணவயப்பட்டு நடத்தல் பொருந்தாதாறென்று சிறிது ஆராயவுந்தலைப்படுக; அங்ஙனம் ஆராயத் தலைப்பட்டவுடனே அவை இருந்த இடமுந் தெரியாமல் மறைந்துபோய்விடும். யாங்ஙனமெனிற் காட்டுதும்.

கோபம் வரத்துவங்குமானால் அதற்குமாறான சாந்த குணத்தைப்பற்றிச் சிந்தித்திடுக. சாந்தகுணம் உடையவர் எவரையேனும் நினைத்துப்பார்த்து அவர் முன்னிலையில் எத்தகையோரும் அமைதிபெற்று அகம்மகிழ்தலைச் சிந்தித்துப்பார்க்க. கோபமுடையவர் எவரையேனும் அதனை அறிந்து நினைத்துப்பார்த்து, அவர் முன்னிலையில் சிலர் அச்சம் அடைதலையும் வேறுசிலர் அவரைப் போலவே அவரோடு கோபித்துக் கலகம் இடுதலையும் எண்ணிக்கண்டு



அதனால் வருந்தீமைகளை உன்னுக. கோபம்வரப்பெற்றவர்க்கு அவர் அறிவு நிலைகலங்கிப்போதல் கண்கூடாய்க் காணப்பட்ட உண்மை அன்றோ? எல்லா நன்மைகளையும் செய்தற்கும் அடைதற்கும் ஒருபேருதவியாய் நிற்கும் அறிவு தன்நிலைகுலைந்து போகுமானால் கோபம் உடையவர் பித்தங் கொண்டவர்களைப் போல இன்னது செய்வதென்றறியாமல் எதனையுஞ்செய்தற்கு முந்துவர். இதனாலேதான் கோபம் உள்ளவர் கோபம் மிகுந்த வேளையில் கொலைமுதலான கொடியசெய்கைகளைச் செய்து, தமது சினந்தணிந்த பிறகு தாம் அவற்றைச் செய்ததற்காகத் தம்மைத் தாமே நொந்து கொள்கின்றனர். கோபமுள்ளவர்க்குத் தமது உடம்பின் வலிமையும் வரவரக் குறைந்து போகின்றது. எவ்வாறென்றால் கோபம் வந்து தணிந்தபிறகு உடம்பில் ஆயாசமும் இளைப்பும் உண்டாதலை ஒவ்வொருவரும் அநுபவத்திற் கண்டு கொள்ளலாம். கோபம் என்னுந் தீயானது கொழுந்துவிட் டெரியும்போது, நீர்வடிவாய் நெகிழ்ந்திருக்கும் இரத்தமெல்லாம் அதனால் உறிஞ்சப்படுகின்றது. நெருப்பின் சேர்க்கையால் தண்ணீர் சுவறிப்போதலைப் பார்த்ததில்லையா? இதுபோலவே கோபத்தின் சேர்க்கையால் உடம்பின்வலிவும் உயிரின்வலிவும் குன்றிப்போகின்றன.

இனி ஏதேனும் ஒருகாரணத்தால் தம் அகத்தே வருத்தம் நிகழப்பெற்றவர் அஃது அங்கே வேரூன்றும் முன் அதனை அவ்விடத்தினின்றும் அகற்றுதற்கு முயலல் வேண்டும். மனம்மகிழ்தற்கு உரிய செய்கைகளையும் மனமகிழ்ச்சியை விளைக்கும் இனியவர் குணங்களையும் உலகத்துப்பொருள்களையும் உடனே நினைவுக்குக் கொண்டு வருதல்வேண்டும். தாமே முன்னர் அநுபவியாதவற்றைப் பின்னர் மனத்தாற் பாவிப்பதென்றால் அது மனத்தின் கட் புலப்பட்டுத் தோன்றி நில்லாது. மேலும் அதுபொய்ப்

பாவனையேயாகலின் அதனால்வரும் பயனும் பொய்யாகவே ஒழியும். ஆனதுபற்றித் தாம் முன்னர் மெய்யாக அனுபவித்த ஓர் ஆனந்த அனுபவத்தை நினைவுக்குக் கொண்டு வருதலே தாம் எய்திய வருத்தத்தை எளிதிலே போக்குதற்கு உபாயமாகும்.

இனி இம்மக்கள் வாழ்க்கையில் கவலையென்பது இயல்பாகவே வந்து ஒவ்வொருவரையும் வருத்தும் பொல்லாத கொடியநோயாகும். தாம்தொடங்கிய முயற்சி நன்றாய் முடியுமோ தீதாய்முடியுமோ என்றும், தம்மவர் நோய் கொண்டு துன்புறுதலைப் பார்த்து அவர் சாவரோ பிழைப்பரோ என்றும், தமக்கு முதுமைவரும்போது தம்மைப் பாதுகாத்துக் கொள்ளுதற்கு மிகுந்தபொருளைச் சேர்த்துக்கொள்ளவில்லையே என்றும், தம்மனைவிமக்கள் முதலாயினோர் நல்லொழுக்க முடையவராய்ச் சீர்திருந்துவரோ சீர்திருந்தாரோ என்றும் இவ்வாறு இன்னும் பற்பலவகையாய் ஒவ்வொருவரும் கவலையடைந்து மனம் வேவுதலை நாம் கண்ணெதிரே காண்கின்றோம். இங்ஙனங் கவலைக்கு இடங்கொடுக்குந் தோறும் மனிதனுக்கு உள்ளக்கிளர்ச்சியும் வரவரக் குறைந்துபோகின்றது, முயற்சியுங்குன்றிப் போகின்றது. இவை குறையவே மனநோய் மிகுதிப்பட்டுப்பின் எவ்வகை மருந்திலும் தீராதாய் உயிரைக்கொள்ளை கொண்டு போய்விடுகின்றது. ஆகையால் இப்பொல்லாத கவலைநோய் உள்ளத்திற் றலைக்காட்டாதவாறு செய்துகொள்ளவேண்டுவது யோகசத்தியைப் பெறவேண்டுவார் ஒவ்வொருவர்க்கும் முதன்மையான கடமையாம். சிறிது ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் எவருங் கவலையடைய இடமேயில்லை. இருண்ட ஓர் இராக்காலத்து ஆகாயத்தை மேனிமிர்ந்து பார்மின்கள்! ஆற்றுமணலினும் அளவிடப்படாத நட்சத்திரக் கூட்டங்கள் காணப்படுகின்



றனவல்லவோ? அந்நட்சத்திரங்களுள் ஒவ்வொன்றும் நாம் இருக்கும் இந்நிலவுலகத்தினும் எத்தனையோ மடங்கு பெரியனவாகும். அந்நட்சத்திர மண்டிலங்களிலிருந்து பார்ப்பவர்களுக்கு நமது நிலவுலகம் ஒரு சிறுகடுகளவு கூடத்தோன்றுமோ என்பது சந்தேகம். இத்துணைச்சிறிதாகிய இந்நிலவுலகத்திலேயிருக்கும் எண்ணிறந்த கோடி உயிர்களில் நீயும் ஒருசிற்றுயிர். இந்தச்சிற்றுயிரால் உலகத்தில் என்ன பெரியகாரியஞ் சாதிக்கமுடியும்? இவன் ஒன்று நினைத்தால் முடிவது வேறொன்றாய் இருக்கின்றது; இவன் ஒன்றும் நினையாதிருக்கையில் எத்தனையோ இவனை வந்து சூழ்ந்துகொள்ளுகின்றன. நாளைக்கு இது செய்வோம் என்று எண்ணிப்படுத்தவன் மறுநாள் உயிர்பெற்று எழுந்திருப்பதே நிச்சயமாயில்லை. மனிதனுடைய அறிவால் எவ்வளவோ திறமையாகவும் ஒழுங்காகவும் அமைக்கப்பட்ட கட்டிடங்களும் சிறந்தநகரங்களும் ஓர் இமைப்பொழுதில் நில அதிர்ச்சியினால் நொறுங்கிக் கீழ்விழுந்து அழிந்துபோகின்றன; இன்றைக்கு நிலமாயிருப்பது நாளைக்கு நீரினால் மூடப்படுகின்றது! நீர் நின்ற இடங்களில் நிலங்கள் தோன்றுகின்றன; காற்றினாலும் மழையினாலும் உண்டாகும் மாறுதல்கள் கணக்கற்றன. சூரியர் சந்திரர் இயக்கங்களால் உண்டாகும் மாறுதல்களும் எண்ணிறந்தன. இவற்றையெல்லாம் மனிதன் தன்சிற்றறிவால் சிறிதேனும் மாற்றவல்லவனோ? இல்லையே. அங்ஙனமிருக்க மனிதன் பின்வருவதைக்குறித்துக் கவலைப்பட்டு மாய்வது ஏன்? இவனுடைய ஆற்றலுக்கு அடங்கி நடவாத நிகழ்ச்சிகளைப்பற்றி இவன் கவலைப்பட்டு என்செய?

அப்படியானால் நாம் முயற்சி செய்வதற்கே இடம் இல்லாமல் வீணே நாட்கழிக்கவேண்டி வருமேயெனின்; அங்ஙனமன்று தந்நன்மையின் பொருட்டும் பிறர் நன்மையின்

பொருட்டும் ஒவ்வொருவரும் நன்முயற்சி செய்யவேண்டியது இன்றியமையாதகடமையேயாம்; என்றாலும் அம்முயற்சியினால் வரும்பயன் நன்றாகுமோ தீதாகுமோ என்று எண்ணி எண்ணி மனம் ஏங்குதல் சிறிதும் நலமுடைத்தன்று. "எண்ணித்துணிக கருமம் துணிந்தபின், எண்ணுவமென்பது இழுக்கு" என்னும் திருவாக்கின்படி ஒருகாரியத்தைச் செய்யத்தொடங்கும்போதே அது தமக்கும் பிறர்க்கும் நன்றாமாறுவைத்து நன்றாய்ச் சிந்தித்துச் செவ்வனே முயலல் வேண்டும்; எடுத்துச்செய்த அந் நன்முயற்சியினால் இன்னது வருமோ வாராதோ என்று ஐயமுற்றுக் கவலையடைதல் ஒன்றே யாரும் விரும்பற்பாலதன்றாம். அடுத்த நிமிஷத்தில்வருவது இன்னதென்று நம்மால் நிச்சயித்தல் அரிதாகலின் பின்னர் யாதுவருமோ எனக்கருதி மனங் கலங்குதல் தக்கதன்று. தன் அறிவுக்கு எட்டிய அளவு தான்றொடங்கிய முயற்சியினால் இத்துணை நன்மைவரும் என்றுசெவ்வையாக முயன்று வந்தபின் தான் கருதியவாறாக நன்மையேவரும்; அல்லது அவ்வாறின்றித் தான் எண்ணியதற்கு முற்றும் மாறானது வரினும்வரும். அவ்வாறு வந்தால் அதனை இவன் தன்குற்றமாக நினைந்து நெஞ்சம் புண்படுதல் ஆகாது. தன்னால் ஆகுமட்டும் நன்முயற்சியே செய்தவன் அம்முயற்சி பாழ்படக்கண்டால் அதனைத் தன்குற்றமென நினையாமல் அஃது ஊழ்வலியின் பான்மையென்னும் கடவுள்செயல் என்றும் உணர்ந்து மன அமைதி பெறுதலே தனது ஆன்மசக்தியை மிகுதிப்படுத்துதற்கு உரியமெய்ந்நெறியாகும். ஏனெனில் மனங்கலங்குதற்கு உரிய நிகழ்ச்சிகள் வந்தகாலத்து அவற்றை ஒருபொருட்படுத்தாமல் மனத்திட்பத்தோடு நிற்றல் சாமானிய மனிதசுபாவத்திற்கு மேற்பட்ட தெய்வசுபாவமே யாகுமன்றோ? வியாபாரநுட்பங்கள் எல்லாம் செவ்வையாகத் தெரிந்த ஒருவன் மலிந்த ஓரிடத்தினின்று ஒரு சரக்கைத் தன் கப்பலில்



ஏற்றுவித்து மிகுந்த விலைப்படும் வேறொரு நாட்டுக்கு அதனைத் தக்ககாலத்தே அனுப்புவித்தான். இவன் செய்த இம்முயற்சியில் ஏதும் பழுதே இல்லை. கடலிற்செல்லும் இவனது கப்பல் இடையே எதிர்பாராது நேர்ந்த சூறைக்காற்றில் அகப்பட்டுக் கடலுள் அமிழ்ந்திப் போனதாயின் அதற்கு இவன் யாது செய்யமாட்டுவான்? தன் அறிவாற்றலுக்கு மேற்பட்டுத் தோன்றிய அந்நிகழ்ச்சி கடவுள்செயலால் ஆயதென எண்ணி மன அமைதி பெறுவனாயின் அவன் உலக வாழ்க்கையில் உழலுபவனாயினும் அவனே முற்றத்துறந்த முழுத்துறவியாவான். மேலும், தான்வியாபாரஞ் செய்யத் துவங்குங்காலத்தும் இது நன்றாய் முடியுமோ தீதாய் முடியுமோ என்று ஐயமுற்றுக் கவலைப்படுவனாயின் அவன் அம்முயற்சியைச் செவ்வனே தொடங்கி நடத்த மாட்டாமல் இடைமுறிந்து போவன்! அல்லது அம் முயற்சியைத் தொடங்காமலே வறிது நாட்கழிப்பன். ஆகவே, நன்முயற்சியைத் துவங்கி நடத்தும் ஒருவன் அம்முயற்சி யாதாய் முடியுமோ என்று கலங்காதிருத்தலே பல வகையாலும் இம்மை மறுமைப் பயன்களைப் பெறுதற்குரிய உபாயமாகும். இவ்வுபாயத்தை நன்குணர்ந்த ஆங்கில அமெரிக்க வியாபாரிகள் தாம் துவங்கி நடத்தும் பெரிய வியாபாரங்களிலெல்லாம் அவை பின் எவ்வாறாய் முடியுமோ என்பதைப்பற்றிச் சிறிதுஞ் சிந்தியாமல் தாம் செய்யும் முயற்சிகளை மாத்திரம் திருத்தமாகச் செய்கின்றார்களெனவும், அதனால் அவர்கள் மற்றவியாபாரிகளைப் பார்க்கிலும் மிகுந்த ஊதியத்தை அடைந்து பெரிய செல்வர்களாய் இனிது வாழ்கின்றார்களெனவும் தெரிகின்றோம்.

இங்ஙனமே தம்மவர் நோயால் வருந்தும்போது அவர் எவ்வாறாவரோ என்று கவலைப்பட்டுக் கலங்காமல் அவரை அன்புடன்பார்த்து ஆறுதலான சொற்களைச் சொல்

வித் தக்க பரிகாரங்களையுஞ் செய்துவரல்வேண்டும். இவ்வாறு செய்வதைவிடுத்து இவர்க்கு வந்தநோய் தீருமோ தீராதோ என்று கவலையுற்றுக் கலங்கியழுது ஆற்றுமைப்படுதல் நோயுற்றவர்க்கு அந்நோயை மிகுதிப்படுத்துதற்கே இடமாகுமல்லது வேறு நன்மையின்றாம். நோய்கொண்டவர்க்கு அருகேயிருந்து ஆற்றுமைப்படுதல் மிகவுந் தீங்கு பயப்பதேயாகும். ஏனென்றால் தம்பக்கத்தேயிருந்து ஆற்றுமைப்படுபவரை நோயாளிகள் பார்க்குந்தோறும் தாமும் ஆற்றுமைப்பட்டு மனங்கலங்குவர். மனங் கலங்கக் கலங்கப் பிராணசத்திகுறையும்; அது குறையவே நோய் பெருகி அவரைக் கடிதில் இறக்கச்செய்யும். ஆகையால், நோய்கொண்டவர் பக்கத்தே செல்வோர் அந்நோயின் கொடுமையை மிகுத்துப் பேசாமல், 'இந்நோய் எம்மாத்திரம்! இது நாளைக்கே இருந்த விடமுந் தெரியாமல் மறைந்துபோகும்' என்று உள்ளக்கிளர்ச்சி உண்டாகுமவண்ணம், தீரத்தோடு பேசல்வேண்டும்; மகிழ்ச்சியினை விளைவிக்கும் இச்சொற்கள் செய்யும் நன்மையை மிக அரிய மருந்துகளும் செய்யமாட்டா.

இங்ஙனமே முதுமைப்பருவம் வருங்காலத்து என் செய்வேம் என்னுங் கவலையையும் அறவே ஒழித்துவிடல் வேண்டும். நம்மால் இயன்றவரையில் நல்வழியிற் பொருள்தேட முயலல் வேண்டும். நம் முயற்சியினால் மிகுந்த பொருள் தொகுக்க வாவிட்டால் கிடைத்தமட்டில் மனஅமைதி பெறுதலே பெரிதும் விரும்பத்தக்கதாம். இதனைவிடுத்து 'முதுமை வந்துவிட்டேம், இப்போது நமக்குள்ள பொருள் போதாதே' என்று கவலைகொண்டு தம் அளவுக்கு மிஞ்சி அல்லும் பகலும் இடைவிடாது பொருள் ஈட்ட முயல்குவராயின், அதனால் அவர் உடம்பிலுள்ள கருவிகள் தேய்ந்து வலிகுறையத் தாம் திரட்டிய



பொருளைத் தாம் அநுபவிக்கும் முன்னமே இறந்து போவர்.

இவ்வாறு தம்மளவுக்கு மேல் முயன்று விரைவில் அழிந்தொழிந்தவர் பலர். 'பார்மின்கள்! மரம் மரப்பொந்துகளில் வசிக்கும் பறவைகளும், காட்டிலும் மலையிலும் மலைக்குகைகளிலும் வசிக்கும் விலங்குகளும் நாளைக்கு என் செய்வோம் என்னுங் கவலையுடையனவாய் இருக்கின்றனவா? அவைகள் எல்லாம் தம் உயிர்வாழ் நாட்களை இனிது கழிக்கவில்லையா? எல்லா உயிர்களையும் வகுத்த இறைவன் அவைகட்கெல்லாம் படியளவாமல் விடுகின்றனா? அருட்பெருங்கடலான ஆண்டவன், எல்லாவுயிர்களையுந் தான் குறித்த காலம் வரையிற் காப்பாற்ற இருக்கையில், மனிதர்கள் மாத்திரம் அவன் அருட்பெருந்தகைமையை நம்பாமல் தமக்குத் தம்மையே துணையாக நினைத்துக் கவலையுறுதல் என்னையோ! இதனால் நாம் பொருள் தேடும் முயற்சியை விட்டிருக்க வேண்டுமென்பது கருத்தன்று. 'யானைமுதல் எறும்பீறான உயிர் அத்தனைக்கும் படியளக்கும் ஐயன் என் முயற்சியை யறிந்து எனக்கும் படியளவாது போகான்.' என்று ஒவ்வொருவரும் உள்ளத்தில் உறுதிகொண்டு மகிழ்ந்து முயல்வாராயின் அவர்கள் பன்னூறாண்டு பயன்பட இனிதுவாழ்வர்; அதனால் அவர் வாழ்க்கையிற் கவலைகளுந் துன்பங்களும் பாவங்களும் சிறிதும் இல்லாமல் ஒழிந்துபோகும்.

இனித் தம்மனைவி மக்கள் முதலாயினாரிடத்து மிகவும் அன்புடன் ஒழுகி அவர்க்கு நல்லறிவுகளையும் அடிக்கடி புகட்டி நற் செய்கைகளிலும் அவர்களைப் பழகச் செய்து வந்தால் அவர்களைப்பற்றிச் சிறிதுங் கவலையடைய வேண்டுவதே யில்லை. ஒரு குடும்பத்திற் றலைவனாயிருப்பவன் எங்ஙனம் நற்குணத்திலும் நல்லொழுக்கத்திலும்

மேம்பட்டுத் தோன்றுகின்றானோ, அங்ஙனமே அவனைச் சார்ந்தவர்களும் அவற்றில் மேம்பட்டுத் தோன்றுகின்றார்கள். அவன் நல்லவனும் நற்செய்கை யுடையவனுமாய் இராவிட்டால் அவனைச் சார்ந்தவர்களும் அவனைப்போலவே ஆய்விடுகிறார்கள். ஒரு குடும்பத்தில் முதல்வனாயிருப்பவன் திருடனாய் இருந்தால் அவன் மனைவி மக்களும் பெரும்பாலும் திருடர்களாகவே மாறிவிடுகிறார்கள். வேசியார் வீட்டிற்குச் செல்லுந் தந் தந்தையரைப் பார்த்துத் தாமும் வேசியர் வீட்டுக்குச் சென்று கெட்ட புதல்வர்கள் எத்தனை பெயர்! கள்ளையுஞ் சாராயத்தையுங் குடித்துப் பெருங்குடியர்களான தந் தந்தைமாரைப் போலவே தாமுங் குடித்துக்கெட்ட பிள்ளைகள் எத்தனை பெயர்! வேட்டை யாடிப் பறவைகளையும் விலங்கினங்களையுங் கொன்று அவற்றின் இறைச்சியை விழுங்கியும், பொய்யுரைத்தும், பிறரைவஞ்சித்தும், சூதாடித்திரியும் தந் தகப்பன்மாரைப் பின்பற்றித் தாமும் அங்ஙனமே தீநெறியில் நடந்து கெட்ட இளைஞர்கள் எத்தனைபெயர்! எந்நேரமுங் கடுகடுத்த முகத்தோடும் வன்சொற்களோடுந் தம் மனைவிமாரை வைதும் அடித்துங் கொடுமை செய்து, அவர்கள் தம்மை வெறுத்து அகன்றுபோய்ப் பிறரைச் சார்ந்தொழுகும்படி செய்யும் கணவன்மார்க்குங் கணக்குண்டோ? இங்ஙனமே தங்குடும்பத்திற் சேர்ந்தவர்களையெல்லாங் கெடுத்துக் கெட்ட வழியிற் புகுத்துவதற்கு அக் குடும்பத்திற் றலைவனா யிருப்பவன் தீக்குணமுந் தீச்செய்கையுமே காரணமாமன்றி மற்றென்னை? ஆகவே, குடும்ப முதல்வனா யிருப்பவன் தான் செவ்வையாக நடந்து காட்டுவனாயின், அவன் றன்னைச் சேர்ந்தவர்களெல்லாருந் தாமே நல்லவர்களாய் நடந்து நலம்படுவர்; அதன் பொருட்டு அவன் சிறிதுங் கவலையடைதல் வேண்டாம்.



இனி அச்சம் என்னுங் கொடுந்தீயுந் தன்னைவந்து பற்றாமற் செய்துகொள்ளவேண்டும். அச்சம் உள்ளவனுக்குச் சிறிய காரியங்களுங் கைகூடுவதில்லை. மனவலிமையுள்ளவனுக்குப் பெரிய காரியங்களுங் கைகூடுகின்றன. அச்சம் உள்ளவனைக்கண்டு எல்லாரும் வெறுப்பு அடைகிறார்கள், தீரமுள்ளவனிடத்திலே எல்லாரும் விருப்பம் வைக்கிறார்கள். மனிதனினுந் தாழ்ந்த பிராணிகளுங்கூட அச்சம் உள்ளவனைக் கண்டால் அவனுக்குத் தீங்குசெய்ய முந்துகின்றன; தைரியமுள்ளவனிடத்திலோ அடங்கி ஒடுங்கிக் கிடக்கின்றன. குலைக்கிறநாய் ஓடுகின்றவனைக் கண்டால் பின்னும் பின்னும் மிகுதியாய்க் குலைத்துக்கொண்டே அவனைப் பின்றொடர்ந்து கடிக்கப்போவதும், அதற்கு அஞ்சாமல் நின்று தன்னை உறுத்துப் பார்ப்பவனுக்குத் தான் அடங்கிப் பின்வாங்கி ஓடுவதும் பார்த்ததில்லையா? எவ்வளவோ முரட்டுத்தனமுள்ள குதிரைகளையெல்லாம் இலேசிலே பழக்குகிறவர்களை நீங்கள் பார்த்ததுண்டா? அவர்கள் மிகக்கொடுமையான குதிரைகளையுந் தன்னந்தனியாகவே சென்று அடக்கி ஒடுக்குதலைப் பார்த்தால் அவர்களிடத்தில் ஏதோ மந்திரசக்தி இருக்கிறதென்று நீங்கள் நினைப்பீர்கள். ஆனால் அப்படி ஒன்றும் இல்லை; அவர்களிடத்தில் இருக்கும் மந்திர சக்தியெல்லாம் மனோதைரியமே யாகும். அச்சம் உள்ளவனையும் அச்சம் இல்லாத மனோதிட முள்ளவனையும் பிராணிகள் மிகஎளிதிலே தெரிந்துகொள்ள வல்லனவாய் இருக்கின்றன. சிறிதும் அஞ்சாத நெஞ்சினனாய்த் தன்னை உறுத்துப் பார்த்துக்கொண்டே தன்பால் அமைதியோடும் அணுகுபவனைக் கண்டால் எத்தகைய பிராணியும் அவனுக்கு அஞ்சிப் பணிகின்றன. புலி கரடி சிங்கம் நச்சுப்பாம்பு முதலிய கொடிய செந்துக்களைப் பழக்குகின்றவர்களுக் குள்ள மனவலிமை இவ்வளவென்று வரையறுத்துச் சொல்லல் ஏலாது. ஆயி

னும், மனிதனுக்குள்ள விசேட அறிவில்லாத பிராணிகளை அடக்குவதற்கு வேண்டும் மனவலியினும், விசேட அறிவோடு கூடிய மனிதர்களைத் தன்வசப் படுத்துவதற்குப் பன்மடங்கு மிகுந்த மனவலிவு வேண்டும். ஆனால், அச்சம் உள்ள அளவும் மனத்திட்பம் உண்டாகாதாகலின் அவ் வச்சத்தை வேரொடுக்களைந்து விடுதலில் கருத்தூன்றுக.

தன் மனச்சான்றுக்கு மாறுபாடில்லாமல் நடக்கையில் ஒருவனிடத்தில் அச்சம் நிகழாது; தான் நீதிநெறி வழுவாமல் ஒழுகும் வரையில் ஒருவன் எதற்கும் அஞ்ச வேண்டுவதில்லை. உண்மை பிறழாமல் நடப்பவனிடத்திலே எவர்க்காயினும் வருத்தமேனுங் கோபமேனும் உண்டாகுமோ? எல்லாரும் அவனை அன்புடன் வியந்து பாராட்டுதலன்றோ செய்கின்றார்! அங்ஙனம் எல்லாரும் தன்னை விருப்பத்தோடு நேசித்து வருகையில் அவன் அவர்கள் எல்லாரிடத்திலும் மனம்மகிழ்ந்து அளவளாவுவதேயன்றி, அவர்களைக்கண்டு சிறிதும் அச்சம் உறுவான் அல்லனே; ஒரோவொருகால் தான் உண்மைநெறி திறம்பாமல் நடத்தலைக்கண்டு தீயோர் சிலர் அவனுக்குத் தீங்கிழைக்க முயல்குவராயின், உண்மை வழுவாத அவன் அதற்குச் சிறிதும் அஞ்சானாய்த் தன் உண்மையை உலகம் அறியும்படி தெருட்டி அவரைச் சீர்திருத்துதற்கே நினைக்க வேண்டும்.

ஆண்டவனையன்றி அணுவும் அசையாதாகலின் பொய்யாகிய தீயமக்கள் சிலர் நல்லோனுக்கு எங்ஙனம் தீதுசெய்ய மாட்டுவார்? உண்மை வடிவாய் விளங்குங் கடவுள் உண்மை திறம்பாதவன் மாட்டு மிக முனைந்து விளங்குமாதலின் அந்நல்லோன் முன்னர்த் தீயோர் திரண்டு செய்த தீயவையெல்லாம் பகலவன் முன்னர்ப் பனியி



ருள் மாய்ந்தாற்போல முதலறக்கெட்டு ஒழியும். "விளக்குப்புக இருள் மாய்ந்தாங்கொருவன், தவத்தின்முன் நில்லாதாம் பாவம்." என்னும் நீதியுரையைக் கடைப்பிடித்துத் தீயோர்க்கு அஞ்சி நல்லவற்றை நெகிழவிடாது, அவற்றைக் கிளர்ச்சியோடும் சிக்கெனப்பிடித்தலே ஆன்மசத்தியை மிகச்செய்வார்க்கு உரியதாகும். மலையுருண்டாலும் கடல்புரண்டாலும் நிலன் அதிர்ந்தாலும் புயல் அடித்தாலும் அச்சம் அடையாமல் உண்மைநெறியில் உறைத்து நிற்கவேண்டும். எல்லாம் வல்ல இறைவனையே ஒப்பற்ற துணையாக நாடி நிற்கப் பெறுகுவமாயின், நாம் எதற்கும் அஞ்சாத மனத்திட்பத்தை அடைவம். இதுவேதான் நாம் அச்சம் அடையாமல் இருத்தற்கு இலேசான வழியாமென்க.

இனித் தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் "அழுக்கா றவா வெகுளி யின்னாச்சொல் நான்கும், இழுக்கா இயன்ற தறம்." என்று தொகுத்துச் சொல்லிய பாவங்கள் நான்கில் அழுக்காறு என்னும் பொறாமையை முதலில் வைத்துச் சொல்லியிருப்பதனால், இதன் கொடுமை மற்றை மூன்றினும் மிகப் பெரிதாமென்பது நன்கு புலப்படுகின்றது. மற்றைச் சாமானிய மனிதரிடத்திற் காணப்படும் பொறாமையை விடக் கல்வியறிவுடையோரிடத்தும் செல்வமுடையோரிடத்தும் இத் தீயகுணம் மிகவுங் கொழுந்துவிட்டு எரிகின்றது. 'இவர் இத்தனை கல்வியுடையரா யிருத்தலையும், இவர் அதனால் மிக்கபுகழ் எய்துதலையுங் கண்டு எம்வயிறு எரிகின்றதே, இவர் தொலையும் நாள் எந்நாளோ.' என்று கல்வியுடையவர் மனம் புழுங்குகின்றனர்; 'இவர்க்குள்ள பொருள் எமக்கில்லையே பாழுந்தெய்வமே இவர்க்கு மாத்திரம் இத்தனை பொருளையும் செல்வாக்கினையுந் தந்தனையே. இவர் இவற்றை யெல்

ளெம் இழந்து வறியராய் அலையாரோ, இவர்க்குள்ள செல்வம் எல்லாம் யாம் அடையேமோ' என்று பலவாறு மனம்பேதுற்றுச் செல்வரும் பொறாமைப் படுகின்றனர்.

இங்ஙனம் பொறாமைப் படுகிறவர்களைக் கண்டால் இவர்களுடைய புன்மையைக்கண்டு நமக்கு இரக்கம் உண்டாகாமற் போகாது. பிறர்க்குள்ள பெருமையைக் கண்டு மனம் புழுங்கும் இவர் கல்வி கற்று என்பயன்? செல்வம் உடையராய் என்பயன்? இவர் எந்நேரமும் மனப்புழுக்கத்திலே கிடந்து புழுப்போல் துடி துடித்து இந்நிலத்திலேயே நிரயத்துன்பத்தை எய்துகின்றனர்! அந்தோ! இவர் தமக்குள்ள கல்வியாலுஞ் செல்வத்தாலுந் தாமும் பயன் பெற்றுப் பிறரையும் பயன்படச்செய்ய அறியாமல் தாம் எப்பொழுதுந் துன்பத்திலே ஆழ்ந்து பிறரையும் வருத்திப் பேய்போல் அலைதல் பெரிதும் வருந்தத்தக்கதேயாம். இத்தன்மைப் பட்டவர் முகத்தில் அமைதியே இராது, மூதேவி குடிகொண்டிருப்பள். இவரைப் பார்ப்பவரெல்லாம் இயல்பிலே அருவருப் படைகின்றனர், இவர் சொற்களில் நயமே இருப்பதில்லை. இவர் தமக்கு நெருங்கிய உறவினராயுள்ள மனைவி மக்கள் பெற்றார் உற்றார் உடன்பிறந்தார் முதலியவர்களுங் கூட இவரைக் கண்டால் வெறுப்படைகின்றனர். இங்ஙனமாகவும் இவரைக் கண்ட பிறர் இவரை வெறுப்பது சொல்லவும் வேண்டுமோ? இவர் தம்மையொத்த இழிகுணமுடைய சிலர் கூட்டத்திலே சிறிதுநேரம் மகிழ்ச்சிகொண்டாலும், அவ் விழிஞர் கூட்டத்திலும் ஒருவர்மேல் ஒருவர் பொறாமை யுற்றுப் பழித்துக் கூறுதல் நடைபெறுதலால், அங்கும் அவர் துன்பமே உழக்கின்றார். இவ்வாறு அழுக்காறுள்ளவர் அவ் வழுக்காறொன்றாலேயே கேடு அடைதலை இனிதுணர்ந்தன்றே திருவள்ளுவ நாயனார் "அழுக்காறுடையார்க்கது சாலும் ஒன்னார், வழுக்கியுங் கேடீன்பது." என்று அருளிச் செய்தார். பகைவர் கேடுசெய்ய வேண்டாமல் தம்மிடத்துள்ள பொறாமையே தம்மைக் கெடுத்து இம்மை மறுமை இன்பங்களை ஒருங்கு இழக்கச் செய்யுமாதலால், அழுக்காறுடையார் அவ்வழுக்காற்றினைத் தம்மிடத்தினின்றும் முதலறப் பெயர்த்தெறிந்து அமைதி பெறுதலே நன்றாம்.



பிறர்க்குவரும் உயர்ச்சிகண்டு மனம்புழுங்குதல் எத்தகையோரிடத்தும் சாதாரணமாய்க் காணப்படுகின்றது. அம்மனப் புழுக்கம் தம்முள்ளத்து வேர்க்கொள்ளும் முன்னமே உடனே அதையாற்றி வேறுவழியில் இருப்புதல்வேண்டும். யாங்ஙனமெனிற் காட்டுதும்: 'இவர்க்கு வந்த இத்தனை உயர்ச்சியும் இவரிடத்துக் காணப்படும் நல்லறிவு நற்குண நற்செய்கை நற்பொருள் நற்கல்வியால் வந்தனவேயாகும்; இவரிடத்துள்ள இந்நன்மை காரணமாகவே எல்லாம்வல்ல இறைவன் றிருவருள் இவரை இங்ஙனம் உயர்த்துவதாயிற்று. இவர் உயர உயர உலகத்தவர்க்கு நன்மையே உண்டாகுமாதலின், இவரது உயர்ச்சியைப்பற்றி யாம் அகம்மகிழக் கடவேம்; இவரைப்போலவே யாமும் நன்னெறிபற்றி ஒழுகினால் அருட்களஞ்சியமான ஐயன் எம்மையும் உயரச் செய்குவான்; இதனைவிடுத்து இவரது உயர்ச்சிகண்டு யாம் மனம் புழுங்குவது எவ்வளவு பேதைமை!' என்று கூர்ந்து ஆராய்ந்து அதனையாற்றி அன்பு ஊறும் உள்ளம் உடையராகுக.

இதுகாறும் எடுத்துக்கூறிய தீயகுணங்கள் தமதுள்ளத்திற் சிறிதுந் தலைக்காட்டாதவாறு பழகவல்லார்க்கு அவர் தம் சிந்தையானது களங்கமற்ற தூயவானம்போல் தெளிவாய் இருக்கும்; அதிற்றோன்றும் அவர்தம் அறிவிச்சை செயல்களெல்லாம் ஒருங்குதிரண்டு அவ்வானத்திற்றிகழும் ஞாயிறுபோல் ஒளிவிரிந்து இலங்கா நிற்கும். அவை அங்ஙனந் துலங்கவே அவற்றில் நிறைந்து புறப்படும் பிராணசக்தி அளவற்ற ஆற்றலுடையதாய் அவர் வேண்டியவெல்லாம் வேண்டிய

வாறே பெறுமாறு எய்துவிக்கும். இவ்வியல்பினராய் உள்ள பெரியவரின் உயிர் மிகவும் பரிசுத்தம் உடையதாய்ப் பொலிவுமாகலின், அவ்வுயிரின் வழிப்பட்ட அவரதுடம்பும் மிக்க பரிசுத்தம் உடையதாகிப் பொன்னிறமாய் வலிவுற்று விளங்கி ஒரு நூற்றாண்டினும் மிகுந்த நாள் அவ்வுயிர்க்கு இருப்பிடமாய் நிலவும். ஏனென்றால், மனிதனுடைய நினைவின்வழித்தாகவே அவனுடம்பும் அவ்வுடம்பில் அமைந்த கருவிகளும் இயங்காநிற்கும். குடிகாரன் உடம்பையும் அவன் உறுப்புக்களையும் உற்றுப்பாருங்கள்; குடியன் அல்லாத தூயோன் உடம்பையும் உறுப்புக்களையும் சிந்தித்துப்பாருங்கள்; அவை இரண்டிற்கும் உள்ள வேற்றுமை எளிதிற் புலப்படும். இவ்வாறே எந்நேரமும் சினங்கொள்பவன் முகத்தையும் சினமின்றி அமைதியே யுடையவன் முகத்தையுந் தெரிந்து உற்றுப்பார்த்தால் அவை தமக்குள்ள வேற்றுமை தெள்ளிதிற் புலப்படும். இன்னுந் துயரமுள்ளவன் முகக்குறியும், மனமகிழ்ச்சியுள்ளவன் முகக்குறியும் எளிதிலே கண்டுகொள்ளலாம். பொருளை நல்வழியிற் செலவிடாமல் இறுகப்பிடிக்கும் பிசுனனுடைய முகச்சுளிவையும், அதனை அறஞ்செய்து நல்வழியில் ஏராளமாய்க் கொடுக்கும் ஈகையாளன் முகத் தெளிவையும் எவரும் இனிது தெரிந்துகொள்ளக் கூடும். இப்படியே உயிர்களின் நற்குண நிகழ்ச்சிக்கு இயைந்த உறுப்புக்களின் அமைவையும், தீக்குண நிகழ்ச்சிக்குப் பொருந்தின உறுப்பின் குளிவுகளையும் உற்றுப்பார்த்துப் பழகினரும் அநுபவத்தால் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாய் உணரலாம். அல்லது உறுப்படையாளங்களைக் கொண்டு ஒருவர் உள்ளத்தின் உண்மைகளை நிச்சயித்துரைக்கும் உறுப்படையாள நூலைக் கொண்டும் மனிதர் இயற்கைகளைப் பெரும்பாலும் நன்கறியலாம். ஆகவே, ஆன்மசத்தியினையும் சரீரசத்தியினையும் ஒருங்கு பெருகச் செய்யவேண்டும் என்னும் நல்விருப்பம் உடையவர்களெல்லாரும் மேற் கூறியவற்றை



அலட்சியஞ் செய்துவிடாமல் நல்லகுணங்களிற் பழகுவதற்கு இடையறாது முயன்றுவரல் வேண்டும். சிலர் நற்குணங்களிற் பழகுவது அருமையாயிருத்தலின் அது செய்தற்குக் கூடவில்லை என்று போக்குக் காட்டுகின்றார்கள். தீக்குணத்திற் பழகுவதுந் துன்பம், அதனால் வருவதுந் துன்பம், அதனால் இம்மைமறுமை யிரண்டினும் அநுபவிப்பதுந் துன்பம்; இவ்வாறு எப்போதுந் துன்பத்திற்கே இடமாய் எல்லாராலும் வெறுக்கப்படுவனவாகிய தீக்குணங்களை அநுசரிப்பது கஷ்டமோ, பழகுதற்கும் நல்லனவாய்ப் பழகியபின் இன்பத்தை அளிப்பனவாய் இம்மை மறுமை யிரண்டினும் மாறாத சுகத்தை மேன்மேலும் விளைவிப்பனவாய் உள்ள நற்குணங்களிற் பழகுவது கஷ்டமோ என்று சிறுமகாரைக் கேட்பினும் அவர் நற்குணப் பழக்கமே எளியதாம், இனியதாம் எனக் கூறுவராகலின் அச்சிறுமகார்க்குள்ள அறிவுதானும் இல்லாமல் தம்மைப் பெரியவராய்க் கருதியிருப்பவர் நற்குணப் பழக்கம் கடுமையானதென்று உரைக்கும் உரை நகைத்தற்கே இடமாவதாமென்க.

## அமைதி

இனி, மேற்கூறிய தீயகுணங்களை விட்டு நற்குணங்களிற்பழகுவதற்கும் பிராணசத்தியை வீணே கழியவிடாமல் அதனைத் தடுத்து நிறுத்தித் தனக்கே உரிமையாக்கிக் கொள்ளுவதற்கும் மிக இலேசான ஒருவழி இருக்கின்றது. இஃது ஆற்றின் நீரோட்டத்தை உற்றுப்பார்த்து அறிய வல்லவர்களுக்கு எளிதிலே புலப்படற்பாலதேயாம். ஆழமின்றிக் குறைந்த அளவுள்ள நீரோடும் ஆற்றினையும், ஆழம் மிக உடையதாய் மிகுந்தநீர் வெள்ளமாய்ப் பெருகி ஓடும் ஆற்றினையும் ஒப்பிட்டுப் பாருங்கள். ஆழமில்லாத சிறியநீர் ஆரவாரத்தோடும் மிக விரைவாய் ஓடுகின்றது; ஆழமுள்ள

யிருந்த நீர் ஓசையின்றி அமைந்து செல்லும் ஒருவகை இனிய வேகமுள்ளதாய்ச் செல்லுகின்றது. இனி இவ்வாற்றின் இவ்விருவகை நீரோட்ட இயல்பினையும் சபையிலின்று பேசும் புலவர் தன்மைகளோடு ஒப்பிட்டுப் பாருங்கள். ஒருவர் ஒரு நிமிஷத்தில் ஒன்பதினாயிரஞ் சொற்களை நிறைத்து அதிவேகமாய்ப் படபடப்போடு பேசுகின்றார்; இவர் பேசுவனவற்றைச் சபையிலிருந்து கேட்போரில் யாருமே தெரிந்துகொள்ள மாட்டாதவர்களாயிருக்கின்றனர். கேட்பவர்களில் அறிவுடையராயிருப்பவர் 'ஓ! இவரென்ன பொருளின்றி வெறுஞ் சொற்களை வாரியிறைத்து வீண் பொழுது போக்குகின்றார்!" என்று அவர் தன்மைக்கு இரக்கமுற்று இருப்பர்; கேட்பவர்களில் அறிவில்லாத பேதைகள் 'ஆ! இவர் திறமையை என்னவென்றுதான் சொல்லுகிறது! சும்மா மேகம்போற் பொழிகிறார்! இவர் சொல்வதை நாம் அறிந்து கொள்ளச் சக்தியில்லையே!' என்று அதிசயப்படுகின்றார்கள்; அறிவுள்ளவர் அறிவில்லாதவர் என்னும் இருதிறத்தாரும் இங்ஙனம் பேசிக்கொள்வதிலிருந்தே இவ்விருதிறத்தார்க்கும் இத்தகைய புலவோர் பிரசங்கம் சிறிதும் பயன்படுவதில்லை என்பதைத் தெளிந்து கொள்கின்றோம். இனி மற்றொரு புலவர் தாம்பேசும் விஷயத்திலே கருத்தைப் பதியவைத்து அவ்விஷயத்தை எல்லார்க்கும் இனிது விளக்குவதற்கு எவ்வளவு சொற்கள் வேண்டுமோ அவ்வளவு சொற்களையுந் தேர்ந்தெடுத்து ஒருவரிசைப்பட வைத்து ஆழ்ந்து அமைதியோடும் ஆரவாரமின்றி அளவான வேகத்தோடும் பேசுகின்றார்; இவர் பேசுவனவற்றைக் கேட்கும் அறிவுள்ளவர் அறிவில்லாதவர் ஆகிய இருதிறத்தவரும் இவர் தெளிந்து பேசியவற்றைக் கேட்டு 'யாம் அறியப்பெறாதன வெல்லாம் விளக்கமாய் அறியப்பெற்றோம்' என்று மனம் மகிழ்கின்றார்கள். இன்னும் கோடைகாலத்து மேகத்தின் செயலையும் கார்காலத்து மேகத்தின் செயலையும் சிறிது பகுத்தறிந்து



பாருங்கள்; கோடைகாலத்து மேகம் சடுதியிற்றோன்றி ஒரு நொடிப்பொழுதிற் சடசட வென்று பல துளிகளை வாரி இறைத்து அடுத்த நொடியில் மறைந்து போகின்றது; இம் மழையால் நிலத்திற்கும் உயிர்களுக்கும் எவ்வகையான பயனும் உண்டாகக்காணேம். மற்றுக் கார்காலத்து மழையோ வானமெங்குங் கறுத்து எங்குங் கவிந்து ஒரே நிலையாக அமிழ்த்தாரையென மழைநீரைப் பொழிந்து நிலத்தை வளம்படுத்திப் பயிர்பச்சைகளைச் செழிக்கச்செய்து எல்லா மன்னுயிர்கட்கும் அளவற்ற பயனை விளைக்கின்றது. இவ்வாறு எடுத்துக்காட்டிய இப்பொருள் நிகழ்ச்சிகளைக்கொண்டு அவசரமும் ஆரவாரமும் உள்ள இடங்களிலே பயன்படுபொருளும் நன்மையும் காணப்படுவதில்லையென்பதூஉம், அவையில்லாமல் அமைதியும் ஆழமும் உள்ள இடங்களிலே பயன்றருபொருளும் பெரு நன்மையும் பொருந்திக் காணப்படுமென்பதூஉம் நன்கு தெரிந்து கொள்ளல் வேண்டும்.

இனி அமைதியாக உள்ள ஆற்றுவெள்ளம் மிகவும் ஆழமுடையதாயிருத்தல் போல, அமைதியாக இருப்பவர் அறிவானது மிகவும் ஆழ்ந்துசெல்லுந் தரத்ததாய்த் தெளிவாய் இருக்கும். அவசரமும் ஆரவாரமும் உள்ளவர்க்கு அறிவு ஆழ்ந்து செல்லாது, தெளிவாயும் இராது; இவருடைய பிராணசக்தி வீணே அழிந்தொழிவதல்லாமல் அஃது இவர்க்கும் பயன்படாது, பிறர்க்கும் பயன்படாது. ஆகவே, பிராணசக்தி மிகுதிப்பட்டு அறிவும் ஆற்றலும் மேன்மேல் பெருகவேண்டுவார்க்கு எந்தக் காரியத்திலும் அமைதியோடிருக்கப் பழகுதல் இன்றியமையாத ஓர் அரிய அப்பியாசமாகும். அதனைப் பழகுமாறு யாங்ஙனமெனிற் காட்டுதும்.

சொல்லுக்குஞ் செயலுக்கும் மனம் முந்தியதாகையால் முதலில் மன அமைதிபெறக் கற்றுக்கொள்ளல் வேண்டும். ஒருவர் ஏதேனும் ஒரு நல்ல காரியத்தைப்பற்றி நம்முடன் வந்து பேசும்போது, உடனே அதனை மனம் மகிழ்ந்து ஏற்

றுக்கொண்டு பேசுதலும், அல்லததை வெறுத்து மறுத்துப் பேசுதலும், அல்லது அதனைப்பற்றிய நமது அபிப்பிராயத்தை உடனே சொல்லுதலுங் கூடாவாம்; அவர் சொல்வதைக் கவனமாகக் கேட்டு அதில் விருப்புவெறுப்புக் கொள்ளாமல் அதன் நன்மையை நமதுள்ளத்திலே நன்குஆராய்ந்து பார்த்து நம்மிடத்திலேயே அதன் முடிவை வைத்துக்கொள்ளல் வேண்டும். பிறகு அவர் நமது அபிப்பிராயத்தைக் கேட்க விரும்பினால்மாத்திரம் நமது உள்ளக்கருத்தை உள்ளவாறு வெளியிடல் வேண்டும்; அங்ஙனம் வெளியிடுங்காலத்தும் விரையாமல் வெகுளாமல் அமைதியோடும் அதனைவெளியிட்டுச் சொல்லல் வேண்டும். ஒருவர் நமது அபிப்பிராயத்தைக் கேளாதிருக்கையில் நாமே அதனை வலியச் சென்று கூறுதல் பெரிதும் இகழத்தக்கதொன்றாம். இனி மற்றொருவர் பொல்லாத ஒரு காரியத்தை வந்து சொல்லும்போது அதனையும் கேட்க விருப்பம் இருந்தால் அமைதியோடுங் கேட்டு அது தனக்கும் பிறர்க்கும் தீங்குபயப்பதாயிருந்தால் அதனை உள்ளத்தில் வையாது மறந்துபோகல் வேண்டும்; கூடுமானால் அது சொன்னவரை நயமாக நல்வழியில் திருப்பி அவரும் அதனை மறக்கும்படி செய்தல் வேண்டும். ஓர் ஊர்ப் பயணம் போகவேண்டியிருந்தால், பயணம் புறப்படவேண்டிய காலத்துக்கு முன்னமே உடன் கொண்டு செல்லுதற்குரிய சாமான்களைச் சாவதானமாய் எடுத்து முறைப்படக்கட்டிச், செல்லுமிடத்தில் முன்னமே தமது வரவைத் தெரிவிக்கவேண்டியவர்களுக்குத் தெரிவித்துங் குறித்த காலத்தில் மனமகிழ்வோடு புறப்படல் வேண்டும்; இங்ஙனஞ் செய்யாமல் பயணம் புறப்படுஞ் சமயத்தில் சாமான்கள் தேடித்தொகுத்தலும், அப்போதுதான் சொல்லவேண்டியவர்களுக்குச் சொல்லப்போதலும், குறித்தகாலம் அணுக அணுக எல்லாஞ் சித்தப்படுத்தப் படாமையால் மிக அவசரப்பட்டு இன்னது செய்வதெனத்தெரியாமல் திகைத்துக் கலங்குதலும், வண்டி



புறப்படுஞ் சமயத்தில் மிக விரைந்து ஓடுதலும், செல்லும் இடத்தில் முன்னாகத் தெரிவிக்கவேண்டியவர்களுக்கு அங்ஙனந் தெரிவியாமல் திடீரென அவர்களிடஞ் செல்லுதலும், தெரிவித்த காலந்தவறி வேறு காலத்திற் செல்லுதலும் போன்றவையெல்லாம் பார்ப்பவர் நகைத்தற்கு இடமாவதோடு, தமது மன அமைதி கெட்டுத் தாம் துன்புறுவதற்கும் பிறரைத் துன்புறுத்துவதற்குமே காரணமாய் முடியும் என்க. இனித் தமக்கு அன்பராயுள்ளவர் ஒருவர் நோயாய் இருக்கக் கேட்டவிடத்து, அதற்காக மனம் வருந்துவது பொருத்தமே யாயினும், அவ்வருத்தத்திலேயே தமது சிந்தையை முழுதும் அழியவிடாமல், அவர் கொண்ட நோயை நீக்குதற்குரிய பரிகாரங்களை நாடி அவற்றைச் செய்விக்க வேண்டும்; இனி அவர்க்குள்ள நோய் எவ்வகையான பரிகாரங்களினும் நீங்காதாய் அவருயிரைக் கொள்ளை கொண்டு போயவிடத்து, அதனால் மிக ஆரவாரஞ்செய்து கலங்காமல், அவ்வருத்தத்தைத் தம்முள்ளத்திலே அமைதியோடும் வைத்திருந்து, அவ்வருத்தம் பின் ஆறுதற்குரிய காலவெல்லையடையுமளவும் பிரிந்தவர் உயிரைச் சூக்குமசரீரத்திற் பார்த்தற்கும், அவர் சூக்குமசரீரத்தில் சுகம் பெற்றுச் செல்லுதற்கும் அன்போடு இறைவனை இறைஞ்சி வேண்டுக; இதனால், ஆற்றுதற்கரிய அவ்வருத்தம் நீங்கப்பெறுதலோடு இறந்தவரைச் சூக்குமசரீரத்திற் சந்தித்தலுங் கைகூடும். இனித் தமக்கு இலாபமான ஒரு நிகழ்ச்சி நேர்ந்தவிடத்து அதனைப் பார்த்துத் தம்மை மறந்த மனமகிழ்ச்சி அடைதலை ஒழித்துவிடுக; இங்ஙனம் அளவுகடந்த மகிழ்ச்சி அடையப்பெற்றவர்க்கு உயிர் உடம்பைவிட்டுப் பிரிந்துபோய் விடுமாதலின், அதற்கு இடந்தராமல் ஒருவாறு மகிழ்ந்து அமைதியோடிருக்கவேண்டும்; இவ்வளவு இலாபமும் எம்பெருமான் அருள்செய்ததாகும்என் றுட்கொண்டால் மன அமைதி உண்டாகும். இதுபோலவே எதிர்பாராத பெரும்பொருள்

நஷ்டம் வந்தால் அதனால் அயர்வெய்தி வருந்துதலை விடுதல் வேண்டும்; ஏனென்றால் இடையறா வருத்தம் அடைந்தவர்களுக்கு உயிர் உடம்பைவிட்டு நீங்கிப்போம்; இப்பெரு நஷ்டம் ஏதோ ஒரு பெரு நன்மைக்காக எம் ஆண்டவன் அருளால் வந்ததாகுமெனக் கருதுதலே உள்ளம் அமைதி பெறுதற்கு எளிய வழியாகும். இங்ஙனமே கலக்கத்திற்கு ஏதுவாக வரும் நிகழ்ச்சிகளையும், அக்காலங்களிலெல்லாம் மனவமைதி பெறவேண்டும் முறைகளையும் உரைக்கப் புகுந்தால் இது மிகவிரியுமாதலின் இங்கே கூறியவற்றைக்கொண்டு கூறாதவற்றையும் உணர்ந்துகொள்க.

இனி இம்மனவமைதியின் வழித்தோன்றலாகிய சொல்லமைதி செயலமைதிகளுட் சொல்லமைதியைப்பற்றிச் சிறிது கூறுகின்றோம். மக்கட் பிறவியில்வந்த உயிர்கள் சொற்களின் உதவி ஒன்றுமாத்திரமே ஒருவரோடொருவர் கலந்துறவாடி உயிர்வாழவேண்டி யிருத்தலின் சொல்லமைதியானது வினை எல்லாவற்றினும் மேலதாகக் கைக்கொண்டு ஒழுகற்பாலதாம். சொல்லால் உலகம் சிறப்பினும் சிறப்புப் அழியினும் அழியும். சொல்லமைதி இங்ஙனம் மிகச்சிறந்ததாயிருத்தல் பற்றியே தெய்வப்புலவர் "யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால், சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு." என்று திருவாய் மலர்ந்தருளினார். ஏனென்றால் தீயினாற் சுட்டபுண் நாட்சென்றாலும் உள்ளாறிவிடும்; நாவினாற் சுடுவதுபோற் சொல்லிய சொல்லால் உண்டான மனப்புண்ணோருக்குமாதலின் எத்தனைகாலஞ் சென்றாலும் ஆறாது நிலைபெற்றிருக்குமாதலின் என்க. இத்துணை வலிதாகிய சொல்லின் தன்மையுணர்ந்து, அதனை அமைதிபெறச் செய்தலில் கருத்தைநாட்டவேண்டுவது எல்லார்க்கும் இன்றியமையாக் கடமையாம்; அவருள்ளும் யோக நித்திரையைப் பழக விரும்புவார்க்கு அதன் இன்றியமையாமை இவ்வளவென்று வரையறுத்துச் சொல்லற்பாலதன்று.



ஒருவரிடத்தே பேசப்புகுங்காலத்துத் தான் பேசப்போவது இன்ன விஷயமென்று தெளியவுணர்ந்து, அதனைத் தெளியப் பேசுவதற்கு எவ்வளவு சொற்கள் வேண்டுமோ அவ்வளவு சொற்களை மாத்திரம் நிறுத்து அளந்துபார்த்துச் செவ்வையாகப் பேசவேண்டும். தான் பேசுவதில் பயனற்றசொல் ஒன்றாயினும் இருத்தல் ஆகாது. உண்மையல்லாத ஒன்றைப் பேசப்புகுந்தால் அதனை மெய்யென நாட்டுதற்குப் பயனற்ற பற்பல சொற்களைப் பேசவேண்டி வருமாதலால், பொய்யான விஷயத்தை என்றும் பேசலாகாது. பயனற்ற செய்திகளையும் பேசிக்கொண்டிருத்தலாகாது.

நம்முடைய பிராணசக்தியானது ஓசையை நிலைக்களனாகக்கொண்டு நடைபெறுகின்றது. உரத்த ஓசையோடு பேசுமவனைக்கண்டு இவன் மிகுந்த வலியுடையவன் என்றும், மிகமெலிந்த ஓசையோடு பேசுபவனைக்கண்டு இவன் வலிவிழந்தவன் என்றும் சொல்கின்றோம் அல்லமோ? மேலும், நெடுநேரம் பேசியிருந்தவன் அதனால் இளைப்புங்களைப்பும் அடைதலைக் காண்கின்றோம் அல்லமோ? ஆகையால் பேச்சுகளை ஒடுக்க ஒடுக்கப் பிராணசக்தி வீணே செலவுசெய்யப்படாமல் உள்ளடங்கி நிறைந்து மிக்க ஆற்றலை உடம்புக்கும் உயிருக்கும் தரும். இன்னுஞ் சிந்தையை அழுந்தவைத்துப் பேசாமல் மேலிதாக வைத்து வேறு நாட்டத்தோடு பேசும்போது சொற்களின் வழியே பிராணசக்தி மிகக்கழிந்து களைப்பினை விளைவிக்குமாதலால், பேசுஞ் சொற்கள் ஒவ்வொன்றினும் மனம்பற்றி நிற்குமாறு நின்று உரை நிகழ்த்தல் வேண்டும். இனி மனக் கிளர்ச்சிக்கு உரியவற்றைப் பேசுகையில் மிக்க மனக்கிளர்ச்சியையும், வருத்தம் பயப்பனவற்றைப் பேசுகையில் மிக்க வருத்தத்தையும், சினம் மிகுதற்குரியவற்றைச் சொல்லுகையில் மிகுந்த சினத்தையும், இகழ்வானவற்றைப் பேசும்போது மிக்க இகழ்ச்சியினையும், துயரந்தருதற்குரியவற்றைக் குறித்துச் சொல்லுகையில் மிக்க துயரத்தினையும்,

அன்பிற்குரியவற்றைப் பேசுங்கால் மிகுந்த மன உருக்கத்தினையுந் தோற்றுவிக்கும் வலிய சொற்களைத் தெரிந்தெடுத்துப் பேசுதல் வேண்டும்; இங்ஙனம் பேசுவது இயற்கையாகவே எல்லா மக்களிடத்துங் காணப்படினும், அவ்வியற்கை வழுவாமற் பேசுவது கற்றவரிடத்தே அரிதினும் அரிதாய்ப் போகின்றது. பலதிறப்பட்ட உணர்வுகளையும் அவ்வுணர்வுகளைத் தோற்றுவிக்குஞ் சொற்களையும் இனிதறிந்து அச்சொற்களை எடுத்து வழங்குந் திறத்தினால் அவற்றைக் கேட்பவர்களுக்கும் அவ்வுணர்வுகள் தோன்றுமாறு செய்யவல்லதிறமை நூல்கள் எழுதும் புலவர்களுக்கும், சபையில் நின்று கோவைப்படப்பேசுகிறவர்களுக்கும், மனிதவசியம் யோகநித்திரை முதலிய வித்தைகளைக் கற்று வல்லுநராக வேண்டுகின்றவர்களுக்கும் அவசியமாக வேண்டப்படுவதாம். ஆகையால் எந்த விஷயத்தைப்பற்றிப் பேசத்துவங்கினாலும் அவ்விஷயத்திற்குரிய உணர்வு பிறக்குமாறு பேசுதலைப் பலகாலுங் கவனித்துப் பழகிவருக.

இனிச் செயலமைதியைப்பற்றிய சில அவசியமான குறிப்புகளையும் இங்கே எடுத்துப் பேசுகின்றோம். எத்தொழிலைச் செய்தாலும் அத்தொழில் மனத்தோடுகூடியே நடைபெறுமாறு செய்தல்வேண்டும். மனம் ஒன்றனோடக் கை முதலிய அவயவங்கள் வேறொன்றனைச் செய்யுமாறு ஒழுகுதல் பிராணசத்தி வீண்கழிந்து போவதற்கே ஏதுவாம். அங்ஙனமாயின் மனத்தின் சேர்க்கையின்றி உடம்பில் உள்ள உறுப்புகள் தாமாகவே அசையப்பெறுமோவெனின்; அவ்வியல்பினை ஒருசிறிது விளக்கிக்காட்டுவாம்.

குழந்தையாயிருந்த பருவத்தில் உயிர்கள் தம் உடம்புகளில் உள்ள உறுப்புகளை அசைக்கத்துவங்கியபோது மனத்தை அவற்றிற் பதியவைத்தே அவற்றைத் தமது கருத்துப்போல்



கையாளத் தெரிந்துகொண்டன; அவ்வாறு அடுத்தடுத்து அவற்றைக் கையாண்டுவந்த பழக்கத்தால் பின்னர் அவற்றை அசைக்குங் காலங்களிலெல்லாம் கருத்து ஊன்றாமலே அங்ஙனஞ்செய்துவரலாயின. முதன்முதல் ஒரு சிறுபிள்ளை கலத்திலிட்ட சோற்றைக் கையில் அள்ளி வாயிற்கொண்டுபோய் வைப்பதற்குள் எத்தனைமுறை தவறுகின்றது! எத்தனைமுறை திரும்பத்திரும்ப அதனிற் கருத்தூன்றி முயல்கின்றது! சில நாட்களில் அதனைக் கற்றுத்தேறியபிறகு, அப்புறம் அதிற் கருத்துவையாமலே அதனை இலேசாகச்செய்து முடித்தலையும்பாருங்கள். சிறு பிள்ளைகளினிடத்துக் காணப்படும் இச்செயல், வேறு பல திறப்பட்ட முயற்சிகளிற் பெரியவர்களிடத்துங்காணப்படுகின்றது. திருமுருகாற்றுப்படைபோன்ற பெரிய பாட்டை நெட்டுருப்பண்ணுகின்றவர்கள் எவராயிருப்பினும், அது நினைவில் ஏறும்வரையில் எவ்வளவு கருத்தூன்றிப் படிக்கின்றார்கள்! பின்னர் அது நன்றாக நினைவில் அழுந்தியவுடன் மனஞ்செலுத்தாமலே அவர்கள் வாய்ப்பாடமாகத் தங்கு தடையின்றி ஓதுவதையும் பார்த்திருக்கின்றோம் அன்றோ? இன்னும் வீணை குழல் முதலான இசைக்கருவிகளிற் பழகுகின்றவர்களைப் பார்த்தாலும் இம்முறை நன்கு விளங்கும்; தொடங்கும்போது மிகவும் வருத்தப்பட்டுப் பயிலுதலையும், பயின்றனபின் பார்ப்பவர்கள் வியக்கும்படியாக அவற்றை வாசித்தலையும், நாம் நம் கண்ணெதிரே காண்கின்றோம்; பயிலத்துவங்கியபோது அவர்களுடைய மனம் அப்பயிற்சியில் முனைத்துநின்ற அளவுக்குப், பயின்று பழக்கம் ஏறியபின் அதன்கண் அது முனைத்துநில்லாமை நாம் விளக்கமாக அறிந்த உண்மையேயாம்.

இங்ஙனமே தொடக்கத்தில் அறிதற்கும் செய்தற்கும் மிக அருமையாகத் தோன்றிய பெரும்பெருங் காரியங்களெல்லாம் பின்னர்ச் சில நாள் அவற்றிற் பழகியதும் அறிதற்கும் செய்தற்கும் மிகவும் எளிதாதலை நமதனுபவத்திற்

செவ்வையாத் தெரிந் திருக்கின்றோம். எனவே, மனமானது ஒன்றை முதன் முதல் அறியத் தொடங்கி முயல்கையில் அறிவோடு முனைத்து நின்று வலிவுற்று விளங்குகின்றதென்றும், அதனை அறிந்து தெரிந்தபின் அறிவுகுறைந்து முனைப்பின்றி அதனைச் செய்துபோகின்றதென்றும் தெளிந்துகொள்ளல்வேண்டும். அங்ஙனந் தெளியவே, அறிந்து பழகியவற்றில் முனைப்பில்லாத நிலையிலும், புதிதாக அறியவேண்டுவனவற்றில் முனைப்போடுகூடிய நிலையிலும் ஆக இருதிறப்பட்ட நிலையில் இயங்கி எல்லா அவயவங்களையும் இயக்கும் இயல்பினது மனம் என்பது பெறப்பட்டது. முனைப்பின்றி இயங்கும் மனத்தின் நிகழ்ச்சியையே 'பழக்கம்' என்றும், முனைப்புற்று இயங்கும் மனத்தின்றொழிலையே 'அறிவு நிகழ்ச்சி' என்றும் வழங்கி வருகின்றோம். பழக்கத்தால் அறிவுமழுங்கிய மனத்தின் சேர்க்கை உடம்பிலுள்ள எல்லா உறுப்புகளிலும் இருத்தலால், புதிதாக ஒன்றிலே மனத்தின் ஓட்டத்தைத் திருப்பும்போதும், முன்னமே பழகிய இடங்களிற்சேர்ந்து அவற்றையும் அஃது அசைத்துக் கொண்டிருக்கின்றது.

மேலும், மனம் என்னும் நுண்ணியகருவி சூக்குமசரீரமாகிய நுண்ணுடம்பிற் பொருந்தி யிருக்கின்றது; அது தூலசரீரமாகிய பருவுடம்பின் மூளையைப் பற்றிக்கொண்டு இயங்கிப் புறப்பொருள்களை அறிந்தபிறகுதான் விளக்கமுடையதாகின்றது. அங்ஙனந் தூலதேகத்தின் வழியே இயங்காமற் சூக்குமதேகத்தில்மாத்திரம் நிற்குமாயின் அது மழுக்கமடைந்து மலினமுற்றுப் போகுமென்பது, உயிர்களின் அறிவு நிகழ்ச்சியைப் பகுத்து ஆராயுங்கால் இனிது புலப்படுகின்றது. பிறந்த மகவின்பால், உள்ள மன உணர்ச்சியானது கண் முதலான ஐம்பொறிகளின் வழியாகப் புறப்பொருள்களை அறியாமலே கிடந்துவிடுமாயின் அதற்கு அறிவு சிறிதும்



உண்டாகாதென்பதை யாம் சொல்லவும் வேண்டுமோ? சாணையில் வைத்துத் தேயாவிட்டால் விலையுயர்ந்த வைரக்கல்லிற்கும் கூழாங்கல்லிற்கும் ஏதேனும் வேற்றுமைதோன்றுமா? அதுபோலவே, உயிர்களின் அறிவு துலங்குதற்குக் கருவியான மனம் பருவுடம்பிலே முனைத்துநின்று வெளிப்பொருள்களை அறிய அறிய அறிவொளி மிகப்பெறுகின்றது.

இஃது இங்ஙனம் அறிவொளி கொள்ளக்கொள்ள இஃது இயற்கையாகவே பொருந்தியிருக்கும் நுண்ணுடம்பில் அவ்வொளி பரவுகின்றது. சூக்குமசரீரம் அறிவொளி மிகப்பெறுதலும் அது, மனத்தின் முனைப்பான சேர்க்கையில்லாத தூலதேக உறுப்புகளை அசைத்துவருகின்றது. இதனை ஓர் உதாரணமுகத்தால் இனிது விளக்கிக்காட்டுகின்றாம்: அன்பிற்சிறந்த நண்பர் இருவர் பல உயர்ந்த விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டு ஓரிடத்திலிருந்து உணவு அருந்துகையில், அவர்தம் மனமானது அவ்விஷயங்களிலேயே அழுந்திநிற்க, அவர்களின் கையும் வாயும் சிறிதுந்தவறாமல் உணவெடுத்துண்ணுந் தொழிலைச் செய்துகொண்டிருக்கின்றன; ஆண்டிற்பெரிய இவர்கள் இங்ஙனஞ் செய்வதைப்போல ஆண்டிற்சிறிய இளங்குழவிகள் ஒரேகாலத்தில் அங்ஙனம் இருவகைப்பட்ட தொழில்களைச் செய்யமாட்டாதனவாகும்; அஃதேனென்றால், மழுங்கிக்கிடந்த குழந்தைகளின் மனவுணர்வு அப்போதுதான் முதன்முதல் வெளிப்பொருள்களையும் பருவுடம்பின் உறுப்புக்களையும் கையாளத் துவங்குகின்றமையாலும், அதனோடு இயைந்துநிற்கும் நுண்ணுடம்பும் அவ்வாறே மழுங்கிக்கிடத்தலாலும் அவை ஒருகாலத்து ஒருதொழிலையன்றி வேறொன்றனைச் செய்தற்குரிய விரிவும் வலிவும் துலக்கமும் இல்லாதனவா யிருக்கின்றன. இனி இங்கே உணவருந்தும் ஆண்டிற்பெரிய நண்பர்களுக்கோ குழந்தைப்பருவ முதல் அடுத்தடுத்து நிகழ்ந்த பழக்கத்தால், அவர்தம் மனவு

ணர்வானது விரிவும் வலிவும் துலக்கமும் உடையதாகித் தன்
னை நடத்தி. இவ்வுடம்பு தன்னுடம்பையும் விளக்கமுடைய
தாகச் செய்தமையால், அது வேறுவிஷயங்களில் அழுந்தி
நிற்கும்போதும், அவர் கையும் வாயும் தன்னுடம்பால்
இயக்கப்பட்டு அடிகில்லுன்னுந் தொழிலைச் செய்துகொள்
ளுருப்பவாயின. ஆலோசகத்தில் முனைத்துநின் றறியும்
அறிவை இழந்தமனம் அவ்வறிவைச் சூக்குமதேகத்தில்
நடைபெறவைத்து, அதனாற் பழக்கப்பட்ட தொழில்களை
நாம் அறியாமலே செய்துகொண்டு, நாம் பழகவேண்டியவை
யற்றில் மாறிமாறி ஓடுகின்றது. அவ்வாறாயின், முனைப்
பின்றித் தன்னுடம்பில்நின்று பழகியவற்றை இயக்குவதும்,
பழகாதவற்றைப் பருவுடம்பிலின்று முனைப்புடன் இயக்கு
வதுமாகியமனம் ஒன்றோ அல்லது இரண்டோவெனின்;
இருவிடத்தும் இயங்குவதும் இயக்குவதும் ஒருமனமேதான்;
மனத்திலுடைய வேகங்களைக் கிளைதற்கு அரிதாயிருத்தலின்
அது தன்னுடம்பில் நின்று பழக்கமாய்ச் செய்வனவற்றை
யும் பருவுடம்பில்நின்று முனைந்து செய்வனவற்றையும் அதி
வேகமாய் மாறிமாறி நடிச்செய்கின்றது. ஆகவே, மனத்
தின் சேர்க்கையினாலேதான், நாம் வேறொன்றைநினைத்திருக்
கையிலும், நம் கைவாய் முதலிய உறுப்புகள் அசைகின்றன
வென்னும் உண்மை தெளிந்துகொள்ளப்படும்.

அங்ஙனமாயின், பழக்கமாய்ச் செய்துவருவனவற்றை
நாமுற்றுநோக்காமல் நம்மனமானது தன்னுடம்பில் நின்று
செய்துவருதலும், நாம் அச்சமயங்களில் கவனிக்கவேண்டிய
வேறுவிஷயங்களைக் கவனித்துவருதலும் நமக்கு வருத்தமில்
லாத காரியநிகழ்ச்சியாயிருக்கவோடு அதனால் இருவகைப்
பயன்களும் விளையக்காண்டலின், அவ் விருவகைப்பட்ட
நிகழ்ச்சி ஆகாதென்று சொல்லுவது என்னையென்றால், ஒன்
றில் உள்ளத்தைப் பதியவைக்கும்போது, அச்சமயத்தில்



வேறொன்றனையும் நாம் செய்குவமானால் அவ்விரண்டனையும்
செய்யும்பொருட்டு நம்உள்ளமானது கடுவேகத்தோடும் தன்
னுடம்பிலும் பருவுடம்பிலும் மாறி மாறி ஓடும்; அங்ஙனம்
ஓடுவதனால் நமது பிராணசத்தி மிகுதியாக வீண்கழிந்து
போதலோடு உள்ளத்தை ஓடாமல் நிறுத்தவேண்டியகாரியத்
திலும் அது பதிந்துநில்லாமல் ஒழியும். மனத்தின் சேர்க்கை
யின்றி எந்த உறுப்பும் அசையமாட்டாமை மேலே காட்டப்
பட்டமையால், அது முனைத்து நின்றாலும் முனையாது நின்
றாலும் உறுப்பின் அசைவு உள்ளவிடத்தெல்லாம் அதுவும்
உண்டென்பது தெளிபொருளேயாம். ஆகவே ஒன்றைப்பற்
றி நிற்குப்படி அதனை வகையில், நமதுடம்பில் எந்தவகை
யான தொழிலேனும் அதேசமயத்தில் நிகழும்படி விடுவோ
மாயின் மனமானது அவ்விரண்டனையும் செய்தற்கு அதி
வேகமாய் மாறி மாறி ஓடுவதல்லாமல், ஒன்றிலேயே நெடு
நேரம் குவிந்து நிற்கமாட்டாது. குவிந்து நில்லாமையின் அவ்
விருவகை நிகழ்ச்சியால் இருவகைப்பயன்கள் விளைவது யாங்
ஙனம்? அல்லது, அங்ஙனம் விளையுமென்றே கொள்வோ
மாயினும், நிலைபெறாதசிறுபயன்களை ஒருகாற்பெறலாமன்றி
நிலையாயுள்ள பெருநலன்களைப்பெறுதல் சிறிதுங்கூடாது.

அல்லாமலும், பருவுடம்பில் முனைத்துநின்று அறிவோடு
விளங்கும் மனப்பழக்கத்தால் தன்னுடம்புகளில் முனைப்பும்
அறிவும் இல்லாமல் இயங்கும்படி விட்டுவருவோமானால் நம
துயிர் தன்னுடம்புகள் நான்கிலும் அறியாமையிற் கிடந்து,
தன்னையும், அளவிடப்படாத அறிவும் ஆற்றலுங்கொண்டு
தன்னுள் இருக்குங் கடவுளையுந் தெரிந்துகொள்ளாமற்பிறப்பு
இறப்பு வட்டங்களிற் சுழன்று எவ்வகைப்பயனும் அடையா
மல் துன்பத்திற்கு ஆளாய்க்கழியும். ஆகையால், இப்பிறப்பில்
அளவிறந்த நலன்களைப் பெறுதற்கும், இனிவரும்பிறவிகளை
இதனினுஞ் சிறந்ததாகச் செய்தற்கும், முற்பிறப்பில் நிகழ்ந்

தவற்றை இப்பிறப்பிலும் இப்பிறப்பில் நிகழ்வனவற்றை இனிவரும் பிறவியிலும் அறிந்து உயிரினறிவைத் தொடர்புறச் செய்தற்கும், இங்ஙனம் வரும் பேரறிவால் இறைவனது நிலையையுணர்ந்து இன்புறுதற்கும் இன்றியமையாத முயற்சியாவது இப்பருவுடம்பிலும் இதனுள்ளிருக்கும் நுண்ணுடம்புகள் நான்கிலும் ஒரே தன்மையாக நமதறிவு முனைந்து விளங்கச் செய்தலேயாம். நனவில் இப்பருவுடம்பில் நின்று அறிந்தவற்றைக் கனவில் நுண்ணுடம்பிற் சென்றவுடன் முற்றும் மறத்தலும், கனவுடம்பில் அறிந்தவற்றை நனவுடம்பில் வந்தவுடன் பெரும்பான்மையும் மறந்துபோதலும், நனவுடம்பில் 'யான் நனவுநிலையில் இருக்கின்றேன்' என்று அறிதல்போலக் கனவுடம்பிலும் அங்ஙனம் 'நான் கனவுநிலையில் இருக்கின்றேன்' என்று அறியக்கூடாமல் இருத்தலும் நமதுணர்வின் சிறுமையினையும் அஃது அறியாமையாற் சூழப்பட்டிருத்தலையும் இனிது விளக்குகின்றன வல்லவோ?

இவ்வாறு நமதுயிரினறிவைப் பொதிந்துகிடக்கும் இருளைத் தொலைத்தாலல்லாமல் நாம் இறைவன் அருளொளி விளங்கும் ஒளியுலகத்திற் செல்வதற்கு வழியில்லையே. இனி இத்துணை வலிவுடன் நமதறிவைப்பற்றியிருக்கும் அறியாமையிருளைப் போக்குதற்கு மிக எளிதானவழி என்னென்றால், எவ்விடத்தும் எந்நேரத்தும் நம்மனவறிவு முனைத்துநின்று விளங்குமாறு இடைவிடாது முயலலேயாகும். ஒன்றில் நமதறிவு முனைத்துநிற்கையில், கைகால் முதலான உறுப்புக்களில் ஒன்றும் சிறிதேனும் அசையவிடுதலாகாது; அன்றி அசையவிட்டால் ஒன்றில் முனைத்துநின்றமனம் அதனைவிட்டு அவ்வவயவங்களை அசைத்தற்பொருட்டு மிகுதியும் விரைவாகஓடிப் பின்னர்மீளும். இங்ஙனம் ஓடிமீள்வதனால் பிராணசத்தி வீணே அழிவதோடு மனமும் அடங்காத ஓட்டமுடையதாய்ப் பழகிவிடும். இப்போது மக்களிற் பெரும்பாலார்



தாம் செய்துவரும் தொழில்களையெல்லாம் பழக்கமாய்த் தம்மைமறந்தே செய்துவருகின்றனர். அவற்றிற்குச் சிற்சில உதாரணங்கள் எடுத்துக்காட்டி அவற்றைத் திருத்தி உணர்வுடன் நடைபெறச் செய்விக்குமாறுங் காட்டுவாம்.

நமதுடம்பைப் பாதுகாத்தற்கு இன்றியமையாததான உணவருந்துந் தொழிலைப்பற்றி முதலிற் பேசுவாம். ஒருவர் பலரோடிருந்து உண்ணுங்கால் பலதிறப்பட்ட பொருள்களைப் பேசிக்கொண்டே அவர் தமது மனத்தைச் செல்லவிட அவர் தம் கையும் வாயும் உணவுகொள்ளுந் தொழிலைச் செய்கின்றன; அவ்வாறன்றி அவர் தனியேயிருந் துண்ணுங்கால் அங்ஙனமே தம் மனம் பல பொருள்களை நாடி நிற்ப அவர் கையும் வாயும் அத்தொழிலைப் புரிகின்றன. இங்ஙனம் பிளவுபட்ட இருவகைநிலையில் தமதுள்ளத்தை நடைபெறவிடுதலினாற்றான் மக்களிற் பெரும்பாலார் உண்டது செரியாமல் பலவகை நோய்களால் வருந்துகின்றனர்; நினைவு உணவருந்துந் தொழில்விட்டு வேறொன்றைப் பற்றுதலாற் பிராணசத்தியும் வீணே கழிந்துபோகின்றது. நமது அறிவு ஒன்றைமுனைந்துநின்று அறியும்போது மிகவும் வலிவுடையதாகி விளங்குகின்றது என்பதனை மேலேகாட்டினோம்; அதனோடு அறியப்பட்ட பொருளினியற்கையும் தெளிவாகப் புலப்படுகின்றது; அனுபவிக்கப்பட்ட பொருளும் நமதுடம்பினும் உயிரினும் ஒன்றுபட்டு மகிழ்ச்சியைத் தருகின்றது. ஆதலால், உணவருந்தும்போது சிந்தையை வேறிடங்களிற் செல்லவிடாமல், சுவைக்கப்படுகின்ற உணவினிடத்தே நிறுத்திச் செவ்வையாக மென்று தின்போமானால் மிகச்சிறந்த பயன்களை அடையலாம். தித்திப்பு துவர்ப்பு முதலான சுவைகளையுடைய பண்டங்களைத் தெரிந்தெடுத்து நாவிலிட்டு அறிவோடு சுவைத்து மென்று பாருங்கள்! அவை நிரம்பச் சுவையுடையனவாய் இன்பந்தருதலைக் கண்டுகொள்வீர்கள்; அங்ஙனஞ் சுவைத்து மெதுவாக உண்ணும்போது அளவுக்குமிஞ்சித் தின்ன இடமுண்டாகாது; தின்னப்பட்ட பண்டங்களும் வாயினுள் நன்றாய் அரைக்கப்பட்டுக் குழம்பாய் இறங்குமாதலின், அதனை ஏற்றுக்கொள்ளுந் தீனிப்பையும் அதனை

விரைவிலே சீரணஞ்செய்துவிடும். அறிவோடு சேர்ந்துத் தின்னப்பட்ட அவ்வுணவால் இன்பமிகுதலோடு, அறிவின் வசப்பட்டு உள்ளிறங்கின அப்பண்டமும் வலிவு நிறைந்து இரத்தத்திற் கலந்து உடம்பைப் பெரிதும் சுத்தமான நிலையில் உறுதிப்பட வைக்கும். அறிவின்றி உண்ணப்படும் உணவுப்பொருள்கள் மெல்லப்படாமல் விரைவில் விழுங்கப் படுதலால் அவை அளவுக்குமேல் உட்கொள்ளப் படுதலோடு நன்றாய் அரைக்கப்படாமையால் தீனிப்பையில் நிறைந்து அதற்குக் கடுமையான வேலையையும் தருகின்றன. முன்னுண்டது செரிப்பதற்குள் பின்னும் பின்னும் உணவை யுட்கொண்டு தீனிப்பையைக் கெடுத்து விடுகிறார்கள்; அது கெடவே, உண்ட உணவு அழுகி நஞ்சாகி இரத்தத்திற் கலந்து பலதிறப்பட்ட நோய்களை வருவிக்கின்றது. இவ்வளவுக்குங்காரணம் என்னை யெனில், மனவறிவோடு சேர்ந்து நின்று உணவருந்தாமையேதான். உணவுகொள்ளும்போது எவரோடும் பேசுதலாகாது; அன்றி அவசியமாகப் பேச வேண்டியிருந்தால் பேச்சு முடியும்வரையில் உணவெடுத்து அருந்தாமல் சும்மா இருந்து பேசுதல் வேண்டும்; இன்னும், அப்போது கைகால் முதலான உறுப்புகளை வேறுவகையில் அசைத்தலும் ஆகாது, மனத்தால் வேறொன்றனை நினைத்தலும் ஆகாது. இந்தவகையான பழக்கத்தை உணர்வோடு தேடிக் கொள்வார்களாயின், மக்கள் இப்போது உண்ணும் உணவிற் பாதிதான் உண்பர்களென்பது திண்ணம். அங்ஙனம் பாதி உண்பராயினும் அது முன்னுண்ட பேருணவினுஞ் சிறந்ததாய் உடம்புக்கு நன்மையையும் வலிவையும் சுத்தத்தையுந் தந்து உயிர்க்கும் உயர்ந்த இன்பத்தினையும் விளைவிக்கும்.

இனி நடத்தற்றொழிலைப்பற்றிச் சிறிது சிந்திப்போம். பெரும்பாலோர் நடந்து செல்லும்போது தாம் நடப்பதாகவே உணர்வதில்லை. தம் உள்ளமானது பலவகைப்பட்ட பொருள்களைச் சிந்தித்தவண்ணமாயிருக்கத் தாம் அசைந்தசைந்து தளர்ந்தநடையிற் செல்கின்றார்கள். இவ்வாறு நினைவொரு பக்கமும் நடக்கும் முயற்சி மற்றொரு பக்கமுமாய்ப் பிரிவு



படப் போவதனால் பிராணசத்தி பெரிதும் வீண்கழிந்து விடுகின்றது. நடக்குந்தொழில் உடம்புக்கு மிக்கவலிவினையும் உயிர்க்கு மிகுந்த கிளர்ச்சியினையுந் தருதற்கு உரியதாயிருக்கவும், அதனிடத்தே மனத்தைப் பொருந்தவையாமல் பலவழியே ஓடவிட்டுச் செல்வதும், அதனால் நோய் வந்தபின் நோயின்காரணம் இங்ஙனம் மிக எளிதாயிருத்தலை உணராமல் அளவில்லாமல் மருந்துண்டு துன்புறுதலும் எவ்வளவு பேதைமை! நமதுடம்பை நோயணுகாமல் வைத்து வளர்க்கும் பலவகை முயற்சிகளுள் நடக்கும்முயற்சியைவிடச் சிறந்தது வேறில்லையென்று தேகதத்துவநூலை யுணர்ந்த புலவர்களும் வைத்தியநூற் பண்டிதர்களும் வற்புறுத்திச் சொல்கின்றார்கள். உடம்பை வலிவுறச் செய்வதற்கு மல்லர்கள் செய்யும் பழக்கங்களைவிட நடப்பதாகிய பழக்கமே மிகமேலானதென்றும், மல்லர் செய்யும் பழக்கங்கள் இயற்கைக்கு மாறுபட்டனவாயிருத்தலால் அவற்றால் தீமையே உண்டாகின்றனவென்றும், நடைப்பழக்கமானது இயற்கையிலுள்ளதாயிருத்தலின் அஃதொன்று மாத்திரமே உடம்பை இனிது வளர்த்தற்குரிய நற்பழக்கமாகுமென்றும் பிராஞ்சுதேசத்துக் கலாவிற்பன்னர்களும் பகருகின்றார்கள். இவ்வளவு சிறந்ததாகிய நடைப்பழக்கமும் நினைவோடுகூடி நிகழாதாயின் அது சிறிதும் பயன்படாது போவதேயன்றி உடம்பின் வலிவையுங் குறைப்பதாகின்றது. ஆகையால், எடுத்துவைக்கும் ஒவ்வோர் அடியிலும் நினைவு அழுந்துமாறு விருப்பத்தோடு செய்தலும் செய்தல் வேண்டும்; வேண்டாவெறுப்பாய்ச் செய்தலும் ஆகாது. நினைவோடும் விருப்பத்தோடுங் கூடிச்செய்யும் காரியங்கள் செய்வார்க்குங் காண்பார்க்கும் எவ்வளவு உயர்ந்தனவாயும் மகிழ்ச்சிதருவனவாயு மிருக்கின்றன! நினைவுருக்கத்தோடும் மனக்கிளர்ச்சியோடும் ஒருவன் செய்து முடித்த ஒரு காரியத்தினையும், அவையிரண்டு மில்லாதவன் ஒருவன் வேண்டாவெறுப்பாய்ச் செய்துமுடித்த மற்றொருகாரியத்தினையும் ஒப்பிட்டுப்பார்த்தால் நாம் சொல்வதன் உண்மை தெளிவாய் விளங்கும். முன்னவன் செய்தது திருத்தமாயும் அழகாயும் பார்க்கப் பார்க்க மகிழ்ச்சிதருவதாயும் இருக்கும்.

பின்னவன் செய்தது பிழையுள்ளதாயும் அழகின்றி அருவருப்புத் தோற்றுவிப்பதாயும் இருக்கும். இங்ஙனமே, நினைவோடும் விருப்பத்தோடும் நடந்து செல்வோன் நடையின் அழகையும், அவையின்றித் தளர்ந்து செல்வோன் நடையின் இழிவையுங் கண்டுகொள்க. அதனால் நினைவும் விருப்பமும் வைத்துநடக்குந்நடையின் மேன்மை நன்கு புலப்படும்.

இனிக் கையாற் செய்யுந் தொழிலைப்பற்றிச் சிறிதுபேசுவோம். கையாற் செய்யப்படுந் தொழில்கள் பெரும்பாலும் மனத்தின் சேர்க்கையின்றி நடைபெறுவ தில்லை. காலின் றொழிலாகிய நடத்தல் குழவிப்பருவம் முதற்கொண்டே பழகியதாகலின், தம் உணர்வை மிகுதியுஞ் செலுத்தாமல் அனைவரும் அதனைச் செய்து வருகின்றார். மேலும், காலினாற் செய்யப்படுந் தொழில்கள் நடத்தல், ஓடல், இருத்தல், முதலான சிலவேயன்றிப் பலவில்லை. கையினாற் செய்யப்படுந் தொழில்களோ ஒருவனது அறிவின் வளர்ச்சிக்கு ஏற்ப நாடோறும் புதியனபுதியனவாய்த் தோன்றும் இயல்பை உடையன. புதிது புதிதாய்த் தோன்றும் செய்கை ஒவ்வொன்றும் மனவுணர்வோடு கூடியே நடைபெற வேண்டியிருத்தலிற் பெரும்பாலுங் கைகளின் றொழிலெல்லாம் மனவுணர்வோடு ஒருங்கியைந்தே நடைபெற்று வருகின்றன. யாழ், முழவு, புல்லாங்குழல் முதலான இசைக்கருவிகளை வாசிப்பதில் எவ்வளவுதான் பழக்கம் ஏறப்பெற்றவர்களாய் இருந்தாலும், அவற்றினிடத்தே பலவகை இசைகளை எழுப்பிப்பாடுங்காலங்களிலெல்லாம் அவர்கள் தமது கருத்தைத் தம் கையினும் கைவிரல்களினும் பொருந்தவைத்தே அவற்றை இயக்கி வருகின்றார். பலவகை உணவுப் பொருள்களைச் சமைப்பதில் எவ்வளவுதான் திறமை வாய்ந்தவர்களாய் இருந்தாலும் சமையல் செய்யுங் காலங்களிலெல்லாம் சமையற்காரர் தம் கைகளில் தமது நாட்டத்தை முழுதும் வைத்தே அத்தொழிலைச் செய்து போதருகின்றார். படம் எழுதுவதிற் கைதேர்ந்த ஓவியக்காரர் நிலத்தின் பலவகைத் தோற்றங்களையும், உயிர்களின் உருவங்களையுந் தீட்டுகையில் அவர்கள்



எவ்வளவு உன்னிப்போடு தமது கையை இயக்குகின்றாரென்பதை அருகிருந்து நோக்கும் எவரும் எளிதிற் றெரிந்துகொள்ளலாம். சிலம்பவித்தையிற் பழகினவர்களும் கோல்களைக் கையிலெடுத்துச் சுழற்றுஞ் சமயங்களில் அவர்களின் கையுங் கருத்தும் ஒன்றுபட்டு நடத்தலைக் கண்டு வியவாதவர் யாருமிலர். இவைபோன்ற நிகழ்ச்சிகள் இன்னும் பலவற்றாற் கையின்றொழிலெல்லாம் மிகுதியாய்க் கருத்தின்றொழிலை ஒட்டியே இயங்கும்முறை நன்கு தெளியப்படும்.

இங்ஙனம் ஒருவனது அறிவை ஒருமுகப்படுத்தி அதனை நுட்பமாக வளர்த்து வருதற்கண் கையின் றொழில் நிரம்பவுஞ் சிறந்துநிற்கக் காண்கின்றோமாதலால், இத்துணைச் சிறந்ததாகிய இக்கையின் றொழிலைக் கருத்தின்றி வீண்செயல்கள் செய்யும்படி விடப் பழக்குதல் சிறிதும் ஆகாது. ஒருவர் எதிரி லிருக்கும்போதாவது, தனியே யிருக்கும்போதாவது கையில் அரும்பு வெற்றிலைக்காம்பு முதலியவற்றை எடுத்துக் கிள்ளுதலும், கையாற் றலையைச் சொரிதலும், மற்ற உறுப்புகளைத் தடவுதலும், புத்தகங்களை எடுத்து மடக்குதலும் பலரிடத்தில் வழக்கமாய்க் காணப்படுகின்றன. இன்னோன்ன வீண் செயல்களாற் கருத்தின் வழியே நடக்குங் கையானது அதனைவிட்டு முக்கால்வாசி பிரிந்து இயங்குதலால், பிராணசத்தியானது வறிதே கழிந்து போகின்றது; அறிவின் வளர்ச்சியையும் இவை சிறிது சிறிதாத் தடைசெய்து நிற்கின்றன.

இதுபோலவே, வேறுசிலர் பிறர் முன்னிலையிற் காலையுந் தொடையையும் ஆட்டுகின்றனர். மற்றுஞ்சிலர் தனியேயிருக்கும்போதுந் தம்மை மறந்து இதழைக்குவித்து ஊதுகின்றனர். பின்னுஞ் சிலர் நிற்கும்போதும் இருக்கும்போதும் ஆடிக்கொண்டும் அசைந்துகொண்டும் இருக்கின்றனர். இன்னுஞ் சிலர் விரல்களை ஒன்றோடொன்று சேர்த்துத் தேய்க்கின்றனர். மேலுஞ் சிலர், எதிரே செய்யத்தகாத சில சிறுசெயல்களைப் புரிகின்றனர். இன்னோன்ன வீண் சிறு செயல்கள் மன அமைதியைப் பெறவேண்டுவார்க்கு இடையிடையே தடைகளாய் இருத்தலின் இவற்றை

ஊன்றிப் பார்த்து இவை தங்கண்ணே நிகழாமல் நீக்கிக் கொள்ளுதல் அவர் தமக்கு இன்றியமையாத கடமையாம்.

இனிக் கைகால் முதலான உறுப்புகள் தொழில் இயற்றுங் கருவிகளே யல்லாமல், பொருள்களை அறியும் கருவிகள் அல்ல. ஆகையால், உயிரின் மன உணர்ச்சியானது கண், செவி முதலான ஞானேந்திரியங்களில் விளங்கித் தோன்றுதல் போலக், கருமேந்திரியங்களான கைகால் முதலானவற்றில் விளங்கித் தோன்றுதல் இல்லை. ஆகவே, கைகால் முதலான உறுப்புகளை எவ்வகையான தொழிற்செய்யும் போதும் மனவுணர்வோடு கூட்டி நடத்துதலே நலமுடைத்தாம். அவை தொழில் புரியாத காலங்களிலெல்லாம் மனவுணர்வு தானாகவே அவற்றின்கண் முனையாது வேறு பிரிந்து நிற்க வல்லதாம். ஆனால், கண் செவி முதலான ஞானேந்திரியங்களிலோ மனவுணர்வு விளங்கித் தோன்றுந் தன்மைத்தாயிருத்தலின் அவை ஒரு பொருளைச் சிறிது நோக்கினாலும் ஓர் ஓசையைச் சிறிது கேட்டாலும் உடனே அவற்றின்கண் மனவுணர்வு வந்து நின்று விளங்கித் தோன்றும். ஆனதுபற்றிக் கண்ணுஞ் செவியும் புறப்பொருள்களையும் புறத்து ஓசைகளையும் எந்நேரமும் உற்றறியும்படி பழக்குதல் ஆகாது; அன்றி அங்ஙனம் பழக்கினால் அஃது எப்போதும் பருப்பொருளுணர்ச்சி மிகுந்து புறப்பொருள்களையே நாடிச் செல்லும் அல்லாமல், இந்த ஞானேந்திரியங்களை விட்டு வேறு பிரிந்து நிற்கவும், அங்ஙனம் பிரிந்து அகமுகமாய்த் திரும்பி உயிரின் நிலையும் உயிர்க்குயிராம் இறைவன் அருள் நிலையும் ஆராய்ந்துணரவும் மாட்டாதாகும். ஆதலால், உற்று நோக்குதற்கும் உற்றுக் கேட்டற்கும் உரிய காலங்களிலன்றி, மற்றைக்காலங்களிலெல்லாம் மனவுணர்ச்சியானது கண்ணினிலுஞ் செவியினுங் கலந்துநிற்கும்படி விடலாகாது; எந்நேரமும் அகத்தேநின்று பொருளினியல்புகளையும் உயிரினியல்புகளையும் முதல்வனியல்புகளையும் ஆராய்ந்தறியுமாறு அதனைத் தன் நிலையில் நிறுத்திப் பழக்குதல் வேண்டும். மேலும், உற்றுப்பார்த்தற்குங் கேட்டற்கும் உரிய நேரங்களில் மாத்திரம் மனவுணர்வு கண் செவிகளில் நின்றால், அக்



கருவிகள் வலிமையுந் துலக்கமும் அடையும்; அவ்வாறன்றி அஃது எப்பொழுதும் அவைகளில் நின்று அவற்றை இயக்குமாயின் அவை ஓய்வில்லாத இயக்கத்தாற் பழுதுபட்டுக் கெட்டுவிடும்; அவைகெடவே, மனவுணர்ச்சியுங் குறைவுபடும். ஆதலால், மனவுணர்வு தன்னிலையில் நிற்கும்படி பயிற்றிக், கண் செவி முதலாயின புறப்பொருள்களை முனைப்பின்றிப் பொது நோக்காற் பார்க்கும்படி விடுதலே செயற்பாலதாம். கைகால்கள் எந்நேரமும் மனனொடுகூடியே நடத்தல் வேண்டும் என்று நாம் சொன்னதுகொண்டு, கண் செவிகளும் அங்ஙனமே அதனொடுகூடி நடைபெறல் வேண்டும்போலும் என எண்ணி மாணாக்கர் மயங்காதிருத்தற் பொருட்டுக், கால்கைகளின் றொழில்நிலைகளைப்பற்றி ஓதவந்த இவ்விடத்திற் கண் செவிகளின் இயக்க முறைகளையும் சிறிதெடுத்துக் காட்டினேம் என்க.

அங்ஙனமாயின், பிறிதொன்றை நினைக்குமிடத்தும் பிறர் ஒருவரோடு பேசுமிடத்தும் மனவுணர்வை அந்நினைப்பினும் பேச்சினும் ஒருமுகப்படுத்தி நிறுத்துதலே முறையாயினும் இவற்றிற்காகக் கால்களைச் சிறிதும் ஆட்டாமல் அசையாமல் கட்டைபோலவுங் கற்போலவுங் கிடக்கவிடுதல் மிகவும் வருத்தமான பழக்கமாய் முடியுமேயெனின்; நமது கருத்து அஃது அன்று. ஒன்றை நினைக்குமிடத்தும் ஒருவரோடு பேசுமிடத்தும் நினைவு கலையாதிருத்தற் பொருட்டு அந்நேரங்களில் உடம்பின் உறுப்புகளை ஆட்டாமலும் அசையாமலும் வைத்துக்கொள்ள வேண்டுமென்றதே யன்றி, வறிதேயிருக்கும் மற்றைச்சமயங்களில் அங்ஙனம் அவற்றை வைத்திருக்க வேண்டுமென்று கூறினேமில்லை. ஆடாமலும் அசையாமலும் உறுப்புகளை எப்பொழுதும் வைத்திருத்தல், அவ்வுறுப்புகளின் வலிவைக் குறைக்குமாதலால், சும்மா இருக்குஞ் சமயங்களில் அவற்றிற்கு நலம் உண்டாகும் பொருட்டு அவற்றை நினைவோடு கூடி ஆட்டுதலும் அசைத்தலும் வேண்டும். அது நிற்க.

## நரம்பு இளக்கம்

இன்னும் மன அமைதியை மிகுதிப்படுத்திக் கொள்ளு

தற்கு நமதுடம்பிலுள்ள நரம்புகளை எளிதாக இளக்கிக்கொள்ளும் முறையினை நாம் நன்கு தெரிந்து பழகல்வேண்டும். உடம்பிலுள்ள பல்லாயிரம் நரம்புகளும் அவ்வுடம்பிற் பொருந்திய பலவகை உறுப்புகளையும் இயக்குதற் பொருட்டாகவே அமைக்கப்பட்டிருக்கின்றன. அவை அவ்வுறுப்புகளை இயக்கும்போது மாத்திரம் இறுக்கமாய் நிற்கும்; அவை இறுக்கமாய் நிற்கையில் அவற்றின் வழியே உயிரின் பிராணசத்தியானது செலவழிந்து கொண்டே போம். பிராணசத்தியானது உறுப்புகளை அசைத்துத் தொழில் இயற்றுங்காலங்களில் மாத்திரம் செலவாதல் நன்று; அஃது ஒரு தொழிலுஞ் செய்யாதிருக்கையிலும், அஃது அங்ஙனம் செலவாய்க் கழியும்படி விடுதல் நன்றாகாது. ஒருவன் ஒரு கடிதம் எழுதும் முயற்சியில் இருக்கும்போது, அவன் செவ்வனே ஓரிடத்தில் அமர்ந்து எழுதுகோலைக் கையிற் பற்றிக்கொண்டு கண்ணுங் கருத்தும் எழுதும் எழுத்திலும் பொருளிலும் ஒன்றி நிற்க அத்தொழிலைப் புரிகின்றான்; இத்தொழிலைச் செய்து முடித்தற்குக் கருவியாவன: அவன் தனது உடம்பை நிமிர்த்தியிருத்தலும், எழுதுகோலைக் கையிற் பற்றியிருத்தலும், பற்றிய அதனால் கண்ணுங்கருத்தும் ஒன்றி எழுதுதலுமே யாகும்; இம்மூன்று தொழிலுஞ் செய்தற்குக் கருவிகளான உடம்பும், கையும், கண்ணும் மாத்திரமே நரம்புகளினால் இயக்கப்படவேண்டியிருத்தலின் இவ்வுறுப்புகளோடு தொடர்புபட்டிருக்கும் நரம்புகளே இறுகிய நிலையில் நிற்றல் வேண்டும்; மற்றைக் கால், காது, மூக்கு, வாய் முதலான உறுப்புகளுக்கு அந்நேரத்தில் வேறு தொழில் இல்லாமையால் அவற்றோடு தொடர்புற்று நிற்கும் நரம்புகள் இறுக்கமாய் நில்லாமல் தளர்ந்து நிற்றல் வேண்டும். அது மாத்திரமோ! எழுதுதற்குக் கருவிகளான உறுப்புகளின் நரம்புகளும் எழுது முயற்சிக்குத் தக்க அளவு இறுகிநிற்றல் வேண்டுமே யல்லாமல், அவ்வளவிற்கு மேலும் இறுக்கமாயிருத்தல் பழுதுடைத்தாம். எழுதுங்காலத்திற் சிலர் இலகுவாய் அமர்ந்திருத்தலைவிடுத்து உடம்பை மிகநிமிர்த்தி முதுகை வளைத்து



விறைப்புடன் உட்காருதலால், நரம்புகள் அளவுக்கு மிஞ்சி இறுகிப் பிராணசத்தியை மிகுதியாய்க் கழியவிடுகின்றன. வேறு சிலர் எழுதுகோலை விரல்களில் இலகுவாய் இடுக்கிக்கொள்ளுதலைவிடுத்து மிகவும் நெருக்கமாகப் பிடிக்கின்றனர்; இங்ஙனம் அளவுக்குமேல் இறுக்கிப் பிடிப்பதனால் விரைந்து எழுத இயலாமற் போவதுடன் விரல்களைத் தொடர்ந்துள்ள நரம்புகளிலும் பிராணசத்தி மிகுதியாய்க் கழிந்துபோகின்றது. அன்றி எழுதுமுயற்சியை இலகுவாய்ச் செய்தாலும், சிலர் இடையே சிறிதும் ஓய்வின்றி நெடுநேரம் ஓரேமூச்சாயிருந்து எழுதுகின்றனர். இடையொழிவு சிறிதும் இன்றி நரம்பை ஒரே தொடர்பாக இழுத்துப் பிடித்துக்கொண்டு கண்ணையுங் கருத்தையும் புறப்பொருள்களில் அழுந்தவைப்பதனால் பிராணசத்தி அளவுக்குமேற் கழிந்துபோதலின், அங்ஙனம் உழைப்பெடுப்பவர் நீண்டநாள் உயிர்வாழார்; பலவகைப்பட்ட நோய்களுக்கு இரையாகி இறப்பர். அரிய பெரிய பொருள்களை நீளத்தொடர்ந்து எழுதும்போது, இடையிடையே சிறிது இளைப்பாறிக்கொண்டு எழுதுதல்வேண்டும். இளைப்பாறுதல் என்பது, எடுத்தமுயற்சியை விடுத்து இலகுவான வேறொன்றனைச் செய்வதன்று; நரம்புகளை முற்றுந் தளரவிட்டு ஒன்றையும் நினையாமல் அயர்ந்து கிடத்தலே யாகும். இளைப்பாறுவது இன்னதென்றே தெரியாதார் சிலர் மெல்லிய பஞ்சணைகள்மேற் படுத்துக்கொண்டு காலையாட்டுவதும் கையையாட்டுவதும் புரளுவதும் வீண் எண்ணங்களைக் கோடிகோடியாக நினைவதும் செய்கின்றனர். படுத்தாலும் இருந்தாலும் நரம்புகளை இறுக வலித்துக்கொண்டு எண்ணங்களைப் பலதலையாக ஓடவிடுவது சிறிதும் இளைப்பாறுதல் ஆகமாட்டாது. உண்மையான இளைப்பாறுதல் இன்னதென்றுணரல் வேண்டின், வேனிற்காலத்துக் கடுவெயிலில் நெடுந்தூரம் ஒரு பெருஞ்சுமைதூக்கிச் சென்றவன் ஒரு நறுமணப் பூஞ்சோலையை அடைந்து அதன்கண் உள்ள குளத்தில் இனிய தண்ணீரை விடாய்தீரப் பருகிக் கரைமருங்கின் அடர்ந்து நிற்கும் ஒரு மரத்தின் குளிர்நிழற்கீழ்ப் புன்மேல் அயர்ந்து கிடக்கும் நிலையை எண்ணிப்பாருங்கள்! அவ்வாறு கிடக்குமவனை

அ

அனுகி அவன் கையை மெல்லெனத் தூக்கிக் கீழ்விடுவீர்களாயின் அது துவண்டு நிலத்தே விழும்; அவன் காலையும் அங்ஙனமே சிறிது தூக்கிவிடுவீர்களாயின் அதுவும் அவ்வாறே துவண்டு அப்புன்மேல் விழும்; இவ்வாறெல்லாம் அவனது உடம்பின்கண் உள்ள உறுப்புகள் அவன் வசம் இன்றிக் கிடப்ப, அவன் நரம்புகளும் அமைதியாய் இருக்கும் நிலையே உண்மையான இளைப்பாறுதலாகும். இளைப்பாறுதற்கெல்லாம் தூக்கம் இன்றியமையாது வேண்டப்படுவதன்று; தூக்கம் இன்றியும் இளைப்பாறலாம், தூக்கத்தோடும் இளைப்பாறலாம்; ஆனால், தூங்கி எழுவதானது மிகுந்த இளைப்பாறுதலைத் தரும்; நரம்பு அயர்ந்து தூங்கி எழுந்தவனுக்கு மிக்க சுறுசுறுப்பும் மனக்கிளர்ச்சியும் உண்டாகும். நரம்புகளை முழுதும் இளக்கி ஒன்றும் நினையாமல் அமைதியோடிருக்கக் கற்றுக்கொண்டவனுக்கு இனிய தூக்கமானது அவன் நினைத்தபோதெல்லாம் வரும். மேல்நாட்டில் கொற்றப் போர்வீரனென்று பலராலும் பெரிதும் பாராட்டப்பட்டுவந்த நெப்போலியன் என்னும் மன்னர் மன்னன், தன்படைவீரர் பீரங்கி வெடிதீர்த்துக் கத்தியும் வல்லையமுங்கொண்டு பெருமுழக்கத்தோடும் தம்பகைவரை எதிர்த்து மிக முழுமுனைப்பாய்ப் போர் இயற்றுங் காலங்களில், அவர்களின் இடையே தான் நினைத்தபோதெல்லாம் பத்துநிமிஷநேரமும் கால்மணிநேரமேனும் அமைதியோடும் நன்றாகத் தூங்கி விழித்து எழுவனாம். இங்ஙனமே தமக்கு அல்லும் பகலும் இடைவிடாதிருந்த பல அலுவல்களின் நடுநடுவே தாம் நினைத்தபோதெல்லாம் நன்றாகச் சிறிதுநேரம் அயர்வுநீக்கத் தூங்கியெழுந்து, பின்னர் அவ்வலுவல்களை நுண்ணறிவோடும் மனக்கிளர்ச்சியோடும் செய்துமுடித்துப் புகழோடு நீண்டநாள் உயிர்வாழ்ந்திருந்த அரசர் பலர் சரித்திரங்களையும் அமைச்சர் பலர் சரித்திரங்களையும் படித்தறிந்திருக்கின்றோம். அஃது கிடக்க.

இனித் தாம் நினைத்தபோது நல்ல இனிய தூக்கத்திற் செல்லும்வகை உயர்ந்த செல்வநிலையி லிருக்கும் மக்களிற் பெரும்பாலார் உணரவேமாட்டார்; அவரெல்லாம் படுக்கையிற் சென்றால் தூக்கம் வரப்பெறாமல் மெத்தைமேல் அப்புறமும்



இப்புறமுமாய்ப் புரண்டு கொண்டே 'தூக்கம் பிடிக்கவில்லையே! தூக்கம் பிடிக்கவில்லையே!' என்று எண்ணி யெண்ணி ஏக்கமுறுகின்றனர்; தூக்கம் இன்மையால் அவரவர் உடம்பு மெலிந்து பருவம் முதிராமுன்னரே உயிர் துறக்கின்றனர். அவர்களுக்குத் தூக்கம் வாராமை எதனால் என்றால், தம் உடம்பிலுள்ள நரம்புகளை இளக்கி அமைதியாயிருக்கும் முறை அவர் தெரியாமையினாலேதான். மேலும், அவர்கள் உடம்பு வருந்த உழையாமலிருப்பவர்களாதலால், உடம்பின் உட்கருவிகள் செவ்வனே அசையாமற் கெட்டுப்போகின்றன; அசையாமலிருக்கும் ஓர் இருப்பு இயந்திரம் துருவேறிப் பழுதாய்ப்போதல்போல, அசைவில்லாத உடம்பின் உறுப்புகளுங் கொழுப்படைந்து பழுதாகிவிடும்; இரத்தக் குழாய்களில் இரத்தம் செவ்வையாய் ஓடாது, தீனிப்பையும் உண்ட உணவைச் செரிக்கச் செய்யாது; உண்டவுணவு செரியாவிட்டால் உடம்பிற் பலதிறப்பட்ட நோய்களும் வந்து கிளைக்கும். செல்வம் உடையவர்கள் நரம்பிளக்கஞ் செய்யும் முறை தெரியாமையானும், உழைப்பில்லாதிருத்தலானுந் தூக்கமின்றி வருந்துகின்றனரென்றால், அங்ஙனமே நரம்பிளக்கஞ் செய்யும்வகை யின்னதென்றறியாத ஏழை எளியவர்கள் மாத்திரம் படுத்தவுடன் உறங்குதல் என்னையெனின், அவ்வேழை மக்கள் தம் வயிற்றின் கொடுமையால் நாள் முழுதும் நெற்றித் தண்ணீர் நிலத்தில்விழப் பாடுபட்டு வருதலால், அவர்களுடம்பின் உறுப்புகள் மிகவும் அலுப்படைந்து படுத்தவுடன் அயர்ந்த தூக்கத்தை அவர்கள்பால் வருவிக்கின்றது. அங்ஙனமாயின், நரம்பிளக்கத்தால் மனவமைதியோடிருந்து இனிய தூக்கத்தை வருவித்துக்கொள்ளல் வேண்டுமென்று இங்கே கூறியதென்னை? நன்றாய் உழைப்பவர்களுக்கு நல்ல தூக்கந் தானாகவே வருதல் கண்டோமே யெனின்; மிகுந்த உழைப்பினால் வரும் தூக்கம் உயிரைப் பெரியதோர் இருளிற் கொண்டுபோய் அழுத்திவிடுமாதலால், அது விரும்பற்பாலதன்று. மேன்மேலும் அறிவுவிளங்கப் பெறுதலே இம் மனிதப்பிறவி யெடுத்ததற்குப் பயனாம். கனவின்கண் விளங்கிய அறிவு தன்னைமறந்த தூக்கத்தில் வலிவுகுறைந்து

மழுங்கிப் போவதால், அலுப்பால் அயர்ந்தூக்கம் உள்ளவனுக்கு மறதி மிகுதியாய்க் காணப்படுகின்றது. ஆதலால், மறதி வாராமைப்பொருட்டுத் தன்னை மறந்த தூக்கத்தை நீக்கல் வேண்டும், தன்னைமறந்த தூக்கம் வாராமைப்பொருட்டு அலுப்பினை நீக்கல் வேண்டும், இனி அலுப்பு வாராமைப் பொருட்டுக் கடுக உழைத்தலை நீக்கல்வேண்டும்.

அங்ஙனமாயின், கடுகிய உழைப்பின்றால் ஆகவேண்டும் முயற்சிகள் பின்னை எவ்வாறு நடைபெறுவதெனின்; இந்நூலின்கட் சொல்லப்படுவன அறிவால் மேன்மை அடைய விரும்புவாரை நோக்கினவே யல்லாமல், அறிவு குறைந்து மாடுபோல் உழைப்பவரை நோக்கின அல்லாமையால் அதனை இங்கே ஆராயவேண்டுவதில்லை. மேலும், மக்களிற் பலரும் பலதிறப்பட்ட இயற்கை யுடையவர்களாய்ப் பிறவிகடோறும் சிறிது சிறிதாக அறிவு விரியப்பெற்று வருபவர்களாதலால், எல்லாரும் ஒரேகாலத்தில் ஒரேவகையான அறிவு பெறுதல் காணப்படாமையாலும், அவரவர் தமது இயற்கைக்கு இசைந்தவை பொருள்களையும் அவற்றை உணர்த்தும் நூல்களையும் விரும்பிவருதலானும், உழைப்பு ஒன்றிலேயே தமது கருத்து வைத்தவர்கள் அதனைக் கடந்து அறிவுநிலைக்குவர இன்னும் பலபிறவிகளை எடுக்கவேண்டியவராதலானும் இங்கே சொல்லப்படுவன அறிவு நிலையில் உள்ளார்க்கே இணக்கமானவாம் என்க. இன்னும் உழைப்புநிலையில் உள்ளவர்கள் அறிவு முதிர முதிரப் பலவகை இயந்திரங்களை அமைத்து அவற்றின் உதவியாற் கடுமுயற்சிகளைச் செய்துமுடிக்க மாட்டுவார்கள்; அப்போது அவர்கட்கு அலுப்பு உண்டாகமாட்டாது. மிகுந்த உழைப்புள்ள தொழில்களைச் செய்தற்கு யானை குதிரை எருமை எருது கழுதை முதலான மிருகங்களிருந்தும், அவற்றைப் பயன்படுத்திக்கொள்ளாமல் ஏழைமக்களிற் பலர் வண்டியிழுத்தல் பெருஞ்சுமை சுமத்தல் முதலான கடுந்தொழில்களைத் தாமாகவே செய்து தம்மை விலங்கினங்களினுந் தாழ்ந்தவராகச் செய்துகொள்கின்றனர்! யானை குதிரை எருது முதலியவற்றை வாங்கவும் அவற்றிற்குத் தீனிகொடுத்துப் பாதுகாக்கவுங் கையிற் பொருள் இல்லாமையால், அவர்கள்



அங்ஙனந் தாமாகவே கடுந்தொழில் செய்கின்றனராதலால் அது பற்றி அவர் குற்றஞ்சொல்லப் படாரெனின்; அது பொருந்தாது; சிற்சிலமாதங்கள் முயன்று தாம் தேடும்பொருளில் ஒரு கூறு மிகுத்து வந்தாலும் அவர்கள் குதிரை மாடு முதலிய விலங்குகளை எளிதாக விலைக்குப்பெறலாம்; அதுதானுஞ் செய்துகொள்ளமாட்டாது சோம்பல் மிகுந்து அன்றன்று கிடைத்தபொருளைக் கள்ளுக்குஞ் சூதுக்கும் வேறு பல தீயவழிகட்குஞ் செலவழித்து மிருகங்களினுங் கடைப்பட்டவர்களாய் வாணாளை வீணாய்க்கழிக்கின்றனர்; ஆதலால், அவர்கள் தமது வாழ்நாளை அங்ஙனம் பாழாக்கும்படி இடங்கொடுத்தலாகாது. இத்தகைய சோம்பேறிகள் இழுக்கும் வண்டிகளில் ஏறுவதும், அவற்றிற் பொதிகளை ஏற்றுவதும், அவர்களாற் சுமக்கப்படும் பல்லக்குகளில் அமர்ந்து செல்வதும், அவர்களின் தலைகளிலும் முதுகுகளிலும் தாங்குதற்கு வருத்தமான பெருஞ் சுமைகளைத் தூக்கி வைப்பதும் அறிவுடையோருக்குச் சிறிதும் ஆகாதனவாம். இத்தகைய கடுந்தொழில்களிலேயே அவர்கள் தமது காலத்தைக் கழிக்கும்படி பழக்கப்படுத்திவந்தால் அதனால் அவர்கள் மிகுந்த அலுப்பும் உறக்கமும் அடையப்பெற்றவராகி அறிவு வளராது விலங்குகளைப்போலவே யிருப்பர். அதுவல்லாமலும், கடுகிய உழைப்பால் அவரது உடம்பும் இறுகிக் கருங்கற்போல் வலிவுடையதாகும். அறிவின்வளர்ச்சிக்கு உடம்பிலுள்ள கருவிகள் மெல்லிய இயல்பும் நுணுக்கத்தன்மையும் உடையனவாயிருத்தல்வேண்டும்; கருங்கற்போல் இறுகிய உடம்பு வலியுடையதாயிருந்தாலும், மெல்லிய இயல்புடைய உடம்புபோல் மேன்மை உடையதாகாது; இறுகிய உடம்புதான் வலிவு மிக்கதென்றும், மெல்லிய உடம்பு அஃது இல்லாததென்றும் நினைத்தலும் பழுதாகும். கருங்கல் வலிவுடையதாயினும் அதனையும் அப்பாற் பெயர்த்தெறியும் மெல்லியகாற்றின் ஆற்றலை நினைத்துப்பாருங்கள்! கருங்கல் சிலகாலத்தில் துகளாக நுறுங்கி அழியினும் அழியும், காற்று அங்ஙனம் அழியுமோ? இதுபோலவே, இறுகியவுடம்பு பருவம் முதிராமுன்னரே பழுதுபட்டொழியினும் ஒழியும், மெல்லிய வுடம்போ

அங்ஙனம் இறங்கொழிவதில்லை. இறுகியவுடம்பு நுண்ணிய தொழில்களைச் செய்யமாட்டாது, மெல்லியவுடம்போ அவற்றையும் வேறு பலவற்றையும் எளிதிற் செய்யவல்லதாகும். இறுகியவுடம்புக்கு நோய்வந்தால் அது களைந்து தேறாது, மெல்லியவுடம்புக்குப் பிணிவந்தால் அது அதனினின்றும் எளிதிற்றேறும். கல்யானை பருத்த வல்லுடம்பு உடையதாயினும், மெல்லுடம்பு வாய்ந்த பாகனின் ஓட்டத்தைப் பிடிக்குமோ? மேலும், இவ்வலிய வுடம்புடைய நாட்டுப்புறத்தவர்களிற் பெரும்பாலார் அறிவிற் குறைந்தவராய் இருக்க, நகரத்தில் வாழும் மெல்லிய வுடம்புடையார் அறிவுந் திருத்தமும் வாய்ந்தவராய்க் காணப்படுகின்றனர். இவற்றையெல்லாங் கூர்மையாக நினைந்துபார்க்குங்கால் இறுகியவுடம்பும், அதனை உண்டாக்குங் கடிய உழைப்பும் அறிவுவளர்ச்சியினை விரும்புவார்க்கு வேண்டப்படுவன அல்ல என்று அறிகின்றோம்.

இன்னும், மனிதன் தான் உடம்பால் வருந்தி உழைத்தலைக் குறைத்து அறிவின் முயற்சியால் அரிய பெரிய தொழில்களையெல்லாஞ் செய்துமுடித்தற்கு முந்தவேண்டும். பாருங்கள்! வெள்ளைக்காரர் தமது நுண்ணறிவு முயற்சியால் எவ்வளவு அருமையான இயந்திரங்களையெல்லாம் அமைத்து, அவற்றினுதவியால் எத்தனை அருமையான தொழில்களையெல்லாம் விரைவிற் செய்துமுடிக்கின்றார்கள்! எத்தனை மனிதர் வருந்தி உழைத்து இழுத்தாலும் இழுத்துச்செல்ல இயலாத வண்டித்தொடர்களையெல்லாம் நீராவி யியந்திரத்தால் விரைவில் ஓடச்செய்து அளவிடக்கூடாத நன்மைகளையெல்லாம் அவர்கள் எளிதில் விளைவித்து வருகின்றார்கள். எத்தனையோ ஆயிரம்மைல் அகலமுள்ள கடலுக்கு அப்பாலுள்ள நாடுகளுக்கெல்லாம் பண்டங்களும் மக்களும் எளிதிற்போய் வரும்படி காற்றுக்குஞ் சுழலுக்கும் அலைக்கும் அஞ்சாத கப்பல்களை அந்நீராவி யியந்திரங்களால் ஓட்டி அவர்கள் உலகத்திற்குச் செய்துவரும் நன்மைகளைக் கணக்கிட்டுச் சொல்ல இயலுமா? இவைகள் எல்லாம் மக்கள் தமது உடம்பினுழைப்பால் மாத்திரம் செய்துமுடிக்கக் கூடியன ஆகுமா? பல்லாயிரம் மைல்தூரம் விரிந்த கடலின் இரண்டு பக்கத்திலும்



உயிர்வாழும் மக்கள் தாம் ஓரிடத்தில் இருப்பதுபோல் அரும்பெருங் காரியங்களை எளிதிற் பேசிக்கொள்ள உதவி செய்யுந் தந்தித்தபால் தந்தியில்லாத்தபா லென்னும் இவற்றின் நன்மையை என்னென்று கூறுவேம்! இவையெல்லாம் மக்கள் அறிவின் நுட்பத்தால் உண்டாயினவேயல்லாமல், அவர்தம் உடம்பின் உழைப்பால் உண்டாயின அல்லவே! இவ்வியந்திர இயக்கங்களால் மக்களுக்கு எவ்வளவு உழைப்புக் குறைந்தது! எவ்வளவு பொருட்செலவுந் துன்பமுங் காலக்கழிவுங் குறைந்தன! எவ்வளவு நலங்கள், எவ்வளவு இன்பநுகர்ச்சிகள் மேலோங்கின! இவற்றையெல்லாம் எண்ணிப்பார்ப்பவர்க்கு உடலுழைப்பினும் அறிவுமுயற்சியே பல்லாயிரம் மடங்கு சிறந்ததென்பதும், அறிவுமுயற்சி யொன்றே உடலுழைப்பினையும் அதனால்வரும் இளைப்பினையுந் துன்பத்தினையுங் குறைத்து உயிர்களுக்கு அமைதி யின்பத்தைத் தருமென்பதும் தெற்றெனவிளங்கும். ஆகவே, நல்ல தூக்கத்தை வருவித்தற்பொருட்டு உடல்வருந்தி யுழைக்கும் முறையைக் கைக்கொள்ளுதல் ஆகாது. நரம்புகளை இழுத்துப்பிடியாமல் தளரவிட்டு அமைதியோடு ஒன்றும் நினையாமற் படுத்திருந்தால் இனியதூக்கந் தானாகவே வரும்.

இனி, அசைவில்லாத கருவிகள் பழுதுபட்டுப் போகுமென்பது மேலே சொல்லப்பட்டமையால், மிகுந்த உழைப்பில்லாமல் தத்தம் உடம்பின் அளவுக்கு ஏற்பச் சிறுசிறு முயற்சிகள் செய்து வருவது அறிவுமுயற்சி யுடையார்க்கு இன்றியமையாததாகும். அறிவு முயற்சியும் உடம்பு முயற்சியும் உடையார்க்கு வாழ்நாள் நீளும், நோய் அணுகாது, மனவலிமை மிகும். அறிவுமுயற்சி யுடையார்க்கு நாடோறும் சிறிது தூரம் நடந்துபோய்வரும் பழக்கம் மிகச்சிறந்ததாம் என்பதை மேலே குறித்திருக்கின்றேம். அதனோடு, விடியற்காலையில் தோட்டவேலையும் செய்யப்புகுதல் அவர்க்கு மேலான நன்மையைத் தரத்தக்கதொன்றாம். கதிரவன் புலரிக் காலையிற் பொன்னொளி பரப்பிக்கொண்டு தளதள வெனக் கீழ்த்திசையில் எழும்போது, பறவைகள் மரநிறைந்த தோட்டங்களிலுந் தோப்புகளிலும் மிகுந்த சுறுசுறுப்போடு

கூச்சலிட்டுக் கொண்டு கிளைக்குக்கிளை பாய்வதும், தோட்டக்காரர்கள் வருத்தப்பட்டுப் பாடியபடியே ஏற்றமிறைத்துக் கிணறுகளிலிருந்து தண்ணீர் இறைக்க அந்நீர் பசும்புல் படர்ந்த கால்களின் வழியேசென்று வாழை தென்னை பாக்கு மா பலா முதலியவற்றிற்கும் பூஞ்செடிகளுக்கும் பாய்வதும், தோட்டங்களிலுள்ள அலரி ரோசா கருவிளை மல்லிகை முல்லை சம்பங்கி பிச்சி முதலிய பலவகைப் பூஞ்செடி கொடிகளும் சிவப்பு வெள்ளை நீலம் மஞ்சள் முதலான பலதிறப்பட்ட நிறங்களோடும் கண்ணைக் கவரத்தக்க வண்ணமாக மலர்ந்து மணங்கமழ்வதும், மரஞ்செடி கொடிகளெல்லாம் பச்சைப் பசேல் என்ற இலைகளால் தழைந்து மெல்லென்ற காற்றால் மகிழ்வுடன் அசைவதும் ஆன இயற்கைப் பொருள்களின் பொலிவையுந் தோற்றத்தையுந் தோட்டங்களிலுஞ் சோலைகளிலும் அல்லாமல் வேறெங்கே காணக்கூடும்? கவலையுந் துன்பமும் இன்றிக் கடவுளின் அருள் அமைப்பைப்பெற்று அழகோடும் மகிழ்வோடும் விளங்கும் உயிர்களின் தோற்றப்பொலிவை இளமரக்காவின்கண் உள்ள மரஞ்செடிகொடிகளி லன்றி வேறெங்கே காணமுடியும்? நோயாலும் வறுமையாலும் மனக்கவற்சியாலும் மாழ்கும் இம்மக்கட்பரப்பி னிடையே கிடந்து துன்பத்தில் உழன்றவர்கள் அத்துன்பம் நீங்கி ஆறுதல்பெற விரும்பினால் அதனைத் தருதற்குரிய உண்மையன்பர்களை மரஞ்செடி கொடிகளிலன்றி வேறெங்கே காண இயலும்? குற்றமற்றவராய்த் தம்பாலியன்ற இலை பூ காய் கனி கிழங்கு முதலிய பரிசுகளைச் சிறிதுங் கைம்மாறு கருதாது மகிழ்ந்து ஈயும் இவ்வோரறிவுயிர்களினுஞ் சிறந்த அன்பர்களை மக்களினும் மற்றை உயிர்களினும் பெற்றுக்கொள்ள இசையுமோ? ஆகலாற், களங்கம் அற்று இன்பவடிவாய்த் திகழும் இவ்வினிய உயிர்களினிடம் பழகும் வகையைப் பின்பற்றுதல் அறிவும் இன்பமும் ஆற்றலும் பெறவேண்டுவார்க்கு முதன்மையான கடமையாம். விடியற்காலையி லெழுந்தவுடனே தோட்டங்களுக்குஞ் சோலைகளுக்குஞ் சென்று இவ்வுயிர்களின் பச்சிலைத்தோற்றப் பொலிவைக் கண்டால் கண்கள் குளிரும், உள்ளம் கிளர்ச்சி அடையும், கவலையுந் துன்பமு



மான கிளைவுகள் இருந்தவிடமுந் தெரியாமல் மறைந்தொழியும். அம் மரஞ்செடி கொடிகளுக்கு நீர் பாய்ச்சுவதும், அவற்றைச் சுற்றியுள்ள மண்ணைக் கிளறி அவற்றிற்கு எரு ஊட்டுவதும், பயன்படாது முளைத்து அவற்றின் வளர்ச்சிக்குத் தடையாய் இருக்கும் பூண்டுகளைக் களைந்தெறிவதும் எவ்வளவு இனிப்பானவேலைகள்! இவ்வேலைகளைச்செய்யும் அறிஞர்க்கு அறிவும் உடம்புஞ் செழிக்குமாதலால் இஃது அவர்களால் உறுதியாகச் செயற்பால தொன்றும். கவலையற்ற பயிர்த்தொழிற் பழகுங் குடியானவர்கள் நீண்டநாள் நோயின்றி உயிர்வாழக் காண்கின்றோமாகையால், அறிவோடு இனியவாழ்நாளும் பெற விழைபவர்கள் பயிர்த்தொழில் பார்ப்பதை இழிவாக நினைத்தலாகாது.

இனித் தாம் இருக்கும் இல்லங்களில் உள்ள தளவாடங்களைச் செவ்வையாகவும் அழகாகவுந் தாமே ஒழுங்குசெய்து வைத்தலாலும், தாம் கற்கும் ஏட்டுச் சுவடிகளையும் அச்சுப் புத்தகங்களையும் அடிக்கடி யெடுத்துத் தூசிபடியாமல் தட்டி ஒழுங்காக அடுக்கிவைத்தலாலும், தாம் வழிபடுங் கடவுளின் திருவுருவத்திற்குப் பூச்சாத்திச் சாந்தம் அப்பி இன்னிசையோடும் வாழ்த்துச் செய்யுள் பாடிப் பூசை ஆற்றுதலாலும் தமதுடம்பிற்கு வேண்டுமளவான நன்முயற்சியை அறிவுடையோர் வருவித்துக் கொள்ளலாம். எத்துணைதான் கல்வியறிவில் மேம்பட்டோராயினும் தம் இல்லங்களிலுள்ள தட்டுமுட்டுகளை அழகுபெற வையாமல் தாறுமாறாகக் கிடக்கவிட்டிருப்பதும், தாம் கற்கும் நூல்களைப் பாதுகாவாமல் அவையெல்லாம் புழுதிபடிந்தும் செல்லரிக்கப்பட்டும் அங்கொன்றும் இங்கொன்றுமாயும் குப்பை கூளங்களாயும் கீழது மேலதாயும் அலங்கோலப் பட்டுங் கிடக்கப் பார்த்திருப்பதும், தமது தெய்வத்தை மெய்வணங்கிக் கைகுவித்து வாயிசைத்து வழுத்தாமல் உடம்பால்வணங்கிப் பயனென்னை? மனத்தால் நினைத்தலே அமையாதோ? எனச் சோம்பற் பேச்சுகளைப் பேசிக்கொண்டு உடல் வளையாமற் காலங்கழிப்பதும் அவர்க்குச் சிறிதும் ஆகாவாம்; இங்ஙனமெல்லாம் நடப்பது அவரது இழிவினையும் அழுக்குத்தன்மையினையும் சோம்பேறித் தனத்தினை

யும் ஒளிப்பின்றிக் காட்டும் அடையாளமாகும். அறிவொளியும் சுறுசுறுப்பும் அழகிய உயர்ந்த நோக்கமும் நிரம்பியகல்வியும் ஐயனிடத்துண்மையான அன்பும் வாய்ந்த நல்லோரைக் கண்டவுடனே அவரது உடம்பின் தோற்றத்தினாலும், அவரிருக்கும் இடங்களின் புனிதத்தன்மையினாலும் அவரது அறிவின் மேன்மையையும் அவர்தம் உள்ளத் தூய்மையினையும் தெளிவாக அறிந்துகொள்ளலாம். இவ்வியல்புடையோர் விலையுயர்ந்த ஆடை அணிகலன்களைப் பகட்டாக அணிந்துகொள்வதில் விருப்பம் இலராயினும், விலைகுறைந்தனவாயினும் நறுவியவான உடைகளையும் சில மணிக்கலன்களையும் தமக்கு ஏற்றவகையாகத் திருத்தமாகவும் துப்புரவாகவும் மேற்கொண்டிருப்பர்; குளித்து முழுகி நேர்த்தியான உடம்பின் தோற்றமும் முகவெட்டும் உடையராயிருப்பர். இத்தகைய புனிதத்தன்மையில்லாத பிறர் செல்வத்தி லுயர்ந்தோராயினும் பகட்டான ஆடையணிகலன்கள் பூண்டிருந்தாராயினும், அவர்தம் தோற்றத்தையும் அவரிருக்கும் இடத்தையும் சிறிது உற்று நோக்கினால் அவர்தம் அருவருப்புத் தன்மையை எளிதிற் கண்டுணரலாம். உயர்ந்த அறிவோடு உடம்பின்பயிற்சியும் அடையவேண்டுகின்றவர்கள் மேற்கூறிய முறைகளை எவ்வளவு கருத்தாய்ப் பின்பற்றக் கடமைப்பட்டிருக்கின்றார்கள்! இத்துணை எளிய இன்றியமையாத முறைகளையுங் கைப்பற்றுகின்றவர்க்கு உடம்பிலுள்ள கருவிகள் முற்றும் வேண்டுமளவுக்கு அசைந்து தத்தம் நிலைமையிற் செவ்வையாய் இருக்குமாகையால், அவை பருவம் வரும் முன்னே பழுதுறமாட்டா. இந்நிலையில் நிற்பவர் தமது நரம்பை இறுகப் பிடியாமல் இளக்கி அமைதியாய்க் கிடந்தமாத்திரையானே, அறிவு மழுங்காமல் இன்பமும் ஆறுதலும் பயக்கும் அமைதியான தூக்கம் உண்டாகும் என்க.

இனி நரம்பிளக்கத்தில் அமைதித்தன்மை உண்டாதல் போலவே, அமைதித் தன்மையால் நரம்பிளக்கம் உண்டாமென்பதும் உணரல்வேண்டும். அமைதியோடிருக்கும்போது நமதுடம்பிலுள்ள கருவிகளும் அவற்றை ஒன்றோடொன்று இணைக்கும் நரம்புகளும் இறுகிய நிலையில் இல்லாமல் இளகிய நிலையிலிருக்கின்றன. ஆனால், கோபம் பகைமை முதலான



கொடுங்குணங்கள் தோன்றியவுடனே அவை இறுகிய நிலையை யடைகின்றன. கோபங்கொண்டவன் கையை நிலத்தில் அறைவதும், மார்பில் தட்டுவதும், பல்லைக்கடிப்பதும், உதட்டை மடிப்பதும், கண்ணைப் பரக்கத் திறப்பதுங், குதிப்பதும் பாருங்கள்! அப்போதவன் உடம்பிலுள்ள நரம்புகளெல்லாம் எவ்வளவு வலுவாய் இறுகி யெழுந்து நிற்கின்றன! பின் இக்கொடுங்குணங்கள் அவிந்து இளைப்புங் களைப்பும் வந்தால் இந்நரம்புகள் பெரிதுந் தளர்ந்து வலிகுன்றிப் போகின்றன. இங்ஙனங் கொடுங்குணத் தோற்றத்தால் மிக இறுகுதலும், இளைப்புங் குணத் தோற்றத்தால் மிகத் தளர்தலும் நரம்புகளினிடத்தே காணப்படுதலால் இவையிரண்டிற்கும் நடுத்தரமான அமைதிக் குணம் உள்ள காலங்களிலேதாம் அவை இயற்கையான ஓர் இளக்க நிலைமையில் இருக்குமென்பது உணரப்படும். எல்லாக் குழந்தைகளும் பெரும்பாலும் மூன்றுவயது வரையில் மிகவும் அமைதியான குணத்தையன்றி வேறு எவ்வகையான கொடுங் குணங்களும், அக்கொடுங் குணங்களின் பிற்றோன்றும் இளைப்புக் குணங்களும் அறியாதனவாயிருத்தலால், அவற்றின் உடம்பிலுள்ள நரம்புகள் வெல்லப்பாகுபோற் றுவளுந் தன்மை மிகுந்து காணப்படுகின்றன; அதனால், அவற்றினுடம்பு தொடுதற்குங் காண்டற்கும் இனிய குழைவுடையனவாய்த் திகழ்கின்றன. குழந்தைகள் கீழே நிலத்தில் வழுக்கிவீழ்ந்தால் மிகுதியாய்க் காயப்படாமைக்கும் அடிபடாமைக்குங் காரணம் இதுவே; நெகிழ்ந்த பிசின் உருண்டையை* நிலத்தில் எறிந்தால் அஃது அதனின்றும் அதைத்து விழுதல் போலக், குழந்தைகள் கீழ்வீழ்ந்தால் அவை பெரும்பான்மையுங் காயம் அடைவதில்லை. மற்று வயதில் முதிர்ந்தவர் உடம்பு வன்குணப் பழக்கத்தால் நரம்புகள் இறுகியிருத்தலின், அழுத்தமான கண்ணாடி உருண்டை† கீழ்விழுந்தால் நொறுங்கி உடைந்துபோதல் போல, அவையுங் கீழ் விழுந்தாற் பெரிதும் புண்படுகின்றன, பழுதுபட்டும் போகின்றன. ஆகவே, அமைதிக்குண முடையார்க்கு அவருடம்பும் அதிலமைந்த கருவிகளும் மென்பதமுற்று நிற்குமாகலின் அவர் அதனாற் பல சிறந்த நன்மைக

* India rubbor ball. † Glass ball.

ளைப் பெறுவர் என்பது நன்கு பெறப்படும் என்க. ஆகவே, நரம்பு இளக்கத்தால் அமைதியையும், அமைதியால் நரம்பிளக்கத்தையும் வருவித்துக்கொள்ளும் முறைகளை நன்றாய்க் கூர்ந்து பார்த்துப் பழகிக்கொள்ளுதல் வேண்டும்.

---

## நினைவை முனைக்க நிறுத்தல்

இங்ஙனம் அமைதியாயிருக்கப் பழகிய பின்னர், நினைவை முனைத்துநிற்கும்படி பழக்கத் துவங்கல்வேண்டும். ஒன்றனைச் செய்தற்குரிய முயற்சியோடு நினைவு முன்வந்து நிற்றலையே 'நினைவு முனைத்து நிற்றல்' என்று கூறுகின்றோம். கல்வியில் வல்லார் ஒருவர் அவை ஏறிப் பேசுகையில் அவர் தம் அறிவு எவ்வளவு முயற்சியோடு முன்வந்து நிற்கின்றதென்பதனை அவருடையபார்வையிலும் சொல்லிலும் கைமெய் முகம் முதலிய உறுப்புகளின் அசைவுகளிலும் நன்கு கண்டறியலாம். இவ்வாறு முனைத்துநின்று செல்லாமல் அவர் தாம் சொல்ல நினைத்தவைகளை ஒருவழிக் கொணர்ந்து திறப்படப் பேசுதல் ஏலாது, தாம் கூற எடுத்த பொருளில் அவரது அறிவு எவ்வளவுக்கு முனைத்து நின்று விளங்குகின்றதோ, அவ்வளவுக்கு அவர் கூறும் பொருள் விளக்கமுடையதாகிக் கேட்பார்க்கு அறிவையும் இன்பத்தையுந் தரும். இன்னும் இந்நினைவு முனைப்பின் அருமையையும் ஆற்றலையும் புலங்கொளக் காணல் வேண்டின், உயர்ந்த வெள்ளிய சலவைக்கல்லில் அழகின்மிக்க ஒருபெண்மகள் உருவத்தைச் செதுக்குங் கற்றச்சனும், மலையடுத்த பள்ளத்தாக்கின்கண் உள்ள ஒருகானகத்தின் இடையிலே இளைய ஓர் அரசனும் அரசியும் ஒரு மான்கன்றிற்குப் புல் ஊட்டும் கவர்ச்சிமிக்க தோற்றத்தை ஓர் இரட்டுத் துகிலின்மேல் வரையும் ஓவியக்காரனும், வீணையின் நரம்புகளைத் தெறித்துத் தேனினுங் கரும்பினும் இனிக்கும் இசைகளை எழுப்புங் கைவல் பாடினியும் தங் கண்ணுங் கருத்துங் கையும் ஒருமுகமாய் நிற்க நினைவு முனைத்து முயலுந் திறத்தின்கண் வைத்துத் தெளியக் கண்டுணரலாம். ஆ! நினைவு முனைத்து நிற்கப் பெறுவார்க்கு இம்மையிலும் மறுமையிலும் ஆகாத தொன்றில்லை. உலகவாழ்க்கையிற் பல பயப்பாய் நின்ற ஆற்ற



ளிலும் மேம்பட்டு விளங்கிய மேலோரெல்லாம் தமதறிவை முனைக்க நிறுத்தும் ஆற்றலிற் சிறந்தவர்களேயாமென்பது அவருடைய வரலாறுகளை யுணர்வார்க்கு நன்கு விளங்கும்.

அங்ஙனமாயின் நினைவை முனைக்க நிறுத்துதலுக்கும் நினைவை ஒருவழிநிறுத்துதலுக்கும் வேற்றுமை யாதென்றால்; உள்ளம் பல நினைவுகளால் இழுக்கப்பட்டு அங்கும் இங்குமாய்ச் சிதர்ந்துபோகவிடாமல், அஃது ஒரு நினைவோடு நிற்குமாறு செய்தலே நினைவை ஒருவழி நிறுத்துதலாகும்; அங்ஙனம் நின்ற நினைவு ஒரு முயற்சியுடையதாய் ஒருபயனைத் தருமாறு முன்நிற்கச்செய்தலே நினைவை முனைக்க நிறுத்துதலாகும். ஒருவன் தொலைவிலுள்ள தன் நண்பன் ஒருவனை நினைத்துக்கொண்டிருந்தது நினைவை ஒருவழி நிறுத்துதலாகும்; பிறகு, அந்நண்பன் தனக்கு உடனே ஒருகடிதம் எழுதியனுப்பக் கடவன் என்று முயலும் நினைவோடிருந்த நிலையே நினைவை முனைக்க நிறுத்துதலாகும். ஒருவழி நின்ற நினைவு அவன் தான் கருதிய பயன்களை விளைவியாது, முனைத்து நின்ற நினைவோ அவன் விரும்பிய பயன்களையெல்லாம் விளைவிக்கும் இயல்பினதாம். தொலைவிடத்திலுள்ள நண்பன் தனக்குக் கடிதம் எழுதல்வேண்டுமென்னும் முனைத்த நினைவோடும் ஒருவன் பலகாலும் விரும்பி வருகுவனாயின் அவன் நினைத்தபடியே கடிதம் வரக்காணலாம்.

அஃதுண்மையாயின், ஒருவர் நினைத்தபடியெல்லாம் நடைபெறல்வேண்டும்; அவ்வாறு நடப்பக்காணாமையானும், ஒன்று நினைக்க மற்றொன்று முடிதலானும், நினையாததொன்று வந்து எதிர்நிற்பதும் உண்டாதலானும் அஃதுண்மையாவது யாங்ஙனமெனின்; நினைவு முனைத்து நின்றாலும் அது மேலும் மேலும் விருப்பத்தாலும் அன்பாலுங் காதலாலும் உந்தப்பட்டு உரம்பெற்று நின்றாலல்லாமல், கோபம் வருத்தங் கவலை அச்சம் பொறாமை முதலாக மேலெடுத்து விளக்கிய இழி குணங்களால் அது சிறிதும் பழுதுபடாமல் நின்றாலல்லாமல் தான் நினைத்த பயன்களைத் தான் நினைத்தபடியே தரமாட்டாதாகும். எரிவது விறகேயானாலும் அது மிகுந்த ஈரங்கலந்ததாகும். வழி எரியுமோ? ஞாயிற்றினொளி எல்லையற்ற விளக்கமுடைய

தாயினும் முழுதும் அடைப்பான ஓர் இருட்டறையினுட் புகுந்து விளங்குமோ? இங்ஙனமே நினைவின் வலிமையைக் குறைத்து அதற்குப் பெருந்தடைகளாய்க் கிடக்கும் மாறுபட்ட குணங்களால் உள்ளம் பற்றப்பட்டிருக்கும் காறும் நினைந்தவை நினைந்தபடி நிறைவேறா. இனி, இம் மாறுபாடுகள் ஒழிய, நல் விருப்பமும் இனிய அன்பும் உண்மைப் பெருங்காதலுமாகிய உயர்குணங்கள் கிளர்ந்து விளங்குங்கால் நினைத்தவை நினைத்த படியே நிறைவேறுமென்பது திண்ணம்.

அவ்வாறாயின், விருப்பமும் அன்புங் காதலும் உயர்ந்தனவாய் நல்லனவாய்த் திகழ்தல் எதனாலெனின்; தன்னொடு தொடர்புடையார்க்கு வரும் நன்மையை முன்வைத்துத் தனது நன்மையைப் பின்வைத்து உயர்ந்த நோக்கத்தோடும் உயர்ந்த எண்ணத்தோடும் ஒழுகுந் தன்மையினாலேயே அவையும் உயர்ந்து நல்லவாய் விளங்குகின்றன என்று கடைப்பிடித்தல் வேண்டும். இதனை ஓர் எடுத்துக் காட்டால் விளக்குவாம். தனக்கு நண்பராயினார் ஒருவர் வறுமையால் மிக நைந்து பசி விழுக்கமொடு வாடுவதைக்கண்டு வருந்தும் நல்லோன் ஒருவன்; அவர் வறுமை தீர உதவிசெய்தற்குப் போதுமான பொருள் தன்கையில் இல்லாமையால், தனியே அமைதியாக ஓரிடத்திற் சென்றிருந்து 'என் நண்பர் வறுமை தீர்ந்து வாழல் வேண்டும்; அவர்க்கு நான் ஏராளமான உதவிகளைச் செய்யுமாறு எனக்கு மிகுந்த பொருள் கிடைக்கவேண்டும்.' என்று விரும்பித் தனது நினைவை அடுத்தடுத்து முனைக்க நிறுத்தி வருகுவனாயின் அவன் நினைந்தவாறே சிலநாட்களில் அவனுக்கு மிகுந்தபொருள் வருதற்கான வழிகள் திறக்கும்; அவ்வழிகளில் அப்போது அவன் சிறிது முயல்குவனாயின் பெரும்பொருள் பெறுவன்; பெற்ற அப்பொருள் தன் நண்பர் வறுமை தீர்த்தற்கும் தனக்கும் பயன்படும். இவ்வாறு தன் நினைவை முனைக்க நிறுத்துதலே நல்விருப்பமும் உயர்ந்த அன்புமாகும். இவ்வாறன்றி 'யான் ஒருவனுமே நன்கு வாழல்வேண்டும், எனக்கே எல்லாப் பொருளும் வேண்டும், பிறர் எங்ஙனங் கெட்டாலும் யான் வருந்தித் தேடிய பொருளில் எள்ளளவும் பிறர்க்கு ஈயேன்.' என்னும் வன்னெஞ்சத்தோடு ஒருவன்



என்னும் எண்ணம் ஈடேறாது; அவ்வெண்ணம் எல்லாராலும் அருவருக்கத் தக்கதேயாம். ஆகவே, நினைக்கும் நினைவு உரம் பெற்று நினைந்த பயன்களைத் தருதற் பொருட்டு, அந்நினைவினை உந்தும் விருப்பமும் தூயதாயும் தன்னொடு தொடர்புடையார் நலத்தை முதலிற் கருதுவதாயும் இருத்தல் வேண்டும். அங்ஙனமானால், ஒருவன் தனக்குத் தொடர்புடைய நண்பர் பலருள் ஒருவர்க்கு நன்மைசெய்ய விரும்பினால் அது மற்றொருவர்க்குத் தீமையாகவும் முடியக் காண்கின்றோமாதலாற், பிறர் எல்லார்க்கும் நன்மையே செய்ய வேண்டுமென்றல் யாங்ஙனங் கூடுமெனின்; ஒருவர்க்கு நன்மைசெய்யுங்கால் மற்றவர்க்கு அதனால் தீமை வருவதுபோற் றோன்றுமாயினும் அவரவர் நிலைமைகளைச் செவ்வனே ஆராய்ந்துபார்த்து நடுவு நிலைமைக்கு ஏற்றபடி செய்தால் அதனால் ஒருவர்க்கு நன்மையும் மற்றொருவர்க்குத் தீமையும் வருமாயினும் அதுபற்றி அவர் இகழப்படார். பத்தாயிரம் பொன் பெறுதற்குரிய ஒருவர் வறுமையால் நலிய, அதற்கு உண்மையில் உரியரல்லாத மற்றொருவர் அப்பொன் முழுமையும் தாமே கவர்ந்து கொண்டு அதனைமற்றவர்க்குக்கொடாது வன்கண்மை செய்தால், நடுவுநிற்குமொருவர் அப்பொன்னை அவரிடத்தினின்றும் பிடுங்கி மற்றவர்க்குக் கொடுக்குங்கால் அஃது ஒருவர்க்கு நன்மையும் மற்றொருவர்க்குத் தீமையுஞ் செய்வதுபோற் றோன்றுமாயினும், அதனை உண்மையால் ஆராய்ந்துபார்ப்பவர்க்கு அஃது அங்ஙனம் ஆகாமை நன்குவிளங்கும். ஆகவே, ஒருவர்க் குண்மையினுரியதன்றாய்ப் பயன்படாததொன்றைப் பயன்பெறுதற்குரிய பிறரொருவர்க்குச் சேர்ப்பித்தல் நடுவுநிலைமைக்குப் பழுதாமாறில்லை. இம்முறையால் நோக்குமிடத்து நடுவுநிலைமை வழுவாது பிறர் நிலைமைகளை ஆராய்ந்து அவ்வவர்க்கு ஏற்றபடியாக நன்மை செய்தற்கு நினைவை முனைக்க நிறுத்துதல் சிறந்த நெறியேயாமென்க.

அங்ஙனமாயினும், நினைவை வலிவேற்றுவதற்கும் பிறரது நன்மையைக்கருதுவதற்கும் உள்ள இயைபு என்னையோவெனின்; பிறரதுநன்மையைக் கருதுவோரிடத்தெல்லாம் இறைவனருள் முனைத்து விளங்கும். முழுமுதற் பொருளான

கடவுள் எக்காலும் உயிர்களின் நன்மையையே கருதிப் பல வேறுலகங்களையும் அவ்வுலகத்துப் பொருள்களையும் பலதிறப் பட்ட உயிர்களுக்கும் பலதிறப்பட்ட உடம்புகளையும் எங்கும் நிறைந்து நின்று ஓயாது ஆக்குபவராயிருக்கின்றார். அவரு டைய அன்பிற்கும் அவருடைய அருளுக்கும் ஓர் அளவே யில்லை. அவருடைய அறிவும் வல்லமையும் எல்லையற்ற பெரு மையுடையனவாய் இருக்கின்றன. அவர்க்கு ஒப்பானதும் அவர்க்கு மேற்பட்டதும் இல்லை. இத்தகைய முழுமுதற் பொருளின் வல்லமையில் ஒரு சிறிதாயினுந் தான் அடையப் பெற்றாலல்லாமல் எவனும் வலிமையிற் சிறந்து விளங்கல் முடியாது. கடவுளின் அருளைப் பெறவேண்டுகிறவர்கள் அக் கடவுளின் செயலை ஒத்த செய்கை சிறிதாயினும் உடையராய் இருக்கவேண்டுமன்றோ? எல்லாம் வல்ல முதல்வன் பிறரது நன்மையையே கருதி எல்லாஞ் செய்தல்போல இவர்களும் பிறரது நன்மையையே கருதி உழைப்பார்களாயின் எங்கு முள்ள இறைவன் இவர்கள் உள்ளத்தில் விளங்கித் தோன்று வான் அல்லனோ? அங்ஙனம், எல்லாம் வல்ல பொருளின் அருள் சிறிதாயினும் விளங்கப்பெற்றால், அதனைப் பெற்றவர் நினைவு மிக்க வலிவுடையதாய்த் தான் நினைந்ததை நினைந்த படியே நிறைவேற்றுமென்பது திண்ணம். ஆகவே, பிறரது நன்மையைக் கருதுதல் கடவுளருளைப் பெறுவிக்குமாதலால், நினைவை வலியேற்றுதற்கும் பிறர்நலங் கருதுதற்கும் இயைபு மிகுதியும் உண்டென்பது பெறப்படும் என்க.

இங்ஙனமெல்லாம் பிறர் நலங் கருதி நினைவை முனைக்க நிறுத்துங்கால், மேலு மேலும் வளரும் அவாவினால் அதனை உந்துதல் வேண்டும். தான் பெறுதற்கு நினைந்தபயனைப் பிழை யாது விரைந்து பெறல் வேண்டுமென்னும் அவா முறுகிவளருந் தோறும் அதனால் உந்தப்படும் நினைவு நிறைந்தவலி வுடைத்தாய்த் தான் வேண்டியபயனை உறுதியாகத் தந்தேவிடும். விருப்பத்தின் மிக்கது அவா; அன்பின்மிக்கது காதல். காதல் வாய்ப்பட்டவர் நினைவின் வலிமை சிறிது நோக்கினாலும் இவ் வுண்மை தெளிவாய் விளங்கும். அமெரிக்கா நாட்டிலிருந்த அழகிய பெண்மகள் ஒருத்தி தற்செயலாய் அழகிய ஓர் ஆண்



மகன் படத்தைப் பார்க்க நேர்ந்தது. அதனைப் பார்த்த அந் நேரம் முதல் அப்பெண்ணின் எண்ணமெல்லாம் அவ்வாண் மகன் உருவத்திலேயே பதிந்துநின்றது. வேறெதனையேனும் வேறெந்த ஆடவரையேனும் அவள் நினைக்கமாட்டாதவளா னாள். அப் படத்திலுள்ள ஆண்மகனையே தான் மணந்து கொள்ள வேண்டுமென விழைந்தாள். ஆனால், அவனிருக்கும் ஊர், பேர் முதலானவற்றைத் தெரிந்துகொள்ளும் பொருட்டு அவள் பலரைக் கேட்டுப்பார்த்தும் அஃதொன்றுமே புலப் பட்டிலது. படத்திற்கண்ட அவ்வாண்மகனையன்றி வேறெவ ரையும் அவள் மணக்க இசையாமைகண்டு, அவளுக்கு நெருங் கிய உறவினராய் உள்ளோர் 'படத்திற் கண்ட அவ்வாண்மகன் ஒருவன் உண்மையில் இருக்கின்றான் என்பதைத் தெரிதற்கு ஏதொரு வழியும் இல்லாதிருக்கையில், நீ இங்ஙனங் காதல் கொண்டு வருந்துதல் ஆகாது. அதனை விட்டு உண்மையில் உயிர்வாழும் வேறோர் ஆண்மகனை மணக்க இசை.' என்று எவ்வளவோ சொல்லியும் அவள் மனந் திரும்பாமல், தான் கண்ட உருவத்தையே அல்லும் பகலுங் காதலித்து வந்தாள். இஃதிப்படியிருக்க, இவள் படத்திற் கண்ட உருவத்திற்கு உரியவனான ஆண்மகன் தென் ஆப்பிரிக்காவில் உண்மை யாகவே உயிரோடிருந்தான். அவனுக்கோ கனவின்கண் ஓர் அழகிய பெண்மகளின் உருவம் அடிக்கடி தோன்றியது. அவ் வுருவத்தையே அவனுங் காதலிப்பானானான். கனவிற்றோன்றும் அப்பெண்மணி யாராயிருக்கலாம் என்று கண்டறியத் தனக்கு நெருங்கிய உறவினரிலும் நண்பர்களிலும் அறிமுகமானவர்களி லும் தேடித்தேடிப் பார்த்தான்; அத்தகையாள் ஒருத்தியை அவன் அவர்களுள் எவரிடத்துங் காணவில்லை. அதன்பின் தொலைவான தேயங்களிலுள்ள பெண்மக்கள் பலப்பலரின் உருவப்படங்களை வரவழைத்துப் பார்த்தான்; அவைகளுள் ளும் அவள் உருவத்தைக் கண்டிலன். மிகவுஞ் சேய இடங் களில் இருந்துவருவோர் பலரிடமுந் தான் கனவிற் கண்ட பெண்ணின் அடையாளங்களைத் தெளிவாய் எடுத்துச் சொல்லி அத்தகையளான ஒரு மடந்தையைக் கண்டதுண் டோவென இடைவிடாது உசாவிவந்தான்; அதுவும் பயன்பட

வில்லை. கடைசியாகத் தன் உருவப்படத்தைப் பலதேயப் பத்திரிகைகளிலும் பதிப்பித்து, அதன்கீழ்த் தன்பெயர் ஊர் இருப்பிடம் முதலியவற்றையுங் கண்டு, தான் கனவிற் கண்ட மாதின் உருவ அடையாளங்களையுங் குறிப்பிட்டு வந்தான். இவனது படமும் அதன் கீழ் எழுதப்பட்ட குறிப்புகளும் அமெரிக்காவில் உள்ள ஒரு சிறந்த பத்திரிகையிலும் பதிப்பிடப்பட்டு வெளியாயின. இவனைப்போலவே அமெரிக்கா தேயத்திற் காதல்கொண்டு வருந்தும் அப்பெண்ணின் உறவினருள் ஒருவர் அப்பத்திரிகை ஒன்றை அப்பெண்மணியின் கையிற் கொண்டுவந்து கொடுக்க, அதில் உள்ள அவ்வாண்மகனுருவம் தான் முன் படத்திற் கண்ட ஆண்மகனுருவத்தை ஒத்திருக்கவும், அவன் கனவிற்கண்ட பெண்ணின் உருவ அடையாளங்கள் தனதுருவ அடையாளங்களை ஒத்திருக்கவுங் கண்டு பெருமகிழ்ச்சி அடைந்தவளாய், உடனே ஒருகடிதம் எழுதி அதனோடு தன் படத்தையும் வைத்துத் தென்னாப்பிரிக்காவில் உள்ள அத்துரைமகனுக்கு அனுப்பினாள். அவனும் அவள் படத்தைக்கண்டு அதிலுள்ள உருவமும் தான் கனவிற்கண்ட மடந்தையின் உருவமும் ஒத்திருக்கப்பார்த்து அளவுக்கடங்காக் களிப்புடையனாய்ப் பின்னர்ச் சிலநாளில் அவளை மணந்துகொண்டான். இருவரும் உயிரும் உடலும்போற் பூவும் மணமும்போற் காதலன்பிற் பிணைந்து இனிது வாழ்ந்தார்கள். உண்மையாக நடந்தேறிய இந்நிகழ்ச்சியை உற்றாராயுங்கால், உலகத்தின்கண் எல்லாவற்றினுஞ் சிறந்த காதலன்பால் உந்தப்பட்ட நினைவு அளவுக்கடங்கா வலிவுடையதாய்த் தான் நினைந்த பயனைத் தான் நினைந்தபடியே பயக்கவல்லதாதல் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் இனிது விளங்குகின்றதன்றோ?

இனி, உண்மைக் காதலன்பிற்கு அடுத்த நிலையில் வைத்தற்குரிய அன்பும் விருப்பமும் ஆவலும் அங்ஙனமே நினைவை வலிவேற்றுவனவாய் இருத்தலால், ஒன்றை நிறைவேற்றுதற்பொருட்டு முனைக்க நிறுத்தும் நினைவை இவ்வுள்ள நிகழ்ச்சிகளால் நிரம்பவும் உரப்படுத்தல் வேண்டும். ஒன்றனை ஆவலோடு செய்யுங்கால் அது செய்வோனுக்கு இன்பத்தைத் தருதலு-



டன் அவன் செய்யும் அலுவலையுஞ் செவ்வையாய் எளிதில் இனிது முடிப்பிக்கும். தான் எடுத்த ஒரு செயலை ஆவலோடு செய்யாதவனுக்கு அது பெருந் துன்பத்தை விளைப்பதும் அவன் செய்யும் அலுவலைப் பழுதுபடுத்துவதும் எங்கும் எளிதிற் காணலாம். வந்த விருந்தினர்க்கு உணவு சமைத்து இடும் வீட்டார் இருவரில், ஒருவர் அகமும் முகமும் மலர்ந்து ஆவலோடும் விருந்துசெய்ய, மற்றவர் வெறுங்கடமைக்காக அன்பின்றிச்செய்ய, இங்ஙனம் இருதிறமாய் அமைந்த அவ்விருந்துணவை அருந்துவோர் ஒன்றிலுள்ள மேன்மையையும் மற்றொன்றிலுள்ள தாழ்மையையும் நன்கு உணரப்பெறுவர். இன்னுங், கல்விகற்குஞ் சிறார் இருவரில் ஒருவன் தான் உணரவேண்டிய நூல்களை அக்கறையோடு பயில, மற்றவன் ஆசிரியனிடத்துள்ள அச்சத்தாலும் தாய்தந்தையர் ஓவாது செய்யுந் தூண்டுதலாலும் தன் பாடங்களை வேண்டா வெறுப்பாய்ப் பயில, இவ்வாறு நடைபெறும் இருவகைப்பயிற்சியின் இயல்புகளையும் உற்றுநோக்குவேமாயின் முன்னையது பெரும்பயன் தருவதாயும் பின்னையது சிறுபயனுந் தாராததாயும் இருப்பதை எளிதிற் கண்டறியலாம். ஆதலால், நினைவை முனைக்க நிறுத்தி அதனை உரமேற்றுதற்கு அதனை ஆவல் அன்பு முதலியவற்றோடு செய்தல் இன்றியமையாததாகும் என்க.

இனி, இங்ஙனமெல்லாம் அறிவை முனைக்க நிறுத்தும் வகை தெரிந்தாலன்றித் தன்னை மேன்மைப்படுத்தவும், பிறரை அவரது நன்மையின்பொருட்டு அடக்கியாளவும் எவனாலும் சிறிதும் ஏலாது. அறிவை முனைக்க நிறுத்தத் தெரியாதவர் மக்களிலுந் தாழ்ந்த விலங்கினங்களைப் போற் காலங்கழிக்க நேரும். விலங்குகளுங்கூடத் தமக்குப் பசியெழுந்த நேரங்களில் தமதறிவை முனைக்க நிறுத்தித் தாம் வேண்டிய இரையைப் பெறுகின்றன. சுவரிலிருக்கும் பல்லியின் செயலைச் சிறிது உற்றுப்பாருங்கள்; தனக்கு இரை வேண்டித் தேடித் திரிவதும், இரையாதற்குரிய ஒரு பூச்சியைத் தொலைவிற் கண்ட அளவிலே தன் ஐம்புலன்களையும் ஒடுக்கிக்கொண்டு நினைவைக் கண்ணிலே முனைக்க நிறுத்தி, எவ்வளவு அமைதியாகவும் உன்னிப்போடும் மெல்ல மெல்ல நகர்ந்துசென்று,

அதனைப் பிடித்தற்குரிய தொலைவில் வந்தவுடன் நெடுநேரம் அசையாமலிருந்து, பிறகு குறிதவறாமல் ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து அதனைத் தன் வாயிற் கௌவிக்கொள்கின்றது! அவ்விரையைப் பிடிக்குமட்டும் அப்பல்லியினிடத்துக் காணப்படும் ஒடுக்கமும் உள்ளிப்பும் நினைவுமுனைப்பும் அமைதியும் என்னும் அரியசெயல்களில் ஆயிரத்தில் ஒரு கூறேனும் நம்மக்களிடத்தில் உண்டாகுமாயின் அவர்கள் எவ்வளவோ மேலான நிலைமையை அடைவார்கள்! உணவின்பொருட்டுத் தாம் செய்யும் முயற்சிகளிலேனும் அவர்கள் கருத்தொன்றுபட்டு நிற்கின்றார்களாவென்று ஆராய்ந்து பார்த்தால் அவற்றை அவர்கள் முக்கால் அழுதுகொண்டே வேண்டா வெறுப்பாய்ச் செய்யக் காண்கின்றேம்! மக்களினும் மிகவுந் தாழ்ந்தனவாகக் கருதப்படும் பல்லி முதலான சிற்றுயிர்களிற் காணப்படும் நினைவொருமைதானும் மக்களிடத்தில் காணப்படுவது அரிதாயிற் பின்னை இவர்கள் தம்மை அவற்றினும் உயர்ந்தவராக எண்ணி இறுமாந்திருத்தல் எவ்வளவு பேதைமையாகத் தோன்றுகின்றது! பசியெடுத்த வேளைகளிற் செய்யும் முயற்சியிற் கருத்தை நிறுத்துதலன்றி, வேறுபல நன்முயற்சிகளைச் செய்யவேனும் அவற்றிற் கருத்தை நிறுத்தவேனும் அறியாத விலங்கினங்களைக் காட்டினும் மக்கள் உயர்ந்தவராகல் வேண்டின், அவ்வுயர்வு பல நன்முயற்சிகளிற் கருத்தை முனைக்க நிறுத்தி ஆவலோடு அவற்றைச் செய்யும் வழியாலல்லாமல் வேறெவ்வழியானும் பெறுதல் இயலாது. மற்று எத்தகைய முயற்சி செய்தாலும் அதன்கண் நினைவை முனைக்க நிறுத்தி அதனை ஆவலோடு செய்யக் கற்றுக் கொண்டவன் கல்வியில் வல்லனாகலாம், கைத்தொழிலிற் றிறமைமிகலாம், அரசியலில் முதன்மைபெறலாம், அரும்பெருஞ் செல்வத்தை அடையலாம், நோயின்றி யுயிர்வாழலாம், நூறாண்டு உயிர் பிழைக்கலாம், இன்னுந் தனக்குந் தன்னைச் சார்ந்தார்க்கும் எவ்வளவோ நன்மைகளையெல்லாம் வருவித்துக்கொள்ளலாம்.

இன்னுங் கருத்தை முனைக்க நிறுத்தப் பழகினவர்கட்கு, அவர் தம் நினைவின் நன்மைக்கு ஏற்ப அவர் தம் உடம்பும் உடம்பினுள்ள உறுப்புகளும் சீர்திருத்தம் அடைந்து பொலி



வுடன் விளங்குமாதலால், எங்கேசென்றாலும் அவர்கட்குச் சீருஞ் சிறப்பும் உண்டாம். அவரைக் கண்டமாத்திரத்தே எத்தகையினரும் அவர்பால் வணக்கவொடுக்க முடையராய் அன்புடன் ஒழுகுவர்; அவர் நினைந்தபடியெல்லாஞ் செய்குவர். நினைவின்வல்லமை வாய்ந்தோர்க்கு அவரது உடம்பும் உடம்பினுறுப்புகளும் பொலிவுபெற் றிருத்தலையும், அவர் நினைந்தபடியும் சொல்லுகிறபடியும் எல்லாம் நடைபெறுதலையும் நாம் சிறிது ஆராய்ந்துபார்த்தாலும் செவ்வனே தெரிந்துகொள்ளலாம். உள்ளத்திலே மகிழ்ச்சி தோன்றுங்கால், அது தோன்றப் பெற்றவர் முகமும் உடம்பும் எவ்வளவு கிளர்ச்சியுடையவாகின்றன! அங்ஙனமல்லாமல் ஒரு கொடுந்துயரம் உண்டாகுங்கால் அவரது முகம் எவ்வளவு வாடி உடம்பு மெலிந்து போகின்றது! இடையிடையேதோன்றும் இவ்வுள்ள நிகழ்ச்சிகளே தத்தம் இயல்புகளைத் தாஞ்சார்ந்த உடம்பினும் உடம்பினுறுப்புகளினும் பதியவைக்கின்றனவென்றால், என்றும் நிலையாக நடைபெறும் உள்ள நிகழ்ச்சிகள் தம் பயனைத் தவறாமல் விளைக்குமென்பதை நாம் சொல்லுதலும் வேண்டுமோ! ஆதலால், உள்ளத்தின்கட் டீய நிகழ்ச்சிகள் உண்டாகாமல் விலக்கித் தூய நிகழ்ச்சிகளே நிகழுமாறு கடைப்பிடியாகச் செய்து நினைவையும் அவ்வழியிலே வைத்து முனைக்க நிறுத்திவந்தால், இப்பழக்கம் நிலையானபயனைத் தருமென்பது திண்ணம். இன்னும், நினைவின்வன்மை வாய்ந்தவர்கள் அடுத்தடுத்து ஒரு செய்தியைச் சொல்லிவருவார்களானால், கேட்பவர் அதனைத் துவக்கத்தில் நம்பாராயினும் பின்னர் அதனை நம்பத் தலைப்படுவாரென்பதும் அறிதல்வேண்டும். அடுத்தடுத்து உரைக்கும் உரை கேட்பார்க்கு நம்பிக்கையினை வருவித்துத் தன் பயனைத் தந்தேவிடும் என்னும் உண்மையினை ஒருகால் நான்கு பெயர் ஒன்றுகூடித் தம்நண்பர் ஒருவரிடத்தே செய்துபார்க்கலானார்கள். ஏதொரு குற்றமும் இன்றி உடம்பும் உள்ளமும் மிகவுஞ் செவ்வையான நிலைமையிலிருந்த அந் நண்பரிடத்தில் முதலில் ஒருவர் பார்க்கவந்தார்; வந்தவர் முதலிற் சிறிது நேரம் அவரை உற்றுப்பார்த்தார்; அதுகண்டு அந்நண்பர் 'ஏன் என்னை உற்றுப்பார்க்கிறீர்?' என்று கேட்க, வந்தவர்

‘வேறொன்றுமில்லை; இத்தனைநாளாக யான் பாராத ஒரு முக வாட்டமும் உடம்பின் மெலிவும் உம்மிடத்தே காணப்படுகின்றன; அதற்குக் காரணம் யாது?’ என்றார். உடனே அவர் ‘என்னிடத்தில் அப்படிப்பட்ட மாறுதல் சிறிதும் இல்லையே; யான் நன்றாகத்தானே யிருக்கின்றேன்.’ என்று விடை கூறினார். வந்தவர் அச்சொற்களைக் கேட்டப் பின்னும் ‘அப்படியானால் மிகவும் நல்லதே; ஆனாலும், என் கண்களுக்கு உங்களிடத்தில் ஏதோ ஒரு வாட்டம் இருப்பதுபோற் றோன்றுகின்றது; ஆனாலும் உடம்பைக் கருத்தாய்ப் பார்த்துக்கொள்ளுங்கள்’ என்று அவ்வளவோடு அப்பேச்சை நிறுத்திக்கொண்டு, வேறுபல நல்லவற்றைப் பேசிப்போனார். பின்னர்ச் சிலநாட்கழித்து மற்றொருவர் இவரைப்பார்க்கவந்தார்; வந்து சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்து ‘யான் தங்களை நாலைந்து வாரங்களுக்குமுன் பார்த்தபோது நீங்கள் மிகவுஞ் செவ்வையான நிலைமையிற் காணப்பட்டீர்கள்; இப்போதோ தங்கள் முகம் ஒடுங்கி வருவதோடு உடம்பும் மெலிந்து தோன்றுகின்றது, குரலொலியும் வேறுபட் டிருக்கின்றது. ஏதோ பொல்லாதநோய் உங்களுடம்பில் மறைவாயிருந்து வருத்திவருகின்றது. உடம்பைச் செம்மையாய்ப் பார்த்துக்கொள்ளுங்கள்’ என்றார். சில நாட்களுக்குமுன் முதலிற் காணவந்தவர் சொல்லிய சொற்களால் ஏற்கெனவே மனக்கவற்சி யடைந்திருந்த அந்நண்பர் இப்போது வந்தவர் சொல்லியவற்றையுங் கேட்ட அளவானே அச்சம் மிகப் பெற்றவராய்த் தம்முடம்பில் ஏதோ ஒருநோய் மறைவாக இருக்கத்தான் வேண்டுமென்று நம்பத் தலைப்பட்டு ‘ஆம் சிலநாட்களாக என்னுடம்பில் இன்னதென்றறியப்படாத ஒருநோய் இருப்பதாகத்தான் தெரிகின்றது. அதனாலேதான் இந்த வாட்டமும் மெலிவும். இதற்குத் தக்க மருந்துண்டு இதனைத் தீர்த்துக்கொள்ளல் வேண்டும்.’ என அவர் சொற்களுக்கு உட்பட்டு விடைகூறினார். பார்க்க வந்தவரும் உடம்பைச் செவ்வையாகப் பார்த்துக்கொள்ளும்படி’ சொல்லிவிட்டுப் போயினார். இதற்குப் பின் இந்நண்பருடம்பு உண்மையாகவே மெலிந்து வரலாயிற்று. உயர்ந்த பல அரிய மருந்துகளைத் தக்க மருத்துவர் சொற்கொண்டு வாங்கி



உண்டும், அந்நோய்தீராமல் நாளுக்குநாள் மிகுந்து வரலாயிற்று. இங்ஙனமாகி வருகையில் மூன்றாம் முறை மற்றொருவர் இவரைப் பார்க்கவந்தார். வந்தவர் இவரைப் பார்த்தமாத்திரத்தே வியப்புந் துயரமும் அடைந்தவராய் ‘ஆ! ஈதென்ன! யான் இரண்டு மூன்று திங்களுக்கு முன் தங்களைப் பார்த்தபோது தாங்கள் மிகவுஞ் செவ்வையான நிலைமையில் இருந்தீர்களே! இப்போது இவ்வளவு மெலிந்த நிலைமையை அடைதற்குக் காரணம் யாது?’ என்று வினவினார். இச் சொற்களைக் கேட்ட அந்நண்பர் மிகமெலிந்த குரலில் ‘ஆம். எத்தனையோ மருத்துவர்களைக் கொண்டு ஆராய்ந்து பார்த்தும், அவர்கள் சொல்லிய எத்தனையோ வகையான உயர்ந்த மருந்துகளை வாங்கி உண்டுபார்த்தும் இந்நோய் தீரவில்லை. இந்நோயின் தன்மையும் மருத்துவர் எவர்க்கும் புலப்படவில்லை.’ என்று விடைகூறினார். அதன்மேல், வந்தவர் கூறுவார் ‘ஈது ஏது! மருந்திற்றீராத பொல்லாத நோயாய் இருக்கின்றதே! அன்பிற்சிறந்த உங்களை இந்த நிலைமையிற் பார்க்க என் மனம் நீராய் உருகுகின்றதே! இனித் தங்களை உயிரோடு பார்ப்பேனோ, இல்லையோ! என்செய்வேன்!’ என்று மிக மனம்நைந்தார்போற் கூறிவிட்டுப் போனார். இவர் சென்றபின் இவர் பேசிய சொற்கள் நோயாய்க்கிடக்கும் அந்நண்பர் உள்ளத்தில் ஆழப்பதிந்து அவரைப் பெரிதுங் கலங்கச்செய்து, அவர்க்கு அந்நோயைப் பின்னும் மிகுதிப்படுத்திவிட்டன. பின்னுஞ் சிலநாட்களில் இவர் எழுந்து நடக்கவும் மாட்டாதவரானார். அதன்பின் நாலாந்தரமாக மற்றொருவர் அவரைக் காணவந்தார்; வந்தவர் அந்நண்பரைக் கண்டு அவர் பேசவும் வலியற்றவராயிருத்தலாற் சிறிதுநேரம் ஆறுதல் மொழிகளைப் பேசிவிட்டுப்போய் மற்ற மூவரையும் அழைத்து ‘இனி நம் நண்பரிடத்தில் இவ்வாராய்ச்சியை நிறுத்திக்கொள்ளல் வேண்டும். உருக்கத்தோடும் நினைவு முனைப்போடும் நாம் பல்முறையிற் றனித்தனியே சென்று சொல்லிய சொற்கள் அவரை மிகவுங் கடுமையான நோயில் அமிழ்த்திவிட்டன. இனிநாம் முன்முறைகளிற்போலவே தனித்தனியே சென்று அவர் அந்நோயினின் [illegible] முன்னிருந்த நன்னிலைமைக்கு வரும்படி செய்தல்

வேண்டும்.' என்று வற்புறுத்திக் கூறினார். எல்லாரும் அதற்கு இசைபவே, நாளாவதாகச்சென்ற இவரே திரும்பவும் மறு நாட் காலையில் அந்தண்பரிடஞ்சென்று அவரைக் கண்டவுடன் முகமலர்ச்சி யுடையவராய், 'நண்பரே, நேற்று இருந்ததை விடத் தாங்கள் இன்றைக்குச் செவ்வையாகக் காணப்படுகின்றீர்களே. மருந்துகளிற் றீராத இந்நோய் ஏதோ இறைவனருளால் தீர்வதுபோற் றோன்றுகின்றது. தாங்கள் மிக நல்லவர்களாயும் ஐயனிடத்தில் அன்புடையவர்களாயும் இருத்தலால், ஆண்டவனே தங்களுக்கு வந்தநோயைத் தனது பேரருளால் நீக்கிவருகின்றார் என்று நம்புகின்றேன். இன்னுஞ் சில நாட்களில் தாங்கள் முற்றிலும் இந்நோய் தீர்ந்து நலமடைவீர்களென்பது திண்ணம்.' என்றுரைத்தார். இவ்வினிய சொற்களைக் கேட்டதும் அந்தண்பருள்ளம் கிளர்ச்சி அடைந்தது; தமக்கிருந்தநோய் ஏதோ ஆண்டவன் திருவருளால் தீர்ந்துவரத் துவங்கியிருப்பதாகவே நம்பத் தலைப்பட்டார். அன்று முதல் அவர்க்கிருந்த நோயும் உண்மையாகவே நீங்கப்போகலாயிற்று. அவரைப்போலவே மற்றைமூவரும் இடையிடையே சிற்சில நாட்கள் கழித்துத் தனித்தனியே சென்று அவர் முற்றிலும் நலம் அடைதற்குரிய சொற்களைக்கூறிவர, அந்தண்பரும் முழுதும் அதனால் நோய் நீங்கப்பெற்றாராய் முன்னிருந்த நிலைமையை அடைந்தனர். இங்ஙனங் கற்றோர் நால்வர் உண்மையாக ஆராய்ந்து பார்த்த இவ்வுண்மை நிகழ்ச்சியி லிருந்து பெறப்படுவது யாது? மனவுருக்கத்தாலும் அன்பினாலும் உந்தப்படும் நினைவுமுனைப்போடு கூறுஞ்சொற்கள் தீயனவாயின் அவை தீயபயனைத் தருதலும் நல்லனவாயின் அவை நல்லபயனைத் தருதலும் வழுவாமல் நடைபெறுமென்பதன்றோ! இவ்வுண்மையை நன்கு ஆராய்ந்து பார்ப்பவர்கள் நினைவு முனைப்பிற் சிறந்த கற்றவர்க்கும், நினைவு முனைப்பினும் கருத்தொருமைப் பாட்டினும் மன அடக்கத்தினும் உறைத்திருக்குந் தவவொழுக்கம் உடையார்க்கும் உள்ளம் வருந்தத் தக்கதேதும் செய்யார். தம்மை மனம்வருந்தச்செய்த செல்வர்கள் செல்வங்கெட்டுக் கிளைஞரோடு அழியுமாறு அறம்பாடிய புலவர்களைப்பற்றியும், தமக்குத் தீதுசெய்த அரசரும் பிறரும்



தமது மேனிலையிழந்து துயர்உழக்குமாறு வசைகூறிய அருந்தவத்தோரைப்பற்றியும் நாம் கற்றுங்கேட்டும் அறிந்திருக்கின்றனம் அல்லமோ? இதுபற்றியன்றே

"ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணிற் றவத்தான் வரும்"

என்றுதெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரும் அருளிச்செய்தனர். அகலிகை கல்லைப்போல மெய்ம்மறந்துகிடக்கச் சபித்தாப்பின்னர் அவட்கு இரங்கி இராமபிரான் திருவடிகள் தீண்டினவுடனே அது நீங்கி அவள் உணர்வுபெற்றுஎழ அருளிய கௌதம முனிவராம் அருந்தவத்தோர் ஆற்றலை அறியாரும் உளரோ! மான்வடிவு கொண்டு தம் காதலியைப் புணர்ந்துகொண்டிருந்த முனிவரை அறியாமல் எய்த பாண்டுமன்னன் தன்மனைவியைப் புணர்ந்தால் தலைவெடித்திறக்க வென்று அம்முனிவர் சபித்ததும், அங்ஙனமே அச்சாபம் நிறைவேறினதும் அறியாதார் யாவர்! ஒருமரத்தின்கீழ்த் தவம்புரிந்த ஒரு முனிவர்மேல் மரத்தில் இவர்ந்து மண்ணைச்சொரிந்த துரியோதனமன்னனை அவர் சினந்துபார்த்து அவன் உண்ணவெடுக்குஞ் சோறு புழுவாகக் கடவதென்று சபித்தமையும், பின்னர் அவன் தான்செய்தபிழையைப் பொறுக்கும்படி அவர் காலின்வீழ்ந்துவணங்கிக் குறையிரக்க அவரும் அவனுக்கிரங்கிக் கண்ணனால் அது தீருமென்றருளிச் செய்தமையும் எவரும் உணர்வர். இந்நிகழ்ச்சிகளால் நினைவு முனைப்பு உடையோர்க்குள்ள மனவலிமையின் மாட்சி நன்குவிளங்கும். அதுநிற்க.

இனி, நினைவை முனைக்கநிறுத்துதற்குச் சில எளியவழிகள் காட்டுதும். முதலில் நினைவை ஒன்றில் நிலைத்துநிற்கும்படி செய்து சிலநாட்பழகிக்கொள்ளல்வேண்டும். அப்பழக்கம் வலியபிறகுதான் நினைவை முனைக்கநிறுத்துதற்கு முயலல்வேண்டும். காலைப்பொழுதிலேனும் மாலைப்பொழுதிலேனும் ஒரு கடற்கரையிலாயினும், அல்லதோர் ஏரிக்கரையிலாயினும், அல்லதோர் ஆற்றங்கரையிலாயினும் தனியே போயிருந்து அங்குள்ள காட்சியைக் கண்ணாற் கருத்தோடுகண்டு, பிறகு கண்ணை மூடிக்கொண்டு மனத்தால் அக்காட்சியைக் கண்டபடியே நினைவுக்குக் கொண்டுவந்து தெளிவுபெறக் காண்க. கண்ணாற்கண்

டதற்கும் பிறகு நினைவாற் பார்ப்பதற்கும் சிறிதும் வேறுபாடு இல்லாதபடி அவ்வளவு பொருத்தமாக அவையிரண்டும் இருத்தல்வேண்டும். இவ்வாறு உயிரில்லாத பருப்பொருட்டோற்றங்களை முதலிற் றெளிவாய் நினைவில் அமைத்துக்கொள்ளப் பழகியபின், இடம்பெயர்ந்துசெல்லாத நிலையுயிர்களான புற்பூண்டுகள் மரஞ்செடி கொடிகள் சிலவற்றின் வடிவங்களையும் அமைப்புகளையும் உற்றுநோக்கி, நோக்கியபடியே நினைவிற் பதித்துக்கொள்க. இங்ஙனம் பழகியபின், இடம்பெயர்ந்து செல்லும் உயிர்களைக் கருத்தாய்ப்பார்த்து நினைத்தவொன்றை அவைசெய்யுமாறு நினைவை முனைக்கநிறுத்தி முயலத்தொடங்கல் வேண்டும். ஏனென்றால் உயிர்அற்ற பருப்பொருள்களையும், உயிருடையவேனும் இருந்தஇடத்தைவிட்டு அசையாத நிலையுயிர்களையும் நினைவில் அமைத்துக்கொள்ளலாமே யொழிய, அவை ஒன்று செய்யுமாறு நினைவால்ஏவி முடிக்கலாகாது. நினைவை முனைக்கநிறுத்தலென்பது நினைக்கப்பட்டவுயிர் நினைத்தபடி ஒன்றைச் செய்யுமாறு ஏவும் முயற்சியேயாதலால், அஃது அங்கு மிங்குமாய்ச் செல்லும் உயிர்களிடத்து மட்டுமேதான் நிறைவேறுவதாகுமென்று கடைப்பிடிக்க. ஆடு மாடு குதிரை பூனை நாய் முதலான சிற்றுயிர்கள் ஒருவர் தாம்நினைத்தபடி ஒன்றைச்செய்யுமாறு நினைவினாலேயே ஏவுதல்வேண்டும். முதலில் அவற்றுள் ஒன்றை நன்றாக நினைவினிலே கொண்டுவந்தபின், அஃது ஏதேனும் ஒன்றைச் செய்யும்படி நன்றாக உறுத்து முனைப்போடு நினைத்து ஏவுக. முதலிற் சில நாட்கள்வரையில் நினைத்தபடி ஆகாவிடினும், இம்முறையை ஊக்கங்குன்றாமல் இடைவிடாது பழகப்பழகச் சிலநாட்கழித்து நினைத்தபடி அவ்வுயிர்கள் செய்வதைக் காணலாம். குதிரையேறித் தனியனாய்ச்சென்ற ஒருவன் கள்வர்களாலாவது பகைவர்களாலாவது வளைத்துக்கொள்ளப்பட்ட இடரானநேரத்தில், வெள்ளம் பெருகிவரும் யாற்றையோ தாண்டுதற்கு அரிதாய்க்குறுக்கிட்ட வேலியையோ கடக்கவேண்டுமென்று முறுகிய எண்ணத்தோடு தனது குதிரையைச் செலுத்த, மற்றைக்காலங்களில் அவற்றைக் கடக்கமாட்டாத அக்குதிரை அப்போது அவனது நினைவின் ஆற்றலால் உந்தப்பட்டுக் காற்றினுங்கடுகி அவ்யாற்றையும் வேலியையும் கடந்து



போய்த் தன் றலைவன்உயிரைத் தப்புவித்த அரியசெயல்களைக் கற்றுங் கேட்டும் அறிந்திருக்கின்றேம். தன்றலைவனது நினைவின் குறிப்பை அறிவதில் நாய் மிகச் சிறந்ததென்பதற்கு உண்மையாய் நிகழ்ந்த பல நிகழ்ச்சிகள் உண்டு. ஆகையால், தன்னோடு பழகும் சிற்றுயிர்களிடத்து ஒருவன் தனது நினைவை முனைக்க நிறுத்தக் கற்றுக்கொள்ளுதல் மிகவும் நலமுடையதாகும் என்க.

இவ்வாறு சிற்றுயிர்களிடத்துப் பழகிக்கொண்ட பின்னர், தம்போல் அறிவுடைய மக்களிடத்து ஒருவர் இம்முறையைப் பயன்படுத்தத் துவங்கல்வேண்டும். முதலில், தம்மோடுஉடன் வாழும் மனைவிமக்கள் உடன்பிறந்தார் உறவினர் முதலாயினாரிடத்து இதனைச் செய்துபார்த்தல் நலம். ஏனெனில், உடம்பின் தொடர்புடைய இவர் தமக்குள் இயற்கையாய் அன்புதோன்றி, இவர்களின் உயிரையும் உயிரின் நினைவையும் ஒருதொடர்புபட இணைத்தலால், இவர் தமக்குள் ஒருவர் மற்றொருவரைத் தம் நினைவின்படி செய்யுமாறு நினைவால்ஏவுதல் எளிது. ஒவ்வொன்றுக்கும் சொல்லைச் சொல்லி ஒருவரை ஏவிக்கொண்டிருப்பது ஏவுவோர்க்குப் பெருவருத்தந் தருவதோடு, கேட்போர்க்கும் நுண்ணறிவு உண்டாகாமற் செய்யும். ஆதலால், முதன்மையானவைகளைமட்டும் சிற்சில நேரங்களிற் சொல்லால் ஏவி, மற்றவைகளைக் கண் கை கால்முதலிய உறுப்புகளின் அசைவாலும், நினைவு முனைப்பாலும், குறிப்பாலும் ஏவுதல்வேண்டும். இங்ஙனஞ் செய்தலால், ஏவுகின்றவர்க்கு வருத்தங்குறைந்து நினைவின் ஆற்றல் மிகுந்துபடுவதோடு, ஏவல் கேட்பார்க்கும் மனவொருமையும் நுண்ணுணர்வும் மேன்மேல்வளரும். ஒருவீட்டின் றலைவர் விடாய்கொண்டு பருகுதற்குத் தண்ணீர்வேண்டிய போது, உடனே அங்குள்ள மற்றொருவனைக் கூவியழைத்து அது கொண்டுவரும்படி சொல்லுதல் ஆகாது. எவரை அது கொண்டுவருமாறு விரும்புகின்றனரோ அவரைத் தமது நினைவினாலேயே வருவித்து அதனை எடுத்துவருமாறு நினைவினாலேயே ஏவுக. முதலிற் சிலநாளிலேயே இங்ஙனம் நினைத்தபடி நடவாமையைப்பற்றி மனந்தளரல் ஆகாது. விடாப்பிடியாய் இங்ஙனமே பழகப் பழகச் சில பலநாட்களில் நினைவினாலேயே தாம்

வேண்டுவனவெல்லாம் வலியுறுத்தலாம். அது பொருந்தாததாயினும், விடாய்த்துப் பருகுதற்கு நீர் கொண்டுவரும்படி நினைக்குமவர் நினைத்தபடி அந்நேரத்தில் நடவாவிட்டால் என்செய்வதெனின்; துவக்கத்திற் சிலநொடி நேரம் நினைந்தபின், கை தட்டிக் குறிப்பிக்க, அதனாலும் நடவாதாயின் பின் சொற்சொல்லி ஏவுக. இவ்வாறெல்லாம் முறைப்பாகச்செய்து பழகுவோர்க்குத் தாம் நினைத்தபடியெல்லாம் பிறரை ஏவி நடத்துவது எளிதிலே நிறைவேறும் என்க.

---

## கண்ணுங் கருத்தும்

இனி, ஒருவர் உள்ளத்தில் நிகழும் நினைவுகள் அவ்வளவும் அவர்கள் கண்களிற் குறிப்பாய்ப் புலப்பட்டு நிற்குமென்பது எல்லார்க்கும் உடன்பாடாம். இயற்கையாகவே கண்ணோடு சேர்ந்துநிற்குங் கருத்தை, ஒன்றில் முயலுங்கால் அதனோடு பிரியாமற் சேர்த்துவைத்து முயலுதலே நன்றாகும். கண்ணுங் கருத்தும் ஒன்றுபட்டு நிற்கப் பெறுவார்க்குப் பிறரைத் தம்வழியில் நிற்கச் செய்துகொள்ளல் எளிது. கருத்தோடு கூடாத பார்வை எவ்வகைப்பயனையுந் தராது. பிறரைத் தம்வழியில் இருப்பதற்கு முயல்வோர், நினைவைப் பலப்படுபாய்ச் செலுத்தி, அது அதனோடு நோக்கு ஒன்றுகூடி நிற்குமாறு பழகுதல் வேண்டும். இதற்குச் சில முறைகளை இங்கெடுத்துக் காட்டுகின்றாம்.

ஒருகண்ணாடியை எதிரே வைத்து அதிற் றோன்றுந் தமது முகத்தில் தம்முடைய கண்களையே ஒருவர் சிலநேரம் இமைகொட்டாமற் பார்க்கத் துவங்குக. முதற் பழக்கத்திலேயே நெடுநேரம் இமைகொட்டாமல் நோக்கினால் கண்களுக்கு நோயுண்டாம் ஆதலால், அதுவராமைப்பொருட்டு, வருத்தத்திற்கு இடமின்றி இமையாமற் பார்க்கக்கூடுமட்டும் பார்க்க. அங்ஙனம் பார்க்குங்கால் கருத்து வேறொன்றிலுஞ் செல்லாமல் தமக்கெதிரே கண்ணாடியிற் றோன்றுந் தம்முடைய கண்களின்பாற் பதிந்தே நிற்றல் வேண்டும். அதனோடு கூட, இப்பயிற்சியின் வெற்றிக் கிடைக்கைப்பற்றி நினைதல் நன்று. இவ்வாறு



கண்ணுங் கருத்தும் ஒருவழிப்பட நோக்கியபின், இரண்டு கைகளையும் நீட்டி விரல்களை இறுக்கமாய்மூடிப் பின் சடுதியிலே அவ்விரல்களை விரித்துக் கையை உதறிவிட்டு இப்புறம் வருக. இங்ஙனஞ்செய்தலால் மூளையில்வந்துகூடிய உயிரின் நுட்ப ஆற்றல் கையிற்பரவிப், பிறகு வேண்டும்போது கையின்வழியாகப் பயன்படுத்துதற்கு முன்வந்துநிற்கும். கண்ணாடியிற் றோன்றுந் தனதுவடிவத்திற் கண்களை உற்றுநோக்கநோக்க மூளையில் அறிவாற்றல் மிகுதியாய்க்கிளைக்கும். இந்தவகையாக, முதலில் கால்நாழிகையும் பிறகு காலேயரைக்கால் நாழிகையும், அதன்பின் அரைநாழிகையும், அதன்பிறகு அரையேயரைக் கால் நாழிகையும், அதன்பின் முக்கால் நாழிகையும், கடைசியாய் ஒருநாழிகையுமாக நாளுக்குநாள் இங்ஙனம் உற்றுப்பார்க்குங் கால அளவையினை ஏற்றிக்கொண்டே போதல்வேண்டும். ஒருநாழிகைநேரம் கண் இமையாமற் பார்க்கக்கூடிய ஆற்றல் வந்தால், கண்ணின் நரம்புகளும் மூளையும் வலிமேவுற்று நுட்ப ஆற்றல் நிறைந்தனவாயிருக்கும்.

இவ்வாற்றல் வந்து கூடியபின் கண்ணாடியிற் பார்த்தலை விடுத்துத், தமக்கு எதிரே வருபவர்களின் கண்களை அவர் ஐயங்கொள்ளாதபடி உற்றுப்பார்த்தற்குச் சிறிது சிறிதாய்ப் பழக்கஞ்செய்துவரல் வேண்டும். பிறர் கண்களை உற்றுப்பார்க்கும்போது, என் இங்ஙனம் இவர்பார்க்கின்றார் என்று அவர் உன்னிக்கும்படி வந்தால் உடனே பார்வையை அப்புறந் திருப்பிக்கொள்ளல்வேண்டும். பிறர்க்கு ஐயமும் அருவருப்பும் வருத்தமும் வாராதபடி உற்றுப்பார்க்குந் திறத்தைப் பழகிக்கொண்டால் பிறர்தம் நினைவுகளின் தன்மையை அறியும் அறிவு வாய்ப்பதோடு, அவரை அடக்கியாளும் வன்மையும் வரலாகும். தம்மையொத்த மக்களைத் தாம் உற்றுப்பார்க்கையில் அவர்க்கு நன்மை வரவேண்டுமென்றும், தாம் அவர்க்கு நன்மைசெய்யும் ஆற்றலுடையாராகவேண்டுமென்றும் நினைத்தல் அல்லாமல், அவர்க்குத் தீமைசெய்ய நினைத்தலாகாது. நன்மையான ஓர் அரும்பொருள் அவரால் ஆகவேண்டியிருந்தால் அதனை அவர் முடித்துத் தருவாராகவென்று உன்னிப்பாய் நினைக்க. இங்ஙனம் முயன்று வருதற்கு இடையிடையே நினைந்தபடி ஆகாமல் தவறுகள்

நேருமானாலும், அடிக்கடித் தவிடாமுயற்சியாய்ப் பழகப்பழகப் பின் நினைத்தபடியெல்லாம் ஆம் என்பதிலையமாம். ஒருவிதை யை நிலத்தில் ஊன்றினால் அது தன்றன்மைக்கு ஏற்பச் சில நாளிலோ அன்றிப் பலநாளிலோ முளைத்தலைக் காண்கின்றோம். ஊன்றியவிதை ஊன்றியவுடனே பயன்றரவில்லையே யென்று வருந்துவார் உளரோ. அதுபோலவே, ஓர் அரியமுயற்சியைத் தொடங்கினவர் தொடங்கினவப்பொழுதே அதன்பயனை எதிர் பார்த்தல் ஆகாது; அது தன்பயனைத் தருதற்குரியகாலம் வரு மென்றும், தாமெடுத்த முயற்சி தவறாதென்றும் உறுதியாய் நினைந்திருத்தலே செயற்பாலது.

இனிப் பிறர்கண்களை உற்றுநோக்கத் தெரிந்து பழகியபின், கண்களுக்குமேற் புருவங்களுக்கு நடுவிலே அவ்வாறு நோக்கப் பழகுதல் இன்றியமையாது செயற்பாலதாம். என்னென்றால், புருவங்களுக்கு நடுவே உட்செல்லும் இடைவெளியிலே உயிரின் அறிவு எல்லார்க்கும் முனைத்து விளங்குகின்றது. அவ்விடத்தை உற்றுநோக்குதலால் நோக்குவாருயிரும் நோக்கப்படுவாருயி ரும் ஒன்றுபட்டு இணங்குகின்றன. இவ்விருவரில் எவருடைய உயிர் புனிதமாய் அறிவும் ஆற்றலும் மிக்கதாயிருக்கின்றதோ, அவ்வுயிர் மற்றையுயிரைத் தன் நினைவின்வழிப் படுத்தும் ஆற்ற லுடையதாகும். கண்களில் உள்ளும் புருவத்திடையிலும் மின்ன லு முனைப்போடு நோக்கப்பழகினவர்களது பார்வைக்குக் கொடிய விலங்குகளும் கொடியபாம்புகளும் மிக அஞ்சுவ. முரட்டுக் குதிரைகளையும், புலி கரடி சிங்கம் கரும்பாம்பு முதலியவை களையும் பழக்குவோர் இத்தக்கல்வியில் தேர்ச்சிபெற்றவர்களா யிருக்கின்றார்கள். எவர்க்கும் அடங்காத அவற்றை அடக்கச்செல் கையில் அவர்கள் அவற்றின் கண்களையேனும் புருவங்களின் இடையினையேனும் இமையாமற் பார்த்துக்கொண்டு அவற்றின் அருகிற் செல்லுதலையும், அவை அவர்க்கு ஏதுந் தீங்குசெய்ய மாட்டாமல் அவர்முன்னிலையில் அடங்கியொடுங்கி நிற்றலையும் கண்டறிவார்க்கு யாங்கூறும் இவ்வுண்மை நன்கு விளங்கும். வலி மிக்க விலங்குகளை அடக்கச்செல்பவன் உற்றுநோக்குதலுடன் நினை வையும் சிறிதும் சிதறவிடலாகாது. நினைவு சிதறி அச்சங்கொள் வனாயின் உடனே அவன் அவற்றிற்கு இரையாதல் திண்ணம்.



ஆதலால், புருவத்திடைவெளியில் உற்றுநோக்குகையில் அந் சாவுன்னத்தை அந்நோக்கத்தில் முனைக்கநிறுத்தும் பழக்கம் மிகவுஞ் செவ்வையாய்ப் பழகிக்கொள்ளற் பாலதொன்றாம் என்க.

இனி, ஒருவர் தமக்கு எதிர்முகமாகவன்றிப் பின் முதுகு காட்டியிருந்தாலும் சென்றாலும், அவரை உற்றுப்பார்த்துத் தம் நினைவின்வழி நிறுத்தல் யாங்ஙனங் கூடுமென்றால், அவரது பிடரிக்குமேல் தலையின் அடியின் நடுவை உற்றுநோக்குத லாலேயென்று உணர்ந்துகொள்க. எதனாலெனின், புருவங்க ளுக்கு இடையிலிருந்து நேரே ஊடுருவிச்செல்லும் உயிர்நிலை தலையின் பிற்புறத்தே பிடரிக்குச் சிறிது மேலேசென்று முடி கின்றது. முன்னே புருவங்களின் இடையே நோக்கும் நோக்கம் நோக்கப்பட்ட உயிரைச் சென்று பற்றுதல்போலவே, பின்னே பிடரிக்குமேற் றலையினடியை உற்றுநோக்கும் நோக்கமும் அவ் வுயிரைச் சென்றுபற்றும். இவ்வுண்மையைப் பின்வருமாறு ஆராய்ந்து கண்டுகொள்க. ஓர் அவைக்களத்திலேனும், அல்ல தொரு திருவிழாக் கூட்டத்திலேனும் தமக்குமுன்னே முதுகு திருப்பியிருக்கும் பலரில் ஒருவரைக் குறிப்பிட்டுக்கொண்டு அவரது பின்றலையின் அடியைச் சிறிதுநேரம் உற்றுநோக்கி, அவ் வண்ணம் நோக்குகையில் அவர் தம்மைத் திரும்பிப்பார்க்கக் கட வரென்று முனைப்புடன் நினைக்க. அவ்வாறு நினைத்த சிலநொடிப் பொழுதிலெல்லாம் அவர் தம்மையறியாமலே உடன்திரும்பிப் பார்ப்பர். இதுகொண்டு உயிரின் இருப்பிடம் பின்றலையின் அடிப் புறத்தும் உண்டென்பது தெளியப்படும். அங்ஙனமாயினும் அதன் அறிவு முன்நின்று விளங்கும்வாயில்கள் முகத்தின்கண் ணே அமைக்கப்பட்டிருத்தலால் பின்றலையின் அடியை உற்று நோக்கி அதனை அறிவிக்கலாயினும் அது திரும்பி முகத்தின் நோக்கின் வழியாகவே ஏதும் செய்யக்கூடியதாகும். இதனாலன்றோ பின் றலைப்புறத்தை நோக்குதற்கு அங்கிருந்தே அசைவு ஏதும்செய் யாமல் முகத்தைத் திருப்பிப்பார்க்கின்றது.

இன்னும், ஒருவரை யோகநித்திரை என்னும் அறிதுயி லிற் பழக்கவேண்டுகின்ற மற்றொருவர், அவர்க்கு அதிலே எளி தில் வருமா என்பதை ஆராய்ந்து பார்க்கும்பொருட்டு, அவர்

தம் பின்புறப்புறத்தே தம் கைகளைச் செல்லவைத்துச் சிறிது நேரம் அவ்விடத்தை உற்றுநோக்கியபடியா யிருந்து, பின் பயான் இக்கைகளை தாம்கலயினின்றும் இப்புறம் எடுக்கையில் என் கைகளோடுகூடவே அதுகுதலே பின்வர, நீரும் பின்சாய்வீர்" என்று இரண்டு மூன்றுமுறை சொல்லிப், பிறகு மெல்லத் தம்கைகளை இப்புறம் எடுக்கையில், அவர்தலை பின்சாய்ந்து அம்மற்றவர் கைகளோடு வர அவருடம்பும் பின்சாய்வதைப் பார்க்கலாம்.

இவ்வாறே நன்றாய் ஒருவனுடைய அவருடம்பில் முனைத்துநிற்கும் இடங்களை அறிந்து, அவ்விடங்களை உற்றுப்பார்க்கும் முகத்தால் அவரது உயிரோட்டத்தை ஒன்றுபட்டு அவரைத் தம்நினைவின்வழி நிறுத்தக் கற்றுக்கொண்டவர், பின்னர் அவருடம்பின் எந்த இடத்தையும் எந்த உறுப்பையும் உற்றுநோக்கி அங்கேயுள்ள ஒரு நோயைப் போக்கவும் அல்லது அங்கில்லாத ஒரு நோயை வருவிக்கவும் செய்யலாம். பார்வையொளியாற் காட்டலாம். ஒருவர்க்குக் கையில் ஒருகட்டிப் புண்ணிருந்தால், அதனைத் தீர்க்கப்புகுதவர் முதலில் அவர் தம் கண்களை உற்றுநோக்கி அவரது உயிர் தம்நினைவின்வழிப்படுத்தவேண்டும் என்று உறுதிகொண்டு, அதன்பின் நோயுள்ள அவ்விடத்தை உற்றுநோக்கி 'இவ்விடத்தில் உனக்கு நோய் சிறிதும் இல்லை. இவ்விடம் இனிச் செம்மையாய் இருக்கின்றது' என்றுசொல்லி அவ்விடத்தைத் தடவினால் அடவே அந்துன்பம் நோய் விலகிப்போகும். இனி, அவரை முன்போலவே கண்ணுறக்கவைத்து, பலவகைகளிற் பழக்கியுள்ள உற்றுநோக்கியபின், அவர் தம் கையின் புறத்தே ஒரு செப்புச் சல்லியை வைத்து 'இது நெருப்பிலிட்டுக் காய்ச்சிப் பழுக்கக்காய்ச்சிய காசு; இதோ இந்த இடத்திற்பட்டு உன்கையின் இந்த இடத்தைச் சுட்டுப் புண்ணாக்கிவிடும்' என்று சொல்லிவைத்தால், அது நெருப்பிற் பழுக்கக்காய்ச்சப்படாத வெறுஞ்சல்லியாயிருந்தும், அவர்கையின் அவ்விடத்தைப் புண்ணாக்கக் காணலாம். இவ்வாறாய்ச் சிலர் காட்டும் காட்சிகளை நெடுநாள் பார்த்திருக்கின்றேம். இக்கலையிலே தேர்ந்த நம் நண்பர்சிலரும் மற்றையோர் பலர்போல் இங்ஙனம் செய்து காட்டியதனை யாம் நேரில் இருந்து கண்டிருக்கின்றேம்.



ஒருகால் நமது நண்பர் ஒருவர் இதன் உண்மையைத் தாம் தெரிந்துகொள்ளும்பொருட்டு நம்மிடம் வந்தனர். அவரை எமக்குநேரே நிறுத்தி அவர் கண்களை இமையாமற் சிறிதுநேரம் உற்றுநோக்கியபின் அவரது இடது கையைப் பிடித்துத் திருப்பி அவரது புறங்கையின் ஓரிடத்தைத் தொட்டு 'இந்த இடத்தில் உனக்கு இரத்தவோட்டம் இல்லை, இங்கே ஊசியைக் குத்துவேன், உனக்கு நோவுண்டாகாது, வலியிராது' என்றுசொல்லிக்கொண்டே அவ்விடத்தைத் தொட்டுக்காட்டிப் பிறகு ஒரு குண்டூசியை அவ்விடத்தில் குத்திச் செருகிவிட்டேம். யாம் சொல்லியபடியே அவர்க்கு அங்கே சிறிதும் நோவுண்டாகவில்லை. அங்கே அவ்வூசி தமது தசையில் நுழைக்கப்பட்டதைப் பார்த்தும் அது நுழைக்கப்படாதவரைப்போலவே யிருந்தார். அதன்பிற் சிறிதுநேரஞ் சென்று அவ்வூசியைப் பிடுங்கிவிட்டு அங்கு ஒருநோவும் தழும்பும் இராவென்றேன். யாம் சொல்லியபடியே அவர்க்கு அங்கே நோவுமில்லை தழும்புமில்லை. சிறுதெய்வங்களை வணங்குவோர் சிலர் நாவில் வேலலகு ஏற்றியும், உடம்பெங்கும் கூரிய அலகுகள் ஏற்றியும் செல்வதைப் பார்த்திருக்கின்றோம். இவை அத்தெய்வங்களின் உதவியால் நடக்கின்றன என்றுவர் பேதையர். ஆனால், உண்மையாக ஆராய்ந்து பார்க்குமிடத்து, அலகுகுத்திக்கொள்ளும் அவர்கள் ஒருவகையான அறிதுயிலிற் செலுத்தப் பட்டவர்களாய் அப்போதிருக்கலால், எளிதில் உடம்பெங்கும் ஊசிகோக்கப் பெற்றும் அவற்றால் சிறிதும் நோவுறாதவர்களாயிருக்கின்றனர். அறிதுயிலின் இயல்பு இன்னதென்று அறியாத அவர்கள் அதிற் செலுத்தப்பட்டாரென்று கூறுதல் எவ்வாறெனின்; அவர்க்கு முதலிலிருந்தே தெய்வத்தின்வலிவால் அலகுகுத்திக்கொள் வைராக்கியவன்மை உண்டாகின்றது. தெய்வத்தின்பொருட்டு அலகுகுத்திக்கொள்வப்போவதால் தமக்கு அதனால் நோய் உண்டாகாதென்ற எண்ணமும் அதனோடு உடன்நிகழ்கின்றது. இவற்றோடு, அவர்க்கு அலகுகுத்துதற்குமுன் பூசாரி அவர் பக்கத்திலிருந்து உடுக்கு அடித்துக்கொண்டு ஒரேவகையான பாட்டை ஒரேசுரத்தில் ஓயாமற்பாடுகின்றார். அந்நேரத்திற் பலர் அவரைச் சூழ்ந்துகொண்டு அவரை ஊக்கப்படுத்தி அலகு

கலையெடுத்துரைக்குமொன்றாக அமைந்துவிடுகின்றனர். அப்பொழுது அவர் தம்மை மறந்து ஒருவகையான அறிதுயிலில் இருக்கின்றார் என்பதனை இவ்வாராய்ச்சியுடையோர் அவர்பக்கத்திலிருந்தாற் செவ்வையாகக் கண்டு தெளியலாம். அங்ஙனம் அவர் அறிதுயிலில் இருக்கும் நிலையினையே கற்றறிவில்லார் 'அவர்மேல் தெய்வம் ஏறியிருக்கின்றது' எனவும், 'அவர் ஆவேசங்கொண்டிருக்கின்றார்' எனவும், 'அவர் இப்போது மருளாளியாயிருக்கின்றார்' எனவும் கூறுகின்றனர்.

இவ்வறிதுயிலின் வண்மையை நன்கறிந்த ஆங்கிலப்புலவர்களிலும் ஆங்கிலமருத்துவர்களிலும் இதனை நோய்தீர்க்கும் சிறந்த ஒரு கருவியாகக் கைபற்றுகின்றனர். பல்வகையான பிணிகளுக்குள்ளானவர்கட்குப் பற்பல மருந்துகள் முதலில் அவர்களையுற்றுநோக்கும் முறைத்தால் அவரை அறிதுயிலில் இருக்கவைத்துப் பிறகு அவர்க்குப் பிணிதரும் நோயாம் பயன்படாதபடிகளைப் பிடுங்கிவிடுகின்றனர். இன்னும் பிள்ளைகருவுயிர்த்தல் முதலான கொடுநோய்க்கட்டிகளை அறுக்கவேண்டினால், அப்போதும் அவர்களை அங்ஙனமே அறிதுயிலிற் போகச்செய்து அவர்க்குச் சிறிதும் நோய்தோன்றாமலே அவற்றை அறுத்தெடுத்து அக்கொடுநோயைத் தீர்க்கின்றனர். இவையெல்லாம் நோய்கொண்டார் அந்நோயின் துன்பந் தெரியாமலே அதனினின்றும் விடுவிக்கப்படுதற்கு இது பெருதவிபுரிதலால் இதனை மருத்துவர் ஒவ்வொருவருந் தெரிந்துகொண்டு இதனைக் கையாள்வருவாரானால் இதனாற் பலருக்கும் உலகத்தில் உண்டாகும் நன்மை இவ்வளவென்று சொல்லொணாது. கண்ணுறக்கத்துக்கு முனைந்து நிற்றல் அறிதுயிலை வருவித்தல் இப்படிப்பட்டவர்கள், இவ்வெல்லாவற்றையும் ஒன்றுசேர்த்துத் தொகுத்துப் பழகுதற்கு ஏற்றவாறு கைக்கொள்ளுதல் வேண்டும்.

## தடவுதல்

இனி, மேற்கூறிய முறைக்கு உதவியாகச் செய்யவேண்டும் மற்றொரு முறையினை இங்கெடுத்துக்காட்டுவாம். மேற்சொல்லிய முறைகளைப் பழகும்போதெல்லாம், கையும் இடையிடையே அவற்றிற்கு உதவியாயிருந்து தடவுதலை உன்னித்திருக்கலாம். நினைக்கும் நினைவின்வகைகளை வெளியே கட்புலனுக்குத் தெரியும்படி தெளிவாய்விளக்கிக்காட்டுங் கருவியாவது கையேயாகும். நினைவுகளைச் சொல்லினால் அறிவித்துக்காட்டும்வரையினும், எழுத்தினால் அறிவிக்குங்கையே சிறந்ததாக இருக்கின்றது. * என்னையென்றால், வாயாற் பேசப்படுஞ் சொற்கள் பேசியவுடனே அழிந்துபோவனவாகும். கையாலெழுதப்படும் எழுத்துக்களோ அங்ஙனம் அழிந்துபோகாமல் நிலைபெற்று நின்று ஒருவர் நினைவின்றிறங்களை என்றும் அறிவிக்க வல்லனவாய் இருக்கின்றன. எவ்வளவுதான் முயன்றாலும் நினைவை ஒருவழிப்படுத்த முடியாதவர்களும் கையில் எழுதுகோலெடுத்து எழுதத்துவங்கினால் உடனே அவர்களின் நினைவு ஒருமுகப்பட்டு நின்று கையை இயக்கி எழுத்துக்களின் வாயிலாய்த் தன்னைப் புலப்படுத்துகின்றது. ஆகவே, ஒருவனது நினைவின் இயல்பைப் புலப்படுத்துதற்கட் கைக்கு உள்ள ஆற்றல் பிறிதுளதற்கும் இல்லையென்பது தோன்றுகின்றது. ஓவியக்காரன் ஓவியம்வரையுமிடத்தும், கொற்றச்சன் சந்தனக்கட்டையிலோ யானைமருப்பிலோ சலவைக்கல்லிலோ ஓர் உருவினை இயற்கை பிறழாமல் செதுக்கித் திறம்பட அமைக்குமிடத்தும், இசைவல்லான் ஓர் யாழினையோ, அல்லதொரு புல்லாங்குழலினையோ இயக்கிக் கல்லும் உருகப் பட்டமரமுந் தளிர்க்க இனிய இசைகளை எழுப்புமிடத்தும், ஒருநல்லிசைப்புலவன் ஓர் அரும்பெரும்பாட்டினை அமைத்து எழுதுமிடத்தும் அவரவர் கையின் கருத்தும் எவ்வளவு நினைந்து எவ்வளவு உழைப்பட்டு நிற்கின்றன! என்பதை எவரும் அறிந்துகொள்ளலாம். இங்ஙனமெல்லாம் நினைவின் ஆற்றலை வெளியே புலப்படச்செய்யும் வன்மை கையின்கண் இயல்பாக அமைந்திருத்தலைக் கண்டுகொள்க.

கலையெடுத்து ஒவ்வொன்றாக அவருடம்பில் ஏற்றுகின்றனர். அப்பொழுது அவர் தம்மைமறந்து ஒருவகையான அறிதுயிலில் இருக்கின்றார் என்பதனை இவ்வாராய்ச்சியுடையோர் அவர்பக்கத்திலிருந்தாற் செவ்வையாகக் கண்டு தெளியலாம். அங்ஙனம் அவர் அறிதுயிலில் இருக்கும் நிலையினைப் பற்றறிவில்லாதார் 'அவர்மேல் தெய்வம் ஏறியிருக்கின்றது' எனவும், 'அவர் ஆவேசங்கொண்டிருக்கின்றார்' எனவும், 'அவர் இப்போது மருளாளியாயிருக்கின்றார்' எனவும் கூறுகின்றனர்.

இவ்வறிதுயிலின் உண்மையை நன்கறிந்த ஆங்கிலநாட்டுப் புலவர்சிலரும் ஆங்கிலமருத்துவர்சிலரும் இதனை நோய்நீக்குதற்குச் சிறந்த ஒருகருவியாகக் கைப்பற்றுகின்றனர். பல்லுவலியால் மிகவருந்துகின்றவர்கட்குப் பற்பிடுங்கும் மருத்துவர் முதலில் அவர்கண்களை உற்றுநோக்கும் முகத்தால் அவரை அறிதுயிலில் இருக்கவைத்துப் பிறகு அவர்க்குச் சிறிதும் நோவாமலே பயன்படாதபற்களைப் பிடுங்கிவிடுகின்றனர். இன்னும் பிளவை கழலை முதலான கொடுநோய்க்கட்டிகளை அறுக்கவேண்டினால், அப்போதும் அவர்களை அங்ஙனமே அறிதுயிலிற் போகச்செய்து அவர்க்குச் சிறிதும் நோய்தெரியாமலே அவற்றை அறுத்தெடுத்து அக்கொடுநோயைத் தீர்க்கின்றனர். இவ்வாறெல்லாம் நோய்கொண்டோர் அந்நோயின் துன்பந் தெரியாமலே அதனினின்றும் விடுவிக்கப்படுதற்கு இது பேருதவிபுரிதலால் இதனை மருத்துவர் யாவரும் ஒவ்வொருவருந் தெரிந்துபழகி இதனைக் கையாள்வராயின் இதனாற் பலநலங்கள் உலகத்தில் உண்டாமென்று திண்ணமாய்ச் சொல்லலாம். கண்ணுறங்குதலும் ஒன்றைக் கூர்ந்து நினைந்து நின்றன்றிப் பிறிதொன்றும் அறிதுயிலை வருவித்தல் இயலாதாகையால், இவ்விரண்டனையும் ஒன்று சேர்த்துப் பிடித்தற்குப் பழக்கத்தினைச் செவ்வையாய்ப் பழகிக்கொள்ளுதல் வேண்டும்.

## தடவுதல்

இனி, மேற்கூறிய முறைக்கு உதவியாகச் செய்யவேண்டும் மற்றொருமுறையினை இங்கெடுத்துக்காட்டுவாம். மேற்சொல்லிய முறைகளைப் பழகும்போதெல்லாம், இடையிடையே அவற்றிற்கு உதவியாயிருந்து தடவுதலை உன்னித்திருக்கலாம்; நினைக்கும் நினைவின்வகைகளை வெளியே கட்புலனுக்குத்தெரியும்படி தெளிவாய்விளக்கிக்காட்டுங் கருவியாவது கையேயாகும். நினைவுகளைச் சொல்லினால் அறிவித்துக்காட்டும் வாயைவிட, எழுத்தினால் அறிவிக்குங் கையே சிறந்ததாக இருக்கின்றது. எங்ஙனமென்றால், வாயாற்பேசப்படுஞ் சொற்கள் பேசியவுடனே அழிந்துபோவனவாகும். கையாலெழுதப்படும் எழுத்துக்களோ அங்ஙனம் அழிந்துபோகாமல் நிலைபெற்றுநின்று ஒருவர் நினைவின்றிறங்களை ஏனோரும் அறிவிக்க வல்லனவாய் இருக்கின்றன. எவ்வளவுதான் முயன்றாலும் நினைவை ஒருவழிப்படுத்த முடியாதவர்களும் கையில் எழுதுகோலெடுத்து எழுதத்துவங்கினால் உடனே அவர்களின் நினைவு ஒருமுகப்பட்டுநின்று கையையியக்கி எழுத்துக்களின் வாயிலாய்த் தன்னைப் புலப்படுத்துகின்றது. ஆகவே, ஒருவனது நினைவின் இயல்பைப் புலப்படுத்துதற்குக் கைக்கு உள்ள ஆற்றல் பிறிதொன்றற்கும் இல்லையென்பது தோன்றுகின்றது. ஓவியக்காரன் ஓவியம்வரையுமிடத்தும், கொற்றச்சன் சந்தனக்கட்டையிலோ யானைக்கொம்பிலோ சலவைக்கல்லிலோ ஓர் உருவினை இயற்கைவழுவாமல் செதுக்கித் திறம்பட அமைக்குமிடத்தும், இசைவல்லான் ஓர் யாழினையோ அல்லதொரு புல்லாங்குழலினையோ இயக்கிக் கல்லும் உருகப் பட்டமரமுந் தளிர்க்க இனிய இசைகளை எழுப்புமிடத்தும், ஒரு நல்லிசைப்புலவன் ஓர் அரும் பெரும்பாட்டினை அமைக்குமிடத்தும் அவரவர்தம் கையும் கருத்தும் எவ்வளவு பிணைந்து எவ்வளவு ஒற்றுமைப்பட்டு நிற்கின்றன! என்பதை எவரும் அறிந்துகொள்ளலாம். இங்ஙனமெல்லாம் நினைவின் ஆற்றலை வெளியே புலப்படச்செய்யும் வன்மை கையின்கண் இயல்பாக அமைந்திருத்தலைக் கண்டுகொள்க.

இல்லாததனாலேன்றால், நினைவுகள் பிறத்தற்கு இடமுங்கருவியுமாயிருக்கும் மூளையைக் கையோடு தொடர்புபடுத்துதற்குச் சிறந்தபலநரம்புகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்நரம்புகளின் தொடர்ச்சியால் மூளையிற்பிறந்த நினைவுகள் தம்மை வெளியேபுலனாக்குதற்குரிய அசைவுகளைக் கையிற் றோற்றுவிக்கின்றன. எனவே, ஒருவரை அவரது நன்மையின் பொருட்டு அறிதுயிலிற் போகச்செய்யவேண்டும் மற்றொருவர் தமதுநினைவைக் கண்களின்வழியே செலுத்துதலோடு கையின்வழியும் செலுத்தி அவர்தம் உயிர் முனைத்துநிற்கும் இடங்களைக் கடவுதற்கும் பழகிக்கொள்ளல்வேண்டும்.

இனி, இக்கடவுதல்தான் முதன்மையான இடங்களைக் கடவுதலும், உடம்பைமுன்னும்பின்னும் நீளத்தடவுதலும், கீழ்நோக்கித்தடவுதலும், மேல்நோக்கித்தடவுதலும், என நால்வகைப்படும். இவற்றுள் முதன்மையான இடங்களைத் தடவுதலாவது உயிர் முனைத்துநிற்கும் நெற்றி தலையுச்சி பின்றலை பிடர் முதுகு முதலியவற்றை மெல்ல இனிதாய்த் தடவுதலாகும். அறிதுயிலிற்செலுத்தப்படுவோர்க்கு இவ்விடங்கள் அல்லாமல் வேறிடங்களில் நோயிருக்குமாயின் அவைகளையும் அங்ஙனமே தடவுதல்வேண்டும்; இவையெல்லாம் இடங்களைத்தடவுதல் என்றவகுப்பில் அடங்கும்.

இனி, நீளத்தடவுதலாவது உச்சந்தலையிலிருந்து துவங்கிக்கீழ் இறங்கிக் கால்விரல்களின் நுனிவரையில் முன்னாவது பின்னாவது தடவுதல். இஃது ஆழமான அறிதுயில் வருவிப்பதற்கும், நோய்நீக்குவதற்கும் பெரிதும்பயன்படுவது.

இனிக், கீழ்நோக்கித்தடவுதலாவது அறிதுயில்வருவித்தற்பொருட்டு உள்ளங்கைகளைக் கீழ்நோக்கியபடியாய்த்தடவுவது.

இனி, மேல்நோக்கித் தடவுதலாவது உள்ளங்கைகளை மேன்முகமாய்த்திருப்பி அடியினின்று மேல்நோக்கிச் செலுத்துவது. இஃது அறிதுயிலிற் சென்றோரை அதனினின்றும் எழுப்பி இயற்கைநினைவுநிகழும் விழிப்புநிலைக்குக் கொண்டுவருதற்பொருட்டுச் செய்யப்படுவதாகும்.

இங்ஙனம் நான்குவகையாகக் கடவுதலைப் ஒருவரைத் தொட்டாயினும் தொடாமலாயினும் செய்யலாம். சிலரைத்



தொட்டால் அவர்க்குக் கூச்சமும் அருவருப்பும் இயற்கையாய் உண்டாகுமாதலால், அத்தகையோரைத் தொட்டுத்தடவுதல் கூடாது; தொட்டுத்தடவினால் அவர்க்கு அறிதுயிலும் வாராமற் போம். ஆகையால், அவ்வியல்பினரைத் தொடாமலே அவருடம்பிற்கு ஒருவிரற்கடை அல்லது இரண்டுவிரற்கடை எட்டியநிலையில் கைகளைநிறுத்தித் தொடாமல் தடவுதலே நலம்பயப்பதாகும். வேறுசிலர், தடவுதலாற்கூச்சமும் அருவருப்புங்கொள்ளாமல் ஒருவகை இன்பத்தில் விருப்புடையராய் இருப்பாராகலின், அவ்வியல்பினரைத் தொட்டு இனிதாய் மெல்லெனத்தடவுதலே நலமுடைத்து. இவ்விருவேறுவகையான தடவுதல்களையும் அவரவர் இயல்பறிந்து செய்தல் பெரிதும் நினைவுகூரற்பாலதாகும்.

இனித் தொட்டேனும் தொடாமலேனும் கீழ்நோக்கித்தடவுங்கால் இரண்டுகைகளையும் நீட்டி உள்ளங்கை கீழ்நோக்கத் திருப்பி விரல்கள் ஒன்றோடொன்றுபடாமல் சிறிது அகன்றுநிற்கநேராகநிறுத்திக் தடவுதல்வேண்டும். விரல்கள் ஒன்றோடொன்று சேர்ந்து நெருங்கிநிற்குமானால், விரல்களிற்பாயும் நினைவின் மின்னாற்றல் தடைப்பட்டுநின்று நன்கு செல்லாது. விரல்களைத்தனித்தனியே சிறிது அகலநிறுத்தினால் ஒவ்வொன்றன்வழியாகவும் அவ்வாற்றல் செவ்வனேஓடிக் கருதியபயனை விரைவிற்பயப்பிக்கும். இங்ஙனம் கையின்விரல்களை நிறுத்துகையிற் கையின்கடைவிரலாகியசிறுவிரல் ஏனைமூன்றுவிரல்களை விட்டுமிக விலகிநிற்றல்வேண்டும் என்றும், அச்சிறுவிரல் நஞ்சுடையதென்றும், அதனால் அது பிறர்மேற்படுதலாகாதென்றும் இத்தலைப்புலமையிற் றேர்ந்த ஒருசாரார் கூறுகின்றனர். ஆனால், இவர்கூற்றின் உண்மையை ஆராய்ந்து உறுதிகட்டுதற்குரிய வழிகாணாமையின் அதனைப்பற்றி முடிவுசொல்லல் இயலாது. ஆயினும், அதனுண்மை தெரியவரும் வரையில், அதிற்பழகியோர் கூறுமாறு சிறுவிரலை அகலநிறுத்தித் தடவுதலே நன்று.

இனித், தலையிலிருந்து தடவிக்கொண்டு கீழ் இறங்கினவுடன் விரல்களைஉதறிவிட்டுத் திரும்பவுங் கைகளை மேல்உயர்த்துங்கால், கவிழ்த்தகைகளைக் கவிழ்த்தபடியாகவேனும் உள்ளங்

கைகளை மேலே திருப்பியபடியாகவேனும் உயர்த்தாமல், பக்கச்சாய்வாய் மேல் உயர்த்தி, மறுபடியுந் தலையிலிருந்து கீழ் நோக்கித் தடவுதல் வேண்டும். தடவிக்கொண்டு கீழ் இறங்கியவுடன் விரல்களை உதறுவது எதற்காகவென்றால், விரல் நுனிகளிலிருந்து பாயும் மின் ஆற்றலைத் தொடர்பறுத்தற்கும், பெயர்த்துத் தலையிலிருந்து தடவுங்கால் அது புதிதாய்ப் பாயும் பொருட்டும், அறிதுயிலிற் செலுத்தப்படுவோர்க்குள்ள மின் ஆற்றல் தம்முடைய விரல்களில் ஒட்டாதிருத்தற் பொருட்டுமேயாம். மேலும், ஒரு நோய்கொண்டார்க்கு அந்நோய் தீர்க்கும் பொருட்டு இங்ஙனந் தடவுமிடத்தும் கீழ் இறங்கியவுடன் விரல்களை உதறிவிட்டு மறுபடியும் மேலிருந்து தடவுதலால் அவர்க்குள்ள நோய் இவர்க்கு ஒட்டாது. ஆகையால், ஒவ்வொரு முறையும் விரல்களை உதறும் முறையைத் தவறாமற் செய்து பழக்கமாக்கிக்கொள்க. இது அல்லாமலும், குவித்த கைகளை மேலே திருப்பி உயர்த்தினால் அறிதுயிலிற் சென்றவர் உடனே விழித்தெழக் கூடுமாதலால், அவ்வகையே பக்கச்சாய்வாய் அவர்தம் இரண்டு விலாப்புறங்களின் ஓரமாகவே மேல் உயர்த்துதல் வேண்டும். கைகள் கவிழ்ந்தபடியாய் இருக்குங்கால் மின் ஆற்றல் விரல் நுனிகளிலிருந்து கீழ் நோக்கிப் பாயும்; அவ்வாறன்றி அவை மேன்முகமாய்த் திரும்பியிருக்குங்கால் அது மேல் நோக்கிப் பாயும். ஆதலால், அவையிரண்டும் உன்னிப்பாய்ச் செய்யவேண்டும். இவ்வாறெல்லாஞ் செய்து ஒருவரை அறிதுயிலிற் போக்கிப் பின் அவரை எழுப்பிவிட்டுப் போம்போதும் தம் கைகளை நல்ல தண்ணீர் கொண்டு செவ்வையாய்க் கழுவிவிடல் வேண்டும்.

இனி, மேற்சொல்லியவாறு கீழ் நோக்கித் தடவுதலும் மேல் நோக்கித் தடவுதலும் முறையே ஒருவர்க்கு அறிதுயிலை விளைத்தலும், பின்னர் அதனின்று அவரை எழுப்புதலும் யாங்ஙனம் செய்கின்றனவெனின்; அவ்வியல்பினையும் ஒரு சிறிது விளக்குவாம். எல்லாப் பிறவிகளிடத்தும் உயிர் உடம்போடு கூடியிருக்குங்கால், அஃது அவ்வுடம்பில் இளைப்பாறத் தங்கிக்கொள்ளும் இடமும், தான் இளைப்புத் தீர்ந்தபின் அறிவோடிருந்து முயற்சிசெய்யும் இடமும் என உயிர்க்கு இருவகை இடங்கள் இருக்கின்றன. கழுத்தின் கீழிருந்து குறிவரையிற் செல்லும்



நாடியின் பகுதியே உயிர் துயின்று இளைப்பாறும் இடமாம்; கழுத்தின் மேல் தலைவரையில் அமைந்திருக்கும் அந்நாடியின் மேற்பகுதியான மூளையே அஃது அறிவோடிருந்து முயற்சிசெய்யும் இடமாம். அது தலையைப் பற்றிக்கொண்டு அறிவும் முயற்சியும் உடையதாய் நிற்குங்கால், தலையும் உடலும் நிமிர்ந்தபடியாயிருக்கும். அறிவும் முயற்சியும் விட்டு அது கீழ் இறங்கித் துயில்கொள்ளப் போகுங்கால் தலையும் உடலும் நிமிர்ந்திருக்கமாட்டாமல் நிலைத்த கிடையாய்க் கிடந்துவிடுகின்றன. உடம்பின் இவ்விருவகை நிலைகளும் நம்மனோர் கண்கட்கெதிரே நாடோறும் நிகழக்காண்டலால், உயிர் தலையைவிட்டு இறங்கித் துயிலுமிடம் கழுத்தின் கீழ் நெஞ்சிலிருந்து குறியின் அடிவரையில் ஆமென்று நாம் உணரப்பெறுகின்றேம். ஒருவரை அறிதுயிலிற் செலுத்தவேண்டும் மற்றொருவர் அவரது தலையிலிருந்து தம்கைகளாற் கீழ் நோக்கித் தடவிய அளவிலே செலுத்துவோர் நினைவின் வழியே விரல்களிலிருந்து பாயும் மின் ஆற்றல் அவர்தம் உயிரை மூளையினின்று பிரித்துக் கீழே நெஞ்சத்தின்கட் டுயில்கொள்ளுமாறு உய்க்கின்றது. செலுத்துவோர் அதன்பின் தம் கைகளை மேன்முகமாய்த் திருப்பி அவரை எழுப்பும்பொருட்டு மேல் நோக்கித் தடவவே அறிதுயிலிற் சென்றோர் உயிர் நெஞ்சத்தைவிட்டு மேலேறி மூளையைப் பற்றிக்கொண்டு விழித்து அறிவும் முயற்சியும் உடையதாகின்றது. இக்காரணத்தால் உடம்புடன் கூடியிருக்கும் உயிர்க்கு இருப்பிடம் கழுத்தின் கீழ்க் குறிவரையிற் செல்லும் நாடியின் அகமே என்று ஆராய்ந்துரைக்கின்றார். உண்மை இவ்வாறாகலின், தடவுதலுக்கும் அறிதுயிலுக்குமுள்ள இயைபு இதுகொண்டு நன்குதெளியற்பாலதாம் என்க.

இனி, இடங்களைத் தடவுதல் என்றவகையில் மற்றொரு முறையும் பழகிக்கொள்ளற்பாலதாயிருத்தலின் அதனையுஞ் சிறிது விளக்குவாம். உடம்பின்கண் ஏதேனும் ஓர் இடத்திற்கு மின் ஆற்றல் ஏற்றல் வேண்டுமேனும், அல்லது அங்குள்ளதொன்றினை இழுத்து நோய் அகற்ற வேண்டுமேனும் அவ்விடத்திற்கு நேரே விரல்களை ஒன்றோடொன்றுபடாமல் நேராகப்பிடித்து, அவ்விடத்தின்மேற் படாமல் அவற்றை ஒருவிரற்கடை அகல

திருத்தி, நினைவை ஒருமுகப்படுத்தி, அதனால் உண்டாகும் மின் ஆற்றலை அவ்விரல் நுனிகளின் வழியே பாயச்செய்க. அங்ஙனஞ்செய்யும்போது அவ்விரல்களை நடுக்குறாது அசைத்தல் வேண்டும். அப்படிச்செய்தலால் அதனின் ஆற்றல் அவ்விரல் நுனிகளில் இறங்கிச் செல்வதனையாயும். இதனோடு, அவ்விரல் நுனிகளின் முகமாய் மேலிருந்து கீழ்நோக்கியபடியாய் வாயால் காற்றை ஊதுதலும் செய்தால் அதனின் ஆற்றல் மிகுந்துசெல்வதனையாயும் அறிந்திடுக.

மேற்சொல்லியவாறு நோயுற்றிடத்தில் கைவிரல்களை நேரே பிடித்து அங்குமின் ஆற்றலைப் பாய்ச்சியபின், அப்பால் மெல்லியதுணியை நான்காய் மடித்து அவ்விடத்தில் வைத்து, அதன்மேல் வாயை வைத்து வெதுவெதுப்பு உண்டாகும்படி ஊதுதல் வேண்டும். இங்ஙனஞ்செய்தால், அவ்விடத்திற் பாய்ந்த மின் ஆற்றல் அதில் நன்றாய்ப் பரவி அந்நோயினை விரைவில் அகற்றுமென்க.

---

## கட்டுரைத்தல்

---

இனி, நோய்களைப் போக்கும் முறைகள் எல்லாவற்றிற்கும் இன்றியமையா தொரு துணையாக அவற்றோடு சேர்த்துச் சொல்லப்பாலதாகிய மற்றோர் இன்றியமையாத முறையும் இருக்கின்றது. அறிவுமிக்க நுட்பவோர் அதனைக் குறித்து நேர்த்தியான சொற்களைத் திறமையாய் எடுத்துச் சொல்லப்படுதல் பெரிதும் மேலான டற்பாலதொன்றாம். அறிவாளிகள் சொல்வோர்க்கு அதனை வழங்கிப் போர் இம்முறையைக் கற்றுக்கொடுக்கப்படுவதே கட்டுரைத்தல்* என்று அறிதல் வேண்டும். ஒருவர் சொல்லும் சொற்களால் பிணியுற்றோர் நோய் திருப்பித் திருப்பிச் சொன்னால் அச்சொல் வடிவாய் நிற்கும் அச்சொல்லின்படியே அவர் நடப்பர். இவ்வுண்மையை மனநூல் ஆராய்ச்சியில் தேர்ந்த மேற்புல அறிஞர்கள் செவ்வையாய் ஆய்ந்து பார்த்து நிலைநாட்டியிருக்கின்றார்கள். தலைநோயால் வருந்தும் ஒருவர்க்கு அந்நோயை நீக்கவேண்டின், அவரை ஓய்வாக ஒரு

* Suggestion.



சாய்மானக் குறிச்சியில் அமரவைத்து, நோய் நீக்கும் தம்முடைய கண்களை அவர் உற்றுப்பார்த்தபடியாய்த் தாம் சொல்லும் சொற்களைக் கருத்தாய்க் கேட்கும்படி கற்பித்து 'உமக்குத் தலைவலி இல்லை, அது நும்மைவிட்டு அகன்றது, இப்போது நீர் செம்மையாய் இருக்கின்றீர், உமது மண்டை நல்லநிலைமையிலிருக்கின்றது.' என்று இச்சொற்றொடர்களைத் திருப்பித் திருப்பிச் சொல்லிச் சிறிதுநேரஞ் சென்றபின் அவரது தலையைத் தொட்டுத் தடவி எழுப்பிவிட்டால், அவர்க்கிருந்த அம்மண்டைவலி உடனே விலகிப்போதலைப் பார்க்கலாம். நினைவின் வன்மையோடு ஒருவர் அல்லது பலர் அடுத்தடுத்துச்சொல்லுஞ் சொற்கள் பொய்யாய்இருப்பினும் அவை பிறரால் நம்பப்படுதலை முன்னேயும் விளக்கியிருக்கின்றேம். உலகத்திற் பெரும்பாலும் நடைபெறுஞ் செயல்களெல்லாம் பிறர் சொல்லுவனவற்றை நம்புதலாலேயே நிகழ்கின்றன. பிறர்பால் நம்பிக்கையை வருவித்தற் கேற்ற வல்லமை கிடைத்து—அவர் கற்றவராயிருப்பினும் கல்லாதவராயிருப்பினும் அறிவுடையராயினும் அதிற் குறைந்தவராயினும், அமைந்திருந்தமையால் அவர் சொல்லியசொற்களை சட்டமாக நம்பப்பட்டு அவற்றின் பயனுள செயல்களே எங்குங்காணப்படுகின்றன. பயன்றரும் சொற்களை நம்பி நடத்தல் பழுதன்று. பயன்றராதவற்றையும் தீங்கு பயப்பனவற்றையும் நம்பிநடத்தலே குற்றமாம். கட்டுரைத்துச் சொல்லவல்ல சிலரால் பரவிய ஒரு தீதானநம்பிக்கையைத் தொலைப்பதென்றால் அஃது எளிதில் முடிவதில்லை. ஒருகால் ஒருபெண்பிள்ளையின் பற்களிலொன்று ஆட்டங்கொடுத்து அவட்கு மிகுந்தநோவை உண்டுபண்ணிற்று. பல்மருத்துவத்தில் தேர்ந்த ஒருவரிடத்தில் அவள் அதனைச் சென்றுகாட்ட, அவர் அந்தப் பல்லைப்பிடுங்கிவிடத் தீர்மானித்து, அதனைத்தெரிவித்தால் அவள் அதற்கு இசையாள் என்பதைத் தெரிந்துகொண்டு, அவளை அறிதுயிலிற் போகச்செய்து நோவுதெரியாமல் அதனைப்பிடுங்கி எடுத்துவிட்டார். பிறகு அவளையும்எழுப்பிவிட்டு உண்மையைச் சொல்லாமல் 'இனி உங்கட்குப் பல்வலி இராது' என்றுமட்டும் சொல்லி அவளை அனுப்பினர். அவளும் வீடுசென்று இரண்டு மூன்றுநாட் கழிந்தபின் கண்ணாடியில் தன் வாயைத்திறந்து

பார்க்க அங்கே வலியுண்டானபக்கத்தில் ஒருபல்லைக் காணாள் ஆயினாள். அதன்மேல் அருகிலிருந்த ஒருவர்க்கு அதனைத் தெரிவிக்க, அவர் உண்மை தெரிந்துகொள்ளாமல் 'அட்டங் கண்டபல்லை நீ உணவெடுக்கும்போது உணவோடு சேர்த்து விழுங்கியிருக்கவேண்டும். அப்படி விழுங்கியிருந்தால் அது வயிற்றுவலியை உண்டுபண்ணுமே!' என்றுகூறினார். அவ்வாறுசொல்லியசொற்களை அவள் உண்மையென்றுநம்பிய சிறிதுநேரத்திலெல்லாம், அவள் தன்வயிற்றில் நோயுண்டாகக்கண்டாள். அவள் பின்னும்பின்னும் அந்நம்பிக்கையால் அயரப்படவே அவளுக்கு வயிற்றுவலி மிகுதிப்பட்டு எந்தமருந்தினும் தீராதாய் அவளைத் துன்புறுத்தலாயிற்று. கடைசியாய்ப் பல்வலிதீர்த்த மருத்துவரையே வருவித்து அவர்க்கு அந்நோயின் காரணத்தைத் தெரிவிப்ப, அவர் நகைத்து 'அம்மா பல்பிடுங்குவதைப்பற்றிச்சொன்னால் நீங்கள் உடன்படமாட்டீர்கள் என்று கண்டு, உங்களை ஒருவகையான தூக்கத்திற் போகச்செய்து, உங்களுக்கு நோய்தெரியாமல் அந்தப்பல்லை நானே பிடுங்கி வெளியே எறிந்துவிட்டேன்' என்றார். அதற்கு அந்தஅம்மை 'என் பல்லை நீங்கள் பிடுங்கியிருந்தால் எனக்கு அது தெரிந்திருக்குமே! எவ்வளவு தூக்கமாயிருந்தாலும், கொசுகு அல்லது மூட்டைப்பூச்சிகடித்தால் உடனே விழித்துக் கொள்கின்றேனே. அப்படியிருக்கப் பல்லைப்பிடுங்கியெறியும் வரையில் நான் அறிவுதெரியாமல் தூங்கியிருப்பேனோ! நீங்கள் சொல்வதை நான் நம்பக்கூடவில்லை. நான் உணவோடு சேர்த்துத்தான் அதனை விழுங்கியிருக்கவேண்டும்' என்றுமறுத்து உரைத்தாள். 'இல்லை அம்மா, நான்வருவித்த தூக்கம் எப்போதும் நீங்கள் தூங்குந்தூக்கம் அன்று. அது வேறுவகையிற் சேர்ந்தது. அதில் உங்களுக்கு நோயேதெரியாது' என்று பின்னுங்கூறினார். கூறியும் அவர் சொற்களில் அவட்கு நம்பிக்கை பிறக்கவில்லை. அதுகண்டு அந்தமருத்துவர் 'அப்படியானால் காலைவந்து உங்கள்வயிற்றை நன்றாய் ஆராய்ந்துபார்த்துச் சொல்லுகிறேன்' என்று சொல்லிப்போய் மற்றைநாட்காலையில் அவர் திரும்பிவந்து, அவள் வயிற்றை ஆராய்வதுபோல் பாசாங்குசெய்து பிறகு 'ஆம், வயிற்றில் அந்தப்பல் இருக்கிறதுபோலத்தான் அறிகின்றேன்' என்று



சொல்லிக் கக்குதற்கு மருந்துகொடுத்தார். அம்மருந்தை உட்கொண்ட சிறிதுநேரத்தில் அவள் வாயால் கக்கினாள். உடனே அவர் தமதுகையில் மறைத்துவைத்திருந்த ஒருபல்லை அவள் கக்கினமலத்தில் அவளுக்குத்தெரியாமல் இட்டுவைத்தார். பின்னர் அவளுக்குக் கக்கின களைப்புத் தீர்ந்தவுடனே, அவள் கக்கின மலத்தைக்காட்டி அதை ஆராய்ந்து பார்க்கச் செய்ததில் அதில் ஒருபல் அகப்பட்டது. அதனைக்கண்டபின் அம்மாது தான் விழுங்கின தனதுபல் வெளிவந்துவிட்டமையால் இனித் தனக்கு வயிற்றுநோய் இராது என்று நம்பி மகிழ்ந்தாள். அவள் நம்பியபடியே அவட்கு அந்நோயும் அன்றுமுதல் இல்லாதாயிற்று. இவ்வுண்மை நிகழ்ச்சியிலிருந்து பிறர் சொற்களில் வைக்கும் நம்பிக்கையின் ஆற்றல் இனிது விளங்காநிற்கும்.

இங்ஙனமே வலியுறுத்திச் சொல்லும் கட்டுரையால் நல்லோரைத் தீயோராக்குதலும் தீயோரை நல்லோராக்குதலுங் கூடும். ஆனதுபற்றித்தான் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார்

"மனநலன் நன்குடைய ராயினுஞ் சான்றோர்க்
கினநலன் ஏமாப் புடைத்து." என்று அருளிச்செய்தார்.

பட்டினத்தடிகளும்

"நல்லார் இணக்கமும் நின்பூசை நேசமும் ஞானமுமே
அல்லாது வேறு நிலையுளதோ." என்று அருளினார். ஆகலால், தாஞ் சேர்ந்துநின்றவர் சொற்கள் தம்மை எவ்வழியுந் திருப்புமாதலால் தீமையை விளைவிப்பார் கூட்டுறவு பெரிதும் அஞ்சி விடற்பாலதாம் என்க. அதுநிற்க.

அறிதுயிலைப் பிறரால் வருவிப்பவர்கள் தாஞ்சொல்லும் சொற்கள் அவர்க்கு எவ்வகையானுந் தீங்குபயவாமல் பாதுகாத்துச் சொல்லுதற்கு நிரம்பவுங் கருத்தாய்ப் பழகல்வேண்டும். ஏனென்றால், அறிதுயிலில் ஒருவர் அமர்ந்திருக்கும்போது அவருக்கு எதனைச்சொன்னாலும் உடனே அவர் அதன்படி செய்வர். ஓரோவொருகால் தப்பித்தவறித் தீதான ஒருசொல்லை அப்போது சொல்லிவிட்டால், உடனே அதனைமாற்றி நல்லதொன்றை அவர்க்குச் சொல்லல்வேண்டும்.

இனி, ஒன்றைக் கட்டுரைத்துச் சொல்லுங்கால் தாம் சொல்லுஞ் சொல் ஒவ்வொன்றிலுங் கருத்தைப் பதியவைத்து ஆழ்ந்த குரலில் அவற்றை நீட்டி மெல்லச் சொல்லல்வேண்டும். தூக்கத்தை ஒருவர்க்கு வருவித்தற்பொருட்டுத் 'தூக்கம்' என்னுஞ் சொல்லைச் சொல்லுங்கால் அச்சொல்லின்கண் உள்ள ஒவ்வோர் எழுத்தோசையையும் நீட்டித் 'தூ—க்—க—ம்' என்று ஆழ்ந்தகுரலில் விரைவாமற் சொல்லப் பழகிக்கொள்க. முதலிற் றூக்கத்தை வருவிக்கும்போது இங்ஙனம் ஆறுதலாய் நீட்டி மெல்லச் சொல்லவேண்டுவது கட்டாயமாகும்; ஆனால், அதனை நன்றாய் வருவித்தபின் இவ்வாறு சொல்லவேண்டுவதில்லை. எழுத்தோசைகளை ஒன்றுசேர்த்துச் சிறிது அழுத்தமாய்ப் பேசுவதே போதும். என்றாலும், எந்தச்சொல்லைச் சொன்னாலும் நினைவைச் சிதறவிடாது முனைந்துநிறுத்திப் பேசுதலே கருதியபயனைத் தருவதாகும் என்று கடைப்பிடிக்க.

## அறிதுயிலுக்கு ஏற்றகாலம்

இனி, அறிதுயில் வருவித்தற் கேற்ற பெரும்பொழுது சிறுபொழுதுகளைப் பற்றியும் சிறிது தெரிந்துகொள்ளல் வேண்டும். கடுவெயில் காயும் வேனிற்காலத்தின் உச்சிப் பகற்பொழுது அறிதுயிலை ஒருவர்பால் வருவித்தற்கு ஏற்றகாலம் அன்று. ஏனென்றால், அப்போது புழுக்கமும் வியர்வையும் களைப்பும் எவர்க்கும் உண்டாதல் இயற்கையாதலால், அறிதுயிலிற் செல்வோர்க்கும் அதில் அவரைச் செலுத்துவோர்க்கும் அயர்வு மிகுதியும் உண்டாம். அயர்வு வந்தபோது நினைவின்வலிமையும் உடம்பின்வலிமையும் சுருங்குவதால் அப்போது அதில் முயலுதல் ஒருகால் இருவர்க்குந் தீங்கினையும் பயக்கும். ஆதலால், அக்காலத்தில் அதுசெய்யற்க. ஆயினும், குளிர்ந்த சோலைகளின் இடையே வெயில்வெப்பம் தெரியாமல் சில்லென்றிருக்கும் உயர்ந்த மாளிகைவீடுகளிலானால், நண்பகற்காலத்திலும் அதனைச் செய்துபார்த்தல் பழுதாகாது. மிகவும் இடரான நோய்களை விரைந்து நீக்கவேண்டி வந்தக்கால், அப்போது உச்சிப்



பொழுதாயிருந்தாலும் அதனைச்செய்தல் குற்றமாகாது. எனினும், அத்தகைய நேரங்களிலுங்கூட அறிதுயில் வருவிப்போர் தமக்குக் களைப்பு உண்டாகாதபடி ஒழுங்குசெய்து கொள்ளல் நன்று.

மற்று, வேனிற்காலத்தின் காலைமாலைப் பொழுதுகளும், மழைகால பனிக்காலங்களின் எல்லாப் பொழுதுகளும் அறிதுயில் வருவித்தற்கு இசைவான காலங்களென்று அறிதல்வேண்டும். மேலும், உணவெடுத்தபின்னும், பசியாயிருக்கும்போதும் அறிதுயிலுக்கு ஏற்றகாலங்கள் அல்ல. அவ்விரண்டிற்கும் இடைப்பட்டகாலமே அதற்குப் பொருத்தமானதென்று அறிதல்வேண்டும். அதுவன்றியும், களைப்புங் கவலையுந் துன்பமுங் கொண்டிருக்குங்காலம் இருவர்க்கும் ஆகாதாகையால், அவைதீர்ந்து மனம் அமைதிபெற்று முயற்சிசெய்தற்கு ஏற்ற சுறுசுறுப்புள்ள நேரமே இருவரும் அதில் முனைந்து முயலுதற்குத் தக்கதென்றும் அறிதல்வேண்டும்.

## அறிதுயிலுக்கு ஏற்றவர்

அறிதுயிலிற் செல்லுதற்குரிய இசைவு எல்லாவுயிர்களிடத்தும் அமைந்திருப்பினும், மக்கள் சிலரிடத்து அதனைவருவிப்பது எளிதாகவும், வேறுசிலரிடத்து அதனை வருவிப்பது அரிதாகவுங் காணப்படுகின்றன. ஆதலால், பிறர்பால் இதனை வருவித்தற்கு முதன்முதற்பழகுவோர் எளிதாக அதனை வருவித்தற்கு ஏற்றவரைத் தெரிந்தெடுத்து. அதனை அவர்பாற் செய்துபார்த்துப் பழகுதல்வேண்டும். இங்ஙனம் பலகாற் பழகிப்பழகி வரப் பிறகு எத்தகையோரையும் அறிதுயிலிற்செலுத்தும் ஆற்றல் மிகுந்துவரும். ஓரிடத்திற் கூடியிருக்கும் ஓர் ஆயிரம்பேரை ஒருநொடிப்பொழுதில் அறிதுயிலிற் செலுத்தத்தக்க வலிமை வாய்ந்தவர்கள் அமெரிக்காதேயத்தில் இருக்கின்றனர். கூன் குருடு சப்பாணி முதலானவர்க்கெல்லாம் இவ்வறிதுயிலை வருவித்து அதன் உதவியால் அவர்க்குள்ள குறைபாடுகளை நீக்கும் ஆற்றல்மிக்கவர்களும் அந்நாட்டிலிருக்கின்றார்கள். ஆகையால்,

இதில் நன்றாய்ப் பழகி ஆற்றல் மிக்கவர்கள் வியக்கத்தக்க அரும் பெருஞ் செயல்களெல்லாம் எளிதிற் செய்ய வல்லவர்கள் என்று அறிந்துகொள்க. அங்ஙனமாயின் முதலில் எளிதாக அறிதுயிலிற் செல்லத்தக்கவர்களைத் தெரிந்தெடுக்குமாறு யாங்ஙனமென்றால், அதனையுஞ் சிறிது காட்டுதும்.

வசியப்படுத்தப் பெறுபவரை ஓரிடத்தில் வருவித்து முதலில் ஒருவரைத் தமக்கு எதிரே நிறுத்தி, அவர் தம் நெற்றிக்கு நேரே தம் கைகளை நீட்டி விரல்களைக் கவிழ்த்தபடியாய் நேராகப் பிடித்து அவர் தம் கண்களைச் சிறிது நேரம் உற்றுநோக்கியபடியாய்ப் பின்வருமாறு கூறுக: "இப்போது யான் என் கைகளை முன்னே இழுக்கும்போது என் கைபோனபடியே நீர் வருவீர். அங்ஙனம் வரக்கூடாதென்று நீர் முயன்றாலும் உம்மால் முடியாது, நான் விரும்புகிறபடியே நான் சொல்லுகிறபடியே நீர் என் கையோடு கூட முன்வரக் கடவீர்" என்று நாலைந்து முறை திருப்பித் திருப்பிச் சொல்லி, அறிதுயில் வருவிப்போர் நீட்டிய தமது கையை மெல்லமெல்ல முன்னே இழுத்துக்கொண்டு பின்னே செல்லச் செல்ல அறிதுயிலிற் செல்வோரும் அவர் கைபோனபடியே வருவர். அங்ஙனம் வரலாகாதென்று அவர் எண்ணினாலும் அவரால் முடியாமல் அக்கைபோனபடியே வரக்காணலாம். இவ்வாறு முன்னின்று அவரைத் தொடாமல் இழுப்பதுபோலவே, அவர்க்குப் பின்னின்று பின்றலைக்கு நேரே கையைப் பிடித்துப் பின்னுக்கு இழுப்பதுஞ் செய்யலாம்.

இவ்விரண்டுஞ் செய்துபார்த்தபிறகு அவர் கையை விறைக்கச் செய்வதாகிய மற்றொன்றுஞ் செய்துபார்த்தல் வேண்டும். அஃதெங்ஙனமென்றால்; அவரை நேரே நிறுத்தி அவரது வலது கையைத் தூக்கி நீட்டி அவர்தம் கண்களைச் சிறிது நேரம் உற்றுநோக்கியபின் தமது வலக்கையால் அவர் நீட்டிய கையைத் தோளிலிருந்து முன்கைவரையிற் றடவிக்கொண்டே பின்வருமாறு சொல்லுக: "உமது கை இப்போது மிகவும் விறைத்துப் போகின்றது. இதனை மடக்க உம்மால் ஆகாது. இது மரம்போல் விறைத்திருக்கும். நீர் எவ்வளவு முயன்றாலும் இதனை மடக்க உம்மால் ஆகாது." என்று திருப்பித் திருப்பிச் சொல்லிப் பின் அதனை அவர் மடக்குதற்கு முயலும்படி கேட்க. அங்ஙனமே



அதனை அவர் தாமாகவே மடக்குதற்கு முயன்றாலும் அது செய்ய முடியாமல் நிற்பர். அதன்பிறகு "இப்போது நீர் உமது கையை மடக்கக்கூடியவர் ஆவீர்" என்று சொல்லி அக் கையை மேல் நோக்கித் தடவுக. இங்ஙனஞ் சொல்லியபின் அவர் தமது கையை முன்போல் நீட்டவும் மடக்கவும் வல்லவர் ஆவர். இதுபோலவே, முன்னிழுக்கவும் பின்னிழுக்கவுஞ் செய்தபின் "இனி நீர் உமது விருப்பம்போல் நடப்பீர்" என்று சொல்லி மேல்நோக்கித் தடவுக. இங்ஙனஞ் செய்யாதொழியின், அவர் தமது நிலை மறந்தவராயிருத்தலுங் கூடும். இனிக் கையை மரக்கச்செய்ததுபோலவே காலையும் மரக்கச்செய்து பார்க்கலாம்.

இனி, மேற்சொல்லிய முறைபோலவே அவரது கண்ணை மூடச்செய்த பிறகு அவர் தாமே அவற்றைத் திறக்கமுடியாமல் இருக்குமாறும் செய்யலாம். எங்ஙனமென்றால், அவரை ஒரு நாற்காலியில் அமரச்செய்து அவர் கண்களைச் சிறிதுநேரம் உற்றுநோக்கியபின், அவர் கண்களைத் தமது கையால் மூடி, அவற்றின் இமைப்பைமேல் நாலைந்துமுறை தடவிப் பின்வருமாறு சொல்லுக: "இப்போது உம்முடைய கண்கள் இறுக்கமாய் மூடிக்கொள்கின்றன. இவற்றைத் திறக்க உம்மால் சிறிதும் இயலாது. நீர் திறக்கப்பார்ப்பீர், ஆனால், உம்மால் அது முடியாது." என்று சொல்லியபின் அவர் அவற்றைத் திறக்க முயன்றாலும் அது முடியாமலிருப்பர். பின்னர் "இனி நுமது விருப்பம்போல் நுங்கண்களைத் திறக்கவும் மூடவும் வல்லீராவீர்" என்று சொல்லி மேல் நோக்கிக் கைகளை வீசுக. இங்ஙனஞ் செய்தவுடனே அவர் தம் போதம் உள்ள நிலையினை அடைவர். இங்ஙனம் எடுத்துக்காட்டிய இந்த நான்கு முறையாலும் அறிதுயிலில் எளிதாகச் செல்லுதற்குரியவர்களைத் தெரிந்தெடுக்கலாம். இந்த முறைகளிற் சொன்னபடி நடக்கமாட்டாதவர்களுக்கு அதனை வருவித்தல் இடர்ப்பாடாதலால், துவக்கத்தில் அவர்பால் அறிதுயிலை வருவித்தற்கு முயலலாகாது. அறிதுயிலிற் செல்லுதற்கேற்ற தகுதியுடையவர்பால் அதனை வருவித்தற்கு நன்றாய்ப் பழகித் தேர்ந்தபின், எளிதில் அறிதுயிலிற் செல்லமாட்டாதவர்களையும் அதில் விரைவிற் செல்லுமாறு பண்ணலாம்.

# அறிதுயிலிற் செலுத்தும் முறைகள்

இனி, மேற்சொல்லிய முறைகளின்படி ஆராய்ந்து தெரிந்தெடுத்த ஒருவரை அறிதுயிலிற் செல்லுமாறு செய்தற்குரிய பலவகைப்பட்ட முறைகளையும் அடைவே எடுத்துக்காட்டி விளக்குவாம். அறிதுயிலிற் செல்வோரைத் துயில்வோர் என்றும், அதில் அவரைச் செலுத்துவோரைத் துயிற்றுவோர் என்றும் கூறுவேம். தெரிந்தெடுத்த ஒருவரை ஒரு நாற்காலியில் இருக்கச்செய்து, அவர் தமது மடிமேல் தமது இடதுகையை வைத்து அவ்விடதுகைமேல் வலதுகையை விரித்துவைத்து அதன் உள்ளங்கையிற்சிறியதொருவெள்ளிக்காசைவைத்து அதனை அவர் இமைகொட்டாமல் உற்றுப்பார்க்கும்படி செய்தல்வேண்டும். இவ்வாறு அவர் ஏழெட்டுநிமிஷங்கள் உற்றுநோக்கியபின், அவரது உச்சந்தலையிலிருந்து முழங்கால்வரையில் தொட்டாயினும் தொடாமலாயினும் கைகளாற் கீழ்நோக்கியபடியாய்ப் பலமுறைதடவித், துயிற்றுவோர் தமது இடதுகையின் பெருவிரலால் துயில்வோரின் நெற்றியிற் புருவத்தின் நடுவிடத்தையும் தமது வலக்கையின் பெருவிரலால் அவரது வலக்கையின் பெருவிரலையும் மெல்ல அழுத்துக. இங்ஙனஞ் செய்கையில், அவர் தம் கண்களை மூடிக்கொள்ளும்படி கற்பித்து ஆழ்ந்து நீண்டகுரலில் "தூக்—கம், அயர்ந்—த—தூக்—கம், நல்—ல—தூக்—கம்" என்று திருப்பித்திருப்பிச் சொல்லி, நினைவை ஒருமுகப்படுத்தி அவர் தூங்கவேண்டும் என்பதில் நிறுத்துக.

இனி மற்றொருமுறை: துயில்வோரை ஒரு நாற்காலியில் வசதியாக அமரச்செய்து, துயிற்றுவோர் அவரெதிரில் நின்றுகொண்டு தங்கண்களை அவர் உற்றுநோக்கும்படி செய்து, தாமும் அவரது புருவத்தின் நடுவில் தமதுபார்வையை நிறுத்துதல்வேண்டும். இங்ஙனம் இருவரும் ஐந்துநிமிஷங்கள் உற்றுநோக்கியபின், துயிற்றுவோர் துயில்வோர் பக்கத்தில் நின்றுகொண்டு தமது இடதுகையால் அவரது பின்றலையைத் தாங்கி வலதுகையை அவர்தம் நெற்றிமேல்வைத்துக் கண்களை மூடிக்கொள்ளும்படி அவர்க்குக்கற்பித்து, நெற்றியைக் கீழ்நோக்கி



மெல்லத் தடவிக்கொண்டே "தூக்கம், நல்-ல தூக்-கம், அயர்ந்த-தூக்கம், இனி-ய-தூக்கம்" என்று திருப்பித் திருப்பிச் சொல்லுக. இங்ஙனஞ் சிறிதுநேரஞ்சொல்லிய அளவிலே அவர் தூங்கத்துவங்குவர்.

இன்னும் ஒருமுறை: துயில்வோரை வசதியானதோர் இருக்கையில் அமரச்செய்து, காம்பிற்கோத்த ஒரு சிறுபளிங்குருண்டையைத் துயிற்றுவோர் தமது கையிற் பிடித்துக்கொண்டு, அதனைத் துயில்வோருடைய கண்களுக்கு நேரே காட்டி அவர் அதனை உற்றுப்பார்க்கும்படி கற்பிக்க. பின்னர் அவ்வுருண்டையை முதலில் மெல்ல வட்டமாய்ச் சுழற்றுக. அங்ஙனஞ் சுழற்றுங்கால் துயில்வோர்கண்கள் அவ்வுருண்டையைப் பார்க்கும்படியாகவே தாமுஞ் சுழலுதல்வேண்டும். துவக்கத்தில் மெதுவாகச்சுழற்றிய அதனை வரவர விசையாகச் சுழற்றுக. இவ்வாறு இரண்டுமூன்று நிமிஷங்கள் சுழற்றியபின், தாழ்ந்த ஒரேவகையான குரலில் "உன் கண் இறைப்பைகள் அலுப்படைகின்றன—உன் கண்கள் அயர்வடைகின்றன—அவை இமைக்கத்துவங்குகின்றன—இப்போது நீ தெளிவாய்ப் பார்க்கமுடியாது—உன் கண்ணிறைப்பைகள் மூடிக்கொள்கின்றன." என்றழுத்தி மெல்லச்சொல்லுக. இவ்வாறு பன்முறை திருப்பிச்சொன்னால் அவர் அயர்ந்து உறங்குவர். இங்ஙனந் திருப்பித்திருப்பிச்சொல்லியும் அவர் உறங்காவிட்டால், "உன் கண்களை இறுகமூடிக்கொண்டு, இப்போது நன்றாய் உறங்கு" என்று வற்புறுத்திச்சொல்லுக.

இன்னும் ஒருமுறை: துயில்வோர் ஒருவரைத் தக்கதோர் இருக்கையில் அமரச்செய்தாயினும், நீளப் படுக்கவைத்தாயினும், அவர்தம் இரண்டுகைகளிலும் உள்ள விரல்களில் நடுவிரலையும் மோதிரவிரலையும் துயிற்றுவோர் தம்முடைய கைகளின் மெல்லப்பற்றிக்கொண்டு தம்முடைய பெருவிரல்களால் அவருடைய அவ்விரல்நகத்தின் மேல்களை அழுத்துக. அங்ஙனம் அழுத்துவது செம்மையாயும் ஒரே தன்மையாயும் இருத்தல்வேண்டும். இவ்வாறழுத்துவதும் ஒவ்வொருவர்க்கு ஒவ்வொருவகையாய் இருத்தல்வேண்டும். எவ்வெவர்க்கு எவ்வெவ்வகையாய் அழுத்தல்வேண்டுமென்பதை நன்குதெரிய விரும்பினால், இப்புத்

கத்திற்கு மிக இசைந்த பல்லை முன்னே காட்டியபடி தெரிந்தெடுத்து அவருள் ஒவ்வொருவரையும் மெல்லவேனும் சிறிது அதிகவேனும் பலபடியாய் அழுத்திப்பார்த்து, எவர்க்கு எது நல்லதாயிருக்கின்றதென்று அவ்வவர் வாய்மொழியைக் கேட்டே அறிந்துகொள்க. இப்படியாகத் தெரிந்துகொண்டபின் எவரை எங்ஙனம் அழுத்துதல் வேண்டுமோ அவரை அங்ஙனம் அழுத்துக; இங்ஙனம் அவர்தம் நடுவிரல் நான்காம்விரல் நகவேர்களை அழுத்தின அளவிலே அவர்க்குத் தூக்கம் வரும்; இதிற் றூக்கம் வருவது தவக்கப்படுமானால், அவர் தங் கண்களை மூடித் "தூக்கம், தூ-க்-கம், அயர்-ந்-த-தூக்-கம், நல்-ல-தூ-க்-கம், இ-னிய-தூ-க்-கம்" என்று அழுந்த குரலில் தொடர்பாய் ஒரேவகையாய் மெல்லத் திருப்பித்திருப்பிச் சொல்லுக. இப்படிச்சொல்லிய சிறிது நேரத்திலெல்லாம் அவர் அயர்ந்து தூங்குவர்.

மற்றும் ஒருமுறை: துயில்வோரை இருக்கையில் அமரச் செய்தபின், அவரது முகத்தைச் சிறிது முன் இழுக்கக் கவிழச்செய்க. அவர் தம்கைகளைத் தம் முழங்கால்கள்மேல் வைத்துக்கொள்ளுமாறும், தம் அடிகளை ஒருங்கு சேர்த்துக் கொள்ளுமாறும் செய்க. பிறகு துயிற்றுவோர் அவர்க்கெதிரே யுள்ள இருக்கையில் இருக்கும்போது, இவர் தம்முடைய முழங்காலில் ஒன்று துயில்வோரின் முழங்கால்களுக்கு இடையிலே இருக்குமாறு அமர்தல் வேண்டும். இங்ஙனம் அமர்தல் முடியாத விடத்து, அவரைத் தொடாமலே சிறிது அகன்றும் இருக்கலாம். துயில்வோர் தொடத்தக்கவராயிருந்தால், அவரது நெற்றிமேல் வலதுகையை வைத்து, இடதுகையை அவரது வலதுதோள்மேல் வைக்கலாம்; தொடக்கூடாதவராயிருந்தால், அங்ஙனங் கைகளை அவர்மேல் வையாமலே நேர் இருந்து, அவருடைய கண்களை ஒரு சிறிது நேரம் உற்று நோக்குக. அங்ஙனம் நோக்கியபின் இருவர் உள்ளமும் ஒருமித்தமை தெரிந்துகொண்டு, அவர் தங்கண்களை மூடிக்கொள்ளுமாறு கற்பிக்க. இவ்வாறு ஒருமைப்பாடு உண்டானவுடனே, துயிற்றுவோர் சொல்லுமாறெல்லாம் துயில்வோர் செய்யத்தலைப்படுவர். இருவர்க்கும் இவ்வொருமைப்பாடு உண்டானதை உறுதி



யாய்த் தெரிந்துகொள்ள வேண்டுமானால், உள்ளத்தை ஓடாமல் நன்கு நிறுத்தி, மூடிக்கொண்ட அவர்தம் கண்களைத் தொட்டேனுந் தொடாமலேனுங் கீழ்நோக்கி நாலைந்துமுறை தடவிப், பிறகு அவரை நோக்கி: 'நீர் எவ்வளவு முயன்றாலும் இப்போது உம்முடைய கண்களை உம்மால் திறக்க முடியாது; திறக்க முயன்றுபாரும், உம்மால் அது முடியாது' என்று மூன்று நான்குமுறை திருப்பித்திருப்பிச் சொல்லுக, அவரும் கண்களைத் திறக்க முயல்வார்; ஆனால், அவர் துயிற்றுவோர் வயப்பட்டு நின்றால் அவரால் அவற்றைத் திறத்தல் முடியாது; அவர் வயப்பட்டு நில்லாவிட்டால் உடனே கண்களைத் திறந்துவிடுவார். இதுகொண்டு, அவர் துயிற்றுவோருடன் ஒருமித்து நிற்பதும் நில்லாததும் திட்டமாய் உணரப்படும். மூடியகண்களைத் திறவாமலிருக்கச் செய்தல்போலவே, தூக்கிய கையைக் கீழ்விழாமல் விறைத்து நிற்கவும், மூடியவாயைத் திறந்து பேசாமலிருக்கவும், இருந்த இடத்தைவிட்டு எழாமல் இருக்கவும், நீட்டியகாலை மடக்கமாட்டாமல் வைக்கவும், இன்னும் இவைபோல்வன பிறவுஞ்செய்து துயில்வோர் துயிற்றுவோருடன் ஒருமித்து நிற்பதும் நில்லாததும் எளிதில் உணரலாம். இவ்வாறு இம்முறைகளுட் பலவேனும் ஒன்றேனுஞ் செய்துபார்த்து அவர் ஒருமித்து நிற்றலை யறிந்தபின், இரண்டு கைவிரல்களையும் விரித்து நீட்டி, அவரது உச்சந்தலையிலிருந்து காற்கீழ்ப் பெருவிரல் முடியத் தொட்டேனுந் தொடாமலேனுங் கீழ்நோக்கித் தடவுக. இங்ஙனம் பத்துப் பன்னிரண்டுமுறை தடவியவுடன், துயிற்றுவோர் இளைப்படைந்தால் இடையிடையே நீளத்தடவாமல், முழங்கால் இடுப்பு மார்பு கண் நெற்றி முதலான உறுப்புகள் வரையிலாதல் தடவலாம். இங்ஙனங் கீழ்நோக்கித் தடவும் ஒவ்வொருமுறையுங் கைகளை உதறிவிடுவதோடு, மறுபடியுங் கைகளை உயர்த்துங்கால் அவற்றைப் பக்கச்சாய்வாய்த் திருப்பித் துயில்வோரின் விலாப்புறமாக மேல் உயர்த்துதல் வேண்டும். தடவுதலை முடிக்கும்போது காலின் பெருவிரல் நுனிவரையில் நீளத்தடவி முடிக்க; அஃது எதன்பொருட்டென்றால், இடையிடையே முழங்கால் இடுப்பு மார்பு முதலான உறுப்புகள் வரையில் தடவியிருந்தால் அவ்வுறுப்பிடங்கள்

வரையில் வந்து தங்குகின்ற மின்சத்தைத் தளர்க் காற்பெருவிரல் முடிய ஓடச்செய்தற் பொருட்டேயாமென்க. இவ்வாறு தடவி முடித்தநேரத்தில் துயில்வோரின் தலை மெல்லமெல்லக் கீழ்நோக்கித் தொங்கத்துவங்கும். இதுவும் தூக்கத்திற்குரிய மற்ற அடையாளங்களுங் கண்டபின், அவர் யோகநித்திரை என்னும் அறிதுயிலிற் செல்கின்றார் என்பதனைத் தெரிந்துகொள்க. அதனைத் தெரிந்ததுந் துயிற்றுவோர் இன்னும் மிகுதியான நம்பிக்கையோடுங் கிளர்ச்சியோடும் அவரைத் துயிற்றுதற்குச் செல்வாராக. சென்று பின்னர் அவரது முகம் அவர்தம் முழங்காலில் வந்து கவிழ்ந்து கிடக்குமளவும் அவரைத் துயிற்றுதற்குரிய முறைகளை விடாதுசெய்க. அவரது தலை அவர்தம் முழங்காலில் வந்து பொருந்துமளவும் அவரைத் துயிற்றியபின், அவர் ஆழ்ந்த துயிலில் இருக்கின்றாரென்பதைத் தெரிந்துகொள்க. இந்நிலையில் அவர் இன்னும் ஆழ்ந்த துயிலிற் செல்லும்பொருட்டு, அவரது பிடரியின்மேல் வாயினால் ஊதி, அவர்தம் பின்தலைமேல் துயிற்றுவோர் தமது பார்வையை நிறுத்தி, பிறகு அங்கிருந்து அவரது முதுகின் நடுவைப் பலகாற் கீழ்நோக்கித் தடவுக. அங்ஙனஞ் செய்தபின், அவர் ஆழ்ந்த துயிலில் இருக்கின்றாரா இல்லையா என்றுதெரிதற்குத் துயிலினின்றும் எழுப்புவதுபோல் அவரை அப்புறமும் இப்புறமுமாக அசைத்துப் பார்க்கலாம். அவ்வாறு அசைத்தும், அவர் விழியாமல் அயர்ந்த தூக்கத்திலேயே இருப்பாராயின், அவர் ஆழ்ந்த யோகநித்திரை அல்லது அறிதுயிலில் இருக்கின்றாரென்பதை உணர்ந்துகொள்ளலாம்.

இங்ஙனமாக ஒருவர் ஆழ்ந்த அறிதுயிலிற் செலுத்தப்படுங்காலம் அவரது உணர்வின் சுறுசுறுப்பைப் பொறுத்திருக்கின்றது. எனினும், பெரும்பாலும் ஒருநாழிகை நேரம் ஒருவரைத் துயிற்றுதற்குப் போதுமானதாகும். ஒரு நாழிகை முயன்றும் ஒருவரைத் துயிற்றுதல் முடியாதாயின், அன்றைக்கு அதனைவிடுத்து, அடுத்தநாளில் அவரைத் துயிற்றுதற்கு முயல்க. அடுத்தநாளிலும் அது முடியாதாயின் அதற்கடுத்த நாளிலும், அதிலும் இயலாவிட்டால் அதற்கடுத்த நாளிலுமாகத் தொடர்ந்து முயல்க. இங்ஙனம் இரண்டு மூன்று நாட்கள் தொடர்பாக முயன்றால் எத்திறத்தவரையுந் துயிலச்செய்தல்



கைகூடும். மேலும், ஒருமுறை ஒருவரை அறிதுயில் கொள்ளச் செய்துவிட்டாற், பிறகு அவரை அதன்கட் செலுத்துதல் மிக எளிது; அவர் துயில்கொள்ளல்வேண்டுமென எண்ணிய அளவானும், அவர்மேற் சிலமுறை தடவிய அளவானும் அவர் எளிதிலே ஆழ்ந்த அறிதுயிலிற் சேர்வர்.

மேலே காட்டிய தெரிந்தெடுக்கும் முறையால் துயில்வோர் ஒருவரைத் தெரிந்தெடுத்து, அவரை எதிரே நிறுத்திக்கொள்க. இதனைப் பழகும் இடத்தில் ஏதோர் அரவமும், துயில்வோர் கருத்தைக் கவரத்தக்க ஏதொருபொருளும் இல்லாமல் எல்லாம் அமைதியாக இருத்தல்வேண்டும். மேற்சொல்லிய முறையிற் போலவே அவருடைய முகத்தையும் தோள்களையும் முன்னேசிறிது இழுத்துக் குனியச்செய்து, அவர்தம் கைகள் விலாப்புறங்களுக்குச் சிறிது முன்னே துவண்டு தொங்குமாறு விடுக. இங்ஙனஞ் செய்தலால் துயில்வோருக்கு நரம்பின் தாக்கம் உண்டாம். அது உண்டாகவே, அவர் துயிற்றுவோரின் வழிப்பட்டு நிற்கும்நிலை உண்டாம். உடனே, துயிற்றுவோர் தமது வலதுகையைத் துயில்வோரின் முதுகு நடுவில் தோட்பட்டைகளுக்கு இடையிலே வைத்து, இடதுகையை அவரது நெற்றிமேற் புருவத்தின் நடுவிலே மெல்ல வைக்கக்கடவர். அதன்பிறகு துயிற்றுவோர் தமது இடதுகாலை அவருக்கு முன்னே அவரது இணையடிகளை அடுக்கவைத்துத் தமது முழங்காலும் அவர்தம் முழங்கால்களைத் தொடும்படியாகக் கிட்டச்சேர்த்தல்வேண்டும். இவ்வாற்றால் அவ்விருவர்க்கும் மன இசைவு உண்டாம். இந்நிலையிற் சிறிதுநேரம் இருந்தபின், துயிற்றுவோர் தமது வலதுகையால் அவரது பிடரியிலிருந்து முதுகின் அடிகாறும் தடவுதலோடு, இடதுகையால் இடையிடையே அவர்தம் நெற்றியையும் கண்களையுங் கீழ்நோக்கிக் கன்னங்கள்வரையில் தடவுக; அதன்பின் அவருக்குப் பின்னேசென்று அவரது தலையின் பின்புறத்தேயிருந்து நடுமுதுகின் நெடுக வெதுவெதுப்பு உண்டாக வாயினாற் கீழ்நோக்கி ஊதுக. துயில்வோரின் கண்ணிறைப்பைகள் கீழ்இறங்கி அரைவாசிமூடுதலும், அவருடம்பில் அசைவுங் காணப்படும்வரையில் மேற்கூறியவாறுசெய்க; அவ்விரண்டுங் காணப்பட்டவுடனே, துயிற்றுவோர் தமது வலதுகை

யை மேற்சொல்லியவாறே அவரது புருவத்தின் நடுவைத் தொட்டு, அவர் தம் கண்களை மூடிக்கொள்ளுமாறு கற்பித்துத் 'தூங்கும்' என்று கூறுக. மறுபடியும் மேற்காட்டியவாறே முன்னும் பின்னுந் தடவுதலைச் செய்யப்புகுந்து, அவர் நிற்கமாட்டாது தள்ளாடும் வரையில் அங்ஙனஞ்செய்க. அதன்மேல், அவர் நிற்கமாட்டாது பின்னே விழத் தலைப்படுவாராகலின், அவர் கீழே விழுந்து விடாமற் பின்னே தாங்கிக்கொண்டு, அவரை நிலத்திலாயினும் அல்லதொரு கட்டிலின்மேலாயினும் படுக்கவைத்தல் வேண்டும். அங்ஙனம் அவரை மெல்லெனப் படுக்கவைக்கையில் 'தூங்கும்' 'செவ்வையாய்த் தூங்கும்' என்று இடையிடையே சொல்லிக்கொண்டே அவரது புருவநடுவில் மெல்லென இடதுகையை வைத்து, வலதுகையால் நீளத் தடவுக. இவ்வாறு செய்த சிறிதுநேரத்திற்கெல்லாம் அவர் அயர்ந்த அறிதுயிலிற் செல்வர்.

இனி ஒரேகாலத்திற் பலரைத் துயிற்றுதற்கு ஒருவர் கைக்கொள்ளவேண்டிய முறையாதெனிற் கூறுவாம். மாந்தர்களிற் பலர் பலவேறுவகையான இயல்புகள் உடையவராயிருத்தலின் அவர்களைத் துயிற்றுதற்குச்செய்யும் முறைகளும் பலவேறு வகைப்பட்டனவாய் இருக்குமென்பது உணரற்பாலது. என்றாலும், ஒருவர் பலவகையான முறைகளையும் அடுத்தடுத்துச் செய்துபழகிவருவராயின், அவர் அப்பழக்கத்தால் ஆற்றல்பெற்று ஒரேமுறையாற் பலரையுந் துயிற்றவல்லுநர் ஆவர். ஆயினும், சிலநேரங்களில் அவருக்குடன் பலரைத் துயிலச்செய்யும் பொருட்டுப் பலவேறு முறைகளைக் கையாளவேண்டி வருமாதலால், அவர் பெரும்பாலும் அம்முறைகளெல்லாவற்றையுந் தெரிந்து பழகிக்கொள்ளுதல் இன்றியமையாததாகும். இனிப், பலரைத் துயிற்றுதற்கு இசைந்ததோர் அரிய முறையினை இங்கெடுத்துக் காட்டுகின்றாம்.

அறிதுயிலில் துயிற்றப்படுதற்கு இசைந்துவந்த பலரை ஒரு வரிசையாக இருக்கைகளின்மேற் செவ்வனே அமரச் செய்க. முன்னும் பின்னுஞ் சென்று அவர்களைத் தட்டித் துயிற்றுதற்கு இசைவாக அவர்கள் எதிரிலும் பின்புறத்திலும் வேண்டியவளவுக்கு இடம் தாராளமாய் இருக்கவேண்டும். அப்



பலரின் முழங்கால்களும் பக்கங்களில் ஒன்றையொன்று தொடுமாறு இருக்கவைத்தால், அவ்வெல்லாரிடத்தும் பாயும் மின்னாற்றல் அவரிடத்தெல்லாம் ஒரே தன்மையாகப் பரவி ஒருமுழுதாய் நிற்கும். அவர்களுடைய முகங்களையெல்லாம் சிறிது முன்னே இழுத்துக் குனியச்செய்வதுடன், அவர் தம் கைகளையும் தம் முழங்கால்களின்மேல் வைத்துக்கொள்ளுமாறு செய்க. அவர்கள் சூழவுள்ள எல்லாம் அமைதியாயிருக்க, இவையெல்லாம் செய்தானபின், அவர்கள் எல்லாருந் தமது கட்பார்வையை ஒருபுள்ளியில் நிறுத்துமாறு கற்பிக்க. இஃது, அவர்கள் தமது மூக்குமுனையை நோக்குதலால் எளிதிற் செய்யப்படும். கண் விழித்திருக்கமாட்டாமல் அவர்கள் தங்கண்களை மூடிக்கொண்டு தூங்க மனம்வந்தால் அதனைத் தடைசெய்யாமல் அவ்வாறே செய்யும்படி கூறுக. அதன்பின், அவர் ஒவ்வொருவரையும் எதிரே முடிமுதற்றுவங்கி முழங்கால் வரையும் நாலைந்து முறை இரண்டுகைகளாலுங் கீழ்நோக்கித் தடவுக. பிறகு அவர்க்குப் பின்புறத்தேபோய் அவர் ஒவ்வொருவரின் பின்றலையடியிலிருந்து முதுகு நெடுக அங்ஙனமே தடவுக. அவற்றோடு, இன்னொருமுறை அவர் ஒவ்வொருவரின் புருவநடுவில் வலதுகையைவைத்துச் சிறிது மெல்லெனத் தடவுக. இங்ஙனஞ்செய்கையில், அவர்களின் தலைகளில் ஆட்டங்காண்கின்றதா என உற்றுநோக்குக. அவர்களில் எவர்க்கேனும் ஆட்டங்கண்டால், துயிற்றுவோர் தம் கைவிரல்களை அவர் தலையுச்சியின் மேல் வைத்துத் தமது பெருவிரலாற் கீழ்நோக்கி அழுத்திக்கொண்டே, அவர் தம்கண்களை மூடிக்கொள்ளுமாறு கற்பித்துத் 'தூங்கும்' என்றுசொல்லி, அவரது தலையை நிமிர்த்தி அஃது அவர் நாற்காலியின் முதுகுமேற் சாய்ந்திருக்குமாறு வைக்க. பிறகு அவர்தம் முடிமேல்வைத்த விரல்களால் மெல்லமெல்லக் கீழ் நோக்கி நெற்றி கண்கள் முகம் முடியத் தடவுக. இங்ஙனம் எல்லாம் செய்யவே அவர்களில் உணர்வுநுட்பம் இயற்கையிலே வாய்ந்தவர்கள் தூக்கமயக்கம் உடையவர்களாய்க் காணப்படுவர்; அவர்களைமட்டும் மேலும் பலஆராய்ச்சிகளைச் செய்து பார்த்தற்குத் தக்கவர்களாக இருத்திக் கொள்க; அத்தூக்க மயக்கம் இல்லாதவர்களை அவ்வரிசையினின்றும் அகற்றிவிடுக.

பின்னர் அறிதுயிலுக்கு ஏற்றவராக இருக்கப்பட்டவர்கட்கு மேலும் மேலும் ஆக்கமுண்டாகும்படி இப்போது முயலத் தொடங்குக. இப்போது தீர்மானத்தோடும் விரைவாய் அவர்களின்மேல் கடவுதலைச்செய்து, அவர்கள் ஒவ்வொருவரையும் ஆழ்ந்ததுயிலிற் செல்லுமாறு கற்பிக்க. அவர்கள் ஆழ்ந்த அறிதுயிலிற் சென்ற அளவானே, அவர்களின் உடம்பு துவண்டிருக்கும்; அவர்கள் ஒரே ஒத்தநிலையிலிருத்தல் இயலாது, தம்மைச் சூழநடப்பது இன்னதென்றும் அறியார். இவ்வடையாளங்களைக்கொண்டும், அயர்ந்ததுயிலுக்குரிய மற்றக்குறிகளைக் கொண்டும் அவர்களது துயிலின் நிலைமை நன்குணரப்படும் என்க.

இனி, நாடகஅரங்கிற் கண்காட்சி காணவரும் பலருள் சிலரைத் தெரிந்தெடுத்து, அவர்களையெல்லாம் இன்சொற்களோடும் இன்முகத்தோடும் நாடகஅரங்கின்மேல் வரவழைத்து வைத்து, அவர்களை அறிதுயிலிற் போகச்செய்து, அவர்கள்பாற் பல வியப்பான காட்சிகளையெல்லாங் காட்டலாம். ஆனால், நாடக அரங்கில் இவ்வறிதுயிலைப் பலர்பால் வருவித்துப் பல வியப்பான நிகழ்ச்சிகளைக்காட்டுதல் எளிதன்று. "அகத்தில் ஆடி அம்பலத்தில் ஆடு" என்னும் பழமொழிக்கு இணங்க, முதலில் வீட்டுக்குள்ளேயே இக் கல்விமுறையைச் செய்து பழகித் தேர்ச்சிபெற்றபின் நாடகஅரங்கில் இதனைக் காட்டுதற்கு வெளிவரல் வேண்டும். நாடகஅரங்கில் வந்தேறுதற்கு இசைந்த ஒப்புதல்பெற்று அதன்கண் வந்தவர் முதலில் 'யோகநித்திரை' என்னும் இதன் மேன்மையையும் இதனால் விளையும் பயன்களையுங் கேட்போர் உள்ளத்தில் நன்றாய்ப் பதியும்படி சிறிது நேரம் எடுத்துப்பேசுக. அங்ஙனம் பேசிமுடித்தபின், எதிரே அவைக்களத்தில் இருப்போர்க்குத் தாம் செய்துகாட்டப் போகும் முறைகளிற் சிலவற்றைச் சொல்லிக்காட்டி, அவற்றிற்கு அவர்களும் உதவியாய் நிற்கவேண்டுமெனவும் வற்புறுத்துக. பின்னர் அவையிலுள்ளாரில் எவரேனும் அறிதுயிலிற் செல்ல விரும்புவர் உளரேல், அவரெல்லாம் நாடக மேடைமேல் வருகவென்று அன்பாகக் கேட்டுக்கொள்ளல் வேண்டும். அதற்கிசைந்த பலர் நாடகமேடைமேல் வருவர்,



நாடக அரங்கின் ஒருபுறத்தே இன்னிசைக் கருவிகளுடன் இனிய இசைப்பாட்டுகள் சிலர் பாடிக்கொண்டிருத்தல் வேண்டும். மேடைமேல் வந்தோரையெல்லாம் அரைவட்டமாக இட்ட நாற்காலி வரிசைமேல் அவையிலுள்ளார்க்கு எதிர்முகமாக இருக்கும்படி அமரச்செய்க. இனி, எதிர்முகமாக வன்றி, மேடையின் இருபக்கங்களிலும் இருக்குமாறும் செய்யலாம். அவர்களை அவ்வாறு இருத்தியபின், ஒவ்வொருவரையும் ஆராய்ந்து பார்த்துத், துயிற்றுதற்குத் தகுதியில்லாதவரென்று காணப்படுவோரையெல்லாம் பணிவோடும் இனிதாகச் சொல்லித் திரும்பவும் கீழே அனுப்பிவிடுக. மேடைமேல் வந்தவருள் நாற்காலிகளின்மேல் இருக்கப்பட்டோரில் எவர் தமது ஒருகால்மேல் மற்றொருகாலைத் தூக்கிவைத்துக் கொண்டு நிமிர்ந்தபடியாய்ப் பின்னே சாய்ந்து இருக்கின்றனரோ அவர் இறுமாப்பு உடையரெனத் தெரிந்து அவர் அறிதுயிலுக்குத் தகுதியில்லாதவராதலால் அவரை உடனே கீழேபோகச்செய்க. அங்ஙனமே, புகையிலை தின்போரையும், புகைச்சுருட்டுப்பிடிப்போரையும், மூக்குப்பொடி யிடுவோரையும், சாராயமருந்து உடையோரையும் இதற்குத் தகுதியில்லாதவரென உணர்ந்து அவரையும் அகற்றிக் கீழே போகச்செய்க. துயிற்றுவோர் இதற்குமுன் அறிதுயிலிற் பலகாற்செல்லும்படி பழக்கப்படுத்திய சிலரையும் தம்மோடு உடன்கொண்டுவந்து முற்கூறிய புதியோர் பக்கத்தில் இருக்கும்படி செய்தல்நன்று.

அதன் பிறகு, துயிற்றுவோர் தாம் சொல்லுகிறபடி யெல்லாம் அவர்கள் உவப்புடன் நடந்துகொள்ளும்படி கற்பிக்க. அவர்களை நோக்கிச் சொல்லுவன எல்லாம் இயற்கையாக முறையின் தீர்மானத்தோடும் தெளிவாகவும் சொல்லப்படுதல் வேண்டும். அதன்பின் ஒவ்வொருவரும் மடிமேல் வைத்த தமது இடது உள்ளங்கையின்மேல் தமது வலதுகையை மேல்நோக்கி நிமிர்த்துவைத்துக்கொள்ளும்படிசெய்க. பின்னர்ச் சிறியவெள்ளிக்காசுகளையேனும், அல்லது அவற்றைப்போற் பளிச்சென்றிருக்கும் வேறுசிறு பொருள்களையேனும் வருவித்து அவை ஒவ்வொன்றையும் ஒவ்வொருவர் கையிலும் இட்டு, அவரெல்லாரும் தம் கையிலுள்ள அச்சிறுபொருளை இமைகொட்டாமற்

குவிந்தபடியாய் உற்றுநோக்கும்படி சொல்லுக. அவர்களெல்லாரும் அங்ஙனம் உற்றுநோக்கிக்கொண்டிருக்கையில், ஆற்றுவோர் முன்னமே இதிற் பழகினதற்புடன் சொன்னபடி வந்தோரில் ஒருவரையும் அங்ஙனமே உற்றுநோக்கும்படிசெய்து அவரைத் துயிலுறுத்தப் புகுக. இதில் முன்னரே பழக்கப்படுத்தப்பட்டவர்க்கு இந்தமுறையால் அன்றி, வெறுந்தொலைவிலே தானே எளிதில் வருவிக்கலாமென்றாலும், மற்றவெல்லார்க்குஞ் செய்வதுபோற் செய்தலால், புதியராய் வந்தோர் அதனைக்கண்டு ஆற்றுவோர்வழியில் எளிதில் அடங்கி நின்று துயில்வர். பழையவரை நோக்கித் 'தூங்கும்' என்று சிலமுறை திருப்பித்திருப்பிச் சொன்னவுடன் அவர் நன்றாய்த் தூங்குவர். அவரைத் துயிற்றியபின்பு, மற்றைப் புதியோரிடஞ் சென்று அவருடைய கண்ணிமைகள் அடைப்பெற்றனவா பார்த்து 'நீர் உம்கண்களை இறுகமூடிக்கொண்டு தூங்கும்' என்று சொல்லிவிட்டு விரைந்து அவர்களின் கண்ணிமைகளின் மேல் தொட்டேனும் தொடாமலேனும் கீழ்நோக்கித் தடவுக. இதுசெய்தபின் வலதுகைப்பெருவிரலை அவர் ஒவ்வொருவரின் புருவநடுவில்வைத்துக் கீழ்நோக்கி அழுத்திக்கொண்டே அவர்களின் வலதுகையை ஆற்றுவோர் இடதுகையால் ஒன்றன்பின் ஒன்றாய் மெல்லெனப்பற்றுக. இங்ஙனஞ் செய்கையிலேயே நிர்மானமாய் [illegible] 'இப்போது—உங்கள்—கண்கள்—நன்கு—இறுக—மூடியாய்' என்று அழுத்தமாய்ச் சொல்லுக. இவ்வாறு சொல்லியவுடனே அவர்களிற்பலர் உறக்கத்திலிருந்தாலும் இல்லாவிட்டாலும் தங்கண்களைத் திறக்கமாட்டாமலிருப்பர்; சிலர் அவ்வாறின்றி உடனே கண்களைத் திறந்துவிடுவர்; அக்கண்ணியோர் அறிதுயிலில் எளிதிலே போதற்குத் தகுதியில்லாதவர் ஆகையால், அவர்களையுஞ் [illegible] விடுக. பிறகு, உறங்குதற்குத் தக்கவாக மேடைமேல் இருந்துகொள்ளப்பட்டவர்கட்கு எதிரிலே சிறிது எட்டநின்றுகொண்டு எல்லாரையும் [illegible] அடிமுடிய ஒவ்வொருவரைப் [illegible] தடவிக்கொண்டு செல்க. முன்னமே இதிற் பழக்கப்படுத்தப்பட்டவர்களும் [illegible] இருந்தால் அவர்கள் எளி-



திலே இவ்அறிதுயிலிற்செல்வர். மற்றைப் புதியோர் விரைவில் தூங்காவிட்டால், ஒவ்வொருவரையும் கண்களின்மேலும் கன்னப்பொட்டுகளின்மேலும் விரைந்து கீழ்நோக்கித் தடவிக்கொண்டு வருக. இங்ஙனங் கால்மணிநேரம் விடாதுசெய்தால் அவருள் அயர்ந்த உறக்கத்திற்கு வருவர். தொடக்கத்தில் ஒவ்வொருவர் கையினுள்ளும் வைத்த வெள்ளிக்காசுகளை எடுத்துக்கொள்க. துவக்கத்தில் வெள்ளிக்காசு முதலான பளிச்சென்ற பொருள்களை வைத்து அவற்றை உற்றுநோக்கச்செய்தலைவிட, ஒவ்வொருவரும் தமது இடதுகைப்பெருவிரலை வலதுஉள்ளங்கையில் வைத்து இமையாதபடி பார்க்கும் கண்களை நன்றாய் மூடிக்கொள்ளுமாறும் செய்தல் நன்று. இங்ஙனமெல்லாஞ் செய்து சிலரையேனும் பலரையேனும் அன்றி ஒருவரையேனும் துயிற்றுதற்கு முயலுங்கால் ஆற்றுவோர் தம்நினைவைப் பலமுகமாய்ச் சிதறவிடாது, எல்லார்க்கும் ஆழ்ந்த துயிலை வருவித்தலின்கண்ணும், அதனை வருவித்தபின்னர்ச் செயவேண்டுவனவற்றின்கண்ணும், அதனை [illegible] நினைவை ஒருமுகமாய்க் குவித்து நிற்குமாறு செய்தல் இன்றியமையாததாகும். ஏனென்றால், எத்தகைய அரியசெயலும் நினைவை ஒருமுகமாய் நிறுத்தி வலிமையுறுதலினாலேயே முடிக்கப்படுகின்றது. ஆற்றுவோர் இடையிடையே இளைப்படைந்தால் சிறிது ஒதுங்கிநின்று காயகற்பத்தைப் பலமுறை மூக்கால் உள்ளிழுத்தலாலும், பாலேனும் பானகமேனும் பருகுதலாலும் அவ்விளைப்பைத் தீர்த்துக்கொள்ளலாம். இளைப்புத் தீர்த்துக்கொண்டபின் திரும்பவும் அவர்கள்பாற்சென்று, அவர்களில் உறங்குவோர்க்குப் பின்னும் அவ்வுறக்கத்தை மிகுதிப்படுத்தல் வேண்டி மேற்சொல்லிய முறையாகவே பின்னுஞ் சிறிதுநேரம் முயல்க.

இப்போது அவர்களெல்லாரும் நன்றாய் அயர்ந்து தூங்கத் தலைப்படுவர். அவர்கள் உறக்கத்திற் செல்கையிலேயே ஆற்றுவோர் பின்வருமாறு, "நீங்கள்-என்-சொற்களையல்லாமல்--வேறு-எதனையும்-கேட்க மாட்டீர்கள். நீங்கள்-அயர்ந்த-உறக்கத்தில்-இருந்தாலும்-யான்-சொல்லுவனவற்றைக்-கேட்டு அவற்றின்படியெல்லாம்-செய்வீர்கள். யான்-உங்களை-எழுப்புகின்ற வரையில்-நீங்கள்-நன்றாய்-அயர்ந்து-உறங்குவீர்கள்.

யான்-திரும்ப-உங்களை-எழுப்புகின்ற போது-நீங்கள்-நன்றாய் உறக்கம்நீங்கி-எழுந்துவிடுவீர்கள்.' என்று அழுத்தமானகுரலில் மெல்லமெல்லச் சொல்லுக. இவ்வாறு சொல்லித் துயிற்றிய அளவிலே, துயிற்றுவோர் சொல்லுகிறபடியெல்லாம் செய்தற்கு இசைந்த அறிதுயிலில் அவரெல்லாம் செல்லாநிற்பர்.

## மூவகைத்துயில்

இனி, ஒருவர்க்கோ அல்லது பலர்க்கோ இங்ஙனம் வருவிக்கப்படும் அறிதுயிலானது மூவகைப்பட்ட நிலைகளை உடையதாகின்றது. அவை: நினைவுத்துயிலும், நினைவற்றதுயிலும், கடைத்துயிலும் என மூன்று வகைப்படும். அவற்றுள், நினைவுத்துயிலில் இருப்போர்க்கு நினைவுபோகாது; அத்தூக்கத்தில் நடப்பனவெல்லாம் அது நீங்கியபின் நினைவுக்குவரும். இந்நிலையில் இருப்போர்க்குக் கண்கள் திறந்தாயினும் மூடியாயினும் அரைவாசி திறந்தாயினும் இருக்கும்; இவர்களைத் தாம் வேண்டியபடியெல்லாம் நடக்கும்படி செய்தல் துயிற்றுவோர்க்கு முடியாது, என்றாலும் இவர்களுடைய முகம் கை கால் முதலானவுறுப்புகளைத் தாம் விரும்பியநிலைகளிற் சிறிதுநேரம் நிற்கும்படி துயிற்றுவோர் செய்யவைக்கலாம். இத்துயிலின் இருக்கையில் உடம்பில் நோவுணர்ச்சி இராது. ஊசியாற் குத்துதலும், கத்தியாற் சிறுக அறுத்தாலும் நோவு தோன்றாது. இதனைக்கண்டறிந்த அமெரிக்க வெள்ளைக்கார மருத்துவர் சிலர் புண்கள் கழலைகளாற் பொறுத்தற்கரிய துன்பத்தை அடையும் நோயாளிகளை அந்நோய்தெரியாமல் அவற்றை அறுத்துத் தீர்த்தற்பொருட்டு இத்துயிலிற் போகச்செய்து, அவற்றை அவர்க்கு நோவுதெரியாமலே அறுத்துத் தீர்க்கின்றனர். முருக்கட்டைக்கு நோய்கொண்டு உடம்பில் அலைகேடுற்றுக் காலடி எடுத்துச்செல்வோர் இக்கையொரு நினைவுத்துயிலின்கண் நன்றாய் இருக்கின்றனர். இத்துயிலின்பயனை உண்மையாயுணர்பவர்களே இதனாற் பலனடைபவராம். இரவும் பகலும் உறக்கமின்றி நோயால் துன்புறுவார்களை இத்



தூக்கத்திற் போகச்செய்தால் அவர்கள் தமக்குள்ள நோயின் துன்பத்தை அறியாராய் இனிதுறங்குதலோடு, உறக்கம்நீங்கி எழுந்தபின்னும் அந்நோயின் கொடுமை தணியப் பெறுகின்றனர். என்றாலும் இத்துயிலில் நினைவுமாறாமலிருத்தலால் துயிற்றுவோர் சொல்வனவும் செய்வனவும் எல்லாம் துயில்நீங்கி எழுந்தபின் ஏறக்குறைய நினைவுக்குவரும் என்க.

இனி, மேற்சொல்லிய நினைவுத்துயிலினும் ஆழ்ந்துசெல்லும்துயிலில் உயிருக்கு நினைவு சிறிதும் நிகழாமையால் அதற்குப்பின் உண்டாம் இது நினைவற்றதுயில் எனப் பெயர்பெற்றது. இத்துயிலின்கண் இருப்போர்க்குச் சுற்றியுள்ள பொருள்களின் உணர்ச்சி சிறிதும் இராது; புறத்தேதோன்றும் ஓசை எவ்வளவு பெரியதாய் எவ்வளவு அதிகாரிமையுடையதாய் இருப்பினும் அதனை அவர் சிறிதுங் கேளார். துயிற்றுவோருடைய சொற்களையுங் குரலோசையையுந் தவிர வேறொன்றனையும் அவர் உணரார். விழிகள் சுழலாமல் அமைதியுற்றிருக்கும். முன்னேகாட்டிய நினைவுத்துயிலிற்சென்றவரோ இடுக்கிடத்தக்கது எதனையேனுங் கேட்பின் அதனினின்றும் உடனேவிழித்தெழுவர். ஆனால், இந்நினைவற்றதுயிலிற் சென்றவரோ எக்காரணத்தையாலும் விழித்திட்டெழார். அவருடைய முகம் கை கால் முதலான உறுப்புகளை எந்தநிலையில் துயிற்றுவோர் வைக்கின்றனரோ அந்தநிலையிலேயே அவை நிற்கும். அவரை நோக்கித் துயிற்றுவோர் ஏதேனும் அடுத்தடுத்து வினவினால்மட்டும் அவர் அதனை அரைவாசியுணர்வோடு கட்டாயத்தினால் விடைகூறுவர்; அங்ஙனம் விடைகூறியபின் மறுபடியும் அவ்வாழ்ந்த தூக்கத்தின்கண்ணே அமைதியாய்ச்சென்றிருப்பர். இந்நிலையில் உடம்பின்கண்ணே உணர்வு சிறிதும் இல்லாமையால், உடம்பில் ஆழமாக அறுத்துச்செய்ய வேண்டிய முறைகளைச் செய்தற்கு இதுவே மிகவும் ஏற்றதொரு நிலையாகும். இதற்கு முன்னிகழும் துயிலில் நினைவு பழுதுபடாமலிருத்தலால் அதன்கண் உடம்பின் எவ்விடத்தையேனும் ஆழ அறுத்தால் உடனே ஒருவர் திடுக்கிட்டு எழுந்திருத்தலுங்கூடும். மற்று இதன்கண் எவ்வளவு ஆழமாக உடம்பை அறுத்தாலும், அல்லது கை கால் முதலிய உறுப்புகளை வெட்டியெடுத்தாலும் இத்துயிலின்கட்சென்றோர்

அவற்றைச் சிறிதும் உணரார். இக்கலைப் பயிற்சியால் நோயாளிகள் பலர்க்குப் பொறுத்தற்கரிய நோய்கள் பலவற்றை நோவின்றித் தீர்த்த வெள்ளைக்கார மருத்துவர் ஒருவர்* நோயாளி ஒருவனுக்கு மிகவீங்கிப்பெருத்த விதைகள் இரண்டை நோவின்றி அறுத்தெடுத்து சுகப்படுத்தின வரலாற்றினை இங்கே மொழிபெயர்த்துக் காட்டுகின்றாம்.

பன்றி விற்பனைசெய்த ஒருவன் மற்றொருவனை அடித்துப் படுகாயப்படுத்தின குற்றத்திற்காக ஏழு ஆண்டுகளுக்குக் கடுங்காவலில் வைக்கப்பட்டான். அவ்வாறு வைக்கப்பட்டபின் சிலகாலத்தில் அவனுக்கு இரண்டு விதைகளும் மிகவீங்கிப்பெருத்து அவன் நடத்தல் இருத்தல் எழுதல்முதலான எவ்வகை நடமாட்டமும் செய்தற்கு இயலாதபடி அவனுக்குப் பெருந்துன்பத்தை விளைவித்தன. அதுகண்டு சிறைக்கோட்டத்தலைவர் அவனை அம்மருத்துவக்கழகத்திற்கு அனுப்பினார். அங்கிருந்த வெள்ளைக்காரமருத்துவர் அவனை ஒருநாற்காலியில் இருத்தி, அவனுடைய விதைகளினுள்ளிருந்த நீரை வெளியே எடுத்துவிட்டு, அதனுள்ளிருக்கு ஏற்றதொருமருந்தை ஏற்றிவிட்டார். அக்காயமாறிச் சென்றதும் அவனுக்கு விதைகளில் நீர் பெருக்கப்பட்டபின் கண்களை இறுக மூடிக்கொண்டு, கைநரம்பை இவ்விதைகளையும் பிடித்து நெருக்கிவைப்பயாய் மிகவுந்துன்புறலாயினன். அதனைக்கண்டு அவன்பால் இரக்கமுற்ற அவ்வெள்ளைக்காரர் தம்முடைய பார்க்கும் வன்மையிருக்கிறதைக் கேட்டு "யோகநித்திரையில் செலுத்தப்படுவோரைப் பார்த்திருக்கின்றீரா?" என்றுகேட்க. அவர் "மருத்துவக்கல்விக்கழகத்தில் அதனை அடிக்கடி பார்த்தேன்; என்றாலும், அதனை அப்போது பயிலவில்லை." என்றார். அதன்மேல் அவ்வெள்ளைக்காரமருத்துவர் "அக்கலைப்பயிற்சியைப்பற்றி யான் நன்கு கற்றறிந்திருக்கின்றேன்; ஆனால் எவரும் அதனைப் பழகப்பார்த்ததில்லை. இப்போது அதனை இவன்மேற் செய்யப்பார்க்க மிகவும் விருப்புகின்றேன். இந்த எனக்குப் பயிலும்போதுமாயும் போகலாம்." என்று சொல்லிக்கொண்டே அந்நோயாளி நாற்காலியின் இருக்

* Dr. James Esdaile, M. D.



தபடியாகவே இருக்க, அவனுடைய இரண்டு முழங்கால்களையும் தம் இரண்டு முழங்கால்களுக்கு இடையே வைத்துக்கொண்டு, தம் கைகளைக் கீழ்நோக்கியபடியாய் விரித்துநீட்டி அவன் முகத்திலிருந்து வயிற்றின் கொப்பூழ்வரையில் அவனைத்தொடாமலே தடவுவாராஞர். இவ்வாறு அரைமணிநேரம்வரையிற் செய்தபின், அவரோடு பேசிப்பார்த்ததில் அவன் எப்போதும்போலவே அறிவோடு பொருத்தமாய்ப்பேசினான். அதன்மேல் அவனைத் திரும்பவும் அமைதியாய் இருக்கக்கற்பித்து, இன்னும் கால்மணிநேரம்வரையில் முன்தடவியபடியாகவே தடவிப்பார்த்தார்; பின்னும் அவன் முன்னிருந்தபடியே இருந்தமையால் அவர் அது பலிக்கவில்லையென்று விட்டுவிட்டு, தாம் இதில் மிகவுங்களைத்துப்போனமையால் ஓர் இருக்கையில் அமர்ந்து இளைப்பாறுவாராஞர். அப்பொழுது அந்நோயாளியோ அசைவற்று அமைதியோடிருந்தான்; துன்பத்தின் அடையாளங்களான முகச்சுளிவுகள் இப்போது அவனிடம் காணப்படவில்லை; கண்ணைத்திறக்கும்படி கற்பிக்கப்பட்டபோது அவன் 'எங்கும் புகைசூழ்ந்தாற்போல் இருக்கின்றது' என்றான். அச்சொற்களைக்கேட்டதும், அவ்வெள்ளைக்காரமருத்துவர் பின்னும் அவனை முயன்றுபார்க்குங் கருத்துடையவராய், அவனது தலைமேல் வாயினால் ஊதி, அவனது நெற்றியிலிருந்து முகத்தின்மேலாகக் கையினால் தடவிக்கொண்டு மேல்வயிறுவரையில் வந்து அதனை அழுத்தினார். இங்ஙனம் அவர் செய்தவுடனே, அவன் தன் இருக்கையில் அழுந்திக்கொண்டிருந்த கைகளை அப்புறம் எடுத்து, அம்மருத்துவர் கைகளைப் பிடித்து அழுத்தி 'நீங்களே என் தாயும் தந்தையும், எனக்கு நீங்கள் திரும்பவும் உயிரைக்கொடுத்தீர்கள்!' என்றுசொல்லிப் பெருமூச்செறிந்தான். அதனைக்கண்டு அம்மருத்துவர் பின்னும் பெருமகிழ்ச்சியுடையவராய், அறிதுயிலிற்செலுத்தும் முறைகளை மேற்கூறியவாறே பின்னும் விடாமற்செய்வாராயினர். பிறகு ஒருமணிநேரத்திலெல்லாம், தான் தூங்கவேண்டுமென்று சொல்லி வாயும் தன்னுணர்வுகள் கலைந்துபோயினவென்றுஞ் சொல்லி வாய்க்கிறங்கிக்கொண்டு தூங்கலானான். அவன் தொடர்பாகவினவைச் சொல்ல இயலவில்லை. கண்களைத்திறக்கும்படி கற்பிக்கப்பட்ட

போது திறந்து, எங்கும் புகைபோல் இருக்கிறதென்றும், தலை
யையும் தெரிந்துகொள்ளக் கூடவில்லையென்றும் கூறினான்.
அவன் கண்கள் அப்போது ஒளியின்றி இருந்தன; அவன் கண்
ணிறைப்பைகள் மிகவும் வருத்தத்தோடு திறந்தன. அப்பத்
தின் அடையாளங்கள் அவனைவிட்டு இப்போது முழுவதும் அகன்
றன; அவன் கைகள் அசைவை அறுத்துவிட்டு அவனது
மார்பின்மேல் குறுக்கிட்டுக் கிடந்தன. அவன் இப்போது அமை
தியான நல்ல உறக்கத்தில் இருக்கின்றான் என்பதை அவனது
முகம் விளக்கிக்காட்டிற்று. அம்மருத்துவர் பலமுறை பார்த்தும்
விளக்கியும், அவன் பெயரைச் சொல்லி உரக்கக் கூவியும் அவன்
விழித்தானும் அறியவில்லை.

அதன்மேல் அவ்வெள்ளைக்கார மருத்துவர், அவனைக் கிள்
ளிப்பார்த்தும் அவன் அசையவில்லை; அதன்பின் ஒரு குண்டூ
சியை எடுத்துத், தமது உதவியாளரும் வங்காளருமான மருத்
துவரை உற்றுநோக்கும்படி சொல்லி, அவ்வூசியை அந்நோ
யாளியின் இடக்கையின் புறத்தே குத்தியழுத்தினார். அப்
போதும் அவன் சிறிதும் அசையவில்லை. பின்னர் அவ்வுதவி
மருத்துவர் அவ்வூசியைப் பிடுங்கி அவனுடைய பக்கத்திலுள்ள
விலாவில் குத்திக்குத்திப் பார்த்தார். அப்படிச் செய்தும் அவனுக்
குச் சிறிதும் நோவு உண்டானதாகத் தெரியவில்லை. அவன்
இப்படி எவ்வளவும் உணராமல், சற்றொப்ப ஒரு மணி நேர
நேரத்தின்மேல் தன்னுடைய உறக்கத்தை அகற்றிக்கொண்டு சென்று
உறங்குகின்றான். அதைப் பார்த்தவுடன், தம்பால் அறிவுறுத்
திப்பெற்றுக்கொண்ட சிலவற்றுக்கு அவனை அவரிடம்
இடம்பெறக் குறிப்பித்தது விளக்கிக் காட்டிப் பொருட்டு
அத்தமையர் தமது கையோடிருந்த ஒரு மேலாடை
போல இருந்ததை எடுத்துக்கொண்டு அவர் அருகே வந்தார்.
அவ்வுண்ட அவர் முகத்தில் மெல்லப் பிடித்த அவன்
இருந்தான். அவன் காதண்டை போய் அவனை உரக்கக்
கூப்பிட்டும் அவன் விழித்து எழுந்தானில்லை. பின்பு கொஞ்சம்
கொண்டுவந்து அவன் மூக்கண்டை வைத்தார்கள், அதை
யும் அவன் உணர்ந்திலன். அதன்பின், எரிக்கும் மெல்
லிய கண்களில் வேறுவிதமான சூழ்ச்சிகளை அவர்கள்



சிறிதுநேரம் அவன் மூக்கில் பிடித்தார்கள்; அதிலும் அவன் கண்
ணிறைப்பைகூட அசையவில்லை. ஆறு சிறிதுநேரத்திற்
குப்பின் அவன் சிறிது உணர்வு பெற்று அதற்குத் தலை அசைத்த
தைக் கண்டவுடன், அம்மருத்துவர் 'உனக்கு வேண்டியது பருகு
தற்கு வேண்டுமா?' எனக் கேட்டனர். அதற்கவன் வாயைத் திறந்
ததனால், கவர்சாரத்தை மிகவும் காரமாகக் கலந்த தொருநீரினை
அவனுக்குப் பருகக் கொடுத்தார். அங்கிருந்தவர்களாற் சிறி
து அதைக் குப்பார்க்கற்கும் ஆகாத காரம் உடைய அந்நீரினை
அவன் பால் குடிப்பதுபோற் குடித்துவிட்டு, இன்னும் வேண்டு
மென்று வாயைப் பிளந்தான். அதற்குப்பின்னர், மேற்கூரை
யை நோக்கியபடியாய் இருந்த அவனது தலையை அவர் திருப்பி
நல்ல தொருவிளக்கின் ஒளிக்கு நேரே வைத்து, அவனுடைய கண்
களை ஒன்றன்பின் ஒன்றாகத் திறந்துவிட்டார். ஆனால், அந்
நல்ல அவ்விளக்கின் ஒளி குருடன் கண்களிற் படுவதுபோல
விருந்ததேயல்லாமல், வேறெதுவாயினும் அவன் கண்களுக்குத்
தந்திலது. இவ்வளவுநேரமும் அம்மருத்துவரும் அவருடன்
இருந்தோரும் ஆராய்ந்து பார்க்கவே, அவனுடைய ஐம்பொறி
களும் முழுதும் உணர்வற்ற நிலையில் இருக்கின்றன என்பதை
அவர்கள் எல்லாரும் நன்கு தெளிந்து கொண்டார்கள். அதன்
மேல், அவனை அறுபடுக்கையின் மேல் படுக்கவைத்தார்கள். காலை
பதினொருமணிக்குத் துயிற்றப்பட்ட அந்நோயாளி பிற்பகல்
மூன்றுமணிக்கு முகத்தில் நீர் தெளித்தவுடன் அத்துயில்
நீங்கி எழுந்தான். அவன் தெளிவுமுகத்தோடு செம்மையாய்
இருந்ததைக் கண்டு அம்மருத்துவர், தம்முடன் இருந்தவரோ
டு நல்ல நிலையில் அவனைப் பின்வருமாறு வினவினார்:

'இப்போது எப்படி இருக்கிறாய்?' 'நிகவுந்தெளிவுடையனாய்
இருக்கின்றேன்.'

'தொண்டையிலாவது மேற்புறங்காலாவது நோவிருக்கின்ற
தா?' 'தொண்டையில்பட்டிருந்த சிறிது வருத்தம் இருக்கின்றது,
மற்ற இடங்களில் நோய் இல்லை.'

'இன்றைக்கு உனக்கு யாது நேர்ந்தது?' 'எனது வீங்கிய
விதையிலுள்ள நோயை வெளிவிடுக்கும்பொருட்டு இப்பாமருத்
துவர்க்குழைக்கிறக இன்றுகாலையில் சென்றேன்.'

'அங்ஙனமே நீ வெளியே எடுக்கப்பட்டதா?' 'ஆம்.'

'விதையை அறுத்தபிறகு சேர்க்க நிலையில் இருக்கின்றதா?' 'உடனேயான் நல்ல தூக்கத்திற்குட் போய்விட்டேன், வேறொன்றும் எனக்கு நினைவில் இல்லை.'

'அறுத்தபின்பு ஏதாவது உண்டனையா அல்லது பருகினையா?' 'நான் விடாய்கொண்டிருந்தேன்; ஆனால், காட்டுமருத்துவர் என்னை எழுப்புகிறவரையில் எனக்குப் பருகுவதற்கு ஏதும் கிடைக்கவில்லை.'

'யாராவது உன்னைக் கையாற் குத்தினார்களா?' 'அல்லது நெருப்பாற் சுட்டார்களா?' 'இல்லை, இல்லை.'

'உனக்கு வெறுப்பான ஏதாவது வாசனையேனும் முகர்ந்தனையா?' 'இல்லை.'

'நீ தூங்கும்போது இன்பமாய்த் தூங்கினையா?' 'மிகவும் இன்பமாய்த் தூங்கினேன்.'

'நீ தூங்கியபோது ஏதேனும் ஓசை கேட்டனையா?' 'குரல் ஒலிகள் கேட்டன, ஆனால், அவைகளை நான் இடமாய்த் தெரிந்துகொள்ளக்கூடவில்லை.'

'மருத்துவக்கழகத்தில் என்னைக் காண்டற்கு முன்னமேயேனும் பார்த்தனையா?' 'இல்லை.'

'நீ தூக்கத்திற்குப்போனபிறகு உன் விலாப்பக்கத்தில் வலி ஏதேனும் நோவிருந்ததா?' 'நான் எழுந்திருக்குமளவரையில் நோவேயில்லை.'

'அந்த இடத்தில் இப்போது ஏதேனும் நோவிருக்கிறதா?' 'மிகச்சிறிய நோவுதான் இருக்கிறது.'

'இன்றைக்கு உனக்கு எத்தனை முறை வயிறுபோயிற்று?' 'மருத்துவக்கழகத்திற்கு வரும் முன் நான்குமுறை போயிற்று; அதன்பிறகு ஒன்றுமில்லை. முன்னே இருந்ததைவிட இப்போது என் வயிறு இலேசாயிருக்கின்றது.'

இங்ஙனம் அவ்வெள்ளைக்கார மருத்துவர் விதையிற்கண்ட நோயாளியொருவனை நினைவற்ற ஆழ்ந்த துயிலிற் போகச்செய்து அவன் விதைகளை அறுத்தெடுத்தபின் அவனைத் தக்கோர் பலர் முன்னிலையில் வைத்து மேற்காட்டியவாறு கேட்டுப்பெற்ற விடைகளிலிருந்து, இத்தகைய தூக்கத்திற் சென்றோர்க்கு எவ்



வகையான துன்பமும் தெரிவதில்லையென்றும், அத்தூக்கத்திற் சென்று எழுந்தபின் நோய்நீங்கி நலம் உண்டாமென்றும் அவருடனிருந்தோரெல்லாரும் தம் கண்ணெதிரே கண்டு தெளியப் பெற்றார்கள். இதனைப்போலவே நிகழ்ந்த இன்னும் பல உண்மை நிகழ்ச்சிகளெல்லாம் நினைவற்ற ஆழ்துயிலிற் சென்றோர்க்கு உண்டாம் அளவிறந்த நலங்களை ஐயந்திரிபுக் கிடனின்றி எடுத்துக்காட்டுகின்றன.

இனி, மேற்காட்டிய நினைவற்ற துயிலினும் ஆழ்ந்துசெல்லும் மூன்றாவதான நடைத்துயிலைப்பற்றிச் சிறிது ஆராய்ந்து பார்ப்பாம். நினைவற்ற துயிலினும் ஆழ்ந்துசெல்வதாகிய துயிலில் உயிரின் அறிவைக் கவிந்துநின்ற அறியாமையிருள் விலகிப்போக அவ்வுயிர்க்கு இயற்கை அறிவுவிளக்கம் மிகுந்து தோன்றுகின்றது. இவ்வாறு தோன்றும் இயற்கை அறிவுக்குக் கண் காது முதலான புறக்கருவிகளின் உதவி சிறிதும் வேண்டப்படுவதில்லை. கண் முதலிய அப்புறக்கருவிகளின் வாயிலாக ஒருவர்க்கு அறிவு நிகழும்போது, அவற்றின் எதிரேநிற்குங் கட்டடங்கள் காடுகள் முதலிய மறைப்புகளால் அவ்வறிவு தடைப்படுகின்றது; அவற்றிற்கு அப்பாலுள்ள பொருள்களை அறியமாட்டாதாகும். ஆனால், இவ்வியற்கையறிவு விளக்கத்தையோ புறத்தேயுள்ள எவ்வகைப்பொருளுஞ் சிறிதும் மறைக்கவல்லன அல்ல. இதுவோ ஆயிரங்காதவழிக்கு அப்பாலுள்ள பொருள்களையும் அங்கே நிகழும் நிகழ்ச்சிகளையும் எளிதிலே அறியவல்லதாகும். நினைவோடிருக்கையிற் செய்யமாட்டாமல் முழுதும் விடப்பட்டவைகளையும், அரைகுறையாய் விடப்பட்டவைகளையும் நினைவிழந்த இவ்வறிதுயிலிற் றோன்றிவிளங்கும் அறிவு எளிதிலே திட்பப்படச்செய்து முடித்துவிடுகின்றது. இத்துயிலில் இருப்பவர்கட்குக் கண்கள் மூடியிருக்கும் கண்ணாற்கண்டு நடப்பவர்களினுந் திறமையாக அவர்கள் நடந்துசெல்கின்றனர், தாண்டஇயலாத பள்ளங்களையெல்லாம் தாண்டிவிடுகின்றனர், ஏறமுடியாத சுவர்கள் கோபுரங்கள் முதலியவற்றிலெல்லாம் உடம்பிற் சிறிதுங் காயப்படாமல் ஏறியிறங்கிவிடுகின்றனர். வியப்பான இந்நடைத் துயிலின் இத்தகைய அருஞ்செயல்களுக்கு உண்மையாக நிகழ்ந்த சிலநிகழ்ச்சிகளை இங்கெடுத்துக்காட்டுவாம்.

இத்தாலியநாட்டிற் பெயர்பெற்ற இசைப்பாணர் ஒருவர்* தூங்கிக்கொண்டிருக்கையிற் 'பேய்த்தில்லைப்பாட்டு' என்னுஞ் சிறந்த ஒரு பதிகத்தை இயற்றினர். செல்வப்புகழிற் சிறந்த ஒருவர்† தமது இளம்பருவத்திற் கல்லூரியிற் கல்விபயின்றுகொண்டிருந்தபோது ஒருநாள் மாலைக்காலத்தில் இலத்தீன் மொழியிற் பதிகம் ஒன்று இயற்றப்புகுந்து அதனை முற்றுப்பெறச் செய்யமுடியாமல், அன்றிரவு உறங்கச்சென்றனர். உறக்கத்திற்சென்றதும் முடியாமல்விட்ட அப்பதிகத்தைத் திறம்பட முடித்து, விழித்தெழுந்தபின் அதனை நினைவுகூர்ந்து எழுதிவைத்தனர். அப்பதிகத்தைப்பிறகு கண்ட அறிவுடைப்பெரியோர் அதன் சொற்சுவை பொருட்சுவைகளையும் அழகையும் மிகவியந்து பாராட்டினர். மேலும், இன்னிசைக் கல்வியில் தேர்ச்சிபெற்ற பெரும்புகழ்ப் பெயர்ந்த மாதராள் ஒருவர் இரவிலே தூங்கிக்கொண்டிருக்கையில் இடையில் எழுந்து தூக்கத்துடனே இசைப்பெட்டி‡ யண்டை சென்று அதனைச் செவ்வையாய் இயக்கி அதிற் பாடித் திறமைகாட்டினாள். பாட்டைப் பின்புபாடாமல் இனிதாய்ப் பாடிமுடித்தனள். தூங்கிக்கொண்டிருக்கும்போதே அவள்பாடிய காலத்தில் இத்தகைய விளக்கத்தைப் பார்த்து வியந்த அவள் தாய் உடன்பிறந்தோர்க்கிளையவர் ஒருவர் அவ்விசைப்பெட்டியை அவ்விடத்தினின்றும் அப்புறப்படுத்திப் பாட்டைக் கீழ்மேலாகத் திருப்பிவைத்துக்கொண்டு அவள் யாதுசெய்யப்போகின்றாள் என்று விழித்துப் பார்த்தபடியாய் இருந்தனர். ஆனால், தூக்கத்தின் இடையே நடந்த அப்பாவை வழக்கம்போல் இசைப்பெட்டியினிடம் சென்று அவ்விடம், இசைப்பாட்டுக்குரிய புத்தகம் இருக்குமிடம் எப்படியோ தெரிந்து, அதனை எடுத்து, வைக்கவேண்டிய முறைப்படி வைத்துக்கொண்டு பெட்டியை இயக்கிச் செவ்வையாய்ப் பாடினள். இவ்வளவு, நாம் இளம்பெண்ணின்னோ கண்ணிவில் தூக்கத்தின் நடுவே எழுந்து, முழு இருளில் மூடியகண் மூடியபடியாய் இருந்து, அழகாகவும் அறிவாகவும் கடிதங்கள் எழுதிவைப்பாள். இவ்விடத்தில் வியக்கத்தக்கது மற்றொன்று.

* Tartini. † Lord Thurlow. ‡ Piano.



உண்டு: நள்ளிரவின் இருளில் கண்மூடியவாறே அவள் எழுதிக்கொண்டுபோகையில் எங்கேனும் சிறிது வெளிச்சம் அவளிருக்கும் அறைக்குள் நுழைந்தாலும் அவள் உடனே எழுதமுடியாமல் நின்றுவிடுவாள். முழு இருளில் இருந்தாலோ அவள் தொடர்ந்து எழுதிக்கொண்டு போவாள். அதுநிற்க.

தமது வீட்டுக்குச் செல்லும் வழியிற் சென்ற ஒருவர்* தாம்செல்லும் வழியின் ஓரமாய் உள்ள வேலிக்குச் சிறிது அப்பால் ஒருகொடிமுந்திரிப் பந்தரின்மேல் உச்சியிற் பதுமைபோன்றொன்று அமர்ந்திருக்கக்கண்டார். அப்போது நள்ளிருட்காலம். உடனே அவர் அங்கே பயந்து நின்று அதனை உற்றுநோக்கினர். அஃது அப்பந்தரின்மேல் இயங்குவதுபோற் காணப்பட்டது. அவர் அதனோடு பேசிப்பார்த்தார்; ஆனால், அஃது ஏதும் விடைசொல்லவில்லை. அந்நேரத்தில் ஊர்காவற்சேவகர் ஒருவர் அவ்வழியே வந்தார். உடனே அவர் அச்சேவகரை அருகழைத்து அவ்வுருவத்தைக் காட்டினர். அதனைக் கண்டதும் அச்சேவகர் 'அட! அஃதொரு பெண்பிள்ளை' என்றார். அதற்குமற்றவர் 'அப்படியானால் அவள் தூக்கத்தில் இருக்கவேண்டும்?' என்று சேர்ந்து சொன்னார். இங்ஙனம் அவ்வுருவத்தைக் குறித்து ஒருமுடிவுக்கு வந்தபின், அவர்கள் அத்தோட்டத்தின் கதவைத் திறந்துகொண்டு உள்நுழைந்து அக்கொடிமுந்திரிப் பந்தரண்டைபோய் அப்பெண்ணைக் கூப்பிட்டுப் பார்த்தார்கள்; ஆனால், விடை கிடைக்கவில்லை. அதன்மேல் அவ்வூர்காவற்சேவகர் அப்பந்தரின்மேல் ஏறினார். அதனால் அப்பெண் அவ்விடத்தைவிட்டு மிகவுங்கூர்ச்சியோடும் அதன்மேல் நீளமாய் அப்பந்தரின் ஓரத்திற்சென்று, அங்கிருந்து எட்டடி விலகியிருந்த வேறொரு மரப்பந்தரின்மேல் ஒரேகுதியில் தாவி ஏறினாள். இவ்வருஞ்செயல் அவர்களைப் பெரிதும் வியப்புறுத்தினமையால், அவர்கள் அத்தோட்டத்தின்கண் உள்ள வீட்டாரைப்போய் எழுப்பிவிட்டு, அவர்களது மரப்பந்தலின்மேல் தூக்கத்தில நடப்பவள் ஒருத்தி இருக்கின்றாள் எனத் தெரிவித்தனர். அவர்களெல்லாரும் வீட்டைவிட்டு வெளியேவந்து, எல்லாருமாய் அவளைப் பின்றொடர்ந்து ஓடினார்கள். இவர்கள் இங்ஙனம் பின்றொடர்ந்துவருதலும் அப்பெண் பின்னுமே விரைவாய் அப்பரப்

பந்தலின்மேலேறி, அக்கோட்டைக்குமாளிகையின் தாழ்வாரக் கூரையின்மேல் தாவினாள். பிறகு அவள் அங்கிருந்தபடி அவ் வீட்டின் கூரைமேலேறிச்சென்று, அவ்வீட்டிலிருந்த *புகைப் போக்கியின்மேற் சாய்ந்துகொண்டு நின்றாள். உடனேயாக, ஓர் ஏணியைக் கொணர்ந்து சார்த்தி அவ்வீட்டிற்குரியவர்களில் ஒருவன் அக்கூரையின் ஒருபக்கமாய் ஏறி அதன்மேற்செல்ல, அங்கேக்கூரை பனிக்கட்டி பெய்து மூடியிருந்தமையின் அவன் அப்பெண்ணண்டை போகக்கூடாதாயினான். அதனால் அவன் கீழிறங்கி வந்து, ஏணியை அவ்வீட்டின் முன்புறத்திற் கொண்டு போய்ச் சார்த்த, இப்போது அச்சேவகர் அதன்மேல் ஏறி அப்பெண்ணண்டையிற் போக, அவர் கிட்டவருவதை மேற்பக்கமே இருந்த அப்பெண் அவர் தன்பால் அணுகக்கண்டதும் மறுபடியும் அப்பக்கத் தாழ்வாரத்து உச்சியின்மேலும், அதன் பின் ஒன்றன்பின் ஒன்றாய் அவ்வீட்டுக் கூரையின்மேலும் ஏறி, அங்கிருந்து திரும்பவும் கொடிமுந்திரிப்பந்தரின்மேல் தாவி ஏறி, பிறகு அவ்வாறடங்கக் கண்ணிட்டவாறு நின்று நீந்தி அக்கோட்டத்தின் பின்பக்கமாய்வழிய நடைக்கு வெளிப்புறமாய் ஒருபெருந்தெருவின்வழியே ஓடினாள். உடனே அவர்களெல்லாரும் அவள்பின்னே விரைவாகத் தொடர்ந்தோடிச் சென்று அவளைப் பிடித்தார்கள். பிடித்தபின் அவளை இன்னுமொன்றும் தெரியாது அவளது பணிவை உணர்ந்து அவர்களிடம் அவளை ஒப்புவித்தனர். அப்போது அச்சத்தில் இவளாய் வெளி கிடக்குமிடத்து இரண்டாம்முறை மனதுமென்று அவளுடனி லர் தெரிவித்தனர். இவ்வாறெல்லாம் உயர்மேன இடங்களில் ஏறித்திரிந்தும் அவளுடம்பில் ஒருசிறு காயங்கூட இல்லாதுட லாக்கண்டு எல்லாரும் மிகவும் வியப்படைந்தனர்.

இனி, இக்கூடத்துயிலின்கண் ஒருவர்க்குண்டாகும் அறிவானது நெடுந்தொலைவிலுள்ள நிகழ்ச்சிகளையும் எதிர்காலத்தில் நிகழ்வனவும் வேண்டாதவனிடத்தில் அறியவல்லதாயிருக்கின்றதென்பதற்கு உண்மையாக நிகழ்ந்த மற்றொரு நிகழ்ச்சியினை இங்கெடுத்துக்காட்டுகின்றாம். [illegible] மாப்பாணத்திற்கு இரண்டுகல்தொலைவிலுள்ள கொலவ

* Chimney.



என்னும் இடத்தில் ஓர் ஆங்கிலப்படைத்தலைவரும் அவர்தம் மனைவியாரும் தங்கியிருந்தனர். அம்மம்மையார் யோகநித்திரையைப்பற்றிய பலநூல்களைக் கற்றுவந்தமையிலிருந்து, அம்முறையை ஆராய்ந்துபார்ப்பதில் அளவிறந்த வேட்கையுடையராய், அதற்குத்தக்கதோர் ஆளைத்தேடத், தம்குழந்தைகளுக்குக் கைத்தாயாகவைக்கப்பட்டவள் அறிதுயிலுக்குமிகவும் பொருத்தமுடையவளாகக் கண்டெடுக்கப்பட்டாள். அங்ஙனம் கண்டு எடுக்கப்பட்டஅவளை அவ்வம்மையார் அறிதுயிலிற் போகச்செய்து, தண்ணீர்நிரப்பிய ஒருகண்ணாடிக்குவளையை ஒருமேசைமேல்வைத்து, அதில் உள்ள நீரை உற்றுநோக்கி அங்கே தோன்றுகின்ற தோற்றங்களைத் தெரிவிக்கும்படி செய்வர். இவ்வாறுசெய்து, தொலைவிலுள்ள தம் உற்றார் உறவினர் நண்பர்பால் நிகழ்வனவற்றையெல்லாந் தெளிவாக அறிந்துவந்தார். இதற் பழக்கப்படுத்திய அப்பெண்பிள்ளை அறிவில்லாதவள் அல்லள்; ஆங்கிலம் நன்றாய்ப்பேசவும் எழுதவும் படிக்கவும் செவ்வையாய்க் கற்பிக்கப்பட்டவள். இவள் இங்ஙனம் பார்த்துச்சொல்லிய தொலைநிகழ்ச்சிகளெல்லாம் நாள்வழியே முற்றும் உண்மைகளாய் முடியக்கண்டு அவ்வாங்கிலமாதர்க்கு அவளது தெளிவுக்காட்சியில் முழுநம்பிக்கை உண்டாயிருந்தது. இது இப்படியிருக்க, ஒருநாட்காலையில் பெரும்படைத்தலைவர் ஒருவரை வரவேற்றற்பொருட்டு அவ்வம்மையாரின் கணவர் நேரத்தோடு உணவெடுக்கையில், தம் ஏவலாளைக் கூப்பிட்டுத் தன்னுடுப்புகளை விரைந்தெடுத்து ஒழுங்குபடுத்தி வைக்கச்சொன்னார். அங்ஙனமே செய்யச்சென்றஅவன் சிறிது நேரங்கழித்துப்பின்வந்து திகைப்பும் அச்சமும் உடையவனாய்ப் 'பெருமானே, பணப்பையுள்ள அரைப்பட்டிகையைக் காணேம்' என்று வாய்குழறிக்கூறினான். அதற்கவர் 'பைத்தியமாய்ப்பேசாதே, நீ வெளவாலைப்போற் கண்குருடனாயிருக்க வேண்டும்!' என்று கூவிச்சொல்லிக்கொண்டே தம் இருக்கையினின்றும் எழுந்து உடுப்பறைக்குட்சென்றார். அவர் அதனுட்சென்று தேடிப்பார்த்தும் அதனைக்காணாமையின் மிகவுஞ் சினங்கொண்டு தம் ஏவலாட்களையெல்லாம் வைது, அவர்கள் தாம் அதனை எடுக்கவில்லையென்று மிக்கஅச்சத்தோடும் தெரு

கின்றனர். அதன்பின் அவர் உடையணிகளுடன் அறைக்குத் திரும்பிவந்து, தம்பதிவியையார்க்கு 'இப்போது உன் மேக நீக்குவ்ய தெளிவுக்காட்சியின் உண்மையை எனக்குத் தெரிந்து கொள்வதற்குச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது. அவளை நீ மேலும் தூக்கக் கலக்கமுற்ற போதே அரைப்பட்டிகை யைக் கவனித்துப் பார்' என்றார். அதன்மேல், அவ்வம் மையார் அத்தொழிலை அக்கணமே நடத்த, அவள் எங்கிருக் கின்ற [illegible] என்று கேட்கத் தொடங்கினாள். அதற்கு, அர்தகாரர், [illegible] [illegible] [illegible] தாமே வல்லவ [illegible] முறைப்பாக நடத்திரான்றார்.

அதன்பின், [illegible] தலைவியைச் சேர்ந்து அதனைத் தொடங்கிரான், [illegible] அதன்மேல் [illegible] தம்மைப் [illegible] அதனை [illegible] அதன் [illegible] [illegible] சொல்லியபடி கூறினார். அவள் அந்நிலையிலே [illegible] அதனை [illegible] [illegible] அம்மாதரார் அவளை [illegible] 'எனக்குத் தெரியாது' என்று விடைகூறினாள். அதன்மேல் அவ்வம்மையார் அவள் தலையின் மேலும் [illegible] அதனை [illegible] போகச்செய்து [illegible], அவள் '[illegible] தான் [illegible]' என்றாள். அதனால், அவள் [illegible] தம்மைப் [illegible] வந்ததென்று அவ்வம் மையார் முதலில் [illegible]. இரண்டாவதும் அம்மாதரார்க்கு [illegible] [illegible] [illegible], மேலே, [illegible] அவளை [illegible] தொடங்கினர். 'பெண் ணே, கண்டபோது நம் தலைவர் அரைப்பட்டிகை அணிந்திருந் தாரோ [illegible]' என்று கேட்டார். அவள் சிறிது நேரம் [illegible] இருந்து, 'நான் இப்போது நம் தலைவரைக் காண்கின்றேன்' என்று கனவுபோலக் கூறினாள். இரண்டாவதும் 'அவ



இப்போது உடை உடுக்கின்றார்; இப்போது படைக்கோலம் பூண்கின்றார்! இப்போது அரைப்பட்டிகை அணிகின்றார். ஆ! இப்போது அவர் அறையைவிட்டுப் போகின்றார்' என்றாள். உடனே அம்மாதரார் 'விடாதே அவரைப் பின்தொடர்ந்து செல்' என்று உறுதியாய்ச் சொன்னார். 'நம் தலைவர் குதிரை மேல் ஏறுகின்றார்; இதோ அதனை ஊர்ந்து செல்கின்றார்!' என்று கூறினாள். பின்னும் அவ்வம்மையார் 'ஓர் இமைப் பொழுதும் அவரைவிடாதே' என்று கூறினார். 'ஐயோ!, அவர் மிகவும் விரைவாய்ச் செல்கின்றாரே! எனக்கோ களைப்பாய் இருக் கின்றது!' என்று அப்பெண் பெருமூச்செறிந்தாள். 'விடா தேசெல்' என்று பின்னும் அத்தலைவியார் கட்டளையிட்டார். 'நம் தலைவர் இப்போது இன்னும் மற்றத் தலைவர்களோடு இருக் கிறார். எத்தனையோ படையாட்களும் குடிமக்களும் நிறைந் திருக்கிறார்கள். ஏதோ ஒரு பெரியவேடிக்கை நடக்கின்றது. யாரோ ஒரு பெரிய தலைவர் பயணமாய்ப்போகிறார். அவர்கள் எல்லாரும் தலைவருக்கு அருகே நிற்கிறார்கள்.' என்று அப் பெண் கூறினாள். 'அப்படியானால் சிறிதுநேரம் ஓய்வாய் இரு. ஆனால், நீ கண்கள் நம் தலைவரைவிட்டு இப்புறம் திரும்பாதி ருக்கட்டும்' என்று அத்தலைவியார் சொல்லினார். அவ்வாறே அவள் சிறிது நேரம் பேசாதிருந்து பின்னர்த் 'தண்ணீர்க்கு அருகிலுள்ள ஒரு பெரிய வீட்டினுள்ளே நம் தலைவர் நுழை கின்றார். அவர் இப்போது ஓர் உடுப்பு அறைக்குட் செல்கின் றார். தம்முடைய உடைகளை மாற்றுகின்றார். அவர் தம் படைக் கோல உடைகளெல்லாம் ஒரு தகரப் பெட்டியினுள்ளே வைக் கப்படுகின்றன; ஆனால், பணப்பையுள்ள அவரது அரைப்பட் டிகைமட்டும் வெளியே விடப்பட்டிருக்கின்றது; கடவுக்கு அலைத்தாபுள்ள அவ்வீட்டின் உடுக்கும் அறையின்கண் உள்ள ஒரு முளையின்மேல் அது தொங்குகின்றது.' என்று மொழிந்தாள்.

அதனைக் கேட்டதும் அவ்வம்மையின் கணவர் 'ஆ! அது தான் பாட்டவிதி' என்றுரைத்துத் தம் வேலையாளை யழைத்து 'உடனே ஓர் ஆளையனுப்பி, அவ் அரைப்பட்டிகை அங்கே விடப்பட்டிருக்கின்றதா வென்றுபார்த்து வரச்செய்' என்று

கட்டளையிட்டார். அன்னும் மற்றும் சில சோதனைகள் அவ்விடத்திற் குறிப்பேன்.

அப்பால் அத்தலைவர் 'உண்மையாகவே நான் அதனை [illegible] வீட்டில் விட்டு விட்டேனென்று எண்ணுகின்றேன். நான் கடைசியாக அதனை அணிந்திருந்தது [illegible] இத்தொந்திரவு [illegible] அதனைச் செய்யும்' என்று கூறுகின்றார்.

அதற்கு அம்மையார் [illegible] அதனை உண்மையைக் கண்டேன். [illegible] கண்டுபிடிக்க [illegible] எனக்குத் [illegible] இல்லை' என்றார்.

சிறிது நேரத்தில் [illegible] சென்றேன் [illegible] கேட்டது. அவர்கள் [illegible] கண்டு [illegible] உண்மை [illegible] அவ்வளவு அந்த [illegible] கொண்டு, அவர்கள் இருந்த [illegible] கண்டுபிடிக்கப்பட்டதெனத் தெரிவித்தாள்.

இங்ஙனம் உண்மை [illegible] நித்திரையில் [illegible] ஒருவர் [illegible] அறிவுள்ளவராக [illegible] [illegible] காரணம் [illegible] [illegible] உண்மை [illegible]. இனி, இம்முறையைத் [illegible] பயன்படுத்திக்கொள்ளும் முறைகளிற் சிலவற்றை இங்கெடுத்துக்காட்டுவாம்.

## பயன்படுத்தும் முறைகள்

நித்திரையிலிருப்போர் [illegible] இருக்கையில் இத [illegible] [illegible] பெறுகின்றது. இத்துயிலில் இருப்போர் துயிற்றுவோர் [illegible] [illegible] பார்; அவர் சொல்லியபடியே [illegible] செய்யாமலிருக்க அவர்க்கு



எதிரிடையானது ஒன்றுஞ்செய்யார். துயிற்றுவோர் அவர் கண்களைமூடி 'இவைகளை நாட்டமால் திறக்கமுடியாது' என்று சொன்னால் அவர் அங்ஙனமே அவற்றைத் திறக்கமாட்டாமல் இருப்பார். அவரது நாவைமூடி 'நமது பெயரைக்கேட்டால், அதனைச்சொல்லமாட்டாமல் வாடுகிறீர்' என்று சொன்னால் அவர் அப்படியே இருப்பார். வெங்காயத்தைக்கையிற் கொடுத்து 'இது நல்லமணம் உள்ளதொரு மல்லிகைப்பூ, இதனை முகந்துபாரும்' என்றால் அவ்வாறே அதனை முகந்து மகிழ்வர். இனிய மணமுடையதொரு செங்கழுநீர்ப்பூ வொன்றைக் கையிற்றந்து, இது மணம் இல்லாத எருக்கம்பூ' என்று மொழிந்தால், உடனே அவர் அதனை முகந்துபார்த்து அது மணமில்லாதென்று அருவருப்படைவர். அவரது கையைப்பிடித்து அதில் ஓரிடத்தைக்குறித்துக்காட்டி 'இவ்விடத்தில் இரத்தவோட்டம் இராது, இங்கே உணர்ச்சியிராது, நோவும் இராது' என்று உறுதிச்சொல்லியபின் ஒரு குண்டூசியை எடுத்து அவ்விடத்தே மேற்சதையிற் செருகினால் அவர் அதனைச் சிறிதும் உணரார்; பிறகு அதனைப்பிடுங்கிவிட்டு அவ்விடத்தைவிரலால் தேய்த்துவிட்டால் அங்கே ஓர் அடையாளமுங் காணப்படாது. இங்ஙனமே, இத்துயிலில் இன்னும் பலவேடிக்கைகளை யெல்லாம் செய்துகாட்டலாம். இத்துயிலில் இருப்போர்க்குக் கண்கள் மூடியும் இருக்கலாம், திறந்தும் இருக்கலாம். திறந்திருக்குமாயின் துயிற்றுவோர் கட்பார்வையும் இவரது கட்பார்வையும் ஒன்றையொன்று உற்றுநோக்கியபடியாய் இருத்தல்வேண்டும். மூடியிருக்குமாயின் துயிற்றுவோர் தம்முடைய சொற்களைக் கொண்டு அவரது நினைவைத் தம்வழிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

இனி, இத்துயில் சிறுநோய்களைத்தீர்த்தற்கு ஏற்றதொன்றாய் இருத்தலால் தலைவலி செவிக்குத்தல் கண்நோய் பல்வலி உடம்புநோய் காய்ச்சல் தேள்கொட்டினவலி முதலியவற்றை இதனுதவியாற் போக்கலாம். ஆனால், இதனுதவியால் நோய்களை நீக்கவிரும்புகிறவர் உண்மையாகவே அன்பும் அருளும் நல்லெண்ணமும் செவ்வையான உடம்பும் உடையவராக இருத்தல்வேண்டும். இவ்வினிய இயல்புகள் உடையவர் ஒரு

யாரை அறிதுயிலிற் போகச்செய்து தலையைத்தொட்டு 'இந்நோய் நீங்குக' என்றுசொன்ன அளவிலே, அந்நோய் அவரை விட்டு நீங்குதல் திண்ணம். இதற்குத் தாயானவள் குழந்தையைப்போற்றும் முறையே தக்கசான்றாம். கீழேதவறிவிழுந்து காயம்பட்ட சிறுமகவைத் தாய் பதறியெடுத்து, அக்காயத்தைத் துடைத்துக் கையாற் மெல்லத்தடவி ஆறுதல்மொழிகளால் அதற்கு அந்நோவைப்போக்கித் தன்மடிமேல் அதனைத் தூங்கவைக்கக் காணுகின்றோமல்லமோ? அவள் இவ்வறிதுயிலுக்குரிய முறைகளைக் கல்லாதவளாயிருந்தும் இனிது செய்கின்றாளென உணர்கின்றோம் அல்லமோ? அன்பு மிகுதியும் உடையார்க்கு இனிய சொல்லும் மெல்லென்ற செயலுந் தாமாகவே வருதல் இயற்கை. ஆகவே, பிறர்க்குள்ள நோய்தீர்த்தற் பொருட்டு அவர்பால் அறிதுயிலைவருவித்தற்குப்புகுவோர் மனக்கனிவும் இனியசொல்லும் இனிய செயலும் நோய்நடைப்பும் உடையவராயிருக்கப் பழகிக்கொள்ளல்வேண்டும். அதுவேயுமன்றி, நோய்கொண்டவர்க்கு அவ்வந்நோய் நீங்குதற்குதவும் தூய உணவுகளை மற்றுங்கொடுக்கும் வகைகளையும், அவர் அழுக்கான ஆடைகளை அணியாமலும் நல்லகாற்றும் வெளிச்சமும் இல்லாத குடிசைகளிற்கிடக்கும் அழுக்கான இடங்களில் இராமலும் தம்மைத் தூயராய் வைத்துக்கொள்ளும் முறைகளையும் எடுத்துச் சொல்லுதல் வேண்டும். இக்காலத்து மருத்துவர்கள் பலர் நோயில் கொக்கோ இறைச்சி முதலிய கடுஞ்சார பண்டங்களை அளித்து இரத்த சாரத்தையும், முட்டை மதுவகை முதலான பொருள்களையும், சர்க்கரை அடங்கிய சோடாத்தண்ணீரையும் நோயாளிகளுக்கு மிகுதியாய்க் கொடுத்து வருகின்றார்கள். இவை அத்தனையும் நோயை மிகுதிப்படுத்துவனவேயல்லாமல் அதனைத் தணிப்பன அல்ல என்று இப்போதைக் கலைத்துறையுள்ள நுண்மை கண்டு ஆராய்ச்சிசெய்த புகழ்பெற்ற ஆங்கில மருத்துவர்களே* கூறியிருத்தலால், இவ்வுண்மையை அறியாமல் இவற்றை நோயாளிகட்குக் கொடுத்தல் பெருந்தீமைக்கே வழியாம். ஆகையால், அறிதுயில் முறையால் நோய்

* See for instance Dr. A. Haig's Uric Acid.



நீக்கப்புகுவோர் அந்நோயை நீக்குகையில், அந்நோய்க்குமேலுமேலும் இடஞ்செய்யும் இத்தகையபொருள்களை உணவாகக்கொடாமல் தடைசெய்தல் வேண்டும். அதுநிற்க.

இனி, நோயாளியை இங்ஙனம் அறிதுயிலிற் போகச்செய்தவுடன், நோயுள்ள இடங்களைக் கையால் தொட்டேனும் தொடாமலேனும் கீழ்நோக்கிப் பலகால் தடவுதல்வேண்டும்; இங்ஙனந் தடவுங்கால் ஐந்தாவதான கடைச்சிறுவிரலைச்சிறிது அகற்றி, மற்றை நான்குவிரல்களையும் ஒருங்குசேர்த்து இரண்டுகைகளாலுங் கீழ்நோக்கித்தடவுக. மேலிருந்துதடவிக் கீழ் இறங்கின கைவிரல்களை உதறிவிட்டுத், திரும்பவும் பக்கச்சாய்வாய்க் கைவிரல்களை மேலுயர்த்தி முன்போலவே கீழ்நோக்கித் தடவி விரல்களை உதறுக. விரல்களை இங்ஙனம் உதறுதல் என் என்றால், நோயாளியின் நோயைக் கீழிறக்கியவுடன் அந்நோய் இதனைநீக்குவோர் கைவிரல்நுனிகளின்வழியே பற்றிக்கொண்டு அவரது உடம்பில் ஏறியிருத்தற் பொருட்டேயாம். இங்ஙனம் பலகாற் றடவியபின் நோயுள்ள இடங்களின்மேல் வாயினாற் கீழ்நோக்கி மெல்லனவே மெல்லிய வாய்க்காற்று ஊதற்றுப் படும்படிசெய்க. வாயினால் இவ்வாறு நேரேயூதல் நேராதேல், மெல்லிய தூயதுணியைமடிப்புகளாக மடித்து நோயுற்ற இடத்தின்மேல் வைத்துப், பிறகு இத்துணியின்மேல் வாயை வைத்துக் கதகதப்பு உண்டாகுமாறும் ஊதுதல் சிலநோய்களுக்குக் கட்டாயம் செய்யப்படுதல் வேண்டும். கழலைகள், கட்டிகள், வீக்கங்கள், நரம்புச்சுளுக்குகள், எரிவுகள் உள்ள இடங்களில்இப்படிச்செய்தல் இன்றியமையாததாகும். ஒருகால் வாயை வைத்து ஊதியபின், மறுபடியுங் காற்றை உள்ளிழுக்கவேண்டுமாதலால், வாயை அந்நோயுள்ள இடங்களில் வைத்தபடியாகவே மூச்சை உள்ளிழுத்தல் சிறிதும் ஆகாது. முகத்தைத் தூயகாற்றுவரும் அப்பக்கமாய்த்திருப்பி மூச்சை உள்ளிழுத்துக் கொண்டு மறுபடியும் ஊதுக. 'இந்நோய் தீர்தல் வேண்டும்' என்னும் எண்ணம் மூண்டு நிற்க இங்ஙனம் ஊதுவதால் நோய்தீர்ப்போரது எண்ணத்தால் உந்தப்படும் மின்ஆற்றல் அவரது மூச்சின் வழியோடி நோயாளிக்குள்ள அந்நோய்களை விலகச் செய்யும். இவற்றோடு

'இப்போது உம்மை விட்டு அகன்று, எனது நட்பிலான்
தோன்றுதாய் இருக்கப்போகின்றது. உம்முடைய கால்கள் வலி
மையடைகின்றன. நீர் உண்மைக் கிளர்ச்சி உடையவராகின்றீர். நீர்
நித்திரையின்-நன்றாய்க்-குணம்-பெறுங்காலம்-உமது-உடம்பு-செவ்
வையாகவும்-உடம்பு-உள்ளம்-இரண்டும் யாகவும்-இருக்கக்காண்
பீர்.' என்று பலகால் ஆழ்ந்த சொல்லிய தூயில் திருப்பித்
திருப்பிச்சொல்லுக. இவ்வாறெல்லாம் செய்து, அவரது கண்
ணீர்த்துளி எழும்படி கற்பித்துவிட்டபோதுநீ, அவர் அவ்
வாறே அயர்ந்துறங்கி எழுந்து, தாம் நோய் நீங்கிய
யோகக் கண்டு வியந்து மகிழ்வர். யோகநித்திரைக் காலத்
தில் நோய்களெல்லாம், மேற்கூறிய முறைப்படி குணமடைதல்
அல்லது இயன்ற அளவு பொருந்துமெனக் கருதுவோம். அவர்
நோய் காட்டப்பட்ட குளிர் காய்ச்சல், சுரக்காய்ச்சல், குளிர்க்காய்ச்
சல், வயிற்றுவலி, குன்மக்காய்ச்சல், சூலைவலி, நெஞ்சடைப்
பு, படை, புண், தெறு நோய், நெருக்கம் கப்பு, கண்
நோக்கு, மலச்சிக்கல், சீவி, இருமல் முதலிய
நோய்களுக்கு எல்லாம் மேற்கூறிய முறைகளைச் செய்வது
போதாது. பலநாளும் பலகாலும் மேற்கூறிய முறைகளைத் திரும்
பச்செய்து வரல் வேண்டும். நோய் தீர்ந்த பின் அந்
நோய்கள் தொடர்ந்து கொள்ளாதபடி அவர் தூய்மையுடன் வாய்மை
செய்து கொண்டு பெரு அறுபவம் செய்துவரல் வேண்டும். இந்
த நோய்கொண்ட நோயாளிகட்குத் தனித்தனியாக, பலகாலும்
பார்வை வழிகள் முதலியவற்றை அறிந்து அதுபோலச் செய்யும்
முறை செய்தல் வேண்டும், தூயநினைவும் தூய உறக்கமும் உட்கொள்
ளுதலும் செய்தல் வேண்டும். இவ்வாறும் கண்ணுற்றுதல்
கட்டிக்காத்துக் கொள்ளலும் பின்வாங்காதது. அறிக.

இனி, நினைவற்ற ஆழ்ந்த தூயிலில் இருப்போர்க்குப் புறத்
தே உறுதிமொழி கட்டாயம் என்றுந் தெரியாதெனப்படுவது முன்ன
ரே காட்டினோம். இத்தூக்கத்திலிருப்போர்க்கு இதனைப் பயன்
இவர்களைவிழித்து உணர்வுபெறுமாறு செய்து பலபுதுமை
களை விளைவித்துக்காட்டுவதுடன், தீர்க்கற்கரிய நோய்
களையும் தீர்த்துவிடலாம். இப்படியான விழிப்புக்கு வர
மேல் கண்களைத் திறந்து, தூயிற்றுவோர் சொல்வனவற்றை



உணர்ந்து செய்யும்படி இத்தூக்கத்தில் ஒருவரைச் செலுத்து
கையிலேயே கற்பித்து ஒழுங்குசெய்துகொள்ளல் வேண்டும்.
மேற்கூறிய நினைவுத்தூயிலில் இருப்போரைப் பின்வருமாறு
செய்து இந்நினைவற்ற தூயிலிற் செலுத்துக. கடைச்சிறுவிரல்
தவிர ஏனைவிரல்களைச் சேர்த்தபடியாய் இரண்டுகைகளையும்
நீட்டி அவரது உச்சந்தலைக்குமேற் கீழ்நோக்கிப்பிடிக்க. அங்
ஙனம் பிடித்திருக்கையில், அவ்விரல்களின் நுனிவழியே தம
து மின்னாற்றல் அவரது உச்சந்தலையினுள் இறங்கி அவரை
நினைவற்ற ஆழ்ந்த தூயிலின்கட் கொண்டுசெல்வதாகத் தூயிற்று
வோர் நன்றாய் உறுத்து நினைத்தல்வேண்டும். இப்படிச்சிறிது
நேரம் நினைத்தபின், பிடித்த அவ்விரல்களால் அவ்வுச்சந்தலை
யிலிருந்து அவரது முழங்கால் வரையில் தடவிப், பிறகுபக்கச்
சாய்வாய் அங்கைகளைப் புரட்டி அவர்தம் விலாப்பக்கமாக மேலு
யர்த்தி மறுபடியும் தடவுக. இங்ஙனம் பலகாற் செய்தபின்
'இப்போது-நீர்-ஆழ்ந்த-தூக்கத்திற்-செல்லுகின்றீர். உம்மைச்
சுற்றி-நடப்பது-இன்னதென்று-உமக்குத்தெரியாது. யான்-
சொல்வனவற்றைத் தவிர-வேறொன்றும்-உமக்குத்-தெரியாது.
என்சொற்களைத்தவிர-வேறொன்றும்-உமக்குக்கேளாது. நீர்-
ஆழ்ந்த-தூக்கத்தில்-இருக்கும்-போது, யான்-சொல்லுகிறபடி
யே-செய்வீர்-இப்போது-நல்ல-ஆழ்ந்த-தூக்கத்தில்-இருக்கின்
றீர்-தூக்கம்-அயர்ந்ததூக்கம்-ஆழ்ந்ததூக்கம்-ஆழ்ந்ததூக்கம்.'
என்று திருப்பித்திருப்பி ஆழ்ந்த தீர்மானமான குரலிற் பலகாற்
சொல்லி, இடையிடையே மேற்சொல்லியபடி உச்சந்தலையிலி
ருந்து தடவுதலுஞ் செய்க. இவ்வாறு கால்மணிநேரம் வரை
யிற் செய்தவுடனே அவர் ஆழ்ந்த தூயிலிற்சென்று அயர்குவர்.
இத்தூக்கத்திற்கு அறிகுறியாக ஒரேஅளவாக நெட்டுயிர்ப்
பெறிவர்; காதண்டை எவ்வளவு பெரியவோசையை எழுப்பினும்
அவர் அதனை உணரார்; தூயிற்றுவோர் குரலொலியைத்
தவிரப் பிறிதொன்றும் அவருக்குக் கேளாது. இவ்வடையா
ளங்களைக் கண்டவுடன், தூயிற்றுவோர் பின்வருமாறு அவருக்
குச்சொல்லுக: 'இப்போது-நீர்-நிரம்ப-ஆழ்ந்ததூயிலில்-இருப்பி
ரும்-யான் சொல்வனவற்றை மட்டும்-என்கட்டளைப்படி-கேட்
கின்றீர்' என்றபின் 'என்சொற்களைக் கேட்கின்றீரா?' என்று

வினவுக. முதலிற் சிறிது சும்மாவிருப்பர்; பின்னும் பின்னும் விடாமற் கேட்டால் அவர் 'ஆம், இப்போது கேட்கின்றேன்' என்று தூக்கமயக்கத்தால் மெல்ல மெல்லச் சொல்வர். பிறகு 'உமது ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தபடியே கண்களைத் திறந்துபாரும்' என்று இரண்டு மூன்றுமுறை சொல்லுக. அங்ஙனமே அவர் கண்களைச் சிறிது உழைப்போடு அசைவாசித் திறந்துபார்ப்பர். அப்போது அவர்தம் கண்கள் சிவந்திருக்கும். இதனால், அவர் ஆழ்ந்த துயிலிலேதான் இருக்கின்றார் என்பதனைத் திண்ணமாகத் தெரிந்து கொள்ளலாம்.

நினைவற்ற இத்துயிலில் இருப்போர்க்கு ஐம்பொறியுணர்வுகளும் தம்இயற்கைக்கு மாறுபட்டு நடக்குமாறும் செய்யலாம். யாங்ஙனமெனின், ஒரு தாம்புக்கயிற்றைக் கையிற்கொடுத்து 'இது மெல்லிய ஒருபூமாலை, இதனை நீர் கழுத்தில் அணிந்து கொள்ளலாம்' என்று சொன்னால், அவர் அதனைத் தடவிப் பார்த்துப்புன்சிரிப்போடு அதனைக்கழுத்தில் அணிந்துகொண்டு இருப்பர். பிறகு 'நீர் இப்போது கழுத்தில் அணிந்திருக்கும் இந்த மாலையில் தொடுக்கப்பட்டுள்ள முல்லைமலர்கள் எவ்வளவு நறுமணம் உள்ளனவாயிருக்கின்றன! நீர் இந்த மாலையை முகந்துபாரும். அதன்மணம் உமக்கு மிகுந்த மகிழ்ச்சியைத்தரும்.' என்று சொன்னவுடன், அவர் தம்துகழுத்திற் பூண்டிருக்கும் அந்தத்தாம்புக்கயிற்றைப் பிடித்துத்தூக்கிமுகந்து பார்த்துப்புன்சிரிப்புக்கொண்டு மகிழ்வர். 'அதன் மணம் எப்படியிருக்கிறது?' என்று வினவினால் 'மிகவும் நன்றாயிருக்கிறது!' என்றுசொல்லிச் சொல்லி அதனை முகந்து முகந்து பார்ப்பர். அதன்பிற் சிறிது கற்கண்டை அவர்கையிற்கொடுத்து 'இவை கசப்பான பாகற்காய்விதைகள், இவற்றை நாவில் இட்டுச்சுவைத்துப்பாரும்.' என்று சொன்னால், அவர் அவற்றை வாயிலிட்டுப்பெய்து சுவைத்து 'இவை கசக்கின்றன' என்று முகஞ்சுளித்துச்சொல்லி அவற்றைக்கீழே உமிழ்வர். பின்பு, சில கொம்புப்பாகற்காயை அவரிடந்தந்து 'இவைகள் குளிர்ந்த நல்லசுவையுள்ள வெள்ளரிக்காய், இவைகளைத்தின்றுபாரும்' என்று கூறினால், அவர் அவற்றை வாயிலிட்டு மென்று நன்றாய்ச் சுவைத்து மகிழ்ச்சியோடு உண்பர். இந்த வெள்ளரிக்



காய்கள் எப்படியிருக்கின்றன?' என்று கேட்டால், 'குளிர்ச்சியாய் நல்ல சுவையுள்ளனவாய் இருக்கின்றன' என்று மகிழ்ந்து விடையளிப்பர். இன்னும், மெல்லிய ஒரு சிறுகோலை அவரது கையிற்கொடுத்து, 'இப்போது நீர் முழங்கால்வரையிற் சேறுப் உள்ள இடத்தில் நடந்து செல்லவேண்டியிருக்கின்றது; இந்தக் கோலை ஊன்றிக்கொண்டு என்பின்னே கருத்தாய்நடந்துவாரும்' என்றுசொல்லி, அவரை இருக்கையினின்றும் எழச்செய்து நடக்கவிட்டால், அவர் உள்ளபடியே அக் கோலை ஊன்றிக் கொண்டு, தாம் இப்போது நடக்குமிடம் கருங்கற்றரையாயிருப்பினும், அதனைச் சேற்றுநிலமாகவே கருதிச், சேற்றினின்றும் வருத்தத்தோடு காலைப் பிடுங்கிப் பிடுங்கிவைத்து நடப்பதுபோல் நடப்பர். அதன்பின், அவருக்கு அந்நினைவை மாற்றி வேறொருநினைவினை எழுப்புக. 'நீர் இப்போது அச் சேற்றுநிலத்தை விட்டு நல்லதோர் இடத்திலிவந்து அமைதியாயிருக்கின்றீர்' என்றுசொல்லி அவரது நெற்றியைத்தொட்டுத் தடவினவுடனே அவர் அங்ஙனஞ் சொன்னபடியே அமைதியாயிருப்பாராகலான் அப்போது அவரைநோக்கி 'இதோ உமக்கெதிரே அழகியதோர் ஏரி தோன்றுகின்றது; அதில் தெளிவான குளிர்ந்தநீர் நிரம்பியிருக்கின்றது; அதிலிருந்து வீசுங் காற்று இந்தக் கடுவெயிற்காலத்தில் எவ்வளவு குளிர்ச்சியாயிருக்கின்றது! நீர் இந்தக் கடுங்கோடையில் நீண்டவழிநடந்து களைத்துப்போயிருக்கின்றீர்! இந்த ஏரியில்இறங்கிக் குளித்துத் தலைமுழுகி, இதன்பக்கத்தில் உள்ள அந்தப் பூஞ்சோலையிற் சிறிதுநேரம் இளைப்பாறி இரும்!' என்று திட்பமான குரலின் தெளிவாய்ச் சொல்லுக. அங்ஙனம் சொல்லிய அளவிலே அவர் குறிப்பிட்டமுகமாய் மகிழ்ச்சியோடு உற்றுநோக்குவர். அப்போது பின்னும் 'இந்த ஏரியைப்பார்க்கின்றீரா?' என்று வினவினால் 'ஆம், பார்க்கின்றேன்.' என்பர். 'அந்த ஏரிக்காற்று எப்படியிருக்கின்றது?' எனக்கேட்டால், 'ஆ! அஃது எவ்வளவு குளிர்ச்சியாயிருக்கின்றது!' என்பர். அதன்மேல், அவரை இருக்கையினின்றும் எழச்செய்து 'இப்போது இதிற்சென்று நீரில் இறங்கித் தலைமுழுகும்' என்று விட, அவருள்ளபடியே நீரில் இறங்கித் தலை முழுகுவதுபோற் செய்வர். அதன்பிறகு 'இப்போது நீர் ஏரி

துவர்த்திக்கொண்டு இந்தப் பூங்காவில் இருக்க இன்பமாம்' என்று கூற, உடனே அவர் அங்ஙனமே செய்வர். பின்னர் 'இந்தப் பூங்காவில் உமக்கெதிரே ஓர் இளமரம் ஆ! எவ்வளவு அழகாய்ச் செழித்திருக்கின்றது! பார்த்தீரா?' என்று கேட்பின் 'ஆம், இந்த இளமரம் மிகவுஞ் செழுமையாகத்தான் இருக்கின்றது!' என்று விடையிறுவர். உடனே 'இப்போது அம் மரத்திலிருந்து ஒரு குயில் எவ்வளவு இனிதாகக் கூவுகின்றது! அதனை உற்றுக் கேளும்!' என்று சொல்லுக. அவர் அக் குயிலோசையைக் கேட்பார்போல் காதுகொடுத்து உற்றுக் கேட்பர். அப்போது 'இக்குயிலோசை எப்படி இருக்கின்றது?' என்று வினவுக. அதற்கவர் 'ஓ! இக் குயிலோசையின் இனிமையை என்னென்று சொல்லுவேன்! இஃது எனக்கு அளவிறந்த மகிழ்ச்சியைத் தருகின்றது!' என்று விடையளிப்பர். 'அப்படியானால் நீரும் உமக்குத்தெரிந்த ஓர் இனியபாட்டைப் பாடிக்கொண்டிருமே. அவ்வாறு பாடுவதால் அஃது உமக்கு இன்னும் மிகுந்த மகிழ்ச்சியைத் தரும். மிகவும் இனிது பாடும்' என்றுசொல்லி அவரைத் தொட்டு அசைத்துவிட்டால், உடனே அவர் தமக்குத்தெரிந்த தொருபாட்டைப் பாடுகிற்பர். சிறிது நேரம் பாடியபின் 'பாட்டு மிகநன்றாயிருக்கின்றது, போதும்' என்றுசொல்லி நிறுத்திவிடுக. இன்னும் இவைபோன்ற எத்தனையோ வகையான உருவெளித் தோற்றங்களை யெல்லாம் அவர்பால் விளைவிக்கலாம். இங்ஙனமெல்லாஞ் செய்தபின், இரண்டு உள்ளங்கைகளாலும் மேன்முகமாக விசிறிவிட்டு அவரைத் தொட்டுக்கொண்டே 'பூங்காவிலிருந்து, தமது அறையில் மேல்நோக்கிக் கிடக்கும் நீர் இப்போது விழிக்கப் போகின்றீர்; கண்களைத் திறந்து விழித்துக்கொள்ளுவீர்' என்று சொல்லும்போதே கைகளைத் தட்டி அவரை எழுப்பிவிடுக.

இனி, நாளொன்றுவிட்டு ஒருநாளேனும், கிழமைக்கொருகாலேனும், அன்றித் திங்களுக்கொருகாலேனும் அடுத்தடுத்து வரும் நாட்பட்ட நோய் உடையார்க்கு, நினைவற்ற இத்துயிலை வருவித்து, அந்நோய் வருதற்குரிய காலமுறையை மாற்றிவிட்டால் அந்நோய் நீங்கிவிடுதல் திண்ணம். எண்ணத்தினாலும் நரம்பு பற்றி வரும் நோய்களைத் தீர்த்தற்கு இவ்வறிதுயில் மிகவும்



ஏற்றதொன்றாகும். அத்தகைய நோய்கொண்டாரை இத்துயிலில் நெடுநேரம் இருக்கச்செய்தல் நன்று; ஒருநாள் முழுதும், அல்லது ஒருகிழமை முழுதுங்கூட அவரை இத் தூக்கத்தில் இருக்கச்செய்யலாம். நரம்பின் தளர்ச்சியும் வலியின்மையும் மிகுதிப்பட்டிருக்குங்கால், முடிமுதல் அடிகாறும் இரண்டு கைகளாலும் கீழ்நோக்கி முன்னும் பின்னுந் தடவுக; அதன்பின் நோயுள்ள இடங்களில் மட்டுந் தடவுக. நெஞ்சப்பையின் அசைவு வலிகுறைந்து காணப்படுமானால், அல்லது அஃது ஒழுங்கின்றி நடைபெறுமானால் அவ்விடத்தைத் தடவியபின் வாயினாலூதுக. அதனால் நோயாளியின் உறுப்புகளுக்குக் கதகதப்பும் இனியதோர் உணர்ச்சியுந் தோன்றக்காணலாம். மிகக் கொடிய இரைப்பிருமலையும், தோட்பட்டைகட்கு நடுவே பிடரியிலிருந்து முதுகு நெடுகக் கீழ்நோக்கி மெல்ல ஒரே ஒழுங்காய் ஊதுதலால் தணியச்செய்யலாம். ஆனால் ஒன்று: நோயாளி தமது உடம்பின்மேற் பட்டுத்துணி அணிந்திருப்பாரானால் அதன்மேல் வாயினாலூதிற் பயன் உண்டாகாது; ஆனதுபற்றி அவர் பஞ்சுநூற்றுணி அணியுமாறு செய்வித்து இம்முறையைச் செய்க. அல்லது, அணியை விலக்கிச் செய்யத்தக்கவராயிருந்தால் அவ்வாறு செய்தலும் ஆம். இங்ஙனம் வாயினால் ஊதுங்கால் மற்றொன்றும் உன்னித்தல்வேண்டும். நெஞ்சிலுள்ள மூச்சுப்பை நன்றுநிறையக் காற்றை உள்ளிழுத்து, வாயை நோய்கொண்ட இடத்தின்மேல் நெருங்கவைத்து, உரமாகவும் ஒரே ஒழுங்காகவும் ஊதித், திரும்பவும் மூச்சு இழுக்கும் பொருட்டு, முகத்தை அப்புறமாகத் திருப்புகையில், ஊதின இடத்தினின்றும் வெதுவெதுப்பு நீங்காமைப்பொருட்டு வலது கையை அதன்மேல்வைத்து அதனைப் பொத்திக்கொள்க. மூச்சிழுக்குங்கால் அதனைப்பொத்தியும், திரும்ப ஊதுங்காற் கையை அப்பால் எடுத்தும் இங்ஙனமே பலகாற்செய்க.

இனிப், பல்வலியால் வருந்துவோரை நினைவற்ற துயிலிற் போகச்செய்து, பின்வருமாறு செய்தால் அந்நோயை உடனே தணியச்செய்யலாம். பல்வலி முகத்தில் எந்தப்பக்கத்தில் இருக்கிறதோ அந்த இடத்தின்மேல் வலதுகையைச் சிறிதுநேரம் வைத்தல்வேண்டும். அதன்பிறகு, வலியிருக்கும் பக்கமாய்க்

காதின்மேல் வெளிப்புறத்தை நன்றாக உள்ளங்கையை மூடித் தேய்த்து, அதன்மேல் மறுபடியும் கையை வைக்கவேண்டும்; மற்றக்கையைத் தலைமேல் வைத்து அக்கையினின் மேன்முனையைப் பிடித்துக்கொண்டு, அதன்மேலே காதைத் தளர வைத்துக் கொள்க. அந்நோய் உடனே நீங்கவேண்டுமென்னும் முனைப்போடு இவ்வாறு மூன்று, நான்கு முறை செய்க. வெதுவெதுப்பான ஓர் உணர்ச்சி வலியுள்ள பகுதியின்கண் உண்டாக, உடனே அவ்வலி தணியும். கடைசியாக விரலால், காதின் மேலிட்ட கைப்பகுதியை அகற்றிவிடுக. இம்முறையால் இந்நோயை உடனே போக்கலாமெனினும், இதனை நோய்நீக்கலாகவே ஒன்றாய் மட்டும் முடியாது. மைக்கூட்டில் அழுக்குச் சேராமல் காதோடு முகம் கழுவிவிடுதலும், காலை மாலை இரண்டுவேளை நீரை நன்றாய்க் கொதிக்கவைத்துப், பல்வலியுள்ள பக்கத்தின் உள்ளும் புறம்பும் அவ் ஆவிபடும்படி செய்து செவ்வையாய் அதனை வியர்க்கவைத்தலும் அந்நோயை அறவே தொலைக்கும்.

இனிக், கொடுமையான தலைவலி கொண்டவர்களுக்கும் அதனை உடனே நீக்கச்செய்யலாம். நோயாளிக்குப் பின்னே நின்றுகொண்டு, இரண்டு கைகளையும் நோயாளியின் நெற்றிமேற் சிறிதுநேரம் வைத்து, அங்கிருந்து கண்ணிப்பொட்டுகளைத் தொட்டு அழுத்தியபடியாய் மெல்லப் பின்னுக்குத் தடவிப், பிறகு கைகளை உச்சந்தலைக்குக் கொண்டுபோய், அங்கிருந்து அவற்றைப் பிடித்துவிடுக. அறுபடியும் இங்ஙனமே செய்க. இப்படியாக இருமுகம் பதினைந்து நிமிஷங்கள் செய்தால் தலைவலியின் கொடுமை தணியும். பின்னும் அப்படியே சிறிது நேரம் செய்துவர, வலி நீக்குந் தைலமிட்டுத் தேய்த்தால் அது முற்றும் நீங்கும். மறுபடியுந் தலைநோய் வாராதபடி மலக்குடலைத் துப்புரவு செய்து, நினைவை செவ்வையாகும் பொருட்டுத் தூய நல்லெண்ணெய் அருந்துக.

இனிப், பொருத்துப்பிடிப்பு முதலான நோயால் மிக வருந்துவோர்க்கும் இம்முறையால் அத்துன்பம் எளிதில் நீங்கும். நோய்கொண்ட பொருத்தின்மேற், கைவிரல்களை அதற்கு மற்றை விரல்களைச் சேர்த்து மெதுவாக்கப்பிடித்து, அங்கிருந்து கீழ்நோக்கிக் கடவிக்கொண்டே அவ்வுறுப்பின் முனைக்குவந்ததும்



இரண்டு கைகளையும் உதறிவிட்டுக், கைகளைப் பக்கச்சாய்வாய் மேலுயர்த்தி, மறுபடியும் அங்கிருந்து அவ்வாறே தடவி உதறுக. இங்ஙனம் பலமுறை செய்தால் அவ்வலி இருந்தஇடத்தைவிட்டுக் கீழ் இறங்கும்; அப்புறம் அதனை அறவே நீக்குதல் எளிது. இம்முறையோடு, பொருத்துக்களில் உள்ள பிடிப்பை இளகச்செய்தற்குரிய தைலங்கள் இட்டுத் தேய்த்தலும், அங்ஙனந் தேய்த்தற்குமுன் பிடிப்புள்ள இடத்தை நீராவியிற்காட்டுதலும் பெரிதும் நன்மைபயக்கும்.

இங்ஙனமே வெப்புநோய், காதுவலி, கண்வலி, நீர்க்கோவை, நரம்புவலி முதலானவைகளையும் நினைவுறுதியின் உதவியால் மேற்கூறிய முறைப்படி செய்து எளிதிற்போக்கலாம். இம்முறைகளை ஒருவர் எவ்வளவுக்குச் செய்து செய்து பழகுகின்றாரோ, அவ்வளவுக்கு அவர் அந்நோய்களையெல்லாம் ஒரு நொடிப்பொழுதில் நீக்கவல்லுநர் ஆவர். இம்முறைகளை வழுவாமற் பயிலும் பழக்கமே இந்நோய்களைத் தீர்த்தற்குச் சிறந்த மருந்தாகும். இம்முறைகளை நன்கு பழகித் தேர்ச்சிபெற்ற ஒருவர்* மருந்துகளிற்றீராத சுவாசகாசம் என்னும் ஈளைநோயால்வருந்தின ஒருமாதர்க்கு அதனைத்தீர்த்த உண்மைவரலாற்றினை இங்கே மொழிபெயர்த்தெழுதுகின்றாம்:—

"ஒருநாள் மாலைக்காலத்தில், முப்பத்திரண்டு ஆண்டுள்ள ஒருமாதரைச் சென்றுபார்க்கும்படி அழைக்கப்பட்டேன். அம்மாதர் பதினைந்து ஆண்டுகளாக நிரம்பவுங் கொடுமையான சுவாசகாசத்தால் நிரம்பத் துன்புற்றுவந்தனர். முதன்முதல் அவ்வம்மையார்க்கு அந்நோய்வந்தபோது அதனை ஆராய்ந்து பார்த்தவர் அஃது எலும்புருக்கிநோய் என்றனர். பின்னர்ப் பெருக்கக்கண்ணாடி† வழக்கத்துக்குவந்த சில ஆண்டுகளில் அந்நோயை ஆராய்ந்துகாண அது சுவாசகாசம் என்னும் ஈளைநோயென்று உறுதிப்படுத்தினர். யான் அந்த அம்மையைப் பார்க்கச் சென்றபோது, அவர் தெற்கேயுள்ள ஓர் ஊரிலிருந்து அப்போதுதான் அங்கே வந்துசேர்ந்தனர்; அவ்வூரிற் பல்லாண்

* Dr. Herbert A. Parkin, M. D. See New Thought, Dec. No. 1903. † Microscope.

டுகள் சென்றதங்கியும் அவர்க்கு ஏதும் நன்மைவிளைந்திலது. படுக்கையிற் பல தலையணைகளை அடுக்கி அவற்றின்மேற் சாய்ந்த படியாய் இளைப்பினால் துன்புற்றுக்கொண்டு அவர் உட்கார்ந்திருக்கக் கண்டேன். அவர்தம் வாயிதழ்கள் நீலநிறமாயும் கை கால்கள் சில்லென்றும் இருந்தன. பலமணிநேரங்களாய் நோய்செப்ப முழுமுழுமாக இருந்தது; அன்றைக் காலைமுதல் அவ்வம்மை ஏதோர் உணவும் எடுக்கவில்லை, என்னிடம் அவர் குசுகுசுவென்று பேசுதற்குமேற் பேச இயலவில்லை; அப்படிப் பேசுவதும் மிக்க வருத்தமாகவே இருந்தது; வலிவில் அவர் முற்றுங் களைப்படைந்திருந்தார்.

"யான் அப்படுக்கையின் பக்கத்தே அமர்ந்து, அவ்வம்மையார் கைகளில் ஒன்றை என் கையிற் றாங்கிவைத்துக் கொண்டு 'இப்போது நீங்கள் படுந்துன்பத்தை நீக்கும்பொருட்டு யான் இங்கு வருவிக்கப்பட்டேன்; சிறிதுநேரத்தில் நீங்கள் மூச்சுத் தடையின்றி விடுவீர்களென்று எதிர்பார்க்கின்றேன். இப்போது உங்களிடம் யான் ஒன்றுங் கேளேன்; நான் உங்களை நோக்கிச் சொல்லுவனவற்றில் உங்கள் கருத்தைச் சிறிது நேரம் பதியவைக்கவேண்டுவதுதான் எனக்கு வேண்டியது. உங்கள் கண்களை மூடிக்கொள்ளுங்கள். சிறிதுநேரத்தில் எல்லாம் ஓய்வாயிருக்கும் ஓர் உணர்ச்சி உங்கள் உடம்பெங்கும் பரவக் காண்பீர்கள்; மூச்சு ஓட்டமும் வரவர நீண்டு ஆழ்ந்துசெல்லும். உங்கள்மார்புக் கட்டின்மேலெல்லாம் யான் கையால் தேய்க்கப் போகின்றேன்; அப்படிச் செய்கையில் மூச்சினோட்டம் வரவரத் தடையின்றிச் செல்லும்.' என்றுசொல்லியபடியே அம்மார்பையும் நுரையீரலுக்கு மேலேயுள்ள முதுகையும் மெதுவாய்த் தேய்க்கத் துவங்கினேன்; அந்நேரத்தில், நுரையீரல் வரவரத் தடைதீர்கின்றதெனவும், மூச்சோட்டம் ஆழமாய் நீண்டு செல்கின்றதெனவும், நரம்புவலியும் அச்சமுங் கவலையும் அகன்றொழிகின்றனவெனவும், வரவரத் தூக்கமயக்கமும் உண்டாகின்றதெனவும், அவருக்கு வேண்டுவன நன்மையுந் தூக்கமுமே எனவும், இன்னுஞ் சிறிதுநேரத்தில் சிறிதுசாறு பருகத் தக்களவு மூச்சோட்டம் தடையின்றி நிகழுமெனவும், அதன்பின் தூக்கம் வருமெனவும் கட்டுரைகூறிக்கொண்டே வந்தேன்.



"குறிப்பிட்ட இந்தமுறையாகப் பத்துநிமிஷங்கள் வரையில் தேய்த்தபிறகும், கட்டுரை கூறியபிறகும் நோய்கொண்ட அவ்வம்மையார் மிக எளிதாய் மூச்சுவிடுதலையும் இரத்தவோட்டம் சீர்ப்பட்டுச் செல்லுதலையுங்கண்டு உவப்புற்றேன். அதன்பின், மூச்சோட்டம் எளிதாய் நடைபெறநடைபெறச் சாய்ந்து கொள்ள வைத்திருந்த தலையணைகளை ஒன்றன்பின் ஒன்றாய் எடுத்துக்கொண்டேவந்து கடைசியாக அவரைப் படுக்கைமட்டத்திற் கிடத்துவோம் என்றுங் கட்டுரைத்தேன். முதல் தலையணையை எடுத்துவிட்டவுடன் அவ்வம்மை படிப்படியாய் அதற்கு அடுத்த தலையணையிற் சாயலானார். அந்நேரமெல்லாம், 'தடையில்லா மூச்சோட்டத்'தைப் பற்றியும், 'தூக்கத்'தைப் பற்றியும், 'பசி'யைப்பற்றியுங் கட்டுரைகளைத் தொடர்பாகச் சொல்லிவந்தேன். அவ்வம்மையார் இரண்டாந் தலையணைமேற் செவ்வையாய்ச் சாய்ந்துகொண்டிருக்கையில் நன்றாய்த் தாளித்த சூடானசாறு சிறிது அவர் அருந்தக்கொடுத்தோம். பின்னுஞ் சிறிதுநேரஞ் சென்றபின், மற்றத்தலையணைகளையும் எடுக்கலானேன்; இங்ஙனமாக இருபதுநிமிஷங்களில் எல்லாத் தலையணைகளையும் எடுத்துவிட்டு, அயர்ந்து உறங்கும் அவ்வம்மையைப் படுக்கைமட்டத்தில் கிடக்கவிட்டோம். அவர் இரண்டுமணி நேரந் தூங்கினார். அதன்பின் இன்னுஞ் சிறிது உணவு கொடுக்கப்பட்டது. திரும்பவும் அவர் தூக்கங்கொண்டு படுத்தார். அடுத்த இருபதுமணி நேரத்தில் இரண்டுமணி நேரத்திற்கு ஒருமுறையாக அவருக்கு உணவு தரப்பட்டது.

மலச்சிக்கல், செரியாமை, தூக்கமின்மை, பசியின்மை முதலானவை நீங்கும்பொருட்டுக் கட்டுரை மொழிகள் கூறிய படியாய், ஒவ்வொருநாளுங் காலைமாலை இரண்டு பொழுதாக, இரண்டு கிழமைகள்வரையில் அவ்வம்மையாருக்கு இம்முறையைச் செய்துவந்தேன். உடனே அவர் நலம்பெறலானார். முதற்றரம் இம்முறையைச்செய்தவளவானே அவ்விளைநோய் திரும்ப வரும் அடையாளங்கள் காணப்படவில்லை. அவருடம்பின் ஒவ்வொரு நிகழ்ச்சியுந் திருத்தப்பட்டது. இரண்டு திங்களில் ஏறக்குறைய ஏழுவீசை எடை மிகுதியாகப் பெற்றார். அவ்விளைநோய் அவரைவிட்டகன்று மூன்றாண்டு

கள் ஆகின்றன. அவர்தம் வாழ்நாளெல்லாம் வருந்திக்கொண்டிருந்த பலவேறு இடங்களிலுள்ள நோய்களை அகலச்செய்த தன்மையே அவ்வம்மையார் அந்நோய் முற்றுந்தீரப் பெறுதற்குக் காரணம் என்று யான் கருதுகின்றேன்.”

மிகக்கொடிய காசநோயைத் தீர்த்த அமெரிக்க மருத்துவரின் இவ்வுண்மைவரலாறு கொண்டு, மருந்துகளின் உதவி வேண்டாமலே எத்தகைய நோயையும் இவ்வறிதுயின் முறையால் தீர்த்துவிடலாமென்பது இனிது விளங்குகின்றதன்றோ?

---

## தண்ணீர் மந்திரித்துக் கொடுத்தல்

இனி, உள்ளே பருகுதற்காவது, வெளியே உடம்பிற் றெளித்துக் கொள்ளுதற்காவது, அல்லது தலைமுழுகுதற்காவது தண்ணீர் மந்திரித்துக்கொடுக்கும் வழக்கம் நம்மவருள்ளுங் காணப்படுகின்றது. அயல்நாடுகளிலுள்ள வெள்ளைமக்கள் இம்முறை நோய்தீர்க்குதற்குப் பெரிதும் உதவுதலை நன்கு ஆராய்ந்துபார்த்து இதனையுங் கைக்கொண்டு வருகின்றார்கள். அறிதுயின் முறைகளிற் பழகித் தேர்ச்சிபெற்ற ஒருவர்க்கு நினைவாற்றல் மிகப் பெரிதாயிருக்குமாதலால், அந்நினைவாற்றலால் உந்தப்படும் அவரதுடம்பிலுள்ள மின்சத்து அவர்தங் கண்களின் வழியாகவுஞ் சொற்களின் வழியாகவும் விரல்நுனிகளின் வழியாகவும் புறத்தேயுப் புறத்துள்ள பொருள்களையும் உயிர்களையும் இயங்குமாறும் இயங்காமல் வழிதேக இருக்குமாறும் செய்துவிடுகின்றது. இக்காலத்திலும் இந்நாட்டில் நினைவாற்றல் மிகுந்தோர் பலருளர். அவர் தம்மைவழிபட்டோரை வாழவும், தம்மைப் புறம்பழித்தாரைச் சாவவுஞ்செய்த உண்மை வரலாறுகள் ஆராய்ந்துள்ளார்க்குத் தெரியாமல் இரா. தொழுநோய்கொண்டும், கண்ணறுகளிய கொடுநோய்களால் வருந்தியும் வருந்தினோர் அத்தகைய பெரியாரை வழிபட்டு, அவர் தந் திருநோக்கந் தம்மேற் பட்டவளவிலே அந்நோயை நீங்கப்பெற்றிருக்கின்றனர். வேறு சிலர் அவரைப்பழித்துத் [illegible]



தமையாலே அவரால் வையப்பட்டுத் தாமும் தங்குடும்பமும் வேரோடு அழிந்துபோயினர். நீராவிவண்டியிற் சென்ற அத்தகைய பெரியாரை அறியாமல் அவரைக் கீழிறக்கிவிட்டமையாலே, அவர் அவ்வண்டி ஓடாமல் நிற்கச்செய்த நிகழ்ச்சிகளும், பின்னர் அவரைவேண்டி இரந்தமையாலே அவர் இரங்கி அதனை ஓடச்செய்த நிகழ்ச்சிகளும் இந்நாட்டின்கணுள்ளார் பலர் நேரேகண்டிருப்பர். வெறிகொண்டு எவர்க்கும் எதற்கும் அடங்காமல் ஓடித்திரிந்து உழக்கிய களிற்றியானைகளையுங், குதிரைகள் ஆனைகள் நச்சுப்பாம்புகள் வரிப்புலிகள் முதலியவற்றையும் தமது கட்பார்வையாலும் ஒரு சொல்லாலும் அடக்கிய பெரியோரையும் பலர் பார்த்திருப்பர். அமெரிக்காவில் இம்முறைகளில் நன்கு தேர்ச்சிபெற்ற ஒருவர் ஒருமணிக்கு நூற்றிருபதுமைல் வழிபோகும் ஒரு நீராவிவண்டியை ஒரு நொடியில் ஓடாமல் நிறுத்திவிட்டனரென்று அங்கிருந்துவரும் வெளியீடுகளிற் படித்துணர்ந்திருக்கின்றேம். இங்ஙனமெல்லாம் கண்கூடாக அறியப்படும் உண்மைநிகழ்ச்சிகளிலிருந்து, நினைவாற்றல் மிகப் பெருகுதலால் உந்தப்படும் மின்னாற்றல் அவர்தங் கண்கள் சொற்கள் விரல்நுனிகள் என்னும் இவற்றின்வழிச் சென்று அரும்பெரும் புதுமைகளை விளைக்க வல்லதாதலை இனிதுணர்கின்றேம் அல்லமோ? இவ்வாறு உந்தப்படும் மின்னாற்றலை நோயாளியின் உடம்பிற் செலுத்தினால் அஃது எத்துணை நன்மையை எவ்வளவு விரைவிற் செய்யுமென்பதை நாம் எடுத்துச்சொல்லுதலும் வேண்டுமோ? நோய்தீர்க்கும் நினைவின் முனைப்பினால் உந்தப்படும் மின்சத்தைத் தண்ணீர் ஏந்துவாங்கி அதனை நோயாளியின் உடம்பிற் செலுத்துதற்கு இடைநின்று உதவும்பொருள்களுள் தண்ணீரே மிகச் சிறந்ததாயிருக்கின்றது. என்னென்றால், நமதுடம்பில் முக்காற்பங்கு நீர்ப்பொருளான இரத்தத்தால் நிறைக்கப்பட்டிருக்கின்றது; அவ்விரத்தமே மின்சத்தைத் தன்கண் ஏற்று உடம்பினுள் எங்கும் ஓடி அதனை வளர்த்துவருகின்றது; தண்ணிய மின்சத்தோடு கலந்துலாவுதற்கு அதுபோல் நடவல்ல நெகிழ்ச்சிப்பொருள் ஒன்றே பயன்படுவதல்லது, வேறு கட்டிப்பொருள்கள் அத்துணைப் பயன்படா. ஆகலால் ஆயதண்ணீரில் மின்

சத்தை ஏற்றி அதனை நோயாளி பருகுதற்குக் கொடுத்தலே நன்று. தூய குளிர்ந்த ஊற்றுத்தண்ணீர் கிணற்றுத்தண்ணீர் கிடையாதபோது, பனைவெல்லத்தை மந்திரித்துச் சிறு மாத்திரைகளாக்கி ஒரு சிறுபுட்டியில் அடைத்துவைத்துக்கொண்டு, அவற்றையும் நோயாளிக்குக்கொடுத்து நோய்தீர்க்கலாம். அல்லது, உண்ணும் உணவையும், உடுக்கும் உடையையுங்கூட மந்திரித்துக் கொடுக்கலாம்.

இனித், தண்ணீரில் நோய்தீர்க்கும் மின்சத்தை ஏற்றுமாறு யாங்ஙனமெனிற் காட்டுதும்: நல்லதோர் ஊற்றிலேனும் கிணற்றிலேனும் தூய மட்பாண்டத்தில் முகந்தெடுத்துவந்த தூய குளிர்ந்தநீரை ஒரு மட்குடுவையிற் பெய்து, அதனை இடதுகையில் வைத்துக்கொள்க. பின்பு, ஒளிவடிவாகிய இறைவனுருவை நினைந்து உள்ளத்தை அவ் வொளிவடிவிற் பொருத்தி, அவ்வொளி தமது உள்ளத்திற்பாய்ந்து உடம்பெங்கும் நிறைந்து நிற்பதாக நன்றாய் உறுத்துநினைக்க. அங்ஙனஞ் சிறிதுநேரம் நினைந்தபின், வலதுகையின் கட்டைவிரல் ஒழிய ஏனைவிரல்களை ஒன்றன்மேலொன்று படாமற் குவித்து, இடதுகையில் உள்ள குடுவைத் தண்ணீர்க்குமேற் பிடிக்க; கண்களையும் இமையாமல் நிறுத்தி, அவ்வாறு குவித்த விரல்நுனிகளில் அவற்றின் பார்வையையும் நிறுத்துக; அதன்பின், உடம்பில் நிறைந்த அவ்வொளி தம்முடைய கண்களின் வழியாயுங், குவித்த விரல்நுனிகளின் வழியாயும் ஓடி அக்குடுவைத் தண்ணீரிற் பாய்வதாக உறுத்துநினைக்க; அங்ஙனம் நினைக்கும்பொழுதே அவ்விரல்களை நடுக்குவதுபோல் அசைக்க; அதன்பின் 'நோய்தீர்க்கும் மின்சத்தால் நிறைந்த இத்தண்ணீர் இந்நோயாளியின் இந்நோயை ஒழிக்க!' என்றும் அழுத்தி உள்ளே சொல்லிக்கொள்க. இவ்வாறு செய்தபின், அக்குடுவைத் தண்ணீரை ஒருமணிநேரத்திற்கு ஒருகால் ஒரு வாய்கொண்டளவு பருகக் கொடுத்துவருக. அக்குடுவைத் தண்ணீரை மேல்மூடிகொண்டு இறுக மூடிவைக்கவேண்டும். உள்ளுக்குப் பருகக் கொடுத்தலேயன்றி, ஒருகுடந் தண்ணீரை இங்ஙனமே மந்திரித்துக்கொடுத்து நோயாளி அதனைத் தலை



யில்விட்டு முழுகவுஞ்செய்யலாம். மட்பாண்டங்களுங் கண்ணாடி ஏனங்களுங் களிம்பு துரு முதலிய நச்சுப் பொருள் இல்லாதன வாகையால், இவைகளே இம்முறைக்குப் பயன்படுத்தத் தக்கவை. செல்வமுள்ளவர்கள் பொன் வெள்ளிகளாற் செய்த ஏனங்களைப் பயன்படுத்தலாம். இவ்வாறு நினைவு முனைப்பால் மின்சத்து ஏற்றப்பட்ட தண்ணீர் பொதுவான தண்ணீரினும் வேறுபாடுடைய தென்பதற்கு, மின்சத்து ஏற்றிய தண்ணீரையும் அஃதேற்றாத தண்ணீரையும் வேற்றுமை தெரியாமலே நுண்ணுணர்வு மிக்க ஒரு சிறுமி கையிற் கொடுத்துச் சுவைத்துப் பார்க்கும்படி செய்தால், அவள் அவ்விரண்டற்குமுள்ள சுவைவேறுபாட்டை நன்கறிந்து உரைப்பள். இன்னும், இடதுகையால் மின்சத்து ஏற்றப்பெற்ற தண்ணீர்க்கும், வலதுகையால் மின்சத்து ஏற்றப்பெற்ற தண்ணீர்க்குங்கூட வேறுபாடு பெரிது காணப்படுகின்றது. இம்முறைகளில் நன்றாய்ப்பழகித் தேர்ச்சிபெற்ற ஒருவர் தம் இடதுகையை ஒரு கிண்ணத் தண்ணீரின்மேற் கவிழ்த்துப் பிடித்தபடியாய்த் தமது மின்னாற்றல் அதிற் பாய்வதாக ஓர் ஐந்து நிமிஷநேரம் நினைத்திருக்க; பின்னர் மற்றொரு கிண்ணத் தண்ணீரின்மேல் அங்ஙனமே தமது வலதுகையைப் பிடித்தபடியாய் அவ்வளவு நேரமே நினைத்திருக்க. பிறகு, நுண்ணுணர்வு மிக்க ஒரு சிறுமி கையிற்கொடுத்து அவ்விரண்டையும் ஒன்றன்பின் ஒன்றாய்ச் சுவைத்து, அவற்றிற்குள்ள சுவைவேறுபாட்டைத் தெரிவிக்கும்படி கற்பித்தால், இடதுகைவழியே மின்சத்தேற்றிய தண்ணீர் வெதுவெதுப்பாகவும் வெறுப்பான சுவையுடையதாகவும் இருக்கின்றதெனவும், வலதுகைவழியே அஃதேற்றிய தண்ணீர் இனிதாகவும் பளபளப்பாகவும் இருக்கின்றதெனவும் அவள் கூறுவள். இன்னும் பலகிண்ணத் தண்ணீர்களுக்கு இடையே இங்ஙனம் மின்சத்தேற்றிய கிண்ணம் ஒன்றனையுங் கலந்துவைத்து, அவைதம்மை ஒவ்வொன்றாய்ச் சுவைத்துப்பார்த்து, அவற்றின் சுவைவேறுபாடு தெரிவிக்கும்படி நோயாளி ஒருவர்க்கு மொழிந்தால், அவர் மின்சத்தேற்றிய நீரின் சுவை மற்றவைகளின் வேறாயிருத்தலை நன்குணர்ந்து அதனைத் தெரிந்து சுட்டுவர்.

இனி, மேல் மின்சாரத்தை ஏற்றிக்கொடுத்து நோய்தீர்க்கும் முறையைப் பழகவேண்டுபவர் நோயற்ற தூயவுடம்பும் எல்லார்க்கும் நன்மைசெய்ய விரும்புந் தூயவுள்ளமுங் கடவுளிடத்திற் கனிந்த அன்பும் உடையவராய் இருத்தல் இன்றியமையாததாகும்.

அத்தகையோர் இளைப்புக் களைப்பின்றிக் கிளர்ச்சியோடு இருக்குங்காலங் காலைப்பொழுதே யாகையால், அந்நேரமே இம் முறையால் நோய்தீர்த்தற்கு ஏற்றகாலமாம். மிகவும் அயர்ச்சியடையத்தக்க உழைப்பினை நாள்முழுதுஞ் செய்யாமலிருந்தால், எல்லாம் அமைதியுற்றிருக்கும் மாலைக் காலமும் இதனைச் செய்தற்கு ஏற்றதேயாகும். நோயாளி அமைதிகொண்டிருக்குங் காலமும் இதற்கு இசைந்ததெனவுணர்தல் வேண்டும். அது நிற்க.

---

## தீயபழக்கங்களை ஒழிக்கும் முறை

இனி, மேற்பிறவிகளில் இடையறாது பழகிய பழக்கத்தாற் பலர் பிறக்கும்போதே அப்பழக்கத்தின் பயனாகச் சில தீயதன்மைகளையுடையராய்ப் பிறந்து, வளர்ந்து, நாளேற நாளேற, அத்தன்மைகளுக்கு ஏற்ற தீயசெயல்களைச் செய்து, தாமுந் துன்புறுத்திப் பிறரையுந் துன்புறுத்திப் பிறவிப்பயனை வீணாக்கி மாய்ந்துபோகின்றனர். இவர் பிறக்கும்போதே இத்தகைய தீய இயற்கைகளை உடன் கொண்டுவந்து, பின்னர் அவை மேன்மேல் வளர்தற்கேற்ற தீயோர் சேர்க்கையால் உரங்கொண்டு முற்றி, அதன்பின் எவராலும் மாற்றுதற்கு வாராத கொடியோராய் உலகிற்குப் பல பெருந் தீங்குகளை இழைத்து மாள்கின்றனர். இத்தன்மையோரைத் திருத்துதற்கு அரசரும் அவரால் ஏற்படுத்தப்பட்ட சிறைக்களம் முதலான கருவிகளும் பண்டுதொட்டு உலகின்கண் இருந்திருந்தும், இவரைத் திருத்தி நல்வழிப்படுத்துவது முடிந்தபாடாயில்லை. சட்டத்துக்குப் பயந்தே அடங்கி நடப்போர் பலராகச், சட்டத்தின்பிடிக்கு அகப்படாத நெறிகளில் ஒளித்தும் ஒளியாமலும் நடப்போர் பலப்பலர். உள்ள



டங்கி எரியுந் தீயை ஒருபக்கத்தில் மூடினால், அது மற்றொரு பக்கத்தில் எரிந்து வெளிப்படுதல்போலவும், நிலத்தினுள்ளே வேரின் உரம் நிரம்பவுள்ள ஒரு முண்மரத்தை மேலே எவ்வளவுதான் வெட்டினாலும் அது மேலும் மேலுந் தளிர்த்தல்போலவும், மக்கள் உள்ளத்தே படிந்து மேன்மேல் வலுவாய் வளரும் பொல்லாங்கைச் சுவடறத் துடைத்தற்கு இசைந்த வழிதுறைகளைத் தேடாமற், புறத்தே எவ்வளவு கொடுமையான சட்டதிட்டங்களைச் செய்துவைத்தாலும், அவற்றால், தீய இயல்புள்ளோர் திருந்துவர் என்று கனவிலும் நினைத்தல் வேண்டாம். அகத்தேயூறிய நஞ்சை, அகத்தேசென்று உறிஞ்சும் மருந்தே நீக்கவல்லதாகும். அதுபோற், புறத்துச்செல்லும் உணர்வுகளையடக்கி, அகத்துட்சென்று புகுதையும் 'அறிதுயிற் கட்டுரை'கள் மட்டுமே, ஒருவர் பிறவியிலேயே தம்முடன் கொண்டுவந்த தீய இயற்கைகளை மாற்ற வல்லதாகுமல்லாமல், வேறுபுறத்துமுறைகள் எவையும் அவற்றை மாற்றமாட்டாவென்று திண்ணமாய் உணர்ந்துகொள்க. சிறுபிள்ளைகளாயிருக்கையிலேயே இவ்வறிதுயின் முறைகளால் மக்களைச் சீர்திருத்துதல் எளிது. அவர்கள் வளர்ந்து பெரியராயபின் அவர்களைத் திருத்துதல் அரிது. ஏனென்றால், அவர்கள் தம்மை அறிதுயிலிற் செலுத்துவோர்பால் அடங்கவும்மாட்டார், அவர் சொற்களுக்கு இணங்கவும்மாட்டார். ஆனதுபற்றிப், பெரியோர்க்கு அடங்கி நடத்தற்குரிய பிள்ளைமைப் பருவத்திலேயே இம் முறைகளினுதவியால் அவர்களை நல்வழிப்படுத்துதற்குப் பெற்றோர்கள் அனைவரும் முயல்வார்களாயின் உலகத்தில் தீமைகள் அற்றுப்போம். எல்லாரும் நல்லவர்களாய்த் தத்தம் ஆற்றலுக்கேற்ற புகழ் புண்ணியங்களைச்செய்து, நீண்ட காலம் இம்மையிலும் இன்பவாழ்க்கையில் வாழ்ந்து, மறுமையிலும் அழியாவீட்டின்பத்தைப் பெறுவர்.

தாய்தந்தையர்க்கும் உபாத்தியாயர்க்குங் கீழ்ப்படியாமல் நடந்து கல்வி பயிலாமற் குறும்புசெய்து திரியும் ஒருபையனைத் திருத்துவது யாங்ஙனமெனிற் காட்டுதும்: மேலேகாட்டிய 'அறிதுயிலிற் செலுத்தும் முறைகளில்' ஒன்றால் அவனைத் தூங்கச்செய்து, அவனை நோக்கிப் பின்வருமாறு சொல்லுக:

'இப்போது யான் சொல்லுகிறபடியெல்லாம் நீ கீழ்ப்படிந்து நடக்கக்கடவாய். உன்னை நான் இத்தூக்கத்தினின்றும் எழுப்பியபிறகு நீ உன் பெற்றோர்க்கும் உபாத்தியாயர்க்குங் கீழ்ப்படிந்து நடக்கக்கடவாய். உனக்குக் கொடுக்கப்படும் பாடங்களை நீ கருத்தாய்ப்படித்து அவற்றில் தேர்ச்சியடையக் கடவாய். சுறுசுறுப்பாய் விளையாடவேண்டும் நேரத்தில் விளையாடிக், கருத்தாய்ப்படிக்கவேண்டும் நேரத்திற் படித்து ஒழுங்காக நடக்கக்கடவாய். நீ கற்பனவைகளை யெல்லாஞ் செவ்வையாக நினைவில் வைக்கக்கடவாய். எல்லார்க்கும் இனிய நல்ல பையனாய் நடந்து மென்மேற் செழிப்புடன் வளரக்கடவாய். கெட்ட பிள்ளைகளோடும் கெட்ட பெண்களோடும் நீ கலந்து பழகலாகாது. யான் உன்னை எழுப்பியபின், யான் கூறிய இவைகளையெல்லாம் நினைவுகூரமாட்டாய்; ஆயினும்; இப்போது யான் சொல்லியபடியே நீ எப்போதும் நடக்கக்கடவாய்.' என்று இக்கட்டளைகளைத் திருப்பித் திருப்பி மெல்ல அழுத்தமாய்த் தீர்மானமான குரலிற் பலகாற் சொல்லுக; ஒருகாற் சொல்லியபின் சிறிதுநேரஞ் சும்மாஇருந்து பிறகு மற்றொருகாற் சொல்லுக. ஏனென்றால், அறிதுயிலில் தூங்கியவுடம்பின்கண் நிற்கும் அப்பையனுடைய அறிவில் அங்ஙனஞ் சொல்லியவை நன்றாய்ச் சென்று படிதற்குச் சிறிதுநேரம் வேண்டும். இம்முறை வழுவாமற் காலைமாலை இரண்டுவேளையும் ஒரு கிழமையளவில் அவனை அறிதுயிலிற் செலுத்திக் கட்டளைகூறி எழுப்பிவந்தால், அவன் தீயதன்மைகளெல்லாம் மாறி முற்றும் நல்லபையனாய்க் கல்வியிலும் நடக்கையிலும் மற்ற எல்லா நல்வகைகளிலும் மேம்படுவான்.

இங்ஙனமே, புகையிலைச் சுருட்டுப் பிடிப்பதனையும், கள் சாராயங் குடிப்பதனையும், மூக்குப்பொடி போடுவதனையும், இன்னும் பொய் சொல்லுதல் களவு செய்தல் முதலான ஆகாதன பல செய்கைகளையும் மேற்சொல்லியபடியாகவே அறிதுயிலிற் போகச்செய்து, அத்தீயபழக்கங்களை விடும்படியாகக் கட்டளை கூறித், திருத்தி, நல்வழிப்படுத்தலாம்.

இனி, நோய்களிற் சேராத ஒரு குறைபாடு சிலரிடங் காணப்படுகின்றது. அது 'திக்குவாய்' எனப்படுவதாம். ஒரு



சொல்லைச் சொன்னபின் அதற்கடுத்த சொல்லைத் தொடர்ந்து சொல்லுதற்கு இடங்கொடாமல் வாய் மிகத்தெற்றுதலின், அக்குறைபாடுடையோர் அதனால் மிகத் துன்புறுகின்றனர். ஆகையால், அதனை நீக்குதற்குரிய ஒரு முறையைமட்டும் இங்கே விளக்கிக் காட்டுகின்றாம். தெற்றித்தெற்றிப் பேசுந் திக்குவாயுடைய ஒருவரை வருவித்து, அவரை ஆழ்ந்த தூக்கத்திற் போகச்செய்க. அதன்பின் அவரைநோக்கி 'நீர் எல்லோரும் பேசுவதைப்போற் செவ்வையாய்ப் பேசுவீர்; உமக்கு அதில் ஏதோர் இடைஞ்சலும் இராது; தங்குதடை இல்லாமல் உமக்குப் பேசவரும்; எப்போதும் நன்றாய்ப் பேசுவீர், நன்றாய்ப் படிப்பீர்; சொற்களைத் தொடர்பாக எளிதாகச் சொல்லுவீர், படிக்கும்போதும் ஒவ்வொன்றையுந் தொடர்பாக நன்றாய்ப்படிப்பீர்.' என்று பலமுறை திருப்பித் திருப்பி அழுத்தமான குரலில் விரையாமல் மெதுவாய்ச் சொல்லுக. இங்ஙனங் கட்டளைகூறியபின், அவரை அவ்வறிதுயிலில் வைத்துக்கொண்டே, அவர்தங் கண்களைமட்டுந் திறக்கும்படி கற்பிக்க; உடனே அவர் தங் கண்களைத் திறப்பர்; அவர் படிக்கத்தக்க ஒரு புத்தகத்தை அவரது கையிற்கொடுத்து அதில் ஒரு பகுதியைப் படிக்கும்படி கற்பிக்க; அறிதுயிலில் இருந்தபடியாகவே அவர் அதனைப்படிக்கையில் வாய் திக்காமற் படிப்பர். எவ்வளவு திக்கிப்பேசுகிறவரும் அறிதுயிலில் இருக்கையில் தெற்றுப்படாமற் படிப்பதை அப்போது காணலாம். பிறகு அவர் தம் கண்களை மூடிக்கொள்ளும்படி செய்து, இங்ஙனமே அவர் எப்போதுந் திக்காமற் செவ்வையாய்ப் படிப்பரென நான்கைந்துமுறை திருப்பித் திருப்பிச்சொல்லிட்டு, பின்னும் ஓர் ஐந்து அல்லது பத்து நிமிஷவரையில் அவரை அமைதியாய்த் தூங்கவிட்டு, அப்புறம் அவரை எழுப்பிவிடுக.

இனிச், சிறுவர்களையே யன்றி ஆண்டில்முதிர்ந்த ஆடவரையும் மகளிரையுங்கூட, மேற்காட்டியவாறே அறிதுயிலிற் போகச்செய்து நாம் வேண்டியபடியெல்லாம் நடக்கும்படி கற்பிக்கலாம். இவ்வாறெல்லாஞ் செய்து பயன்பெறுதற்கு நினைவோடுகூடிய அறிதுயில் ஆகாது; நினைவு அற்ற ஆழ்ந்த அறிதுயிலே இவைகளைச் செய்தற்கு ஏற்றதொன்றாதலால்,

அதனை வருவித்தபிறகே இக் கட்டளைகளைச் சொல்லுதற்கு முயலல்வேண்டும். இத் தூக்கினின்று எழுப்பப்பட்டபின், துயிற்றுவோர் சொல்லியவைகளை விழிப்புநிலையில் தெரியாமலிருக்கும்படிக்கும், ஆனாலும் அவர் அப்போது சொல்லியபடியே எப்போதும் நடக்கும்படிக்கும் வற்புறுத்து உரைத்தல் இன்றியமையாததாகும்.

அங்ஙனமாயின், அறிதுயிலுக்குச் செல்லமாட்டாத அல்லது அறிதுயிலிற்செல்ல விருப்பமில்லாத நோயாளிகளை அல்லது மற்றவர்களை அதன்கட் செலுத்துமாறு யாங்ஙனமெனின்; ஒருவர்க்கு நாலைந்துமுறை முயன்றும் அறிதுயிலை வருவித்தல் கூடாதாயின், ஒருகிழமை அன்றி இரண்டுகிழமை வரையில் விடாமல் நாடோறும் முயன்றுவரின் அவர்க்கு அதனை வருவித்துவிடலாம். அறிதுயிலிற் செல்லமாட்டாதவர் ஒருவரும் இல்லையாகையால், எல்லார்க்கும் அதனை வருவிக்கலாம் என்பது திண்ணம். ஆனால், ஒரு சிலர்க்கு உடனேயும், வேறு சிலர்க்கு இரண்டொருநாளும், மற்றுஞ்சிலர்க்கு ஒருகிழமையிலும், பின்னுஞ் சிலர்க்கு இரண்டுகிழமையிலும் அதனைத் தொடர்ந்து முயன்று வருவிக்கலாம். மேலும், துயிற்றுவோர் அறிதுயில்வருவிக்கும் முறைகளில் நன்கு பழகிப் பழகித் தேர்ந்திருப்பாராயின், அவர்க்கு அப்பழக்கத்தால் அவ்வாற்றல் மிக முதிர்ந்திருக்கும். அத்தகையவர் ஒருவனையோ அன்றி ஓர் ஆயிரவரையோ ஓரிடத்தில் ஒருநொடிப்பொழுதில் அறிதுயிலிற் செலுத்தமாட்டுவர்.

அங்ஙனம் அது கூடாதாயினும், அறிதுயிலிற் செல்லச் சிறிதும் விருப்பமில்லாதவர்க்கு அதனை வருவித்து அவரைத் தம்வழிப்படுத்துமாறு எங்ஙனமெனின்; ஒவ்வொருவர்க்கும் நாடோறும் இயற்கையான தூக்கம் வருவது உண்டாகையால், அவர் அத்தூக்கத்தில் இருக்கையில், அவர் அறியாமலே அவ்விடஞ்சென்று, அதிலிருந்து அவரை அறிதுயிலுக்குப் போகச் செய்யலாம். அதற்குரியமுறை யாதெனின்; அதனையுங் காட்டுவாம்: அறிதுயிலிற் செல்ல விருப்பமில்லாத ஒருவர் இயற்கையான தூக்கத்தில் நன்றாய் அயர்ந்துறங்கும்போது, துயிற்றுவோர் ஏதோர் அரவமுஞ் செய்யாமல் அவர்பக்கத்தில் அமைதி



யாய்ச் செல்லல்வேண்டும். சென்று மிகவுந் தாழ்ந்தகுரலிலே அவரை நோக்கித் “தூங்கும், நன்றாய் அயர்ந்து தூங்கும், அஞ்சவேண்டாம், நீர் விழிக்கக்கூடாது, ஆழ்ந்த அயர்ந்த தூக்கத்திற் செல்லும், தூக்கம், தூக்கம், அயர்ந்த தூக்கம், ஆழ்ந்த தூக்கம்” எனத் திருப்பித் திருப்பிப் பலகால் உறுதி அழுத்தமாய் மெதுவாகச் சொல்லுக. இங்ஙனஞ் சொல்லுகையில், அவர் விழித்தெழும் அடையாளங்கள் காணப்படுமாயின், அப்போது அதனை நிறுத்திவிடுக. அப்படியல்லாவிட்டால், உமது வலது கையால் அவரது தலையைத்தொட்டு ‘எனது குரல் ஒலியைத் தவிர வேறு எந்த ஒலியையும் நீர் கேட்கமாட்டீர்; நீர் மிகவும் அயர்ந்து ஆழ்ந்து உறங்குகின்றீர்.’ என்றுசொல்லுக. அதன்பிறகு அவரைநோக்கி ஏதேனுங் கேள்விகேட்கலாம். ‘இப்போது மணி என்ன?’ என்றாயினும், ‘இப்போது நீர் ஒரு முல்லைப்பூவை முகருகின்றீர், அதன்மணம் எப்படியிருக்கின்றது?’ என்றாயினும் வினவுக. அவற்றிற்கு அவர் விடைசொல்லாமலிருப்பாராயின், விடைகூறும்படி வற்புறுத்து உரைக்க. பின்னர் விடைகூறுவர். மணி இன்னதென்றாவது, முல்லைப்பூ நன்றாய் மணக்கின்றதென்றாவது அவர் மொழிகுவராயின், அவர் விழித்துக்கொள்ளாமல் நினைவற்ற அறிதுயிலிலேதான் இருக்கின்றனர் என்று உறுதிப்படுத்திக்கொள்க. அதன்பின்னும் ஆழ்ந்த தூக்கத்திற்குச் செல்லும்படியாகச் சிறிதுநேரங் கட்டளைகூறி, அப்புறம் அவரை நும்வழிப்படுத்திக் கொள்வதற்கு எவ்வெவற்றைச் சொல்லல்வேண்டுமோ, அவைகளையெல்லாம் அவரைநோக்கிக் கட்டளைத்துக் கூறுக. அதன்பிறகு, அவரை எழுப்புதற்குமுன் ‘நீர் விழித்துக்கொண்டபின் யான் இப்போது சொல்லியவைகளை அறியமாட்டீர்; ஆயினும், இப்போது யான் சொல்லியபடியே நீர் எப்போதும் நடப்பீர்’ என்று உறுத்திச் சொல்லிவிட்டு, ‘இனி நீர் இயற்கையான தூக்கத்தில் தூங்கி விழிக்கவேண்டும்நேரத்தில் விழித்துக்கொள்வீர்’ என்று முடித்துக்கூறி அப்புறம் அகல்க.

இவ்வாறன்றி மற்றொருமுறையாலும், இயற்கைத் தூக்கத்திலிருப்போரை, அறிதுயிலிற் செலுத்தலாம். அதாவது: மேற்காட்டியபடி அவர் அருகிற் சென்றவுடன் வாயாற் கட்

டுளை கூறுவனநிறுத்திக் கைகளால் அவரைத் தொடாமலே முக்கால் விரற்கடை அகலநிறுத்தித் தடவுதலாமேயாம். இரு கைகளின் கடைச் சிறுவிரல்களையும் அகலநிறுத்தி, மற்றவிரல்களைச் சிறிது நெருங்கவைத்துக் கீழ்நோக்கிப்பிடித்து, உச்சந்தலையிலிருந்து முகத்தின்மேலாகக் கீழிறங்கி நெஞ்சுவரையிற் கீழ்நோக்கித் தடவிப், பின்னருந் தடவுதற்குக் கைகளை உயர்த்துங்கால் அப்படியே உயர்த்தாமற் பக்கச்சாய்வாய்த் திருப்பி உயர்த்தி, மறுபடியும் உச்சந் தலையிலிருந்து நெஞ்சுவரையில் தொடாமல் முக்கால்விரற்கடை கைகளை எட்டவைத்துத் தடவுக; இங்ஙனம் பத்து அல்லது பதினைந்து நிமிஷங்கள் வரையில் தடவியபின், மிகமெல்லிய குரலில் 'தூக்கம், தூக்கம், ஆழ்ந்த தூக்கம், அயர்ந்த தூக்கம், நீர் மிகவும் அயர்ந்து தூங்குகின்றீர்' என்று கட்டளைகளைப் பலகால் மெதுவாகச் சொல்லுக. இது முடிந்தபின், மெதுவாக அவரது நெற்றியைத் தொட்டு அவரை அவ்வழிப்படுத்துதற்குச் சொல்லவேண்டியவற்றையும் பிறவற்றையும் மேற்காட்டியபடியே செய்து அப்பாற்செல்க. இவ்வாறு செய்தால், தம்மோடு இணங்காமல் தமக்கு எவ்வளவு மாறுபட்டு நிற்போரையுந் தம் விருப்பப்படி நடக்கச்செய்யலாம்.

இம்முறைகளால், நாட்பட்ட கொடிய நோய்களையுந் தீர்க்கலாம்; பொல்லாக் கட்டிகளாலும் ஆறாப்புண்களாலும் அல்லும் பகலுந் துன்புறுவோர்க்கும் அத்துன்பமுஞ் சிறிதுந் தெரியாதபடி அவைகளை அறுத்து ஆற்றியும்விடலாம். இவற்றிற்கு உண்மையாக நிகழ்ந்த சில நிகழ்ச்சிகளை இங்கெடுத்துக் காட்டுவாம். அறிதுயிலை வருவித்து, அதனால் ஒருவரைத் தம் விருப்பப்படி நடக்கச் செய்யலாம் என்பதை, இம் முறைகளிற் பெரிதுந் தேர்ச்சிபெற்று, இவற்றைக் காளிகட்டத்தில்* உள்ள ஆங்கில மருத்துவக்கழகத்தில் நோயாளிகள்பால் செய்துபார்த்து, உலகிற் பரவச்செய்த ஆங்கிலமருத்துவர் ஒருவர்† தாம் நேரே கண்டு எழுதிய ஒரு நிகழ்ச்சியிலிருந்து நன்கு அறியலாமாதலால், அவரெழுதிய அப்பகுதியை இங்கே மொழிபெயர்த்து வரைகின்றாம்:—

* Calcutta. † Dr. James Esdaile, M. D.



இரண்டு கிழமைகளுக்குமுன் ஊகுளிக் கடைத்தெரு* வழியாடே வண்டியிற் செல்கையில், அங்குள்ள ஊர்காவற் சாவடிக்கு† எதிரே ஒரு திரண்ட கூட்டமான ஆட்கள் நிற்கக் கண்டேன். அங்கே நடப்பது என்னவென்று யான் கேட்க, ஒரு பெரியஆள் ஒரு சிறுவனைத் திருடிக்கொண்டு போகையிற் கண்டுபிடிக்கப்பட்டா னென்றும், காவற்கூடத்தி னுள்ளே அவ்விருவரும் இருக்கின்றனர் என்றும் சிலர் சொன்னார்கள். இதைக்கேட்டதும், யான் அக்கூடத்தினுட் சென்று, பத்து அல்லது பன்னிரண்டு ஆண்டுள்ள ஒரு சிறுவன் தன்னை மீட்டவனாகச் சொல்லப்பட்ட ஓர் ஆண்மகன் மடிமீது அமர்ந்திருக்கக் கண்டேன். அந்தப்பையன் அரைவாசி மயக்கமுடையவனாயும், அவன் கண்களில் ஒன்று வீக்கமுடையதாயும் இருந்தமையால் அவனை மருத்துவக்கழகத்திற்கு எடுத்துச் செல்லும்படி ஏவினேன். அதன்பிறகு அவனைத் திருடிச்சென்ற கள்வனை என்னிடங் காட்டினர். அவன் தான் ஓர் அம்பட்டன் என்றான்; அவன் தொழிலுக்குரிய கருவிகள் அடங்கிய அடைப்பம் ஒன்று என்னிடம் கொணர்ந்து வைக்கப்பட்டது. இதனை நான் கருத்தாய் ஆராய்ந்துபார்த்தேன்; ஆனால், அவை அம்பட்டர்க்குரிய வழக்கமான கருவிகளாகவே இருந்தன. அந்தப் பையனோ விரைவில் தன் உணர்வு தனக்கு வரப்பெற்றவனாகிப் பின்வருங் கதையை என்னிடஞ் சொன்னதும் அல்லாமல், திரும்ப நடுநிலை மன்றத்திலும் நடுவர்க்கு எதிரிலும் அங்ஙனமே சிறிதும் பிசகாமற் சொன்னான். அச்சிறுவன், தான் அன்று விடியற்காலையில் ஒரு வீட்டிற்கு அருகிலுள்ள வயலண்டை சென்ற சிறிதுநேரத்திற்குப் பிறகு, பாட்டையிற் சென்ற ஒரு புதுமையான ஆண்மகன் அதிலிருந்து தன்கிட்ட வந்தனனென்றும், கிட்டவந்ததும் சில மந்திரமொழிகளைச் சொல்லத்தொடங்கின னென்றும், அதன்பின் அவன் தன் கைகளைப் பிடித்துக்கொண்டு தன் கண்களின்மேற் குறுக்காகக் கையைத்தடவத் தான் உணர்வு மயங்கிவிட அவன் தன்னை வழிநடத்திச் சென்றதுமட்டும் நினைவிருக்கின்றதென்றான்; அவனது வலுக்கட்டாயம் இன்றியே தான் அவனைப் பின்பற்றிச்

* Hooghly bazaar. † Police Office.

செல்லவேண்டியதாயிற் றென்றும் புகன்றான். மறுபடியும் தன் உணர்வு தனக்கு வரப்பெற்றது, தான் அவ்வாலிபனை எதிர்ப்பட்ட இடத்திற்கு இரண்டுமைல் தொலைவிலுள்ள சந்திர நாகர்க் கோட்டை வாயிலண்டையேயாம் என்றும் கூறினான். இவ்வளவுதான் அவன் சொல்லியது. அந்த ஆளோடுகூட வருகையில் அச்சிறுவன் வழியொன்றும் உண்ணவுமில்லை, பருகவுமில்லை; அந்தப் பையனுக்கு உடையவனும் கேள்வனும் அச்சிறுவன் ஒழுங்காக நடக்கையுந் திறமையும் உள்ளவனாயும், இரப்பாவது தூக்கத்தில் நடக்கும் வழக்கமாவது அவனுக்கு ஒருநாளும் இல்லையெனவும் மொழிந்தார்கள். அந்தப் பையனை மீட்டவனென்று சொல்லப்பட்ட மற்றோர் ஆடவனை ஆராய்ந்தேன்; அவன் அச்சிறுவனை அன்று காலையில் தான் பார்க்கையில் அவன் ஒரு புதுமையான ஆளைப் பின்தொடர்ந்து செல்ல, அதற்கு முன்னமே தான் அப் பையனை நன்றாய்த் தெரிந்தவனாதலால், அவனை வழிமறித்து 'நீ எங்கே செல்கிறாய்?' என்று கேட்டும் அச்சிறுவன் ஏதொரு விடையும் பகராமல் மயங்கியிருக்கக் கண்டு, தான் வெருண்டு, தண்ணீரைக் கொண்டுவந்து அவனது முகத்தின்மேற் றெளித்தும், வேறு சில மாற்றுகளைச் செய்தும் அவனுக்கு அம்மயக்கந் தெளிய வைத்ததாகவும், மறுபடியுந் தான் அப்பொடியனை வினவ, அவன் தான் அங்குவந்தது எவ்வாறு என்பது தனக்குத்தெரியவில்லை, தான் முன்னறியாத அப்புதியவனை யப்படிப் பின்தொடர்ந்து செல்லலாயிற்று என்று கூறியவுடன் திடுக்கிட்டுமேல் விழுந்து கண்ணைக் கசப்பிக்கொண்டதாகவும் எடுத்துரைத்தான். இதற்கிடையில், அப்புதியவன் அவ்விடத்தைவிட்டு ஓடினமையிற் கண்டுபிடிக்கப்பட்டு மன்றுக்குக் கொணரப்பட்டான். அதன் பிறகு அவ்வப்பட்டனை உள்ளே கட்டிவிட்டேன்; அவன் சொன்னதாவது: அந்தப்பையன் அழுதுகொண்டு மயக்கத்தோடிருக்கையில அவனைத் தான் பாட்டையில் எதிர்ப்பட்டதாகவும்; அவனுக்கு யாது துன்பம் நேர்ந்ததென்று தான் வினவ அவன் தான் வழிதப்பி வந்துவிட்டதைச் சொன்னதாகவும், அது கேட்டு யவர்காவற் சாவடிக்குத் தன்னோடுகூட வந்தால் அங்கிருந்து ஒரு காவற்காரன் அவனை வீட்டிற் கொண்டுபோய்ச்



சேர்ப்பனென மொழிந்ததாகவும் புகன்றான். எந்தப்பக்கம் உண்மையோ அஃதிருக்கட்டும்; வியப்பான இச்செய்தி என் கருத்தைக் கவர்ந்தது; அவ் ஆளினது தொழிலும் எனக்கு ஐயத்தை எழுப்பிவிட்டது. இந்த நாட்டின்கண் உள்ள அம்பட்டர்கள் தமதுதொழிலை மெதுவாகச் செய்கையில் ஆட்களைத் தூங்கச்செய்வதுண்டென்று யான் கேள்விப்பட்டிருக்கேன். தம்மை மயக்கிவிட்ட ஆண்பாலாரின் பின்னே மயக்குண்ட மக்கள் தொடர்ந்துசென்ற செய்திகள் இந்நாடெங்கும் பரவியிருக்கின்றன; அங்ஙனம் மயங்கிச்சென்றவர்கள் பெரும்பாலும் பெண்மக்களேயாம். உலகமெங்குமுள்ள அப்பட்டர்கள் கூர்த்தஅறிவும் எதனையும் உற்றுநோக்கும் இயல்பும் உள்ளவர்கள். அவர்களது தொழிலானது அறிதுயில் வருவித்தற்கு ஏற்ற உணர்ச்சியுடைய உடம்பின் மேற்புறத்தை அவர்கள் தொடுதற்கு இடஞ்செய்கின்றது. ஆதலின், மிகப் பழைய காலத்திலேயே அவர்கள் அறிதுயிலாகிய மறைபொருளைத் தெரிந்திருத்தல் வேண்டும்; அவர்களின் கைத்தொழிலுக்குரிய புதைபொருளாய் அஃது அவர்கட்கு வந்திருக்கவேண்டும். இப்போது நேர்ந்த இம் முட்டுப்பாட்டினின்று வெளிப்படுதற்கு இரண்டு வழிகள்தாம் எனக்குத் தென்படுகின்றன; அப்பையனிடத்துக் காணப்பட்ட மயக்கம் அவனுக்கு இயற்கையாகவரும் நடைத்துயில்* ஆகவாதல், அன்றிச் செயற்கையாக வருவிக்கப்பட்ட நடைத்துயிலாக வாதல் இருத்தல் வேண்டும். அது, பிற்கூறியதாக இருந்தால் அறிதுயின்முறைகளால் அன்றி வேறெங்ஙனம் அது வருவிக்கப்படும்? தற்செயலாக யான் இந்நிகழ்ச்சியைக் காண நேர்ந்தமையால், இங்ஙனம் ஓர் ஆளைக் கவர்ந்துகொண்டு செல்லும் முறை இருக்கக்கூடுமென்பதைப் பற்றிச் சான்றுபகர யான் அழைக்கப்படுவேனென முன்னதாகவே அறிந்துகொண்டேன்; நடைத்துயிலைப் பற்றியதொன்றும் யான் அறிந்ததில்லையாதலால், முதலில் எனக்குள்ள குறையைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டு யான் அதனை ஆராயவேண்டியவனானேன். இஃது அறிதுயின் முறைகளால் வருவிக்கக்கூடியதாயிற், பெரியதோர் ஆற்றல் சிறிய

* நடைத்துயில்—Somnambulism.

ளைத் தன்னுள் அடக்கி நிற்றல்பற்றி, அதனைப்போற் செயற்கையான நடைத்துயிலை யான் வருவிக்க வல்லனாவேன் என எண்ணினேன். இம்முறையால் அடையக்கூடுமாயின், இயற்கை நடைத்துயிலைப்போற் செயற்கையானதொன்றை வருவித்தற்பொருட்டு, உணர்வற்ற நிலையில் ஒருவனைக் கொண்டுசெல் அதற்கு இடையே யான் நின்றிடல் வேண்டும்.

"ஆகவே, யான் சிறைக்கோட்டத்தின்கண் உள்ள மருத்துவக்கழகத்திற்குச் சென்று அங்குள்ள ஒருவனை அறிதுயிலிற் போகச்செய்தேன். இவனுக்குக் கண்ணொளிவு தீர்த்தல்வேண்டி இவனை இதற்குமுற் பலகால் நினைவற்ற அறிதுயிலிற் செலுத்தியிருக்கின்றேன்; அக்காலங்களிலெல்லாம் உணர்வற்ற நிலையினளவுக்கு அவனை அறிதுயிலிற்கொண்டு செய்து, மிகக் குறைவாய்க் காதுகேட்கவும் உடம்பசையவும் மட்டும் அவனுக்கு வல்லமை சிறிது விட்டுக்கொடுத்தேன். இப்போது அவனுக்கு நினைவற்ற அறிதுயிலை வருவிக்காமே, சிறிதுணர்வுக்கு இடம் விட்ட இந்நிலையில்வந்து அவனைவிடையேன். அவனும் அந் நடைத்துயிலில் நடக்கத்துவங்கி, அக்கழகத்தின் மற்றொரு மூலைவரையிற் சென்று சுவரண்டைபோய் நின்றான்; பிறகு அங்கிருந்து திரும்பி நேரே சென்று மறுபடியும் மற்றொரு தடையண்டை வந்து முட்டிக்கொண்டு நின்றான். சிறிது நேரம் யான் அவனை அசைவின்றி நிற்கச்செய்யவே, அவனுக்கு அத்துயிலில் இன்னும் மிகுதியாயிற்று; அவன் ஓசைசெய்ய உணர மாட்டாதவனாயினான். அவனுடைய கண்களின்மேல் ஒளி வைப்பினும், கொடிய அவனுடன் பேசினாயினும் அவன் அத்துயிலினின்றும் எழுந்து, அங்ஙனம் இக்கூக்குரலும் எவ்வாறும் இருபொழுதினும் யான் கூறியவாறே நடக்கும்படி திருப்பிச்செல்லுவன். அவனை நான் எழுப்பியபிறகு, அக்கத்தில் தான் செய்தவைகளைச் சிறிதும் அறியவில்லையென்றும், அவ்விடத்தைவிட்டுத் தான் அப்புறம் பெயரவில்லையென்றும் கூறினான்; ஆனால், அக்கழகத்தில யான் அவனை அறிதுயிலிற் செலுத்தத்தொடங்கிய இடத்திற்கு நேரெதிரே இப்போதிருந்தான். பிறகு, நான் நடுநிலைமன்றத்திற்குச் சான்றுபகருமாறு அழைக்கப்பட்டேன்.



அடைந்ததும், நடுவர் என்னைநோக்கிச் 'சான்று கூறினோர் பகர்ந்தபடி ஒருவரைக் கவர்ந்துகொண்டு போதல் நடக்கக்கூடியதுதான் என்று தாங்கள் எண்ணுகின்றீர்களா?' என்று கேட்டார்.

"'அது நடக்கக்கூடியதுதான் என்று எண்ணுகின்றேன்; ஏனென்றால், அதைப்போன்ற தொன்றை இப்போதுதான் செய்துவந்தேன்; தன்னையறியாமலே ஒரு சிறையாளி என்னைப் பின்றொடர்ந்து மருத்துவக்கழகத்தைச் சுற்றிவரச் செய்தேன்.' என்று விடைபகர்ந்தேன்.

"அதுகேட்டு நடுவர் அவ் வழக்கில் அகப்பட்டவனைச் சிறைக்கு அனுப்பினார். பின்னர் அவ்வழக்கு மேல்நடுமன்றத்தில் திரும்பவும் ஆராய்ச்சிக்குவர, அப்போது அதனை ஆராய்ந்த சட்டநூல் வல்லார்க்கு யான் கருதியபொருளைத் தினையளவுகூட விளங்கப்படுத்தல் இயலவில்லை. அதனால், அம் மேல்நடுநிலையர், யான் மொழிந்தபடி, ஒருவர் தம்மையறியாமலே மற்றொருவரைப் பின்றொடர்ந்து செல்லுமாறு செய்யக்கூடுமென்பதை அச் சட்டநூல்வல்லார்க்கு நேரே செய்துகாட்டுவதில் எனக்கு ஏதேனுந் தடையுண்டோவெனக் கேட்டார். அதனை ஆராய்ந்துகாட்ட விருப்பம் உடையேன் என்றாலும், அதனை முடித்துச் செய்வேனென்று உறுதி புகலமாட்டேனென்று விடைகூறினேன். நம்முடைய நோக்கங்கள் இன்னவென்று தெரியாமல், யான் பெயர்கூறிய மூவர் ஆண்பாலாரை அம் மன்றத்திற்கு வருவிக்க அம் மேல்நடுவர் கட்டளைதந்தால், எது செய்யக்கூடியதோ அதனை யான் செய்துபார்ப்பேன் என்றேன்.

"இரண்டொருநாளில் அம் மேல்நடுவரின் மன்றத்திற்கு வருமாறு வேண்டிக்கொள்ளப்பட்டேன்; அப்போது அம்மன்று ஐரோப்பியராலும் உள்நாட்டவராலும் நிறைந்திருந்தது. நாசிர் மகமது என்பவன் உள்ளேகொண்டுவந்து அடைப்பினுள்ளே நிறுத்தப்பட்டான்; சிறிதுநேரத்தில் யான் அவனுக்கு அறிதுயிலைவருவித்து விறைக்கச்செய்த கைகளோடு அவனை அம் மன்றத்திற்குவெளியே நடத்திச்சென்று சிறிது தொலைவாகப் பாட்டையின்மேல் அவனை நடக்கவுஞ் செய்தேன்; மேலும், யான்வேண்டிய நேரம்வரையில் அவனுடைய கைகளைப் பல

வகையான நிலைகளில் விறைத்து நிற்கவுஞ் செய்தேன். மறுபடியும் அவனைக் கொண்டுவந்து அம்பலத்தின் அடைப்பின்கண் நிறுத்தினேன்; அப்போது, மேல்கூறிய சட்டநூல் வல்லாருட் அவனோடு எவ்வளவோ பேசிப்பார்த்தும் அவன் அவர்களை எள்ளளவும் உன்னிக்கவேயில்லை; அதனால், அவனை எழுப்பிவிடும்படி அவர்கள் என்னைக் கேட்கவேண்டியவரானார்கள். யானும் அங்ஙனமே செய்தேன். 'அவ்விடத்தைவிட்டு வெளியே சென்றனையா?' என்று அங்கிருந்த சட்டநூலார் வினவ, 'இல்லை' என்று உறுதியாகச் சொன்னான். அவர்கள் அவனோடு உரையாடிக்கொண்டு இருக்கையில், அவன் காணாதபடி யான் அவனுக்குப் பின்னேசென்று, அவன் பேசிக்கொண்டு செல்லும் நிலையிலேயே அவனுக்கு அறிதுயிலை வருவித்தேன். அப்புறம் அவன் பேசமாட்டாதவனாயினான்; எவருடைய மொழியும் அவனுக்குக் கேட்கவில்லை; மறுபடியும் யான் அவன் கண்களின்மேல் ஊதி அவனை விழிக்கச்செய்தேன்.

"அதன்பின் பாலன் என்பவனைக் கொணர்ந்து அடைப்பின்கண் நிறுத்தினர். நான் உள்நுழைந்ததை அவன் பார்க்கவில்லை. மேல்கூறிய சட்டநூலாரும் அவனைக் கூர்மைப்படுத்திப் பேசிக்கொண்டிருந்தனர்; அவன் அறிவொளி விளங்கப் பேசுகையில் யான் அவனுக்குப் பின்னேசென்று அவனை விறைக்கச்செய்தேன்; கடவுளைநோக்கி ஆவேசமிட்டுச் சொல்லும் சிறையாளிகளின் வழக்கப்படி, அவன் சொல்லிக்கொண்டு வருகையில் ஒரு கொடிப்பொழுதில் பேசவும் சொல்வதைக் காதாற்கேட்கவும் மாட்டாதவனாய் இடையே நின்றுபோனான். காதுகேட்க மாட்டாதவனாய் நின்றபோதும், அவன் வாயிதழ்கள் பேசுதற்கு அசைவனபோற் காணப்பட்டனவென்று அவனுக்கு எதிரிலிருந்தோர் எனக்குச் சொல்லினர். அசையும் ஆற்றல் முழுதும் அற்றுப்போக அவன் அவ்வளவு விறைத்துப்போனமையால், அவனை நடக்கும்படி செய்தற்காகப் பின்னேநின்று என்விரல்களால் யான் அவனைத் தள்ளவேண்டியதாயிற்று; இடர்ப்பாட்டோடு அவன் சிறிது வழிநடந்தான்; திரும்பவும் அவன் முடியிலிருந்த அடிவளையில் கதவில் விறைத்ததுபோல யான் அவனை மெல்ல முன்னுக்கு உந்த, பின



வுந் திடுக்கிடத்தக்கவகையாய் அவன் நிலத்தின்மீது தலைகீழாய் விழுந்துவிட்டான்; மிகவிரைவில் அவன் விறைத்ததை யான் அறியாமற்போனேன். சிறிது வருத்தப்பட்டு யான் அவனை எழுப்பவேண்டுவ தாயிற்று; நல்லகாலமாய் அவன் காயம் அடையவில்லை.

"அதன்பிறகு, சொரூபசந்தன் என்பவன் கொணரப்பட்டான். யான் அவனை ஒரு இங்காரப்பார்வையால், அவனது நலத்தைப்பற்றியும் பிறவற்றைப்பற்றியும் உசாவினேன்; அவ்வாறு உசாவுகையிலேயே அவனுக்கு அறிதுயில் வருவிக்கும் முறையைச்செய்தேன். சிறிதுநேரத்திலெல்லாம் அவன் விடைகூற இயலாதவனானான். உடனே அவனை அடைப்பினின்றும் வெளிப்படுத்தி, விறைத்த கைகளோடு பரப்பரம்போல் அவன் கழன்றுலவச்செய்து, முழுதும் உணர்வற்றநிலையிலேயே அவனை முன்னிருந்த இடத்தில் வந்திருக்கப்பண்ணினேன். அவன் காதிற் கேட்கும்படியாகவாவது, உயிரோடிருக்கும் அடையாளங்களை அவன் காட்டும்படியாகவாவது செய்ய எவராலும் இயலவில்லை. ஆயினும், யான் அவனுடைய கண்களின்மேல் ஊதியவுடனே, அவன்தன் ஐம்பொறியுணர்வுகளும் வரப்பெற்று, தான் அவ்விடத்தைவிட்டு அகன்றதில்லையெனக் கூறினான்.

"அந்த அம்பட்டன் அறிதுயில்முறையால் அச்சிறுவனைக் கவர்ந்துகொண்டு போயினனோ அல்லதப்படியில்லையோ யான் அதனைத் தீர்மானிக்கப்புகவில்லை; ஆயினும், அவ்வாறு செய்யக்கூடும் என்பதனைப் பலரும் நன்கு அறியுமாறு மெய்ப்படுத்துக் காட்டுதற்கு எனக்கு அஃது ஓர் அமயந்தந்தது; யான் மூன்றுபெயரைப் பல முன்னிலையிற் கவர்ந்துசென்றதனை எவரும் மறுக்கத்துணியவில்லை. நாட்டுப்பரிகாரி ஒருவன் எவ்வளவு எளிதாய் அதனைச் செய்தல்கூடுமோ, அவ்வளவுக்கு யாரும் ஓர் ஆடவனையாவது அல்லதொரு பெண்மகளையாவது அல்லது ஒரு சிறுபிள்ளையையாவது கவர்ந்து செல்லக்கூடும். அறிதுயிலின் ஆழத்தை யான் நேரேகண்டறிந்த காலம்முதல் அதன் வல்லமையால் தீமையும்விளையும் நன்மையும்விளையுமென்று திட்டமாய் உணரப்பெற்றேன். அதனால் உண்டாம் நன்மை தீமைகளின் உணர்ச்சியை எல்லார்மனத்திலும் படும்படி செய்

யும் நோக்கத்தினாலேயே அதனை அவ்வளவு ஆழமாகச்சென்று ஆராய்ந்துபார்த்தேன். அறிவுவிளக்கத்தின் பொருட்டாகவும் நோய்தீர்க்கும் பொருட்டாகவும் அல்லாமல், இம்முறையை வேறு இயல்கைகளிற் பயன்படுத்துபவரை எல்லாருங் கடிந்து சொல்லும் காலின்வரவு தொலைவில் இல்லையென்று நான் நம்புகின்றேன்."

இங்ஙனம் உண்மையாகநிகழ்ந்த இந்நிகழ்ச்சியைக்கொண்டு, அறிதுயின்முறைகளிற் பழகித்தேர்ச்சிபெற்ற ஒருவர் தாம் வேண்டியவாறெல்லாம் பிறரை நடக்கச்செய்ய வல்லுநர் ஆவர் என்பது தெற்றென விளங்குகின்றதன்றோ? மேலேகாட்டிய துரைமகனார் தெரிவித்தபடி, கொடியோரைத் திருத்தித் தாம் விரும்பிய நன்மைகளுக்குத் திருப்பிக்கொள்ளவும், பலவேறு பிழைபாடான வழிகளிற்சென்று அறிவிலராய் நழுகித் துன்புறுவார்க்கு அறிவுதெருட்டி அவரை அத்துன்பத்தினின்று விடுவித்துக் கொள்ளவும், மருந்துகளினுந் தீராக் கடுநோய்களைத் தீர்த்துக்கொள்ளவும் இவ்வறிதுயின் முறையினைப் பயன்படுத்துவது மிகநன்று. இந் நன்னெறியல்லாத பிறவற்றில் இதனைப் பயன்படுத்தற்கு ஒருசிறிதும் நினைத்தல் ஆகாது.

மற்றோர் ஐரோப்பிய துரைமகனார்* இவ்வறிதுயின்முறைகளில் மிகவுந் தேர்ச்சிபெற்றிருந்தார். அவர் வடஅமெரிக்காவிலுள்ள சிக்காகோ நகரத்திற்சென்று பலரை அறிதுயிலிற் போகச்செய்து வியப்பான பலகாட்சிகளைக்காட்டினார். அந்நகரத்தில் ஒருபத்திரிகைக்கு ஆசிரியரான பண்டி என்பவர் தம் வேலைக்காரன் ஒருவன் பொருத்துப்பிடிப்பாலும் காய்ச்சலாலும் வருந்தினமையின், அந்நோய்களைத் தீர்க்கும்பொருட்டு அக் கலைஞரைத் தமது இல்லத்திற்கு வருவித்தார். அவரும் அதற்கிசைந்து ஒருநாள் முற்பகலிற் பத்துமணிக்கு அங்கேசென்றார். பிறகு தாம் அங்கே செய்ததனைத் தாமே எழுதுகின்றார்; அது வருமாறு: "நான் அவனது படுக்கையறைக்குட் புகுந்ததும், அவன் படுக்கையின் தலைமாட்டுக்கட்சென்று நின்று, என் கண்களை உற்றுநோக்கும்படி அவனுக்குக்கற்பித்தேன். நான்கு நிமிஷங்கள்கழிந்ததும், அவன் என்னுடைய நினைவாற்றலின்

* Carl Sextus, see his admirable book on hypnotism, page 241



முழுதும் அகப்பட்டுநின்றான். பிறகு அவனுடைய உறுப்புகளைப் பலநிலைகளில் நிறுத்தினேன்; அந்நிலைகளை அவன் மாற்ற முடியாதவனானான். இஃது, அவன் விறைப்புநிலையிலிருக்கின்றான் என்பதைத் தெளிவுறக்காட்டிற்று. இரண்டுமணிநேரத்திற்குள் அவன் மிகவும் நலமடையப்பெறுவானென்றும், படுக்கையினின்றும் எழுந்திருப்பானென்றும், அதன்பின் நல்ல உணவை உட்கொள்வானென்றும், வழக்கம்போல அவன் தன் வேலையைச் செய்வானென்றுங் கட்டளை மொழிகள் கூறப்பட்டன. பிற்பகல் இரண்டுமணிக்கு அவன் கிளர்ச்சியாய்த் தன்படுக்கையை விட்டெழுந்து, நலத்தோடும் விரைவிற் பசியெடுத்துத் தனது பகலுணவை உண்டான். பின்னர் நான்குமணிக்கெல்லாம் அவன்முற்றிலும் நலமடைந்தமையின் பாடிக்கொண்டுஞ் சீழ்க்கை அடித்துக்கொண்டும் தனக்கு வழக்கமாயுள்ள வேலையைச் செய்யவல்லனானான்."

இனி, இதற்கு முற்காட்டிய எஸ்டேல் என்னும் ஆங்கில மருத்துவர், கொடிய பிளவைக்கட்டிகளாலும் ஆறாப்புண்களாலும் நெடுநாள் துன்புற்ற நோயாளிகள் பலர்க்கு அறிதுயிலை வருவித்து, அவர்கட்கு நோய் சிறிதுந்தெரியாமலே அவற்றை யறுத்து நலப்படுத்தினவரலாறுகள் பல இருக்கின்றன; அவற்றுள் ஒன்றை இங்கே மொழிபெயர்த்துவரைகின்றாம்:— "ஐம்பது ஆண்டுள்ள முராலிதாஸ் என்னும் ஒருகுடியானவன் சென்ற ஓர் ஆண்டாகக் குருத்தெலும்பைப்பற்றிய ஒரு கொடும்புண்ணால் துன்புற்றுக்கொண்டிருந்தான்; அப்புண் அவனது இடதுகாலின் கெண்டைச்சதையில் தோலுக்குமேல் அரைவிரற்கடை உயரமாகவும் ஆறுவிரல் நீளமாகவும் இருந்ததோடு, அவனது அந்தக் காலையும் தொடைக்கு நேர்கோணமாய் நிற்கும்படி முடக்கிவிட்டது. முதன்முதலாக அவன் இன்றைக்குத்தான் அறிதுயிலிற் செலுத்தப்பட்டான்; அவனை அத்துயிலினின்றும் எழுப்பாமல் வைத்துக்கொண்டே, பழுக்கக் காய்ச்சியதோர் இரும்பை அப்புண்ணினுள் ஆழநுழைத்து அதனைத் தீய்த்தேன். மறுநாள் அதனைப்பார்க்க அதன் மேற்புடைப்பு நிரம்பத் தடிப்பாயும் அழுத்தமாயும் இருந்தமையால், அதனை அக் கெண்டைச் சதையினின்றும் அறுத்தெடுக்க வேண்டிவந்தது.

ஏற்று; ஆகவே, அவனுக்குத் திரும்பவும் அறிதுயில் வருவிக்கப்பட்டது. அவன் உணராதபடி, சுற்றியுள்ள தோலின் மட்டத்திற்கு அப் புண்ணின்புடைப்பு சீவித்தள்ளப்பட்டது. இதற்கடுத்தநாள் திரும்பவும் அவனை அறிதுயிலிற் கிடத்திய போது, முடங்கிய அவனது காலை முற்றிலும் நிமிர்த்துச் சீராய் வைத்துக்கட்டினேன்; அவன் விழிக்கவில்லை; பின்னர் விழித்தபின் அவனுக்கு நோவில்லை; என் மருத்துவமும் திறமையுங்கொண்டும் அம் முடக்கினை நிமிர்த்துகையில் என் கையின்கீழ்ச் சாய்வின சுருட்டு நெறுநெறுவென்று பிடிப்புவிடுவதை யுணர்ந்தேன்.”

இங்ஙனம் நோய்தீர்த்த ஆங்கில மருத்துவர் தமக்கு உதவியான மற்றொரு மருத்துவரை வலி மற்றுமொரு கட்பட்ட நோயைப்போக்கின வரலாற்றையும் இங்கு மொழிபெயர்த்தெழுதுவாம்:— “இந்தியாவில் இருபது ஆண்டுகளாக இருக்குங் கால்டர் என்னுந்துரை இன்றைக்கு என்னிடம் வந்து தாம் பெருந்தும்பிடிப்பினுலும் கைகால் நடுக்கத்தினுலும் தளர்ச்சியினுலுந் துன்புறுவதாக முறையிட்டுக்கொண்டார். இருக்க வருக்கத்தோடு ஒருதடியை ஊன்றிக்கொண்டு நடக்கின்றார்; மெத்தைப் படியின்மேல் அவரால் ஏறவியலாது. அவருடைய நரம்புகள் தளர்ந்துவிட்டன, அவரது கட்பார்வை மங்கிப்போய்விட்டது, எழுதுகையில் அவரது கை நடுங்குகின்றது. மட்டமான தரையின்மேல் நடக்குங்கால் கீழே விழுந்துவிடுவதாக அவருக்கு ஓர் எண்ணந் தோன்றுகின்றது; அதனால் அவர் தம்மைக் காத்துக் கொள்ளும்படி செய்யும் முயற்சியே அவரைக் கீழே தள்ளிவிடுகின்றது. சிலகாலமாக அவர் தமது வண்டியோட்டுதலும் அதனைச் செலுத்த முடியவில்லை; அல்லதேன் என்றால், தமக்கெதிரே வரும் வண்டியோடு தமது குதிரைபோய் முட்டிக்கொள்ளாத படிசெய்யத் தம்மால் ஆகாதென்று எண்ணினார். அவர் இந்நிலைமையிற் சென்ற இரண்டரை ஆண்டுகளாக இருந்துவருகின்றார்; அக்காலமெல்லாம் அவர் எத்தனையோ மருத்துவரிடஞ் சென்று, தமக்குறையை ஒரு மருத்துவக்கழகத்தில் உள்ள மருந் திவலைகளுஞ் சாப்பிட்டார்; ஒரு பயனும் உண்டாகவில்லை. என் மனச்சான்றுக்குமாறாக இனி அவருக்கு மருந்துகொடுக்க முடியாதென்று கூறி, அவருக்கு நன்மையுண்டாக்க வேண்ட



நாளும் பொறுமையும் வேண்டுமேனும், அவரது நிலைமை அறிதுயின்முறையால் நோய்தீர்த்தற்கு ஏற்றதொன்றாகுமென எண்ணி, இயற்கைநிகழ்ச்சி அவர்க்கு யாது செய்யக்கூடுமென் பதைக் கண்டுபார்க்கும்படி அவர்க்கு எடுத்துச்சொன்னேன். நோய்தீர்த்தற்கு இதற்குமுற் செய்துபாராததொன்றைப் பிடித்துப்பார்ப்பதில் அவருக்கு மிகுந்தமகிழ்ச்சி உண்டாயிற்று; ஒவ்வோர் இரவும் படுக்கையி லிருந்தபடியாகவே அவருக்கு ஒருமணிநேரம் வரையில் அறிதுயில்வருவிக்கும்படி என் துணையாட்களில் ஒருவர்க்குக் கற்பித்தேன்.

“கால்டர் என்னும் அத்துரைமகனார் அறிதுயிலிற்கிடந்த போது யான் அவர்கிட்ட ஒருகாலும் இருந்ததில்லாமையால், அவர் தமது நிலைமையைப் பற்றிப் பின்வருமாறு எனக்கு எழுதியனுப்பிய குறிப்புக்காக அவருக்கு நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

“ ‘சென்ற செப்டம்பர்த் திங்கள் (கி—பி 1845—ஆம் ஆண்டைக் குறிப்பிடுகின்றார்) 25—ஆம்நாள், தங்கட்கு உதவியாளான நாட்டுமருத்துவர், தாங்கள் கற்பித்தபடியாகவே, எனக்கு முதன்முதல் அறிதுயிலை வருவிக்கமுயன்றார்; ஆனால், அன்றைக்கு அது கைகூடவில்லை; அம்முயற்சி ஒன்றரைமணிநேரம் நடைபெற்றது. 26, 27—ஆம் நாட்களிலும் அங்ஙனமே; ஆனால், விடாப்பிடியாய் முயன்ற 28—ஆம்நாள் அதேநேரம்வரையில் அறிதுயிலிற் செலுத்தப்பட்டிருந்து, ஐந்து மணி நேரத்திற்குமேற்றான் விழித்தெழுந்தேன்; யான் ஆழ்ந்த அறிதுயிலில் இருந்தேன். என் கண்ணிறைப்பைகளை மேல்நிமிர்த்துவதிலும், என்கண்களைத் திறப்பதிலும் யான்பெரிதும் இடர்ப்பட்டேன். யான் எனது சாய்மனைக்கட்டிலைவிட்டிறங்கி, என்படுக்கைக்குப் போனேன்; மறுநாட்காலை ஆறுமணிவரையில் யான் இயற்கையான துயிலிற் கிடந்தேன். ஒரு கிழமைக்குப்பின், என்னை அறிதுயிலிற் செலுத்தும் முயற்சி நாடோறும் ஒருமணிநேரம்வரையில் நடைபெற்றது; ஆனாற் சிலசமயங்களில் தூங்கச்செய்தற்கு மேற் பிறிதொன்றும் விளையவில்லை. என்றாலும், இரவின்கண் இயற்கையான தூக்கத்தில் இனிதாகத் துயின்றுவரலானேன்; எனது நோயின் துன்பம் நாளேற நாளேறக் குறைந்து வரலாயிற்று;

என்னுடைய நரம்புகள் நிரம்பவும் இறுக்கமுற்றன; இப்போது நான் உதவிவேண்டாமலே மெத்தைப்படுக்கட்டின்மேல் மேலும் கீழுமாய் நடக்கக்கூடியவனானேன்; வண்டியையும் யான் மனத் திட்பத்தோடு செலுத்தக் கூடும்; ஆனால் இரண்டரை ஆண்டுகளுக்குமுன் யான் இங்ஙனஞ்செய்ய முயன்றிருக்கமுடியாது. அக்டோபர், 17-ஆம்நாள் வரையில், ஒவ்வொரு மூன்றல்லது நான்குநாள் இரவும் யான் இரண்டுமணிநேரம் வரையில் அறிதுயிலிற் செலுத்தப்பட்டுக் கிடந்தேன்; அதனால் விளைந்தநன்மையை, நேற்றுக்காலையில் யான் நான்கு மைலூர்ந்து போனும், இன்றைக்காலையில் ஆறுமைலுக்கு மேலும் நடக்க வல்லனாயிருப்பதுகொண்டு தாங்களே தெரிந்துகொள்ளலாம்."

இதுகாறும் எடுத்துக் காட்டிய உண்மை நிகழ்ச்சிகளைக் கொண்டு, ஒருவரைத் தம்வழிப்படுத்தலும், அவர்க்குள்ள நாட்பட்ட கொடியநோய்களை நீக்குதலும், தீயவொழுக்கங்கள் புன்கண் முதலியவற்றை அவர் அறியாமலே அறுத்துத் தீர்த்தலும் நினைவற்ற ஆழ்ந்த அறிதுயிலின்கண் அவரைச் செலுத்துதலானன்றி இல் முடிக்கப்படும் என்பதை நன்குணர்ந்துகொள்க.

---

## தெளிவுக்காட்சி

இனி நடைத்துயிலின் பயன்களைப்பற்றிச் சிறிது பேசுவாம். நடைத்துயிலின்கட் செலுத்தப்பட்ட ஒருதூயவுயிர் இறந்தகால நிகழ்கால எதிர்கால நிகழ்ச்சிகளைத் தெரிந்துரைக்க வல்லதாதலை மேலே விளக்கிப் போந்தாம். இந்நடைத்துயிலானது நினைவற்ற ஆழ்ந்த அறிதுயிலினும் ஆழமாய்ச்சென்றபின் வருவதாகும். இத்துயிலில் இருப்போர் அதிலிருக்கும் வரையில், இயற்கையாக விழித்திருப்போரைப்போற் பேசுதலும் நடத்தலுஞ் செய்வாராயினும், அவரது நினைவு அப்போது மிகநுண்ணிய அறிவுடம்பைப்* பற்றிக்கொண்டு இயங்குதலால், அவர் இயற்கையாக விழித்திருக்கும் நிலையிற் காணமாட்டாத, மறைந்த அரும்பெருங் காட்சிகளையெல்லாங் காணமாட்டுவர். இது



தவவொழுக்கத்தில் நிற்போர்க்குத் தானாகவே வருவதொன்றாகையால், தவக்காட்சியென்றும் வழங்கப்படும். அங்ஙனமாயின் அருந்தவத்தோர்க்கும், இவ்வறிதுயிலில் இருப்போர்க்கும் வேறுபாடென்னையெனின்; அருந்தவத்தோர் தாமாகவே இடையறாது செய்துபோதருந் தவமுயற்சியால், தமதுணர்வினை அறியாமையினின்றும் பிரித்து விளங்கச்செய்து, தாம் வேண்டியபோது இவ்வுணவுடம்பு, உயிர்ப்புடம்பு, மனவுடம்பு, அறிவுடம்பு, இன்பவுடம்பு* என்னும் ஐவகை யுடம்புகளினும் நடைபெறச்செய்து ஆண்டாண்டு நிகழும் மறைபொருணிகழ்ச்சிகளையெல்லாந் தாமாகவே எளிதிலுணரப்பெறுவர்; அவர்கட்கு மறதியும் அறியாமையும் உளவாகா. மற்றுப் பிறர் ஒருவரது உதவியால் நடைத்துயிலின்கட் செலுத்தப்படுவாரோ தாமாகவே அறிவுடம்பிற் செல்லமாட்டாமையோடு, ஆண்டுநிகழும் நிகழ்ச்சிகளையுந் தாமாகவே அறிந்துரைக்க மாட்டுவார் அல்லர்; அதுவல்லாமலும், தாம் விழித்திருக்கும் நிலையில் உணர்ந்தவற்றை நடைத்துயிலின்கட் சென்றவுடனே மறந்தும், நடைத்துயிலின்கண் உணர்ந்தவற்றை விழிப்புநிலைக்கு வந்தவுடன் மறந்தும் அறியாமையிற் பற்றப்பட்டவராயிருப்பர்; ஒவ்வோருடம்பிலும் வெவ்வேறு உயிர்போல் நடப்பர்; அருந்தவத்தினரோ அவ்வெல்லா வுடம்புகளினும் ஒருயிராகவே ஒரு தொடர்புபட்ட வுணர்வுடையராயிருப்பர். இதுவே, நடைத்துயிலின்கட் செலுத்தப்படுவோர்க்கும், அருந்தவத்தோர்க்கும் உளதாகிய வேற்றுமையாம். ஆதலால், அருந்தவத்தோர்க்கு நிகழ்வதைத் தவக்காட்சி யெனவும், நடைத்துயிலில் இருப்போர்க்கு நிகழ்வதைத் தெளிவுக்காட்சி யெனவும் அவ்வேற்றுமை தோன்றக் கூறினாம்.

இனி, இந்நடைத்துயிலில் இருப்போர்க்குக் கண்கள் மூடியிருப்பினுந் திறந்திருப்பினும் அவர் காண்பன நம் ஊனவிழிகளுக்கு நேரேபுலப்படும் பொருள்கள் அல்ல; மற்று நங் கண்களுக்கு நேரேயில்லாமல் தொலைவிலும் அணிமையிலும் மறைந்திருப்பவைகளேயாம். மனத்தூய்மையும் நுண்ணறிவுமுடைய

---

* வடநூலார் இவற்றைமுறையே அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசம் எனவழங்குவர்.

நம்மாணவர் ஒருவரை ஒருகால் நாம் ஆழ்ந்த அறிதுயிலிற் செலுத்த அவருடனே நடைத்துயிலிற் சென்று தெளிவுக்காட்சி யுடையரானார். அப்போதவர் கண்கள் மூடியே இருந்தன. அந்நிலையில் அவர் மறைந்தபொருள்களைக் காண வல்லுநராய் இருப்பாரா எனத்தெரிதல்வேண்டி, எமது கைக்கடிகாரத்தை எடுத்து அவரது பின் றலைப்புறத்தே பிடித்து "இப்போது நீர் இக்கடிகாரத்தைக் காண்கின்றீர்; இதன் முகத்தட்டின்மேல் மணிமுள்ளும் நிமிஷமுள்ளும் இயங்குவதையுந் தெளிவாய்க்காண்கின்றீர். ஆம், இவற்றைக் காண்கின்றீரல்லவா?" என்றுயாம் வினவ, அவர்தம் கண்கள் நன்றாய் மூடியிருந்தும் "ஆம், ஒரு கைக்கடிகாரத்தைக் காண்கின்றேன்; அதன் முகத்தட்டின்மேல் முட்கள் அசைகின்றன." என்று அவர் அந்நடைத்துயிலிலிருந்தபடியே விடைகூறினார். அதன்பின் "அப்படியானால் இப்போது மணிஎன்ன? சொல்லும்" என்றேம். அதற்கவர் "இப்போது ஆறடிக்க ஐந்துநிமிஷம்" என்றுபிசகாமற் கூறினார். அன்று மாலைக்காலம், அவர்சொல்லியபடியே ஒருநிமிஷமும் பிசகவில்லை; ஆறடிக்க ஐந்துநிமிஷங்களே இருந்தன. இதுகண்டு வியப்புற்றேம்.

ஒருகால் யாம் திருநெல்வேலிக்குச் சென்றிருக்கையில், இவ்வறிதுயின்முறைகளில் தேர்ச்சிபெற்ற ஓர் அன்பர் தம்மால் அறிதுயிலிற் பலகாற் செலுத்தப்பட்ட ஒரு பார்ப்பன இளைஞரை எம்மிடம் அழைத்துவந்தார். அதுமாலைக்காலம், அப்போதுதான் விளக்கேற்றப்பட்டது. அவர் அவ்விளைஞரை ஒரு சாய்மானக் குறிச்சியில் அமர்த்திச், சிறிதுநேரத்தில் ஆழ்ந்த நடைத்துயிலிற் போகச்செய்து, "இப்போது இவர் தெளிவுக்காட்சி யுடையவராயிருக்கின்றார். தாங்கள் ஏதேனும் ஒருபொருளைக் கையில் மறைத்துவைத்துக்கொண்டால், அதனை இவர் உடனே அறிந்துசொல்வர்" என்றார். யாம் அச்சமயத்திற் கிடைத்த ஒருசாவியை அது கோக்கப்பட்ட கயிற்றோடும் எடுத்து அங்கிருந்தார் எவர்க்குந்தெரியாமல் எமது வலது கையினுள் மறைத்து வைத்துக்கொண்டேம். பிறகு அவர் அறிதுயிலிலிருக்கும் அவ்விளைஞரை நோக்கி "இப்போது நீர் விளக்குகளைக் காண்கின்றீர், எல்லாம் ஒரேவெளிச்சமாய் இருக்



கின்றன. உமக்குப் பக்கத்தேநிற்கும் இவர்களையுங் காண்கின்றீர்" என்று கூறினார். அவ்விளைஞரும் அதற்கிணங்கி "ஆம், ஒரே ஒளியாயிருக்கின்றது. நீங்கள் குறிப்பிட்டவர்களையும் பார்க்கின்றேன்." என்றார், அப்படியானால், இவர்களின் வலது கையினுள்ளே என்ன இருக்கின்றது?" என்று அவ் அன்பர் வினவினார். அதற்கவர் முதலில் "அவர்கை மூடியிருக்கின்றது, யான் உள்ளேயிருப்பதைப் பார்க்கக்கூடவில்லை." என்றுவிடை கூறினார். மறுபடியும் அவர் "இப்போது நன்றாயுற்றுப்பாரும், கையினுள்ளேயிருப்பது நன்றாய்த்தெரியும், வெளிச்சம் நன்றா யிருக்கின்றது." என்றார். அவ்விளைஞர் "ஆம், அவர்கையினுள்ளே நீளமாய் ஒன்றிருக்கின்றது; ஓ, அஃது ஒரு சிறு கயிறு." என்றார். திரும்பவும் அவர் "பின்னும் என்ன இருக்கின்றது? நன்றாய் உற்றுப்பாரும்." என்று வற்புறுத்துச்சொன்னார். "அதில் ஏதோ ஒன்று சிறிதாயிருக்கின்றது; ஆனால், அஃது இன்னதென்று தெரியவில்லை." என மொழிந்தார். அவர் "இல்லை, இப்போது அது நன்றாய்த்தெரியும். வெளிச்சம் இன்னும் நன்றாயிருக்கின்றது; நன்றாய்ப்பாரும்." என்றார். "ஆம், இப்போது மிகுந்த ஒளிவீசுகின்றது; ஓ, அஃது ஒரு சாவி" என்று கடைசியாக உண்மையைச் சொல்லிவிட்டார். அதன்பின்னும் எமது பக்கத்திலிருந்த இரண்டொருவர் வேறு சிலவற்றை மறைத்து வைத்துக்கொள்ள அவைகளையும் அவர் பிசகாமற் சொல்லிவிட்டார்.

அறிதுயின்முறையில் மிகவுந் தேர்ந்த ஒரு துரைமகன்* ஒரு சிறுபெண்ணைக்கொண்டு நெடுந்தொலைவில் நிகழ்ந்ததொரு நிகழ்ச்சியைச் சொல்லுவித்தனர். அதனை அவர் சொல்லுகிறபடியே இங்கு மொழிபெயர்த்தெழுதுகின்றேம்: "ஏழு ஆண்டுகளுக்குமுன் சுவீடனில் உள்ள காதன்பர்க்கில் யான் இருந்தபோது, புகழ்பெற்ற செல்வர் ஒருவர் இல்லத்தில் அறிதுயிலுண்மையைப்பற்றி ஒரு விரிவுரை நிகழ்த்தி, அத்துயிலைச் சிலர்க்கு வருவித்துங்காட்டினேன், இங்ஙனஞ் செய்கையில், மந்திரக்கண்ணாடி†யில் நோக்குதலைக்குறித்து யான்பேச, அச் செல்வர் அதனையுஞ் செய்துகாட்டும்படி என்னைக் கேட்டார்.

* Carl Sextus. † Magic mirror.

அப்போது, அவரது குடும்பத்திற்கு அறிமுகமானவர்களும் நண்பர்களுமாக அங்கே கூடியிருந்த இருபத்தைந்து முப்பது பெயரில், அம்முறையைச் செய்துபார்த்தற்குத் தக்கவர் ஒருவரும் இல்லையென ஒரு நொடிப்பொழுதிற் கண்டு கொண்டேன். அன்றுமாலை பத்துமணிநேரம் இருக்கும். இதற்குத் தக்கவர் இவ்விவ்வாறு இருக்கவேண்டுமென்று யான் குறித்துக் காட்டியபடி, மிகவும் பொருத்தமாகப், பத்துப் பதினோராண்டுள்ள ஒருமகள் தம்மிடம் அலுவல்பார்க்கும் ஒருவருக்கு இருப்பதாக அக்கூட்டத்தில் இருந்த தரகர் ஒருவர் கூறினர். அச்சிறுமியின் பெயரும் இருப்பிடமும் அவர் சொல்லவே, அவள் அருகாமையிலிருந்தமையால் அவளை அழைத்துவரும்படி விரைவாக ஓர்ஆள் அனுப்பப்பட்டனர். அவள் பெற்றோர்கள் அம்முறையைத் தேர்ந்துபார்த்தற்காக ஏதொருதடையுஞ் சொல்லாமையால், போனவர் அச்சிறுமியை அழைத்து வந்தார். அச்சிறுமியை அறிதுயிலிற்செலுத்தி, அங்கு வைக்கப்பட்ட மந்திரக் கண்ணாடியை உற்றுநோக்கும்படி செய்தோம்; அப்பெண் வியக்கத்தக்க இயற்கைநுண்உணர்வும் சிறந்த தெளிவுக்காட்சியும் உடையளாயிருந்தாள். ஸ்டாக்கோமில் உள்ள சிற்றரசி ஒருத்தியைக்காணும்படி யான் அவளுக்குச்சொன்னேன். அவளும்சிறிதும் மலைப்படையாமல் 'அப்படியே' என்று உடன்பட்டுச்சொல்லி, அச்சிற்றரசியின் வடிவத்தையும் அவள் அன்று மாலையில் அமர்ந்திருக்கும் அறையையும் நிரம்ப நன்றாய் விரித்துரைத்தாள். (சுவீடனுக்குத் தலைநகரான ஸ்டாக்கோம் என்பது இப்போது யாங்களிருக்குங் காதன்பர்க் என்னும் நகருக்கு முந்நூற்றைம்பதுமைல் தொலைவில் உள்ளது; இச்சிறுமி அச் சிற்றரசியை ஒருகாலும் பார்த்தவளும் அல்லள்.) அதன்பிறகு, அச்சிறுமி, அவ்வறையில் அவ்வரசியோடுஉடனிருக்கும் ஓர் இளைஞனையுங்கண்டு அவன்றன் உருவத்தின் தன்மைகளையும் நுட்பமாக விரித்துரைக்கப் புகுந்தாள். அதைக்கேட்டு அக்கூட்டத்தில் இருந்தவர்களெல்லாம் நகையாடினர். சென்ற ஆறுதிங்களாக அவ்வரசியின்பால் மிகுந்த காதலன்பு உடையனாய் அவளைப்பாராட்டிக்கொண்டு ஒழுகும் அவ் வரசிளைஞனைப்பற்றி அச்சிறுமி படம்எழுதிக்காட்டினற்போற் சொல்லிய விளக்கவுரை



அவ்வளவும் ஒத்திருந்தன. ஆனாலும், அவளது விளக்கவுரை வரவர அளவுக்குமிஞ்சிச் சென்றமையாலும், புல்லிய தன்மையுடையதா யிருந்தமையாலும் யான் அத்துணையோடு அதனை நிறுத்தவேண்டுவதாயிற்று. அச்சிற்றரசியையும் அவள் காதலனையும்பற்றிய ஒரு குறிப்பு அங்கிருந்தவர் கேட்கத்தக்கதாயில்லை; மேலும், அவ்வில்லத்திற்குரிய செல்வர்க்கும் அது துன்பந்தருவதா யிருந்தது. தானும் தன்நடக்கையும் இப்போது பலருங் காணத்தக்கநிலையி லிருப்பதைச் சிறிதும் உணராது, கதவுகள் தாழிட்டுச் சாத்தப்பட்ட அறைக்குள் தான் பத்திரமாயிருப்பதனால், தான் ஊரார் பழிச்சொல்லுக்குத் தப்பிக்கொண்டதாக அச்சிற்றரசி எண்ணியிருந்தாள். அறிதுயிலைப்பற்றி ஆங்காங்கு விரிவுரை நிகழ்த்தும்பொருட்டு நார்வேமுழுதும் நான்கு திங்கள்வரையிற் சுற்றிவருதற்காக அந்த இரவிற் கிறிஸ்தியானியா நகரத்திற்குச் சென்றேன். காதன்பர்க் நகரத்திற்கு யான் மறுபடியும் திரும்பிவந்தபொழுது முன்னே எனக்கு விருந்தாற்றிய அச் செல்வரைக்கண்டேன். நடைத்துயிலிற்சென்ற சிறுமி அச் சிற்றரசியைப்பற்றித் தெளிவுக்காட்சியிற்கண்டு கூறியவைகளைக் குறித்துத் தாம் இடையே ஆராய்ந்து பார்க்க அவை யவ்வளவும் உண்மையா யிருக்கத் தெளிந்ததாக எனக்கு எடுத்துரைத்தார். அதனோடு, அன்று மாலையில் அச்சிற்றரசியின் நடக்கையைப்பற்றி எல்லாரும் நகையாடத்தக்கதாக அவள் முன்னறிந்துசொல்லிய நிகழ்ச்சி ஒன்றும் நிரம்ப உண்மையாயிருந்ததென்றும் அவர் எனக்கறிவித்தார்." இவ்வாறு அறிதுயிலிற்சென்ற சிற்சிலர் தெளிவுக்காட்சியுடையாராய்த் தொலைவில் நிகழும் நிகழ்ச்சிகளையும் நேரேகாண்பதுபோல் தெள்ளத்தெளியக் கண்டுரைக்கும் வியப்பினை இதிற் சிறிது முயற்சியெடுப்பாரெவருந் தாமேயும் நேரிலுணர்ந்து வியக்கலாம்.

இங்ஙனம் நிலப்பரப்பின்மேல் அண்மையிலுஞ் சேய்மையிலும் மறைவிலிருப்பனவற்றையும் நட்பானவற்றையுந் தெளிவுக்காட்சியுடையார் காணவல்லராதல் போலவே, இந்நிலத்தினுள்ளே மிகவும் ஆழமான இடங்களில் உள்ள பொருள்களையும் அவர்கள் தெளியக்கண்டுரைக்க வல்லவர்களா யிருக்கின்றார்கள்.

இதனையும் உண்மையாநிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியினால் விளக்கிக் காட்டுவாம். இஃது அமெரிக்காவில் மெய்யாகநடந்து, கல்வியிற் பெரும்புகழ்பெற்ற ஈடன்* என்பவரால் ஓர்இதழில் வரையப்பட்டது. அதனை அங்கிருந்தபடியேயெடுத்து இங்குமொழிபெயர்த்தெழுதுகின்றாம்:— "சிக்காகோ நகரமானது, உலகத்தில் நாடோறும் விரைந்து முன்னேற்றம் அடையும் நகரங்களுள் ஒன்றென்பது யாவரும் நன்கறிந்ததேயாம். யோனா என்பவரின் சுரைக்கொடி ஒரே இரவில் முளைத்துப் படர்ந்தது போல, அதுவும் ஓர் இரவில் வளர்கின்றது. அதன் குடிமக்கள் விரைவிற் பெருகிவிட்டமையால், உயிர்வாழ்க்கைக்குஞ் செல்வவாழ்க்கைக்குந் தண்ணீர் இன்றியமையாது வேண்டப்படுவதாயிற்று. இயற்கைப்பொருணூல்† பிசகிப்போயிற்று; நிலநூல்வல்லார்‡ அத்தகைய நிலப்படையின் கீழ்த் தண்ணீர் இருத்தல் கூடாதென்று சொல்லிவிட்டார்கள். மேற்பரப்பிலேதான் தண்ணீர்க்காகப் பார்க்கவேண்டுவதாயிற்று; அழுக்கான தண்ணீரையே பயன்படுத்தக் கொடுத்தற்கு ஒரு கூட்டுச் சேர்ந்தது.

இந்நாளில் அச் சிக்காகோநகரத்தில் ஆபிரகாம் ஜேம்ஸ் என்னும்பெயருடைய ஒருவன் இருந்தான்; அவன் களங்கம் அற்றவன், கிறித்துமதத்திற்குப் புறம்பானவர்குடியிற் பிறந்தவன், கல்வியறிவில்லாதவன், உண்மையில் ஒன்றுமேயறியாத ஓர் ஆள். அந்த ஜேம்ஸ்என்பவன் இயற்கையாகவே தெளிவுக்காட்சி வாய்ந்த ஓர் உண்மையான கருவி யென்றும், அவன் நடைத்துயிலின்கட் செலுத்தப்பட்டபோது அந் நகரத்திற்கு அண்மையிற் கீழே குறிப்பான ஒரு நிலப்பாங்கில் ஏராளமான தண்ணீரும் மண்ணெண்ணெயும் இருக்கின்றனவாக அறிவித்தனனென்றும் காரொலின்ஜார்டன் என்னும் மாதர் ஒருவர் வெளியறிவித்தனர். நீண்டகாலம்வரையில் அவன் கூறியதை எவருமே உன்னித்துப்பார்க்கவில்லை. கடைசியாகச் சிக்காகோ நகரத்திற்கு மெயின்என்னும் ஊரிலிருந்து அலுவல்மேல்வந்த

* See the article by Dr. Samuel Eadon, M. A., M. D., LL. D., Ph. D., in "The Phrenological Annual" 1892. † இயற்கைப்பொருணூல்—Science. ‡ Geologists.



உவைட்ஹெட் ஸ்காட் என்னும் இருவர், ஆபிரகாம் ஜேம்ஸ் என்பவன் கூறிய செய்தியைக்கேட்டுத், தோண்டினால் ஏராளமான தண்ணீர்கிடைக்கும் இடமாக அவனாற் சொல்லப்பட்ட நிலத்தண்டை அவனை அழைத்துக் கொண்டு சென்றார்கள். நடைத்துயிலிற் சென்றதும், ஜேம்ஸ் அவ்விடத்தை உடனே சுட்டிக்காட்டினான். தான் அத்தண்ணீரைப் பார்ப்பதோடு, அஃது, அவர்கள் அப்போது நிற்கும் இடத்திற்கு இரண்டாயிரமைல் தொலைவிலுள்ள மலைப்பாறைகளிலிருந்து தோன்றிப் பல நிலஅடுக்குகளினூடும் நிலவறைகளினூடும் ஓடிவருவதையுந் தான் ஒருபடத்திலெழுதிக் காட்டக்கூடுமென்றும் அவர்கட்குச் சொன்னான். உடனே அந்நிலத்தை விலைகொடுத்து வாங்கும் ஏற்பாடுகள்செய்து, அதனைத் தோண்டுதற்குத் துவங்கினர். இங்ஙனந் துவங்கியது கி-பி 1864-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களிலேயாகும்; நவம்பர்த்திங்கள் வரையில் நாடோறும் நிலத்தைத் தோண்டிக்கொண்டே போக, எழுநூற்றுப் பதினோரடி-ஆழத்திற் சென்றதுந் தண்ணீர் வந்து தட்டியது; உடனே இருபத்துநான்குமணி நேரத்திற்கு முந்நூறாயிரம் மரக்கால் தண்ணீர் வெளிக்கிளம்பி ஓடலாயிற்று.

"தமரூசி துளைத்துச் சென்ற பொத்தலானது கீழுள்ள நிலப்படைகளின் வகைகளைக் காட்டியது; இப்படைகள் அத்தனையும் முன்னமே தெளிவுக்காட்சியுடைய அவன்கண்டு சொன்னமையால், நேரேகாணும் மற்றவர் கண்களுக்கு அவை அதன் உண்மையை மெய்பெறக்காட்டின. முதல் நூறு அடிவரையில் தமரூசி துளைத்துச்சென்றது அடைமண்படையா யிருந்தது; அதற்குக் கீழே முப்பத்தைந்து அடிவரையில் எண்ணெயோ ஊறிய சுக்கான்கற் படையாயிருந்தது, அந்தச் சுக்கான்க எவ்வகையான நிலக்கரியையும்போல நன்றாய் எரியும்; அதன் கீழ் நூறு அடிவரையில் சலவைக்கற்படை; அதற்கு கீழே நூற்றிருபத்தைந்து அடிவரையிற் செம்புப்பொடியும் இரும்புப் பொடியுங் கலந்து சக்கிமுக்கிக் கல்லும் மணல் ஒருங்குதிரண்ட படை; அதற்குங் கீழே நூற்றைம்பத்தைந்து அடிகாறும் மண்ணெண்ணெய் கலந்து கொழுப்புப்போல் தடி பாயும் நுண்ணிய சுண்ணாம்புபோல் மெல்லியதாயுமுள்ள வன்

டல் மேலேவரப்பெற்ற கற்பாறைப்படை; அதனைப்படுத்து ஐந்நூற்றுமுப்பது அடிகாறும் மயங்கலந்த சுக்கான் கற்படை; பிறகு அறுநூற்று முப்பத்தொன்பதடி வரையில் கந்தகத்தோடுகலந்த இரும்பும் சக்கிமுக்கிக்கல்லும் உள்ள சுக்கான் கற்படை மிகவும் அழுத்தமாயிருந்தமையால் அதனைத் துருவிக்கொண்டுசெல்லும் வேலை மெதுவாய் நடைபெற்றது. இந்நேரத்தில் நிலத்தின் அடியிலுள்ள ஆவிகள் மேலெழும்புதலினால் ஒரு கொந்தளிப்பு அடிக்கடி உண்டாயிற்று; தண்ணீர் சடுதியில் முப்பதுஅடியிலிருந்து அறுபதுஅடி கீழேபோய்த் தமரூசியின் சிறுதுண்டுகளையும் பிறவற்றையும் எடுத்துக்கொண்டு மறுபடியுஞ் சடுதியில் மேலேவந்தது. இன்னுந், துளைக்கும் வேலை நடந்துகொண்டேபோயிற்று; பின்னர் எழுநூற்றுப்பத்தொன்றடி ஆழமுள்ள ஒரு மலைப்பாறையின் வளைவு முழுதுந் துளைக்கப்பட்டவுடனே, அடியில் நாலரை விரற்கடை அகலமுள்ள ஓர் உருவுதுளையினின்று மிகக்குளிர்ந்த தண்ணீரானது பளிங்குபோற்றெளிவுடையதாய், வைரம்போற்றூயதாய், மண் கழிவு புற்பூண்டுகளின் கழிவு எதுவும் ஒரு சிறிதுங் கலவாததாய், பருகுதற்கும் உடம்பின்நலம் பேணுதற்கும் இதுவரையிற் கிடைத்த எந்தத் தண்ணீரினும் மிகச் சிறந்ததாய், இனி வருங்காலமெல்லாம் ஏழைமக்களுக்கு உற்றதொரு நட்பெனப் பயன்படுவதாய்ச் சடுதியில் மேற்கிளம்பிற்று.

“இதோ நம்பிக்கையற்றவர்களுக்குப் பின்னும் பெரியதோர் உண்மையானசெய்தி! கட்புலனாகாத ஒரு வினைமுதலால் வெளிக்கொணரப்பெற்று, எத்தகையோராலும் எதிர் மறுக்கக்கூடாத ஓர் உண்மைநிகழ்ச்சி! இயற்கைப்பொருணூல்* தண்ணீர் கண்டெடுக்க முடியாதென்று கூறிற்று; ஆனால் மனத்தேலா நீ மொழிந்தது பொய், ஏனென்றால், இந்தமண்ணுலகந் தனது சுழன்றுசெல்லுங் காலம்வரையுஞ் சிறந்தவெள்ளமாய்ப் பெண்டோடுஞ் செழும்புனல் உள்ள இடம் இதுவென்று நான் எவர்க்குங் காட்டுகின்றேன் எனக்கூறிற்று. கி—பி 1864-ஆம் ஆண்டுமுதல், சிக்காகோ நகரத்தில் எடுக்கப்பட்ட இந்தக் கிணற்றினின்று நாள் ஒன்றுக்கு ஏழரைஇலக்கம் பாக்

* இயற்கைப்பொருணூல்-Natural Science.



கால் தண்ணீர் விழுக்காடு மேலோடிவருகின்றது. மேலும், இத்தண்ணீரைக் குளங்களிலும் மிகப்பெரிய தொட்டிகளிலுங் கொண்டுபோய் நிரப்பிக்கட்டிவைத்து, மழைகாலத்தில் சிறிதேறக்குறைய நானூற்றெழுபத்தாறு மணங்கு பனிக்கட்டி செய்து விற்றுச் செட்டுப்பிடிக்கின்றார்கள். இன்னும் இப்பனிக்கட்டியை வேண்டும்போது நான்கு மடங்காக்கியும் விற்கலாம்.” எவரும் மறுத்தற்கு இயலாது, அமெரிக்கமக்களின் கண்ணெதிரே நிகழ்ந்த இவ்வுண்மை நிகழ்ச்சியினால், மக்களின் முகத்தேயுள்ள புறக்கண்களுக்குப் புலனாகாமல் இந் நிலப்பரப்பின் மேலுங்கீழும் நெடுந்தொலைவில் மறைந்து கிடக்கும் எவ்வகைப் பொருள்களும் அவர் தம் அகக்கண்ணின் எதிரே இனிது விளங்கித் தோன்றுதலும், அத்தோற்றத்தினுதவியால் முயன்று அவற்றைப் புறக்கண்களுங் காணும்படிசெய்து அக்காட்சியின் உண்மையைத்தெரிந்து பயன் பெறுதலும் உண்டென்பது நன்கு துணியப்படுகின்றதன்றோ?

இனி, இத் தெளிவுக்காட்சியின் உதவியாற் காணாமற்போன பண்டங்களையுங் கண்டெடுக்கலாம் என்பதற்கு உண்மையாநிகழ்ந்த மற்றொருநிகழ்ச்சியை, இத்துறையில் மிகவல்லரான மற்றோர் ஆசிரியரது நூலிலிருந்து* எடுத்து ஈண்டு மொழிபெயர்த்து வரைகின்றாம்:—“இயடோர் என்னும் ஒரு நீராவிக்கப்பல் பிளாண்டு என்னும் மற்றொரு கப்பல் இலிவர்பூல் என்னுங் கடற்றுறைப் பட்டினத்தைச் சேர்ந்த அன்றைக்கே வந்து சேர்ந்தது. அஃது எங்களுடைய கப்பலைப்பார்க்கிலும் பெரியது; என்றாலும் அதன்கண் உள்ள சரக்கும் எங்கள் கப்பலில் உள்ளதைப்போன்றதே. ‘எல்லாம் செவ்வையாக இருக்கின்றன’ என்று தெரிவிக்கும் பொருட்டாக நான் உடையவர்களிடம் சென்ற அன்றைக்கு, மீகான் மார்ட்டன் என்பவரை மிகவுங் கலவரமான நிலைமையில் எதிர்ப்பட்டேன்; ஏனென்றால், தமது சம்பளமும் தம்மோடு வேலைபார்ப்பவர் சம்பளமுஞ் சேர்ந்ததொகைக்கு ஈடான விலையுள்ள முப்பது பஞ்சுப்பொதிகளை அவர் இழந்துவிட்டார். அவர் அதன் பொருட்டு மிகவுங் கலங்கினமையால், அவர்தம் மனைவியும்

* How To Thought-Read by Dr. James Coates, Ph. D., F. A. S.

ஆற்றுமை மிக்கவளாகித், தெளிவுக்காட்சியில் திறமைவாய்ந்த
ஓர்இளம்பெண்ணை யுடையரான ஹட்சன் என்னுங் கப்பற்
றலைவனிடஞ் சென்று உசாவும்படி அவரைத் தூண்டினாள்.
நாங்கள் இருவேமும் தெளிவுக்காட்சியைப்பற்றிய செய்தியில்
ஐயுறவுகொண்டவர்களாக இருந்தோம். 'இக்காலத்திய மந்
திரமுட்டை' யைப்போன்றவற்றில் தாம் தலையிட்டுக்கொள்ள
விருப்பம் இல்லையென்று மார்ட்டன் முதலில் தெரிவித்தார்;
ஆனால், முடிவாகத் தம்மனைவியின் வேண்டுகோளுக்கு இணங்
கிப்போக உடன்பட்டார். முதலில் மானுமி ஹட்சனுக்கு ஒன்
றேகால் ரூபா கட்டணஞ் செலுத்தியபின், தெளிவுக்காட்சி
யுடைய அவ்விளம்பெண்ணைக் கண்டுபேச இடம்பெற்றோம்.
தெளிவுக்காட்சி யுடைய அறிதுயிலுக்கு அவ் விளம்பெண்
செலுத்தப்பட்டபின், மார்ட்டன் அப்பெண்ணின் வலதுகை
யைத் தமது வலக்கையிற் பிடித்துக்கொண்டு, தாம் கேட்க
விரும்பியவைகளைக் கேட்கலாம் என்று கற்பிக்கப்பட்டார்.
அவள் கூறியவிடைகள் பின்வருமாறு இருந்தன:—இயடோர்
என்னுங் கப்பல் முதலிற் புறப்பட்ட துறைமுகத்திற்குத்
திரும்ப நினைவினாற்சென்றாள். அக்கப்பலானது இலிவர்ப்பூலை
விட்டு அட்லாண்டிக் கடலைக் குறுக்கேகடந்து, மேலிந்திய தீவு
களினூடே மறுபடியும் புது ஆர்லியன்ஸ் என்னும் பட்டினத்
திற்குப் போனவழியைத் திரும்பச் சொல்லிக் காட்டியதோடு,
தன்கைகளாலுந் தொடர்ந்து சுட்டிக்கொண்டு வந்தாள். கடை
சியாக, 'ஆம், பஞ்சுப்பொதி காணமற்போனது இவ்விடத்திலே
தான். சுற்றிலுஞ் சிவப்புக்குறியுள்ள ஒருபெரிய கறுப்புக் கப்
பலின் மேற்றட்டிலே அவைகள் வைக்கப்பட்டிருக்கின்றன.'
என்று அவள் மொழிந்தாள், அதன்பிறகு, அக் கப்பல் தன்
இருப்பிடத்திற்குத் திரும்பி வந்தவழியைத் தன் சொற்களாலே
யன்றிக் கையினாலுங் குறிப்பிட்டுக் காட்டுவாளானாள்; ஆனால்,
அட்லாண்டிக் கடலைத் திரும்பக் குறுக்கிட்டுவந்தபின், இலி
வர்ப்பூலைநோக்கி ஐரிஷ் கால்வாயில் வருவதைவிட்டுப், பிரஞ்சுக்
கரையை நோக்கிச் செல்வதுபோல் இங்கிலிஷ் கால்வாயின் பக்
கமாய்த் திரும்பினாள்; அதன்பின், தன்கையைநீட்டி 'ஓ, இதோ
பஞ்சுப்பொதிகள்; அங்குள்ளவர்கள் ஆ, எவ்வளவு பகடியான



மக்களாயிருக்கின்றார்கள்; அவர்கள் இங்கிலீஷ் பேசவில்லை.'
உடனே, மார்ட்டன் மீகாமன் 'நல்லது, அதுதான் தாமஸ் மீகா
மனின் பிரன்ஸ்விக்,' என்றார். நியூஆர்லியன்ஸ் என்னும் பட்
டினத்தின் துறைமுகத்தில் தமது கப்பலோடு நின்றுகொண்
டிருந்த அவ்வமெரிக்கர் கப்பல் தனக்குரிய பஞ்சுச்சரக்கை ஏற்
றிக்கொண்டிருந்தது, அப்போது இயடோர் தானுஞ் சரக்கேற்
றிக்கொண்டு பிரஞ்சுத் துறைமுகப்பட்டினமாகிய ஹாவிருக்
குப் போவதாயிருந்தது. இங்ஙனம் அப் பெண்மகள் தனது
தெளிவுக்காட்சியால் அறிந்துசொன்னவற்றைக் கேட்டு மன
நிறைவு உடையவராய், மார்ட்டன் மீகாமன் தமது இல்லத்திற்
குச்சென்று, உடனே தாமஸ்மீகாமனுக்கு எழுதிக் காணமற்
போன தமது சரக்கைப்பற்றிக் கேட்டார். சிறிது காலங்கழித்
துப், பஞ்சுப்பொதி, உண்மையாகவே அங்கே உளவென்றும்,
அவை துறைமுகத்தினின்றும் பிசகாக எடுக்கப்பட்டனவென்
றும், அவை எவர்க்கு உரியனவாய் இருந்தாலும் விற்பனைசெய்
தற்கு ஆயத்தமாயிருந்தனவென்றும் அவர்க்கு விடைவந்தது.
ஆனால், மார்ட்டன் மீகாமன், அவை திரும்ப அனுப்பப்படு
தற்கு ஆம் செலவுதொகை யனுப்பினால், அப்பஞ்சுப்பொதிகள்
உடனே அவர்க்கு அனுப்பப்படுமென்பதுந் தெரிவிக்கப்பட்
டது. அவர் அங்ஙனமேசெய்ய, பிரஞ்சுநாட்டு ஹாவர் துறை
முகத்திலிருந்து இங்கிலாந்தி லிருக்கும் இலிவர்ப்பூல் துறை
முகத்திற்கு வருதற்குரிய செலவுமட்டும் உடையனவாய் அப்
பஞ்சுப்பொதிகள் உரியகாலத்தே அவரிடம் வந்துசேர்ந்தன.
இவை தாம் உண்மையாக நிகழ்ந்தவை; ஆனால், அந்நிகழ்ச்சியி
னியல்பை விளக்குதற்கு யான் புகவில்லை." என்னும் இம்
மெய்ச்செய்தியால், பன்னாட்களுக்குமுன் நெடுந்தொலைவிற் றவ
றிப்போன பொருள்களும் தெளிவுக்காட்சி யுடையாரால் எளி
திற்கண்டறியப்படும் உண்மை நன்கு நிலைபெறுகின்றதன்றோ?

இனி, நோயால்வருந்துவோரின் நோயின் இயல்பை அறி
யமாட்டாமல் தவிக்கும் மருத்துவர் அதனைத் திட்டமாய் அறிந்
து கொள்ளுதற்குந் தெளிவுக்காட்சி பெரிதும் உதவிபுரிவதா
கும். உடம்பின்உள்ளே அமைந்த கருவிகளிற்றோன்றிய நோய்
களைப் புறக்கண்கள்மட்டும் உடைய மருத்துவர் யாங்ஙனம்

உணரவல்லார்? அகத்துள்ளநோயைத் திட்டமாக அறியமாட்டாமையால், அந்த நோய்க்குத்தக்க மருந்தைக்கொடுக்க வலாமல், தகாதமருந்தைக் கொடுத்துப் பிழைபடுகின்றார்கள். நோயாளிகளும் பொருட்செலவு செய்தும் மருந்துண்டும் பயன் பெறாமல் நெடுகத்துன்புற்று உயிரையுந் துறக்கின்றனர். ஆங்கில மருத்துவரிற் பலர் நோயாளிகளின் அகத்தே நோயிருக்குமிடந்தெரியாமல் நோயில்லா வேறிடங்களை அறுத்துப்பார்த்து ஏமாற்றம் அடைகின்றனர். அவர்தம் அறியாமையால், அந் நோயாளிகளும் ஆற்றுதற்கரிய துன்பமெய்திச் சாகின்றனர். ஆதலால், மருத்துவப் பயிற்சியோடு, தெளிவுக் காட்சியால் நோயின் தன்மையைக் கண்டறியும் முறைகளையும் பழகித் தேர்வாராயின் அத்தகைய மருத்துவரால் உலகிற்கு விளையும் நன்மைகள் அளவிடப்படா. நோயின் இயல்பு தெளியப்படாமையால் ஒரு நோயாளியும் அவருக்கு மருத்துவஞ்செய்த ஆங்கில மருத்துவருந் தெளிவுக்காட்சியின் உதவியால் அத்துன்பங்கள் நீங்கப்பெற்றமைக்கு உண்மையாநிகழ்ந்த மற்றொரு வரலாற்றினை மேற்குறிப்பிட்ட அறிதுயிற்புலமை ஆசிரியர்* நூலிலிருந்தெடுத்து மொழிபெயர்த் தெழுதுகின்றாம்:—"இயற்கையாகவே தெளிவுக்காட்சி என்னும் ஒரு பெரும் பேற்றினை அடைந்து தன்மட்டில் உயிர்வாழும் ஒரு பெருமாட்டிக்கு அறிமுகமாகும் நல்வினையை ஆசிரியர் உவில்ட் என்பவர் பெற்றார். தமக்கு நண்பனாயுள்ளவன் ஒருவன் பல ஆண்டுகளாக ஒவ்வோர் இரவும் பல நாழிகைநேரம்வரையில் முதுகிலும் மார்பிலும் கொடியதொரு நோயுற்று வந்தனனென்றும், நாட்செல்லச் செல்லப் பிறகு அவன் இரவுமுழுதும் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருக்க வேண்டியவன் ஆயினனென்றும், அதனால் அவன் கால்கள் வீங்கத்துவங்கினவென்றும் அவ்வாசிரியர் அப்பெருமாட்டிக்குச் சொல்லினர்.

"இந்த நோயாளி சென்ற மூன்றுஆண்டுகளாக இலண்டன்மா நகரத்திலுள்ள பலரால் முறையாக மருத்துவஞ் செய்யப்பட்டுவந்தனர். நெஞ்சப்பையில் இன்னதென்று விளங்காத ஏதோ ஒருபிசகு இருக்கவேண்டுமென்று சிலர் சொன்னார்கள்;

* Dr. James Coates' How To Thought-Read.



வேறுசிலர் அது நரம்புநோய் என்றுகூறினர்; ஒருவர் அதனைப் பொருத்துப்பிடிப்பு என்றார், கடைசியாக ஒருவர் முதுகெலும்பு மிகவும் அழுகிப்போயிற்று என்றார்."

"உவில்ட் என்பவரின் நேயர், முன்னதாகச் செய்துகொண்ட ஏற்பாட்டின்படி அவரைவந்துகண்டு, மேற்சொன்ன பெருமாட்டியாரையும் பார்த்தார். இந்த அம்மையார் சும்மா அவரை உற்றுநோக்கினார். அதன்பின், அவர் அவ்வறையை விட்டுச் சென்றபின், அந்த அம்மையார் அம் மருத்துவரை நோக்கிப் பின்வருமாறு கூறினார்: 'அஃது எத்தகைய நோய் என்பதை யான் கண்டுகொண்டேன். அவருடம்பு பளிங்கு போற் றெளிவாய் இருந்ததென்ன யான் அதனை அவ்வளவு விளக்கமாய்க் கண்டேன். அவரது நெஞ்சப்பைக்குப்பின்னே கடுக்காய் அளவினதாகிய ஒரு கட்டி புறப்பட்டிருக்கின்றது; அஃது அழுக்குநிறமுடையதாயிருக்கின்றது; அஃது உடைந்துபோகும்போல் ஆடுகின்றது. முற்றிலும் ஓய்வாயிருப்பதைத் தவிர வேறெதுவும் அவர்க்கு நன்மைசெய்யாது.'

"அதன்மேல் உவில்ட் என்பவர் கூறியதாவது: 'அவ்வம்மையார் கருதிச்சொன்னது இதுவென யான் உடனே கண்டேன். ஆகவே, அதனைப் பின்வருமாறு என் நண்பரின் மருத்துவருக்கு எழுத உட்கார்ந்தேன்: என் நண்பருக்குள்ள நோயின் தன்மை இன்னதென்று கண்டுகொண்டேனென நம்புகின்றேன். இடப்பக்கத்திலுள்ள செந்நீர்ப்பையில் அவர்க்கு ஒரு வீக்கம் ஒரு கடுக்காயளவு இருக்கின்றது. இதுதான். நெஞ்சப்பையிற் காணப்பட்ட சிறிது இடப்பெயர்ச்சியை உண்டாக்கியதாகும்; இக்கட்டியானது விலாவெலும்புகளின் இடையிலுள்ள நரம்புகளை நெருக்குதலால் முதுகிற் பெருநோயும் மார்பின் முன்புறத்துள்ள தோலின்கண் நோயும் உண்டாகின்றன. நாளைக்கு நீங்கள் பார்க்கச்செல்லும் மருத்துவருக்கு, யாமறிந்த இந்நோயின் நிலையைத் தெரிவித்து, அவர் சொல்வது இன்னதென்று எனக்கு அறிவியுங்கள்.

"அங்ஙனமே அந்நோயாளி அந்த மருத்துவரிடந் தெரிவித்ததில் அப்பெருமாட்டி அந்நோயைப்பற்றிக் கூறியதுதான் உண்மையென உறுதிப்படுத்தப்பட்டது. அதனால் அந்நோ

மை நீக்குதற்குச் செய்யவேண்டுவதும் முற்றும் ஓய்ந்திருத்தலேயா மென்பதும் மருத்துவர் எல்லாராலும் ஒப்புக்கொள்ளப் பட்டது. அவ்வாறே அந்நோயாளி ஓய்ந்திருக்க அஃது அவரைவிட்டு அகன்றது.” இவ்வுண்மை வரலாற்றினால், நோயின் இயல்பை உள்ளவாறு உணர்ந்து, அதனை நீக்குதற்குச் செய்யும் முறையுந் திட்டமாகத் தெளிந்துகொள்ளுதற்குத் தெளிவுக்காட்சி எத்துணை யுதவிசெய்கின்றதென்பது நன்கு விளங்குகின்றதன்றோ?

---

## சில எச்சரிப்புகள்

மேலெடுத்துக் காட்டியவாறு அறிதுயிலைப் பிறர்பால் வருவித்து, அதனுதவியாற் பல உயர்ந்த நன்மைகளை விளைக்க வேண்டுபவர்கள், இதனைப் பயிற்சிசெய்கின்றபோது கட்டாயமாய்க் கருத்திற்பதித்து நடக்கவேண்டிய குறிப்புகள் சில உள. அவற்றுள், முதலாவது, ஒருவரை அறிதுயிலிற் செலுத்துகின்றபோது ஆவக்கத்திலேயே பின்வருமாறுசொல்லி அவரைத் தமது கட்டளைக்கு உடன்படுத்திக்கொள்ளக் கடவர்: “இப்போது உம்மை அறிதுயிலுக்குச் செலுத்தப்போகின்றேன். உம்மை அறிதுயிலிற் செலுத்துவது உமக்கும் எனக்கும் உலகத்திற்கும் நன்மையை உண்டாக்குதற் பொருட்டேயாம். ஆதலால், என் கட்டளைப்படி நீர் அறிதுயிலிற்சென்று, அத்துயிலில் இருக்கையில் யான் சொல்லுகிறபடியே செய்து, திரும்ப யான் அதனினின்றும் உம்மை விழிக்கச்சொல்லுகையில் தான் கட்டளைப்படியே உடனேவிழித்து எழுக்கடவீர். என் கட்டளைப்படி யெல்லாம் உள்ளடங்கி நடக்கக்கடவீர்.” என்று வலியுறுத்திச்சொல்லி, அதன்பிறகு அவர் அறிதுயிலிற் செல்கையிலும் இடையிடையே மேற்கூறியவாறு கட்டுறுத்திச் சொல்லுக.

இரண்டாவது: அவர் அறிதுயிலில் இருக்கையில், நன்மையான சொற்களையே தெளிவாய் வலியுறுத்திச் சொல்லுக. மறந்துந் தீமையான சொற்களைச் சொல்லற்க. “உமது உடம்பு மிகவும் நன்றாய் இருக்கின்றது; உமது அறிவு மிகவுந் தெளிவா



யிருக்கின்றது; உமது மூளையும் நுரையீரல் நெஞ்சப்பை ஈரற்பை மலக்குடர் முதலான அக கருவிகளும் மிகவுஞ் செவ்வையான நிலையில் இருக்கின்றன. நீர் எப்போதும் நல்ல நினைவும் நல்ல எண்ணமும் உடையவராயிருப்பீர். நீர் என்றும் நல்ல செய்கைகளையே செய்வீர்” என்று வற்புறுத்திச் சொல்லுக. அவர் அத்தூக்கத்திலிருக்கையில் நோயைப்பற்றிய சொற்கள் ஏதேனுந் தப்பித்தவறிக்கூடவாராமல் விழிப்பாய்ப் பேசுக.

மூன்றாவது: அறிதுயிலிற் சென்றவர் அதனினின்றும் எழுந்தபின் இன்னின்ன நாளில் இன்னின்ன நேரத்தில் இன்னின்னவற்றைச் செய்தல்வேண்டுமென்று அவர் அத்துயிலில் இருக்கையில் வலியுறுத்திச் சொன்னால், அவர் அங்ஙனமே தாம் விழித்திருந்தாலுங் குறிப்பிட்டகாலத்திற் குறிப்பிட்ட இடத்திற் குறிப்பிட்டபடியே செய்வர். ஆகையாற், பின்நடக்க வேண்டியவற்றைச் சொல்லி அவருக்குக் கற்பிக்கும்போது, செவ்வையாய் ஆராய்ந்து சொல்லத்தக்கவற்றைத் திருத்தமாகச் சொல்லல்வேண்டும். ஒருவரைத் துயிற்றுகின்ற மற்றொருவர் தம்மைத்தவிர வேறெவரும் அவரைத் துயிற்றுதல் ஆகாது என்னும் எண்ணம் உடையவராயிருந்தால், அவ் வெண்ணத்தை அறிதுயிலில் இருப்பவர்க்குத் திட்டமாய்க் கூறுக. ஏனென்றால், சிலமுறை அறிதுயிலிற் செலுத்தப்பட்ட ஒருவர் பிறரொருவராலும் எளிதிலே அறிதுயிலிற் செலுத்தப்படுதற்கு இசைந்தவர் ஆவர். இந்த உளவைத்தெரிந்த தீயோர் எவரேனும் இவ் வறிதுயின்முறையைத் தெரிந்துகொண்டு அவருக்கு எளிதிலே அறிதுயிலை வருவித்து அவரைத் தம் வழிப்படுத்திக்கொண்டு அவரைப் பலவகையிலும் வருத்தவுங்கூடும். ஆதலால், நல்லோரான துயிற்றுவோர்தம்மால் துயிற்றப்படுவோர் பிறர் எவராலும் இங்ஙனந் துயிற்றப்படுதல் ஆகாது என்று கட்டுரைத்துச் சொல்லிவிட்டாற், பின்பு இம்முறையிற் பழகிய மற்றெவரும் அவரைத் துயிலச்செய்தல் இயலாது. இன்னும் அவர் அறிதுயிலில் இருக்கையில் அவருக்குத் தாம் கட்டுறுத்திச் சொல்லியவைகளை அவர் அத்துயிலினின்றும் எழுந்தபின் நினைத்தலாகாது என்று சொல்லவேண்டினால், அங்ஙனமே

சொல்லுக; அவர் விழித்தபின் அத்தூக்கத்தில் நிகழ்ந்தவை களை ஒரு சிறிதும் உணரார்.

நான்காவது: மூவகைப்பட்ட அறிதுயிலிற் செலுத்தப்பட்டவர்களும் அந்நிலையிலிருக்குங்கால், அவர்களுக்குத் தோன்றுமாறு விளைவித்த உருவெளித்தோற்றங்களை மறையுமாறு செய்து, அவரது உணர்வு எப்போதும்போல ஒழுங்கான நிலையில் இருக்கின்றதெனவுங் கற்பித்து, அவரை விழிக்கச்செய்வதற்கு மறந்துவிடலாகாது.

ஐந்தாவது: துயிற்றப்பட்டவர் அறிதுயிலில் இருக்கும் போது அவரிடம் ஏதேனுங் கேட்கவிரும்பினால் 'நீர் இப்போது செவ்வையாக இருக்கின்றீரா? நீர் ஏதாவது இம்முறையில் எனக்கு அறிவிக்கக்கூடுமோ?' என்று கேட்கவேண்டுமே யல்லாமல் 'நீர் செவ்வையா யிருக்கின்றீர் என்று நினைக்கின்றேன், யான் செய்யவேண்டியமுறை இன்னதென்று அறிவியும்' என்று கட்டளையிட்டுக் கேட்டலாகாது. ஏனெனில், அறிதுயிலில் இருக்கையில் துயிற்றுவோர் ஏதுகட்டளை யிடுகின்றாரோ அக்கட்டளைப்படியே துயில்வோர் செய்வர்; கட்டளையிடாமற் கேட்டால் அவரது உள்ளத்தில் அப்போது இயற்கையாகத் தோன்றுவனவற்றை உரைப்பர். அவற்றைக்கேட்டு உண்மை யின்னதென்றுணர்ந்து அதற்கேற்பச் செய்வனவற்றைச் செய்யலாம்.

ஆறாவது: மூவகையான அறிதுயிலிற் செலுத்தப்பட்டோரையும் அத் துயிலினின்றும் எழுப்பவேண்டுங் காலத்தில் எழுப்பிவிடுதற்குச் சிறிதும் மறந்துபோகலாகாது. ஒருவருக்கு வரும் அறிதுயிலானது இறைவனது திருவருளின்பத்தில் நிகழ்வதாதலால், அவர் அவ்வின்பத் துயிலினின்றுஞ் சடுதியில் விழித்தெழ விருப்பம் இல்லாதவராய் இருப்பர். அதுபற்றி மனந்தடுமாறி உள்ளங் கலங்கல்வேண்டாம். நீவிர் வேண்டும் போது விழித்தெழ அவருக்கு விருப்பம் இல்லையானால் 'எவ்வளவுநேரந் துயிலவிரும்புகின்றீர்?' என்று அவரையே வினவுக. இரண்டுமணிநேரம் மூன்றுமணிநேரந் தூங்கல்வேண்டுமென விரும்புவாராயின் அங்ஙனமே அவரைத் தூங்கவிடுக. இன்னும் பலமணிநேரந் தூங்கல்வேண்டும் என்பாராயின்,

93



அதற்கு இசைய இயலாவிட்டால் 'அவ்வளவுநேரங் கூடாது, இன்னுங் குறையச்சொல்லும், இன்னுங் குறையச்சொல்லும்' என்றுசொல்லி அவரை வரவர இணக்கிக்கொண்டுவந்து அரை, அல்லது ஒன்று, அல்லது ஒன்றரை, அல்லது இரண்டுமணி நேரம் வரையில் ஏற்குமாறு தூங்கவிட்டு, அதன்பின் இரண்டு கைகளையும் நீட்டி, உள்ளங்கைகளையும் விரல்களையும் மேல் நோக்கித் திருப்பிக், கடைச் சிறுவிரல்தவிர, ஏனைவிரல்களைச் சேர்த்தபடியாய் அவரது அடியிலிருந்தாயினும் முழங்காலிலிருந்தாயினும் மேல்நோக்கி முடிவரையில் தொட்டேனுந் தொடாமலேனும் பலகால் தடவி, அவர்தம் நெற்றிமேலுங் கண்ணிறைப்பைகளின் மேலும் வாயினால் மென்காற்றுண்டாக ஊதி 'விழித்துக்கொள்க' என்றால் விழித்துக்கொள்வர். அங்ஙனம் விழிக்கையிற் கண்ணிறைப்பைகளைத் திறக்கமாட்டாமற் சிறிது வருந்துவாராயின், அவரை இரண்டொருநிமிஷம் சும்மா இருக்கவிட்டு அதன்பின் 'கண்ணைத் திறந்துபாரும்' என்று கட்டளையிட்டால் அவர் விழித்துக்கொள்வர். அல்லது, யான் இருபது எண்ணியவுடன் விழித்துக்கொள்வீர் என்று சொல்லிக், கைகளை மேனோக்கித் தடவுகையில் 'ஒன்று—இரண்டு—மூன்று' என்று ஆழ்ந்தகுரலிற் சொல்லிக்கொண்டே சென்று இருபதுமுடிந்ததும் 'இப்போது நீர் விழித்துக்கொள்ளக்கடவீர்' என்று கட்டளையிட்டுக் கையைத் தட்டினால் உடனே விழித்துக்கொள்வர்.

என்று இதுகாறும் அறிதுயில் என்னும் யோகநித்திரையாகிய அருங்கலைத்திறம் இனிது விளக்கப்பட்டது. இவ்வரு மருந்தினுமுயர்ந்த கலையைப்பழகி உலகத்தவர் நலம்பெறுக!

121086

[illegible]

(11—12—19[illegible])

| | | | |
|---|---|---|---|
| | ரூ. | அணா | |
| [illegible] (இரண்டாம் பதிப்பு) | 2 | 4 | 0 |
| [illegible] (இரண்டாம் பதிப்பு) | 2 | 4 | 0 |
| [illegible] | 2 | 4 | 0 |
| [illegible] | 1 | 8 | 0 |
| [illegible] | 1 | 8 | 0 |
| [illegible] | 1 | 4 | 0 |
| [illegible] | | | |
| [illegible] | 1 | 4 | 0 |
| [illegible] | | | |
| [illegible] | 1 | 4 | 0 |
| [illegible] | 1 | 4 | 0 |
| [illegible] | | | |
| [illegible] | 1 | 4 | 0 |
| [illegible] | | | |
| [illegible] | 0 | 12 | 0 |
| [illegible] | 0 | 12 | 0 |

**THE ORIENTAL MYSTIC MYNA**

... Contents ...

... Hypnotism ... Yoga ... and Success ... The Evolution ... Aspect of Saiva Siddhanta ... The ... Price Rs. 3

... of the Sacred Order of Love Book Depot,
... Madras

Printed at ... Press, ... 11—12—1922.